மீட்பு என்ற மாபெரும் ஆய்வுக்கருத்து

டாம்மி சௌத்

அறிமுகம் : வேதாகமத்தின் 13 திறவுகோல் வசனப்பகுதிகள்

1. தேவன், மனித இனம் & பாவம் (ஆதியாகமம் 1-3)
2. "ஆபிரகாம் இரட்சிப்பின் தொடக்கம்" (ஆதியாகமம் 12 & 15)
3. தேவன் ஒரு மக்களினத்தை மீட்கிறார் (யாத்திராகமம் 3 & 14)
4. உடன்படிக்கை கட்டளை (யாத்திரகமம் 20)
5. தாவீதின் மகன் தேவனின் மகன் (2சாமுவேல் 7:1-17)
6. பாடுபடும் ஊழியக்காரர் (ஏசாயா 53)
7. புதிய உடன்படிக்கை (எரேமியா 31)
8. தாவீதின் குமாரன்/ஆபிரகாமின் குமாரன் (மத்தேயு 1)
9. வார்த்தை மாம்சமானார் (யோவான் 1:1-18)
10. சிலுவையில் அறையப்பட்டார் & உயிர்த்தெழுந்தார் (யோவான் 19 & 20)
11. பெந்தெகொஸ்தே & அதற்கு அப்பால் (நடபடிகள் 2)
12. கிருபையினால் இரட்திக்கப்படுதல் (எபேசியர் 2:1-10)
13. நிறைவான எதிர்காலம் (வெளிப்படுத்தின விசேஷம் 21 & 22)

அறிமுகம்

வேதாகமத்தின் 13 திறவுகோல் வசனப்பகுதிகள்

வேதாகமத்தின் செய்தியை எவ்வாறு புரிந்துகொள்வது என்பதைப் பற்றி, வாசகர்கள் அடிக்கடி குழப்பம் அடையும் அளவுக்கு இது மிகவும் பெரிய மற்றும் சிக்கலாகக் காணப்படும் புத்தகமாக உள்ளது. ஆதியாகமத்தில் நாம் வாசிக்கும் விஷயங்களுக்கும் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் உள்ளவற்றிற்கும் இடையில் தொடர்பு ஏதாவது உள்ளதா? அப்படி இருக்குமென்றால், அது என்ன? முன் அட்டை முதல் பின் அட்டை வரையில் வேதாகமம் முழுவதையும் படித்தல் என்பதே மிகவும் நிச்சயமான மற்றும் முழுமையான வழியாக உள்ளது என்பது தெளிவு. இருப்பினும் அதை நிறைவேற்றி முடிக்கும் முன்னர் பலர் வேதாகமப் படிப்பை விட்டு விடுகின்றனர்.

இந்தப் பாடவரிசையானது இன்னொரு வழியை அளிக்கிறது. பின்தொடரும் பாடங்கள், வேதாகம ரீதியான திறவுகோல் கருத்துக்களை நமக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம், வேதாகமம் முழுவதையும் நாம் புரிந்துகொள்வதில் நமக்கு உதவக்கூடும். இந்த வசனப்பகுதிகளைப் படித்தல் என்பதை நாம் வேதாகமம் முழுவதையும் படித்தலுக்குப் பதிலியாக்க முடியுமா? நிச்சயமாக இல்லை. அவ்வாறு செய்தல் என்பது, தேவனுடைய வசனத்தின் வளத்தையும் வல்லமையையும் நம்மைவிட்டுக் களவாடுதலாக இருக்கும். செய்தி முழுவதும் எங்கு செல்கிறது மற்றும் அது எதைப்பற்றியதாக உள்ளது என்பதைப் பற்றிய ஆரம்பநிலைக் கருத்தறிவை ஒருவர் கொண்டிருந்தால், அவர் (வேதாகமம்) முழுவதையும் வாசிக்க அதிகம் சாத்தியக்கூறு உள்ளது.

இந்தப் பதிமூன்று வசனப் பகுதிகள் தேர்ந்துகொள்ளப்பட்டுள்ளது ஏன்? இந்தப் படிப்பிற்குத் தேர்ந்துகொள்ளப்பட்டுள்ள வசனப்பகுதி ஒவ்வொன்றும் பின்வரும் நிபந்தனைகள் இரண்டையுமோ அல்லது இவற்றில் ஏதாவது ஒன்றையோ சந்திக்கிறது: (1) இது, இஸ்ரவேல் மக்களினத்தின் முன்னேற்றம் அல்லது தொடக்ககால சபை பற்றிய மாபெரும் வரலாற்றுத் தனிச்சிறப்புமிக்க (படைப்பு, பயணம் அல்லது சிலுவையில் அறையப்படுதல் போன்ற) ஒரு நிகழ்ச்சியை விவரிக்கிறது. (2) இது வேதாகமத்தை முழுமையாக நாம் புரிந்துகொள்வதற்கு மையமாக உள்ள (புதிய உடன்படிக்கை, மேசியா அல்லது கிருபையினால் இரட்சிப்பு போன்ற) மிகவும் முனைப்பான மையச் சிந்தனை ஒன்றை முன்வைக்கிறது. பெரும்பான்மையானவை இவ்விரண்டையும் செய்கின்றன.

வேதாகமத்தின் ஒரு முனையில் இருந்து மறுமுனை வரையில் உள்ள பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட பதிமூன்று வசனப்பகுதிகளை ஆய்வு செய்ய முன்மொழிதலானது, முழுமையான செய்தி பற்றித் தனிச்சிறப்பான எதையாவது நமக்குக் கூறக்கூடும், அது நாம் இப்பாடத்தைத் தொடங்கும்போது

தெளிவாக்கப்படும் என்பதில் ஐயமில்லை. வேதாகமம் என்பது தேவனுடைய ஏவுதல் பெற்ற வார்த்தையாக உள்ளது என்பது ஒரு கருத்தாகும். இதன் நீண்ட முன்னேற்றம் மற்றும் நூற்தொகுப்பு முழுவதிலும், இது நம்மைப் படைத்த தேவனுடன் நாம் உறவுபடும் திறனுக்கு மிகவும் இன்றியமை யாதவையாக உள்ள குறிப்பிட்ட சத்தியங்களைக் கொடுக்கும் வகையில் தெய்வீகத் திட்டம் ஒன்றின்படி வடிவமைக்கப் பட்டுள்ளது. வேதாகமம் ஒருங்கமைந்த செய்திஒன்றை முன்வைக்கிறது என்பது இரண்டாவது யூகமாக உள்ளது. இந்தச் செய்தியின் வரலாற்றுத் திருப்பங்கள் மற்றும் திருப்பு முனைகள் யாவற்றுடனும்கூட, தமது பணியைத் திட்டமிட்டு பின்பு தமது திட்டத்தைத் தம்மீது அன்புகூருபவர்களின் நித்திய பயனுக்காகச் செயல்படுத்துகிற தேவனை இது நமக்கு வெளிப்படுத்துகிறது.

எனது பட்டியலில் உள்ளடக்க நான் தேர்ந்துகொண்ட வேதாகம வசனப்பகுதிகள் பின்வருமாறு:

ஆதியாகமம் 1-3: "தேவன், மனித இனம் & பாவம்"
ஆதியாகமம் 12 & 15: "ஆபிரகாம் - இரட்சிப்பின் தொடக்கம்"
யாத்திராகமம் 3 & 14: "தேவன் ஒரு மக்களினத்தை மீட்கிறார்"
யாத்திராகமம் 20: "உடன்படிக்கை & கட்டளை"
2 சாமுவேல் 7: "தாவீதின் மகன்/தேவனின் மகன்"
ஏசாயா 53: "பாடுபடும் ஊழியக்காரர்"
எரேமியா 31: "ஒரு புதிய உடன்படிக்கை"
மத்தேயு 1: "தாவீதின் மகன்/ஆபிரகாமின் மகன்"
யோவான் 1:1-18: "வார்த்தை மாம்சமானார்"
யோவான் 19 & 20: "சிலுவையில் அறையப்பட்டார் & உயிர்த்தெழுந்தார்"
அப்போஸ்தலருடைய நடபடிகள் 2: "பெந்தெகொஸ்தே & அதற்கு அப்பால்"
எபேசியர் 2:1-10: "கிருபையினால் இரட்சிக்கப்படுதல்"
வெளிப்படுத்தின விசேஷம் 21 & 22: "நிறைவான எதிர்காலம்"

தேவனுடைய அன்பு பற்றிய மாட்சிமை மிக்க வரலாற்றை விவரிப்பதில் இந்தப் பாடங்களை உதவிநிறைந்த வழிகாட்டியாக நீங்கள் காணவேண்டும் என்பதே எனது ஜெபமாக உள்ளது. நமது தேவனைப் பற்றியும் நமக்காக அவர் அளித்துள்ள மீட்பின் மாபெரும் திட்டம் பற்றியும் அறிதலானது நமக்கு, நிச்சயமாகவே உலகத்திலேயே மிகவும் முக்கியமான விஷயமாக உள்ளது.

1

தேவன், மனித இனம் & பாவம்

(ஆதியாகமம் 1–3)

ஆதியாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்கள், வேதாகமத்தின் எஞ்சிய பகுதியைப் பற்றிய நமது புரிந்துகொள்ளுதலுக்கு அஸ்திபாரமாக உள்ளன. ஆங்கிலத்தில் உள்ள "Genesis" என்ற வார்த்தை "தொடக்கங்கள்" என்று அர்த்தப்படுகிறது மற்றும் ஆதியாகமம் புத்தகமானது, இருக்கிற ஒவ்வொரு விஷயத்தின் தொடக்கத்தைப் பற்றி நமக்குக் கூறுகிறது: படைக்கப்பட்ட அண்டம், வாழ்வு, பாவம் மற்றும் மரணம் பற்றியும்கூட. இந்த அறிவானது வேதவசனங்களைப் பற்றிய நமது புரிந்து கொள்ளுதலுக்கு அவசியமானதாக உள்ளது, ஏனெனில் இது ஆதியாகமத்திற்குப் பின்புள்ள வேதாகமத்தின் எழுத்தாக்கங்கள் ஒவ்வொன்றிலும் யூகிக்கப்படுகிறது. ஆகவே ஆதியாகமம் 1-3 வரையிலான அதிகாரங்கள் உண்மையாகவே ஒரு திறவுகோல் வசனப் பகுதியாக உள்ளது.

தேவன்

யாரேனும் ஒருவர், "வேதாகமம் எதைப்பற்றியது?" என்று கேட்டால், அது "தேவனைப்" பற்றியது என்று நாம் ஒரே வார்த்தையில் மிகச்சரியாகப் பதில் அளிக்க முடியும். ஆதியாகமத்தின் முதல் வசனத்தில் இருந்து வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி அதிகாரம் வரையில், இது யாவும் தேவனைப் பற்றியதாகவே உள்ளது. விரிவாக்கத்தில், வேதாகமம் மனித இனத்தின் வரலாற்றையும், குறிப்பாக பாவத்துடனான நமது போராட்டம் மற்றும் மீட்பிற்கான நமது தேவை ஆகியவற்றையும், கூறுகிறது. நாமல்ல ஆனால் தேவனே ஒவ்வொன்றின் மையக்கருத்தாக இருக்கிறார்.

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதியாகமம் 1:1). தேவனுடைய இருப்பைப் பற்றி விவாதித்தல் அல்லது அதைப் பற்றிக் கலந்துரையாடுதல் என்பதற்கு மாறாக, தேவனுடைய இருப்பை *யூகித்து* வேதாகமம் தொடங்குகிறது என்பது குறிப்பிடத் தக்கதாக உள்ளது. அது ஏன் அவ்வாறு உள்ளது? தேவன் இருத்தல் என்பது சுய ஆதாரம் கொண்டதாக உள்ளது. படைப்பு ஒன்று இருக்கும் என்றால், படைத்தவர் ஒருவர் இருந்தாக வேண்டும். வனப்பாகக் கட்டப்பட்ட சித்தரிக்கப்பட்ட புத்தகம் ஒன்றை நாம் கண்ணோக்கும் போது, அது ஒரு அச்சகம், ஒரு மை தயாரிப்புத் தொழிற்சாலை மற்றும் ஒரு புத்தகக் கட்டுதல் செய்யும் அலுவலகம் ஆகியவற்றில் சமகாலத்தில் ஏற்பட்ட விபத்தின் விளைவாக நடந்தது என்று நாம் ஒருக்காலும் யூகிப்பதில்லை. மாறாக, நாம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அந்தப் புத்தகத்தை எழுதி, அதில் சித்திரங்களை வரைந்து, அதை அச்சிட்டு மற்றும் அதைப் புத்தக வடிவில் ஒழுங்கமைத்தனர் என்று தர்க்கரீதியாக யூகிக்கிறோம். இது மாத்திரமே பகுதித்தறிவுக்கு ஏற்ற முடிவாக உள்ளது. படைக்கப்பட்ட அண்டத்தின்

எல்லா சிக்கலான தன்மைகளுடனும் அதைக் கண்ணோக்குவதும் அதை யாரோ ஒருவர் படைத்தார் என்பதைத் தவிர வேறு எதையாவது யூகித்தலும் முற்றிலும் பகுத்தறிவுக்கு ஒவ்வாததாக உள்ளது.

"தேவன் இல்லை என்றால், ஒவ்வொரு பொருளும் எங்கிருந்து வந்தது?" என்ற கேள்வியானது, கடவுள் நம்பிக்கையற்றவர்கள் போதிய அளவுக்குப் பதில் அளிக்க ஒருக்காலும் இயலாத கேள்வியாக இருந்துள்ளது. உலகத்தொடக்கத்தின் போது பெருவெடிப்புகள் நிகழ்ந்ததாலும் வாயுக்கள் ஒன்று கலந்ததாலும் உலகம் உண்டானது என்று குறிப்பிடுதல் ஒன்றும் செய்ய இயலாது, ஏனென்றால் இது இந்த நிகழ்ச்சிகள் நடக்கத் தேவையான "மூலப் பொருட்களின்" இருப்பைப் பற்றிய விபரம் எதையும் தருவதில்லை. ஒன்றுமில்லாமையில் இருந்து ஒன்றும் வருவதில்லை, எனவே நம்மைச் சுற்றிலும் நாம் காணும் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு "முதற்காரணம்" இன்னும் இருந்தாக வேண்டும்.

தேவன் இருக்கிறார் என்ற தெளிவான சத்தியத்தை முட்டாள் மாத்திரமே மறுப்பார் என்று சங்கீதம் 14:1 கூறுகிறது. முட்டாள்கள் எவ்வகையிலும் ஆதியாகமத்தைக் கவனித்தல் என்பது சாத்தியமானதல்ல என்பதால், வேதாகமம் அவர்களிடத்தில் விவாதம் செய்தல் அல்லது தேவனுடைய இருப்பை "நிரூபிக்க" முயற்சி செய்தல் என்பதைக் கொண்டு தொடங்குவதில்லை.

ஆதியாகமம் 1:1 வசனமானது, அண்டத்தின் தோற்றம் பற்றிப் பழங்கால மக்கள் பொதுவாக நம்பியிருந்தவற்றிற்கு நேர் எதிரானதாக நிற்கிறது. பழங்காலத்தவர்கள் யாவரும், அண்டத்தின் வடிவமைப்பில் பல்வேறு வழிகளில் ஈடுபட்டிருந்த பல "கடவுள்களை" நம்பினர் என்பது நடைமுறை உண்மையாக இருந்தது. சிலர், கடவுள்களுக்கு இடையில் நடந்த வான்வெளி யுத்தங்கள் ஏதோ ஒரு வகையில் பொருளின் வடிவமைப்பை விளைவித்தது, அது கடைசியில் நீங்களும் நானும் அறிகிற வகையிலான உலகமானது என்று விவரித்தனர்.

இதற்கு மறுபுறத்தில் ஆதியாகமம், தேவன் ஒருவரே, அவர் மாத்திரமே இருக்கின்ற எல்லாவற்றையும் படைத்தவர் என்று கூறுகிறது. இருக்கிற எல்லாவற்றிற்கும் ஆதாரமூலம் தேவனே என்று ஆதியாகமம் 1 மற்றும் 2 அதிகாரங்கள் எவ்வாறு முன்வைக்கின்றன என்பதைக் கவனியுங்கள். உதாரணமாக, 1:1-19 வசனப்பகுதியானது, எல்லாப் பொருட்கள் மற்றும் தாவர வாழ்வு ஆகியவற்றின் படைப்பைப் பற்றி விவரிக்கிறது. 1:20-25ல் நாம், மிருக ஜீவன்களின் பல்வேறு வடிவமைப்புகளின் படைப்பைப் பற்றி வாசிக்கிறோம். கடைசியாக, படைப்பு பற்றிய விபரமானது மனித வாழ்வின் தொடக்கத்தில் உச்சநிலை அடைகிறது (1:26-30; 2:4-25). செய்தி தெளிவானதாக உள்ளது: தேவன் இல்லாத நிலையில் *எதுவும்* இருப்பதில்லை!

அதுபோலவே, தேவனுடைய இயல்பின் குணாதிசயங்கள் படைப்பின் விபரத்தில் வெளிப்படையாகத் தெரிகின்றன. இந்தக் குணாதிசயங்கள் இந்த அதிகாரங்களில் விவரிக்கப்பட்டு இருப்பதில்லை; மாறாக அவைகள் செயல்விளக்கப்படுத்தப்படுகின்றன. தேவனுடைய குணாதிசயம் அவர் செய்கிறவற்றின் மூலமாக *செயல்விளக்கப்படுகிறது*. வேதாகமத்தில் பிற்பாடு, ஒரு நபரின் பண்பு அவர் *செய்கிறவற்றின்* மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது. வேதாகமத்தில் பிற்பாடு, ஒரு நபரின் பண்பு அவர் செய்கிறவற்றின் மூலமாக அறியப்பட முடியும் என்று இயேசு போதித்தார் (மத்தேயு 7:15-20). இது தேவனைப் பொறுத்த மட்டிலும் சம அளவு உண்மையாகவே உள்ளது.

வல்லமை

உதாரணமாக, படைப்பு பற்றிய விபரத்தில் இருந்து நாம், தேவனுடைய வல்மையைப் பற்றிக் கற்றறிகிறோம். அவர் தமது "பேச்சினாலேயே" ஒவ்வொரு பொருளையும் படைக்கக் கூடியவராக இருக்கிறார். நம்முடைய வார்த்தைகள் போலின்றி, தேவனுடைய வார்த்தைகள் முற்றிலும் செயல் விளைவு கொண்டவையாக உள்ளன; அவர் ஏதேனும் கூறுகிறார் என்றால், அது நடக்கிறது. சங்கீதம் 33:6ம் வசனம் இந்த சத்தியத்தை எதிரொலிக்கிறது: "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது." அதுபோன்றே, ஏசாயா 55:10, 11 வசனங்கள் பின்வருமாறு அறிவிக்கின்றன:

> மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி,
> அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து,
> அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து,
> விதைக்கிறவனுக்கு விதையையும்,
> புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,
> அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்;
> அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல்,
> அது நான் விரும்புகிறதைச் செய்து,
> நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.

தேவனைப் பற்றிய இந்த விஷயத்தை நாம் அறிகிற வேளையில், தேவன் பேசுகிறபோது நாம் அதைக் கவனித்தல் அவசியமாக உள்ளது என்பது தெளிவாகிறது!

அறிவுக்கூர்மை

ஆதியாகமம் 1-3ல் இருந்து நாம், தேவனுடைய *அறிவுக்கூர்மை* பற்றியும் கற்றறிகிறோம். 1ம் அதிகாரத்தை நெருக்கமாக வாசிப்பதில் நாம், படைப்பின் கவனம் நிறைந்த வடிவமைப்பு மற்றும் ஒழுங்கமைவு ஆகியவற்றைக் கவனிக்கிறோம். தேவன் ஒழுங்கின்மையில் இருந்து ஒழுங்கமைவைக் கொண்டு வந்தார் என்று ஆதியாகமம் 1:2 காண்பிக்கிறது. பின்பு அவர் உயிர் இயக்கமற்ற பொருட்களை, தாவர உயிரினங்களை, மிருக உயிரினங்களை மற்றும் கடைசியாக மனித உயிரினத்தைப் படைத்தார். படைப்பு என்பது அரைகுறையானதாக அல்லது "தற்செயலான ஒன்றாக" இராமல் பகுத்தறிவுக்குப் பொருத்தமானதாக மற்றும் ஒழுங்கமைவு கொண்டதாக இருந்தது. நாம் வாழும் உலகத்தின் வடிவமைப்பு, இதை வடிவமைத்தவரின் மேதைத்தன்மைக்குச் சாட்சி பகர்கிறது. இதற்கு நேர்மாறாக, அண்டம் என்பது தற்செயலாக நேர்ந்த விபத்தினால் விளைந்தது என்று விளக்கச் செய்யப்படும் எல்லா முயற்சிகளும் மதியீனமானவையாகவே ஒலிக்கின்றன!

பல ஆண்டுகளுக்கு முன்னர் நான், டெக்சாசில் வாழ்ந்து கொண்டிருக்கையில், அரசகிரீட வண்ணத்துப்பூச்சிகள் மெக்ஸிகோ செல்லும் வழியில் வருடந்தோறும் பறந்து வரும் நிகழ்வைக் காணும் வாய்ப்பு ஒன்றைப் பெற்றிருந்தேன். (மாபெரும் சிந்தைகள் பல முயற்சி செய்திருப்பினும்), வடக்கு அமெரிக்காவில் இருந்து இந்த அரசகிரீட வண்ணத்துப்பூச்சிகள் ஒருசில ஏக்கர்கள் மாத்திரமே

பரப்புக் கொண்ட மெக்ஸிகோ பகுதிக்கு வருவது ஏன் என்பதை ஏதோ சில காரணத்தினால் எவராலும் விளக்கப்படுத்த முடியவில்லை. அவற்றில் பல இலட்சக்கணக்கானவை, எங்கே செல்கின்றன என்றே தெரியாத வகையில் தத்திப் பறப்பதாகத் காணப்படுகின்றன, இருப்பினும் கடைசியில் அவையாவும் மெக்ஸிகோவின் ஒரே இடத்தில் வந்து நிற்கின்றன. தேவன் இல்லை என்றால், இது ஏன் நடக்கிறது என்று ஒருவர் வியப்படைய வேண்டியுள்ளது. வண்ணத்துப் பூச்சிகள் ஒன்றுகூடி வரவேண்டிய வேளை எப்போது என்பதையும் மிகச்சரியாக அவைகள் எங்கே ஒன்றுகூட வேண்டும் என்பதையும் அவை "எவ்வாறு" அறிகின்றன? ஏதோ ஒரு "புராதன காலத்து வண்ணத்துப் பூச்சி" முதலில் இந்தப் பயணத்தை மேற்கொண்டு, பின்பு அது திரும்பி வந்து ஏதோ ஒருவகையில் அதைப் பற்றி மற்ற வண்ணத்துப் பூச்சிகளுக்குச் செய்தி அளித்தது என்று நாம் கற்பனை செய்ய வேண்டுமா? தற்செயலாக அவை ஒவ்வொரு ஆண்டிலும் அதே இடத்திற்கு வந்து சேருதல் நடைபெறுகிறதா? இந்த நுண்ணிய உயிரினங்களைத் தேவன் உண்டாக்கியது மாத்திரமல்ல ஆனால் இவை இந்த வருடாந்திரப் பயணத்தை மேற்கொள்ளும்படியாகவும் இவற்றிற்குள் "திட்டத்தை வைத்தார்" என்று ஒப்புக்கொள்வது எவ்வளவு அதிகமாகப் பகுத்தறிவுக்குப் பொருத்தமானதாக உள்ளது! இப்படிப்பட்ட ஒரு படைப்பாளர் முற்றிலும் புரிந்துகொள்ளப்பட இயலாத அறிவுக்கூர்மை உடையவராக இருக்கிறார் என்பது தெளிவு.

நற்குணம்

இந்த அதிகாரங்கள் தேவனுடைய நற்குணத்தைப் பற்றியும் சாட்சி அளிக்கின்றன. 1ம் அதிகாரத்தின் முடிவில், "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது" என்று நமக்குக் கூறப்படுகிறது (1:31அ). தேவனுடைய இயல்பின் நற்குணம் அவர் உண்டாக்கிய ஒவ்வொன்றிலும் பிரதிபலிக்கிறது. இது நமக்கு என்ன ஒரு ஆச்சரியமான செய்தியாக உள்ளது! தேவன் நல்லவரா அல்லது பொல்லாதவரா, அவர் நம்மீது அன்புகூருகிறாரா அல்லது நம்மை வெறுக்கிறாரா, நம்மை ஆசீர்வதிப்பதா அல்லது தமது உலகத்தில் நம்மை முற்றிலும் பாழாகும்படி சேதப்படுத்துவதா, எது அவரது விருப்பநோக்கமாக உள்ளது என்பவற்றைப் பற்றி நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

தேவன் பிற்பாடு "மாம்சத்தில் வந்தார்" என்ற சித்தரிப்பை நாம் வேதாகமத்தின் தொடக்கத்தில் இருந்தே காணத்தொடங்குகிறோம். வேதாகமம் முழுவதிலும் நாம், இதே தேவன் தாம் உண்டாக்கிய உலகத்தைத் தொடர்ந்து எவ்வாறு படைத்து, பாதுகாத்து ஆசீர்வதிக்கிறார் என்பதைக் காணுகிறோம்.

மனித இனம்

ஆதியாகமத்தில் மனித இனத்தின் படைப்பு பற்றிய கலந்துரையாடல், தன்னிலேயே ஒரு தலைப்பாக அல்ல, ஆனால் படைப்பாளரான தேவனுடன் உறவு என்ற வகையில் வருகிறது. "மனிதன்" (எபிரெய மொழியில், *ஆதாம்*) - இது ஆணையும் பெண்ணையும் உள்ளடக்குகிறது பற்றிய முதல் குறிப்பிடுதலானது 1:26அ வசனப் பகுதியில் உள்ளது, அங்கு தேவன், "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்று கூறினார்.

மனிதன் என்பவன் மாத்திரமே தேவனுடைய படைப்புகளிலேயே, "[அவரது] சாயலில்" மற்றும் "[அவரது] ரூபத்தில்" படைக்கப்பட்ட ஒரே படைப்பாக இருக்கிறான் என்பது இந்த முதல் குறிப்பில் மிகவும் கவனிக்கத்தக்க விஷயமாக உள்ளது. மனிதர்கள் உடல்ரீதியாகத் தேவனைப் போல இருப்பது சாத்தியமற்றதாக உள்ளது, எனவே இந்தக் கூற்று அர்த்தப்படுத்துவது என்ன? "தேவனுடைய சாயலில்" இருத்தல் என்பது அறிவுக்கூர்மை, படைப்பாக்கம் மற்றும் அன்புகூரும் திறன் போன்ற விஷயங்களில் தேவனுடைய சொந்த இயல்பைப் போன்று இருத்தல் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. இது, மக்கள் பரிணாம அளவுகோலில் "மிக உயர்வான மிருகங்களாக" மாத்திரம் உள்ளனர் என்ற நவீன கருத்திற்கு எதிராகச் செல்கிறது என்பது தெளிவு. (சமீபத்தில் ஒரு ஆராய்ச்சியாளர், சிம்பான்சி குரங்குகள் மனிதனுடன் சேர்ந்து ஹோமோ சேப்பியன்கள் என்று அழைக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்து இன்னும் தாண்டிச் சென்றார்.) 26ம் வசனத்தின் பிற்பகுதியானது, நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருத்தல் என்ற கருத்தை விளக்கவும் உதவி செய்கிறது: "அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப்பிராணிகளையும் ஆளக்கடவர்கள்." தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டிருத்தல் என்பது, பூமி மற்றும் எல்லா வகைத் தாவரங்கள் மற்றும் மிருக ஜீவன்கள் உட்பட, படைப்பின் மற்ற யாவற்றின் மீதுள்ள துணை ஆளுமையின் ஒரு வகையை உள்ளடக்குகிறது. இந்தக் கருத்தானது. 28 முதல் 30 வரையிலுள்ள வசனங்களில் மறுவலிவூட்டப்படுகிறது, அதில் பூமியை "நிரப்பி அதைக் கீழ்ப்படுத்திக் கொள்ளும்படி"யும் படைக்கப்பட்ட மற்றவற்றின் மீது ஆளுகையைக் கொண்டிருக்கும்படியும், ஆணுக்கும் பெண்ணுக்கும் கட்டளையிடப் பட்டது. மனிதன் என்பவன் தேவனுடைய படைப்பின் மீது முழுமையான அதிகாரியாக இருப்பதில்லை, ஆனால் அவன் தேவனுடைய பதிலாளாக மாத்திரம் இருக்கிறான். நாம் படைப்பின்மீது அதிகாரமும் பொறுப்பும் கொண்டவர்களாக இருக்கிறோம். அது (படைப்பு) நாம் வீணாக்குவதற்கானதாக அல்ல, ஆனால் பயன்படுத்துவதற்கானதாக உள்ளது. தேவனுடைய சாயலில் படைக்கப் பட்டு இருத்தலில், மனிதர்கள் மற்ற படைப்புயிர்கள் எல்லாவற்றிலும் இருந்து தனிப்பட்ட வகையாக உள்ளனர் என்பது தெளிவு. இந்த சத்தியமானது, தற்போது பிரபலமாகி வருகிற (ஆனால் உண்மையில் மிகவும் பழங்காலத்தைச் சேர்ந்த) "இயற்கை வழிபாடு" என்ற நடைமுறைகளையும் இல்லாததாக ஆக்குகிறது. பூமியும் ஆகாயமும் நமது "தாயாகவும்" "தந்தையாகவும்" இருப்பதில்லை. அவைகள் தேவனுடைய படைப்பின் ஒரு பகுதியாக உள்ளன, அவற்றின் மீது நாம் அதிகாரம் கொண்டிருக்கிறோம், தேவனுடைய சார்பாக அதை நாம் பயன்படுத்துகிறோம்.

ஆதியாகமம் 2ம் அதிகாரத்திற்குள் கண்ணோக்குகையில் நாம், மனிதராக இருத்தலின் "விசேஷத்துவத்தினுடைய" இன்னொரு முகப்பளவைக் கண்டறிகிறோம். மனிதன் என்பவன் படைப்பாளரின் நேரடியான, சொந்தத் தொடர்பின் விளைவாகப் படைக்கப்பட்டான்: "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதியாகமம் 2:7).

இவ்வகையான ஒன்றுபோலிருக்கும் வகையில் வேறு எந்த படைப்புயிரும் படைக்கப்படவில்லை; எஞ்சியவை யாவும் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டன. மனிதனுடைய வாழ்வோ தேவனுடைய சுவாசத்தில் இருந்து நேரடியாகவே வருகிறது.

அதுபோன்றே, படைப்பு பற்றிய விபரமானது, மனிதர்கள் தேவனுடனும் ஒருவர் மற்றவருடனும் ஒரு உறவுமுறையை மகிழ்வுடன் அனுபவிக்கும்படி படைக்கப் பட்டனர் என்று வலியுறுத்துகிறது. இது தேவனுடைய மற்ற படைப்புக்களைப் பொறுத்தவரையில் இவ்வாறு இருப்பது இல்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் தேவன் ஒரு கட்டளையைப் பிறப்பித்தார் என்ற உண்மையானது, 2:7ல் அறிமுகப்படுத்தப்பட்ட உறவுமுறையில் தனித்தன்மையைப் பற்றி மேலும் கருத்துத் தெரிவிப்பதாக உள்ளது. தேவனுடன் ஒரு உறவுமுறையில் வாழ்வதற்காக அவர்கள், அந்த உறவுமுறையின் நிபந்தனைகளை அறிய வேண்டியதாக இருந்தது. அத்தேனே பட்டணத்தில் பவுல் நிகழ்த்திய அவரது புகழ் பெற்ற பிரசங்கத்தில், அவர் தேவன்/மனிதன் ஆகியோருக்கிடையிலான இந்த விசேஷித்த உறவைப் பற்றிக் கூறினார்:

> உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம் பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளுகிறதுமில்லை. மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; *கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத்தேடும்படிக்கு* அப்படிச்செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே (நடபடிகள் 17:24-27; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

ஆதியாகமத்தில் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதைப் பவுல் ஆமோதித்து உறுதிப்படுத்தினார்: நாம் நம்மைப் படைத்தவருடன் ஒரு உறவுமுறையைக் கொண்டிருக்கும்படியாகப் படைக்கப்பட்டோம். அந்த உறவு நிலைநாட்டப்படாத வரையிலும் நாம் வாழ்வின் உண்மையான நிறைவைக் கண்டறிய இயலாது. வேதாகமம் முதன்மையாக இதைப் பற்றியதாகவே உள்ளது.

நாம் ஒருவர் மற்றவருடன் உறவுகொண்டிருப்பதற்காகவும் தேவன் நம்மைப் படைத்தார். ஆதியாகமம் 2:18ல் தேவன், "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று அறிவித்தார்." மனிதனுக்கு ஒரு துணை மாத்திரமல்ல, ஆனால் அவனுக்கு "ஏற்ற," அதாவது அவனது சொந்த இயல்புக்கு இணையான மற்றும் அவன் தனது வாழ்வைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒரு துணை அவனுக்குத் தேவையாக உள்ளது. ஆகவே தேவன் அவனுக்கு ஒரு "துணையை" படைத்தார். ("துணை" என்ற வார்த்தை கீழானது என்ற எந்த விஷயத்தையும் மறைமுகமாக உணர்த்துவதில்லை, ஏனெனில் இது வேறொரு இடத்தில் தேவன்

நமது "துணையாளராக" ["சகாயராக"] இருக்கிறார் என்பதை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாக உள்ளது; காண்க சங்கீதம் 30:9.) மனுஷியைப் படைத்ததைப் பற்றியும் அவளை மனிதனிடத்தில் தேவன் கொண்டு வந்ததைப் பற்றியும் 19 முதல் 25 வரையிலுள்ள வசனங்கள் விவரிக்கின்றன. தேவனால் படைக்கப்பட்ட மிருக ஜீவன்கள் யாவற்றையும் ஆதாம் ஏற்கனவே ஆய்வு செய்து, ஒவ்வொரு உயிருக்கும் பெயரிட்டிருந்தார், இது அவரைப் போல் எதுவும் இல்லாததால் அவரது தனிமையைச் சந்தேகமற்ற வகையில் அவருக்குள் மறுவலியூட்டியிருந்த ஒரு செயல்முறையாக இருந்தது. அவரிடத்தில் தேவன் பெண்ணைக் கொண்டு வந்தபோது, அவர் சந்தோஷத்தினால் வியப்படைந்தார், "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள்" என்று கூறினார் (2:23). இப்போது அவர் தம்மைப்போல் ஒரு துணையை, அவர் தமது வாழ்வின் மிக ஆழமான உணர்வறிவைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு துணையைத் தாம் கொண்டிருந்ததை உணர்ந்தறிந்தார்.

ஆதியாகமம் 1-3 அதிகாரப் பகுதி, தேவன் சிருஷ்டிகராக இருப்பதால், அவரது கட்டளைகளை நாம் செயல்படுத்துதல் அல்லது புறக்கணித்தல் பற்றி, அவர் நமக்குக் கட்டளை இடவும் நம்மை நியாயந்தீர்க்கவும் உரிமை கொண்டுள்ளார் (அதாவது நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று அவர் கூறினார்) என்பதையும் காண்பிக்கிறது. இது ஆதியாகமம் 2:15-17ல் மிகவும் வெளிப்படையாக உள்ளது:

> தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்று கட்டளையிட்டார்.

இவ்வசனப் பகுதியானது, கட்டளை மற்றும் கணக்கு ஒப்புவித்தல் பற்றிய இரு கூறுகளைக் கொண்டுள்ளது. தேவன் நமக்கு வெறுமனே "ஆலோசனைகளை ஏற்படுத்துவது" இல்லை. அவர், சுய நிறைவு மற்றும் தனிப்பட்ட சந்தோஷம் ஆகியவற்றிற்கு வழிநடத்துகிற பணியை (மாத்திரம்) செய்கிற நமது "சிகிச்சையாளராக" இருப்பதில்லை. அவர் நம்மை உண்டாக்கியவராக இருக்கிறார், நாம் அவரது கட்டளைகளுக்கான நமது பதில் செயல்களுக்காக அவருக்குப் பதில் கொடுத்தாக வேண்டும்.

நாம் தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டுள்ள தேவனுடைய பூமியின் படைப்பாக மாத்திரம் அல்ல, ஆனால் நாம் மாத்திரமே அவருக்கு எதிராகக் கலகம் செய்யக் கூடியவர்களாக இருக்கும் வகையில் தேவன் நம்மைப் படைத்துள்ளார் என்பது நேர்முரணான விஷயமாக உள்ளது. இது பாவம் என்ற உலகளாவியப் பிரச்சனைக்கு வழிநடத்துகிறது.

பாவம்

கட்டளை மற்றும் எச்சரித்தல் ஆகியவற்றின் வழியாகத் தேவன்

பாவத்தைத் தடைசெய்ய முயற்சி செய்தார்: "... புசிக்கவேண்டாம் ... சாகவே சாவாய்." தேவன் விசாரணையின்றி நியாயந்தீர்க்கிறவராகவும் ஆக்கினைக்கு உட்படுத்துகிறவராகவும் அடிக்கடி சித்தரிக்கப்படுகையில், வேதவசனங்கள் முழுவதிலும் அவர் நியாயந்தீர்ப்பதற்கு முன்னர் அவர் எப்போதுமே எச்சரிக்கை செய்பவராக இருக்கிறார் என்பதை நாம் காணுகிறோம். இஸ்ரவேல் மக்கள் மீது நியாயத்தீர்ப்பைக் கொடுப்பதற்கு முன்னர், பல ஆண்டுகளாகத் தீர்க்கதரிசிகள் மூலமாகத் தேவன் அவர்களை எச்சரித்தார்! அவர் "துர்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல்" இருக்கிறார் (எசேக்கியேல் 33:11). ஆகவே பாவம் நடைபெறுவதைத் தவிர்க்க அவர் தம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்தார். உண்மையில் தேவன் வேதவசனங்களின் மூலமாக நம்மை எச்சரிப்பதை இன்னமும் முடித்திருப்பதில்லை.

தேவன் மீதும் அவரது வசனத்தின் மீதும் நம்பிக்கையற்ற நிலையிலிருந்து பாவம் விளைகிறது. சர்ப்பத்தால் (சாத்தானால்; வெளிப்படுத்தின விசேஷம் 12:9) ஏவாள் சோதிக்கப்பட்டது பற்றிய பரிதாபமான வரலாற்றை, அவரது வஞ்சனைக்கு அவள் பணிந்து போனதையும் பின்பு அவள் தன்னுடன் பாவம் செய்யும்படி ஆதாமை இழுத்ததையும் பற்றி ஆதியாகமம் 3:1-7 கூறுகிறது. முதலாவது சாத்தான், கீழ்ப்படியாமை மற்றும் மரணம் ஆகியவற்றைப் பற்றித் தேவன் அவர்களிடத்தில் கூறியிருந்தவற்றை மறுத்தான். "நீங்கள் சாகவே சாவதில்லை" என்று அவன் கூறினான், இது "இல்லை" என்ற மூன்றெழுத்து வார்த்தையைக் கூட்டுவதன் மூலம் தேவனுடைய சத்தியத்தை முற்றிலும் புரட்டிப் போடுவதாக இருந்தது. பின்பு அவன், ஆதாமும் ஏவாளும் மிகநல்ல சிலவற்றை மகிழ்வுடன் அனுபவிப்பதைத் தேவன் தடை செய்தார் என்று கருத்துத் தெரிவித்தான்: நன்மை தீமையை அறிகிற அறிவு. இந்த அறிவினால் ஆணும் பெண்ணும் தேவனைப் போன்று ஞானம் உள்ளவர்கள் ஆகிவிட்டால் போட்டி நிலவும் என்று தேவன் பயப்பட்டார் என்று அவன் மறைமுகமாகக் கூறினான்.

6ம் வசனம் விதிவசமான தீர்மானத்தைப் பதிவு செய்துள்ளது: "அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, ..." அவள் தன்னைப் படைத்தவர் மீது நம்பிக்கையற்றுப் போகும்படிக்குத் தன்னை வஞ்சிக்க அனுமதித்தாள், அதாவது அவள் ஒரு தடையை மீறினாள். பவுல் ஆர் ஹவுஸ் அவர்கள், "தேவன் மீது நம்பிக்கையற்ற தன்மையுடன் பாவம் தொடங்குகிறது, இது ஒருவர் தம்மைத் துன்புறுத்தும் விஷயத்தை விரும்பி ஏங்குதலாக, சத்தியத்தின் வெளிப்பாட்டைப் புறக்கணிப்பதாக மற்றும் நிறைவாக அழிவில் முடிவதாக உள்ளது" என்று கருத்துத் தெரிவித்தார்.[1] ஆணும் பெண்ணும் தேவன் மீது நம்பிக்கையற்றுப் போய், அதற்குப் பதிலாக, சோதிப்பவனின் வார்த்தைகளை நம்பிய உடனே அவர்கள் தங்களைப் படைத்தவருக்குக் கீழ்ப்படியாத குற்றம் செய்தவர்கள் ஆயினர்.

ஆதியாகமம் 3:8-13 வசனப் பகுதியின்படி, தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு தகர்க்கப்பட்டது மாத்திரமின்றி, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவும் அதேபோலாயிற்று. முதல் தம்பதியர் இப்போது, தேவனுடைய பிரசன்னத்தை வரவேற்பதற்குப் பதிலாக, அவரிடத்தில் இருந்து

தங்களை ஒளித்துக் கொண்டனர். அவர்கள் தாங்கள் நிர்வாணமாக இருப்பதை எவ்வாறு அறிந்தனர் என்று அவர் கேள்விகேட்ட போது, ஆதாம் தமது சொந்த செயல்களுக்குப் பொறுப்பு உள்ளதை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, ஏவாள் மீது - மற்றும் தேவன் மீது மறைமுகமாக - பழிசுமத்தினார்: "என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன்" (3:12). மிகப் பெரும்பான்மையான மக்கள் இன்னமும் இவ்வாறே வாழ்ந்து வருகின்றனர் என்பது துரதிர்ஷ்ட வசனமானது: தேவனுடனும் ஒருவர் மற்றவருடனும் உள்ள உறவில் ஒளித்துக் கொள்ளுதல் மற்றும் பழிசுமத்துதல். 11 முதல் 16 வரையில் உள்ள வசனங்கள், நல்ல உறவுகள் ஏன் இவ்வளவு அரிதாக உள்ளன என்பதை விளக்குகிறது. சமாதானமும் இசைவிணக்கமும் இருந்த இடத்தில் இப்போது மன இறுக்கம் மிகவும் இயல்பாக வருகிறது. நாம் நமது வாழ்விற்காக மாத்திரமல்ல, ஆனால் மற்றவர்களுடன் நல்ல உறவுகளைக் கொண்டிருப்பதற்காகவும் செயல்பட வேண்டும் - இது மக்களில் பலர் செய்ய மறுக்கும் விஷயமாக உள்ளது.

சர்ப்பம், ஆண் பெண் மற்றும் படைப்பு முறைமீதும் கூட தரப்பட்ட "சாபங்களின்" வரிசை, பாவத்திற்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதைத் தேவன் விதிக்கிறார் என்று நமக்கு நினைவூட்டுகிறது; அதை அவர் காணாது விட இயலாது. இந்த "சாபங்கள்" தேவனுக்குக் கீழ்ப்படியாமையின் தவிர்க்க இயலாத விளைவுகளை உண்மையாக எடுத்துரைக்கின்றன. தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போகும்போது, நாம் மன்னிக்கப்பட்டாலும் அதனால் (பாவத்தினால்) உண்டாகும் விளைவுகள் எப்போதுமே *உள்ளன என்று நாம் அறிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.*

நாம் பாவம் செய்திருந்தாலும், தேவன் நம்மைக் கைவிட்டு விடுவதில்லை என்பது இந்த வரலாற்றில் உள்ள நற்செய்தியாகும். இது ஆதியாகமத்தின் விபரத்தில் இருந்தும் தரவழைக்கப்படுகிறது. <u>முதல் சுவிசேஷக் கூற்று</u> *என்று சில வேளைகளில் அழைக்கப்படுகிற, ஆதியாகமம் 3:15ம் வசனத்தில், வரவிருந்த மீட்பர் பற்றிய நற்செய்தி பற்றிய முதல் கூற்று அடங்கியுள்ளது. இது தனது தோற்றகாலச் சந்தர்ப்பப் பொருளில் மிக மங்கலமான ஒரு வாக்குத்தத்தமாக உள்ளது, வேதாகமரீதியான வெளிப்படுத்துதல் இதழ்விரியும்போது இது இன்னும் அதிக வெளிச்சமுள்ளதாகிறது. இவ்வசனம், "அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்று கூறுகிறது. புதிய ஏற்பாட்டின் கண்ணோக்கில் இருந்து, இது - தற்காலிகமாகத் தமது சொந்த ஜீவனை இழந்து போகுதல் என்ற விலையைக்கூடக் கொடுத்து, சாத்தானுடைய தலையையும் அவனது செயல் களையும் நசுக்க இருந்த - இயேசுவைப் பற்றிய குறிப்பாக உள்ளது என்பது தெளிவாகிறது.*

தேவன், பாவம் நிறைந்த தமது படைப்புயிர்களுக்காக அக்கறை கொள்ளத் தொடர்ந்தது பற்றிய மற்ற குறிப்புகள் நமது வசனப் பகுதியில் காணப்படுகின்றன. தேவன், "ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்" என்பது எவ்வாறு என்பதை ஆதியாகமம் 3:21ம் வசனம் விவரிக்கிறது. அது மனதை நெகிழ்விக்கும் ஒரு காட்சியாக உள்ளது. கடுங்கோபம் மூண்ட படைப்பாளர், தம்மை எதிர்த்து நின்ற தமது சந்ததியை அழித்து, அவர்களுக்கு தமது முதுகைக் காண்பிப்பதற்கு மாறாக, அவர்களின் நிர்வாணத்தையும், அவர்கள் தங்களுக்குத் தாங்களே கொண்டுவந்திருந்த

வெட்கக் கேட்டையும் மறைப்பதற்காக, தாமே அவர்களுக்கு உடைகளைத் தயார்செய்து கொடுத்தார். அது வரவிருந்த நல்லவிஷயங்களுக்கான ஒரு நல்ல அறிகுறியாக இருந்தது. அதுபோன்றே, 22 முதல் 24 வரையில் உள்ள வசனங்கள், நாம் கவனமாக வாசிக்காவிட்டால் காணாது விட்டுவிடக்கூடிய அன்பின் செயல் ஒன்றைப் பற்றி நமக்குக் கூறுகின்றன. தேவன், ஆதாமையும் ஏவாளையும் தோட்டத்தில் இருந்து வெளியேற்றி, ஜீவ விருட்சத்தில் இருந்து கனியை அவர்கள் புசித்து அதினால் அவர்கள் என்றென்றைக்கும் உயிரோடு இருந்துவிடாதபடிக்கு, ஜீவவிருட்சத்திற்குச் செல்லும் வழியை அடைத்தார். அவர்கள் பாவம் செய்யாது இருந்திருந்தால், அவர்கள் தேவனுடன் இசைவிணக்கமாக என்றென்றும் வாழ்ந்திருப்பார்கள் என்று யூகிக்கலாம். கலகம் செய்கிற மற்றும் பாவம் நிறைந்த படைப்புயிர்கள் என்ற வகையில் அவர்கள் என்றென்றும் வாழ அனுமதிக்கப்படக் கூடாதிருந்தது. பிறந்துள்ள ஒவ்வொரு மனிதரும் பாவியான நிலையில் இன்னமும் வாழ அனுமதிக்கப்பட்டிருந்தால் உலகமானது எவ்வளவு பயங்கரமான இடமாக இருக்கும் என்பதை நாம் கற்பனை செய்து பார்க்க மாத்திரமே முடியும்! அதைத் தேவன் அனுமதிக்கக் கூடாதவராக இருந்தார் - ஆனால் அவர் இன்னும் தமது செய்கையை முடித்திருக்கவில்லை, ஜீவ விருட்சம் இன்னமும் நிலவுகிறது. அதற்குச் செல்லும் வழி “காவல் செய்யப்பட்டிருக்கிறது,” ஆனால் வழியானது மீண்டும் அனுமதிக்கப்படும். (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 22:1-5), ஏனெனில் இந்தப் பரிதாபகரமான இழப்பு இயேசு கிறிஸ்துவினால் மாற்றிப்போடப்பட்டது. பாவம் இருந்த நிலையிலும் படைப்பாளர் இன்னமும் கட்டுப்பாடு செலுத்தக் கூடியவராக இருக்கிறார், மற்றும் பாவமானது முடிவில் வெற்றிபெற்றதாக இராது. இது இன்னமும் தேவனுடைய உலகமாக உள்ளது, நாம் இன்னமும் அவருடைய படைப்புயிர்களாக இருக்கிறோம். அவர் நம்மைக் கைவிட்டு விடமாட்டார்.

முடிவுரை

வேதாகமத்தின் எஞ்சிய பகுதியானது பாவம் என்ற பிரச்சனைக்கான தீர்வைப் பற்றியதாக உள்ளது. அந்தத் தீர்வு பற்றி நாம் மதித்து உணரக்கூடுவதற்கு முன்னர், அந்தப் பிரச்சனையை விளக்கி உரைக்கும் கொள்கைகளைப் பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் ஒரு நல்ல மற்றும் அன்புகூருகிற தேவனால், அவரது படைப்புச் செயலின் உச்சகட்டமாக, அவரது வசனத்தின் மீது நம்பிக்கை வைத்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற விருப்பநோக்கத்தில் படைக்கப்பட்டுள்ளோம். இருப்பினும் நாம் பாவம் செய்தோம் மற்றும் மரணம் என்பது தவிர்க்க இயலாத வகையில் பின்தொடருகிறது. ஆதியாகமம் 1-3 அதிகாரங்களை நாம் வாசித்து முடிக்கும் இவ்வேளையில், ஒரு மீட்பர் தேவை என்ற ஏக்கம் நமக்குள் கண்டறியப்பட வேண்டும்.

குறிப்பு

[1]Paul R. House, *Old Testament Theology* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1998), 64-65.

“நமது சாயலாக”?

ஆதியாகமம் 1:26ல் பன்மைப் பெயர்ச்சொற்கள் பயன்படுத்தப் பட்டிருத்தல் பற்றி அதிகமான கலந்துரையாடல் சூழ்ந்துள்ளது. அவை அர்த்தப்படுத்தக் கூடியது என்ன? ஒரே ஒரு தேவன் இருக்கிறார் என்பதால், மற்றும் (இவ்வசனத்தின் வேளையில்) இன்னமும் ஒருவரும் படைக்கப்படாது இருந்தனர் என்பதால், அவர் யாரிடத்தில் பேசிக்கொண்டிருந்தார்? அவர் மனிதர்களுக்கு முன்னரே படைக்கப்பட்டிருந்த தேவதூதர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்தார் என்பது ஒரு கருத்தாக உள்ளது. இது சாத்தியமானதாகவே உள்ளது, ஆனால் வேதாகமம் இவ்வாறு கூறுவதில்லை.

இது ‘‘மாட்சிமையின் பன்மைத்தன்மையாகும்,’’ இதில் பேசுபவர் தம்மைப்பற்றியே பன்மையில் குறிப்பிட்டுக்கொண்டார், உண்மையில் இது “நான்” என்றே அர்த்தப்படுகிறது என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. ஒருவேளை, தேவன் - பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று நபர்த்துவத்தில் நிலவுகிறார், மற்றும் இந்தப் பிரதிப்பெயர்ச்சொல் இம்மூவருக்கும் இடையில் நிகழ்ந்திருக்கக் கூடிய ஒரு ‘‘உரையாடல்’’ அல்லது கருத்தூன்றி சிந்தனை பற்றிய சிலவற்றைச் சுட்டிக்காண்பிக்கிறது என்ற உண்மையை இவ்வசனம் பிரதிபலிக்கிறது என்பது கிறிஸ்தவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான விளக்கமாக உள்ளது. (ஆதியாகமம் 1:2ல் படைப்பின் நிகழ்வில் பரிசுத்த ஆவியானவரின் பணியைப் பற்றியும், யோவான் 1:3, 10 மற்றும் எபிரெயர் 1:2 ஆகிய வசனங்களில், படைப்பு நிகழ்வில் கிறிஸ்துவும் ஈடுபட்டிருந்தார் என்பது பற்றிய கூற்றுகளையும் கவனிக்கவும்.) இது புதிய ஏற்பாட்டில் பிற்பாடு தேவனுடைய மூன்று வகை இயல்பைப் பற்றிய குறிப்புகளுடன் இசைவு கொண்டுள்ளது.

2

"ஆபிரகாம் – இரட்சிப்பின் தொடக்கம்"

(ஆதியாகமம் 12 & 15)

"ஒருவருடைய முக்கியத்துவத்தை ஒருக்காலும் குறைத்து மதிப்பிடாதீர்கள்" என்று அடிக்கடி கூறப்படுவது உண்டு. இந்தக் கூற்றானது வேதாகம ரீதியான எடுத்துரைப்புக்கு நிச்சயமாகவே உண்மையாக உள்ளது, எனெனில் தனிநபர் ஒருவரின் முக்கியத்துவத்தைத் தேவன் ஒருக்காலும் கவனியாது விடுவதில்லை. மனித இனமானது ஆதாம் என்ற ஒரே ஒரு மனிதனைப் படைத்ததைக் கொண்டு தொடங்கிற்று. பிற்பாடு ஆதியாகமம் 6ம் அதிகாரத்தில், மனித இனத்தின் தொடர்ச்சி,நோவா என்ற ஒரே ஒரு மனிதனைச் சார்ந்திருந்தது. எகிப்திய அடிமைத்தளையில் இருந்து இஸ்ரவேல் மக்கள் விடுவிக்கப்பட்டது மோசே என்ற ஒரே ஒரு மனிதரால் வழிநடத்தப்பட்டது. நிறைவாக இஸ்ரவேலின் மேசியாவும் உலகத்தின் மீட்பருமாகியவரின் பிறப்பு (உண்மையில் தனது இளம் வாலிப வயதுகளில் இருந்த ஒரு இளம்பெண்ணான) ஒரே ஒரு பெண் மூலமாக நிறைவேற்றப்பட்டது.

ஆகவே பாவம் என்ற பிரச்சனைக்கான தேவனுடைய தீர்வு (இது ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் இருந்து விளைந்ததாகும்) ஒரே ஒரு மனிதனைக் கொண்டு தொடங்கிற்று என்பதில் வியப்பு எதுவும் இல்லை. அந்த மனிதர் ஆபிரகாம் என்பவராக இருந்தார், அந்த வேளையில் "ஆபிராம்" என்பது அவரது பெயராக இருந்தது.

ஆதியாகமம் 1-3 அதிகாரங்கள் உலகமும் அதன் மனித மக்கள் தொகையும் படைக்கப்பட்டதை பற்றியும் மேலும் பாவத்தின் தொடக்கத்தைப் பற்றியும் பதிவுசெய்கிறது. 4 முதல் 11வரையிலான அதிகாரங்கள், ஆதாமும் ஏவாளும் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து விஷயங்கள் இன்னும் மோசமாக ஆனதைக் காண்பிக்கின்றன. ஆகவே தேவன் தமது படைப்பைத் தமது சித்தத்திற்கு கொண்டு வருதல் என்ற நூற்றாண்டுகள் கால அளவிற்கு நீண்ட செயல்முறையை, தமது திட்டத்தில் ஒரு விசேஷித்த கருவியாக இருக்கும்படி ஆபிரகாமை அழைத்ததன் மூலம் தொடங்கினார். இந்த அழைப்பு ஆதியாகமம் 12 மற்றும் 15ம் அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆபிரகாம், இஸ்ரவேலின் "மாபெரும் முற்பிதாக்கள்" மூவரில் முதலாமவராக இருந்தார்: ஆபிரகாம், அவரது மகன் ஈசாக்கு மற்றும் ஈசாக்கின் மகன் யாக்கோபு. இந்த மூவரும் தோராயமாக கி.மு. 2100-1700 என்ற காலகட்டத்தில் வாழ்ந்தனர்.

ஆபிரகாமின் பேரனான யாக்கோபுக்கு பன்னிரெண்டு மகன்கள் இருந்தனர், இவர்கள் "இஸ்ரவேல்" (இது யாக்கோபுவின் மறுபெயராகும்;

காண்க ஆதியாகமம் 32:28) என்று அறியப்பட்ட மக்களினத்தின் பன்னிரெண்டு "கோத்திரங்களின்" தலைவர்களாக ("முற்பிதாக்களாக") ஆயினர். இஸ்ரவேல் மக்களில் (விசேஷமாக, யூதா கோத்திரத்தில்) இருந்து நிறைவாக, இயேசு என்ற மேசியா வருவதாக இருந்தார். அவரே பாவத்திற்கான நிறைவான தீர்வாக இருப்பார். இது யாவும் இந்த ஒரு மனிதரை அழைத்தலையும் அவரது விசுவாசமான பதில்செயலையும் கொண்டு தொடங்கிற்று.

தேவன் ஆபிரகாமைச் சந்தித்த முதல் நிகழ்வு ஆதியாகமம் 12:1-4ல் பதிவு செய்யப்பட்டுள்ளது, இங்கு அவர் (தேவன்) தமது "உடன்படிக்கையை" அவரிடம் (ஆபிரகாமிடம்) முதன்முதலாக எடுத்து உரைத்தார். இந்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் ஆதியாகமம் 15:1-6ல் மீண்டும் உரைக்கப்பட்டு அதிகம் வெளிப்படையாக்கப்பட்டன. இவ்விரு வசனப் பகுதி களையும் கண்ணோக்குவதன் மூலம் நாம், வரவிருந்த இரட்சிப்பின் இயல்பைப் பற்றிய முக்கியமான சில கருத்துக்களைக் கற்றறிய முடியும்.

இரட்சிப்பு என்பது தேவனுடைய திட்டத்தின்படியானதாக இருக்கும்

ஆபிரகாமுடன் தேவனுடைய உடன்படிக்கையானது, மனித இனத்தின் இரட்சிப்பு என்பது மனிதரீதியான முதற்செயல் அல்லது முயற்சியின் விளைவாக வராது என்பதைத் தெளிவாக்குகிறது. படைப்பின் முதற்செயல் என்பது தேவனுடையதாக இருந்தது போன்றே மனித இனத்தின் மறுவுருவாக்கத்தையும் தேவனே தொடங்குவார். இந்த செயல்முறை "தேர்ந்து கொள்ளுதல்" என்று அழைக்கப்படுகிறது. தேவன் தாம் செயல்படுவதற்கு ஆபிரகாமையும் அவரது சந்ததியார்களையும் தேர்ந்து (அல்லது "தெரிந்து") கொண்டார். இந்தத் தேர்ந்துகொள்ளுதல் யூதப்பாரம்பரியங்கள் சிலவற்றின் உரிமைகோருதல் போன்று ஆபிரகாமின் நற்தன்மை அல்லது பூரணத்துவத்தைச் சார்ந்து இருக்கவில்லை. ஆபிரகாம் பாவமற்ற தன்மையில் இருந்து தொலைவில் இருந்தார் என்பதைக் காண்பதற்கு, ஒருவர் ஆதியாகமம் 16 முதல் 25 வரையில் உள்ள அதிகாரங்களை மாத்திரம் வாசித்தல் தேவையாக உள்ளது. அவர் பொய்கூறினார், தமது விசுவாசத்தில் அலைவுபட்டிருந்தார் மற்றும் தமது குடும்பத்தைத் தவறாக மேலாண்மை செய்தார். இல்லை, தேவன் ஆபிரகாமைத் தேர்ந்துகொண்டது, ஆபிரகாமின் தகுதியால் அல்ல ஆனால் தேவனுடைய கிருபையால் ஆனதாகவே இருந்தது.

ஆதியாகமம் 12:2, 3ல் தேவன் ஒரு விசாலமான வரைக்குறிப்பில் தமது திட்டத்தை வெளிப்படுத்தினார். ஆபிரகாமில் இருந்து ஒரு மாபெரும் மக்களினம் வரும், மற்றும் அந்த மக்களினத்தில் இருந்து, "பூமியிலுள்ள சகல குடும்பங்களுக்கும்" ஆசீர்வாதமாக இருக்கும் ஒருவர் வருவார். வேதாகமத்தின் சில மொழிபெயர்ப்புகள் 3ம் வசனத்தின் பிற்பகுதியைப் பின்வருமாறு தரவழைக்கின்றன: "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் தங்களை ஆசீர்வதித்துக் கொள்ளும்" (RSV). ESV போன்ற பிற மொழிபெயர்ப்புகளில், "பூமியின் எல்லாக்குடும்பங்களும் உனக்குள் அல்லது உன்னால் ஆசீர்வதிக்கப்படும்" என்றுள்ளது. எதிர்காலத் தலைமுறைகள் (மற்றும் இஸ்ரவேலைத் தவிர மற்ற மக்களினங்களும்) ஆசீர்வாதங்களை உச்சரித்துப்

பேசுவதில் ஆபிரகாமின் பெயர் இருக்கும் என்பதே முதல் வாசிப்பின் கருத்துப் பொருளாக உள்ளது. இரண்டாவது வாசிப்பானது, எல்லா மக்களினமும் ஆபிரகாமின் மூலமாக நிறைவாக ஆசீர்வதிக்கப்படும் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது; ஏனெனில் உலகத்தின் மீட்பரான இயேசு, அவரது (ஆபிரகாமின்) சந்ததிகளில் ஒருவராக இருப்பார். இவ்விரு மொழிபெயர்ப்புகளுமே இலக்கணரீதியாகச் சாத்தியமானவையாகவும் ஓரளவிற்கு உண்மையாகவும் உள்ளன, ஆனால் பிந்திய மொழிபெயர்ப்பானது, ஏவுதல் பெற்ற எழுத்தாளரின் விருப்பநோக்கத்தை அதிகமாகக் காத்துக்கொள்வதாக இருக்கலாம், ஏனெனில் உண்மையில் இதுவே நடந்தது என்பதை வேதமாகத்தின் எஞ்சிய பகுதி உறுதிப்படுத்துகிறது. எவ்வாறாயினும், உலகத்தை ஆசீர்வதிக்க ஆபிரகாமின் மூலம் செயல்படுதல் என்பதே தேவனுடைய திட்டமாக இருந்தது. இது இயேசுவின் வருகை மற்றும் நமது பாவங்களுக்காக அவர் மரித்து உயிர்த்தல் ஆகியவற்றில் உச்ச கட்டத்தை அடைந்தது.

1 கொரிந்தியர் 15:20-28ல் பவுல், ‘‘சகலமும்’’ தேவனுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டது பற்றிப் பேசுகையில், இந்தத் திட்டத்தைப் பற்றியே அவர் பேசினார். அவர் 1 கொரிந்தியர் 15:42-50ல், “முதல் மனிதனால்” அறிமுகப்படுத்தப்பட்ட பாவத்தின் செயல்விளைவுகளைத் திருப்பிப்போடும் வருகையைச் செய்யும் “பிந்தின ஆதாம்” என்று இயேசுவைக் குறிப்பிட்டபோது, இந்த சத்தியத்திற்குக் கூடுதலான வலியுறுத்தத்தைக் கொடுத்தார். அதுபோலவே, வெளிப்படுத்தின விசேஷம் 22:1-5 வசனப் பகுதியானது, பாவத்திற்குள் விழுந்ததின் செயல்விளைவுகளை நிறைவாகத் திருப்பிப்போடுதல் என்ற வகையில் நித்தியத்துவத்தைச் சித்தரிக்கிறது. பரலோகமானது, மீண்டும் எல்லாரும் அடையக்கூடிய “ஜீவ விருட்சத்தைக்’’ கொண்டு நிறைவு பெற்றிருக்கும் தோட்டம் என்ற சொற்றொடர்களில் விவரிக்கப்படுகிறது.

காலத்தைப் பற்றிய வேதாகம ரீதியான கண்ணோட்டம் நீள்வகையானதாக உள்ளது. இது, காலம் என்பது (படைப்பில்) ஒரு தொடக்கத்தைக் கொண்டிருந்தது என்றும் அது (இயேசு மீண்டும் வரும்போது) மிகநிச்சயமாக ஒரு முடிவைக் கொண்டிருக்கும் என்றும் மாத்திரம் அர்த்தப்படுகிறது. பல மதங்கள் காலத்தின் சுழற்சிக் கண்ணோக்கை முன்வைக்கின்றன. இந்தக் கருத்தின்படி, தொடக்கமோ அல்லது முடிவோ இருப்பதில்லை; ஒவ்வொரு விஷயமும் சுழற்சிகளில் மாத்திரம் நடக்கிறது. மையக் கருத்தில் காணும்போது இது வேதாகமத்தின் கண்ணோட்டத்துடன் ஒப்பிடுகையில், நம்பிக்கையற்ற கண்ணோக்காவே உள்ளது, ஏனென்றால் இப்படிப்பட்ட ஒரு காட்சி அமைவில் எந்த ஒரு விஷயமும் உண்மையில் மாற முடியாது. பாவம், மரணம் மற்றும் துன்புறுதல் ஆகியவற்றிற்கு நிறைவான முடிவு எதுவும் இருக்கமுடியாது - ஒரே மாதிரியான விஷயங்கள் திரும்பத் திரும்ப நடைபெறும் வடிவங்கள் மாத்திரமே உள்ளன. காலம் பற்றிய வேதாகரீதியான நீள்வகைக் கண்ணோக்குடன், ஒவ்வொரு விஷயமும் மாபெரும் உச்சக்காட்சியை நோக்கியும் நம் எல்லாரையும் படைத்த தேவனுடன் ஒரு மறு இணைப்பை நோக்கியும் முன்செல்லுகிறது. இது நாம் ஒவ்வொருவரும் கால ஓட்டத்தில் பிடிபட்டுள்ளோம் என்றும், கிறிஸ்துவின் மூலமாக நித்திய வாழ்வு அல்லது அவரின்றி ஒரு நித்திய அழிவு என்ற நித்தியத்தை நோக்கி முன்செல்லுகிறோம் என்பதையும் அர்த்தப்படுத்துகிறது.

இரட்சிப்பு என்பது ஒரு உடன்படிக்கையின் அடிப்படையில் அமையும்

ஆதியாகமம் 12ல் தேவன் ஆபிரகாமுடன் பேசி அவருடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். ஒரு ''உடன்படிக்கை'' என்பது வாக்குத்தத்தங்கள் இணைந்த ஒரு முறையான ஒப்பந்தமாக உள்ளது. மக்களில் இருவர், ஒரு திருமண உடன்படிக்கையில் உள்ளது போன்று, தங்களுக்கிடையே ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இருப்பினும் வேதாகமத்தில், மனிதகுலத்துடன் உடன்படிக்கைளைத் தேவனே எப்போதும் தொடங்கி வைப்பவராக இருந்தார், அவரே நிபந்தனைகளை ஏற்படுத்தினார், அவரே ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் செய்தார். விசுவாசித்தலும் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிதலும் மாத்திரமே மனிதரின் பங்காக இருந்தது. தேவன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தியபோது, அது ஒருக்காலும் "சமமானவர்களுக்கு இடையிலான ஒப்பந்தமாக" இருக்க இயலாதிருந்தது. ஆபிரகாமுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை விஷயத்தில், அவர் [தேவன்] வாக்குத்தத்தங்களை வழங்கினார் மற்றும் அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதா அல்லது மறுப்பதா என்பதை ஆபிரகாமே தீர்மானிக்க வேண்டியவராக இருந்தார்.

இந்த உடன்படிக்கையில் ஐந்து வாக்குத்தத்தங்கள் தரப்பட்டன:

1. தேவன் ஆபிரகாமுக்கு ஒரு நாட்டைக் கொடுப்பார் (ஆதியாகமம் 12:1). ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து கானான் நாட்டிற்குப் போன உடன், தேவன் இன்னும் அதிகம் திட்டவட்டமாகக் குறிப்பிடுபவர் ஆனார்: "உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்" (வசனம் 7).

2. தேவன் ஆபிரகாமின் குடும்பத்தை வல்லமை நிறைந்த மக்களாகக் கட்டி எழுப்புவார். தேவன், "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி" என்று மாத்திரம் கூறினார் (12:2அ). தேவன் இந்த வாக்குத்தத்தத்தை ஏற்படுத்தியபோது, ஆபிரகாமுக்கு மாம்சப்பிரகாரமான சந்ததிகள் எதுவும் இருந்திருக்கவில்லை என்பதால், இது உண்மையிலேயே ஒரு வாக்குத்தத்தமாக இருந்தது (11:30).

3. தேவன் ஆபிரகாமின் பெயரைப் பெருமைப்படுத்துவார் (வசனம் 2). இது தேவன் ஆபிரகாமை மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஆக்குவார் என்று அர்த்தப்படுவதாகக் காணப்படுகிறது. இந்த வாக்குத்தத்தம் உண்மையானது என்று நிச்சயமாகவே நிரூபிக்கப் பட்டுள்ளது. அவரது பெயரானது உலகம் முழுவதிலும் காலங்கள் யாவற்றிலும் அறியப்பட்டுள்ளது.

4. தேவன் ஆபிரகாமைப் பாதுகாப்பார். "உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்" (12:3அ).

5. ஆபிரகாமின் மூலமாக பூமியில் உள்ள எல்லா மக்களினங்களும் ஆசீர்வதிக்கப்படும் (12:3).

ஆபிரகாம் தமது பங்கிற்கு, தேவன் மீது நம்பிக்கை வைத்து அவர் கூறியதைச் செய்ய வேண்டி மாத்திரம் இருந்தது. 1ம் வசனம் அனேகமாக, ஆபிரகாமின் விசுவாசத்திற்கு மாபெரும் தொடக்க அறைகூவலைக் கொண்டிருந்தது: "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ." ஆபிரகாம் தமது சொந்த நாட்டை விட்டுச் செல்வது மட்டுமல்ல, ஆனால் தமது குடும்பத்துடன்

(இவர்கள் விக்கிரக ஆராதனை செய்பவர்களாக இருந்தனர் என்று நாம் பிற்பாடு அறிகிறோம்) இருந்த பிணைப்புக்களையும் அறுத்தெறிய வேண்டியவராக இருந்தார். இதைச் செய்ததில் அவர், பூமிக்குரிய பாதுகாப்பு மற்றும் வசதி ஆகியவற்றின் அடையாளங்கள் யாவற்றையும் பின்விட்டுச் செல்பவராக இருப்பார். அவர் எங்கே செல்ல வேண்டி இருந்தது? "நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு." அந்த வேளையில் அவர் அதை மாத்திரமே அறிந்திருந்தார்; மேலும் விவரிப்புகள் அளிக்கப் பட்டிருக்கவில்லை. இந்த நாட்டைப்பற்றி அதிகமாகக் கண்டறிவதற்கு ஆபிரகாம் தேவன் மீது நம்பிக்கை வைத்து தாம் அனுப்பப்பட்ட இடத்திற்குச் செல்ல வேண்டி இருந்தது. ஆபிரகாமுக்கு நன்மதிப்பு அளிக்கும் வகையில் 12:4அ வசனப் பகுதியானது, "கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்" என்று கூறுகிறது.

வேதவசனங்கள் முழுவதிலும் தேவன், உடன்படிக்கையை - ஏற்படுத்துபவராகவும் உடன்படிக்கையைக் காத்துக்கொள்பவராகவும் காண்பிக்கப் பட்டுள்ளார். அவரது படைப்புயிர்கள் அவரது வார்த்தையின்மீது முற்றிலுமாக நம்பிக்கை வைக்க முடியும். இதற்கான ஏராளமான உதாரணங்கள் நாம் குறிப்பிடுவதற்கென்று வேதாகமத்தில் தரப்பட்டுள்ளன, ஆனால் இங்கு ஒருசில மாத்திரம் உள்ளன. பெருவெள்ளம் மற்றும் அதிலிருந்து நோவாவின் குடும்பம் காக்கப்படுதல் ஆகியவற்றைப் பற்றித் தேவன் நோவாவுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். பின்பு அவர் இனி ஒருக்காலும் தண்ணீரினால் பூமியை மீண்டும் அழிக்கப் போவதில்லை என்று வாக்குத்தத்தம் செய்தார் (ஆதியாகமம் 6:5-9:17). பிற்பாடு அவர் சீனாய் மலையில் இஸ்ரவேல் மக்களுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தி, அவர்கள் தமது மக்களாக இருக்க மனவிருப்பம் கொண்டிருந்தால், தாம் அவர்களின் தேவனாக இருப்பதாக வாக்களித்தார். அந்த வாக்குத்தத்தத்தின் ஒரு தனிப்பட்ட அம்சத்தில் கூட அவர் ஒருக்காலும் தவறவில்லை (யாத்திராகமம் 19; 20). பின்பு இயேசு வந்தார்; அவர் மூலமாகத் தேவன் மனித இனம் முழுவதுடனும் ஒரு "புதிய உடன்படிக்கையை" ஏற்படுத்தினார். இப்போது அவர் இயேசுவின் மீதும் சிலுவையில் அவர் செய்த தியாகத்தின்மீதும் கொள்ளப்படும் விசுவாசத்தின் மூலமாக நித்திய இரட்சிப்பை வாக்குத்தத்தம் செய்கிறார் (லூக்கா 22:20; எபிரெயர் 9:11-22). பின்வருவதுதான் மிகச்சரியாக இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷமாக உள்ளது: நம்மைப் படைத்த தேவனுடன் ஒரு உடன்படிக்கை உறவில் நுழைந்து அவரது ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு அழைப்பு.

இரட்சிப்பு என்பது ஆபிரகாமின் சந்ததியார் மூலமாகவே வரும்

தேவன் ஆபிரகாமை ''பெரிய மக்களினமாக'' ஆக்குவதாக வாக்களித்திருந்தார், ஆனால் மிகப் பெரிய பிரச்சனை ஒன்று இருந்தது: ஆபிரகாம் வயது சென்றவராகவும் பிள்ளைகள் இல்லாதவராகவும் இருந்தார். ஆபிரகாமுக்கு இது உடன்படிக்கையின், நம்பிக்கை கொள்ள மிகக் கடினமான பகுதியாக இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. அதனால்தான் இந்த வாக்குத்தத்தம் ஆதியாகமம் 15:1-6ல் குறிப்பிட்ட வகையில் கவனம் குவிக்கக் கூடியதாக உள்ளது. தேவன் ஆபிரகாமிடத்தில், "அவருக்குக் கிடைக்கும்

பலன் மிகவும் பெரிதாக இருக்கும்" என்று மறு உறுதி அளித்திருந்திருந்தார் (வசனம் 1). ஆபிரகாம் சலிப்புடன், "கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய் இருக்கிறானே ... தேவரீர் எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான்" என்று ஒருவகையில் சலிப்புடன் பதில் உரைத்தார் (15:2, 3). ஆபிரகாமுக்குப் பிறக்கும் மகன் அவருக்குச் சுதந்தரவாளியாக இருப்பார் என்றும் அவரது சந்ததியார் வானத்து நட்சத்திரங்களைப் போன்று எண்ணிறந்தவர்களாக இருப்பார்கள் என்றும் தேவன் ஆபிரகாமுக்கு மறு உறுதி அளித்தார் (15:4, 5). அந்த சந்ததியார்களின் மூலமாகத் தேவன் உலகத்தையே ஆசீர்வதிக்க இருந்தார், அந்த சந்ததியார்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படாது.

மீண்டும், இந்த ஆசீர்வாதம் தேர்ந்து எடுக்கப்பட்ட ஒரு நபர் மூலமாக வர வேண்டி இருந்தது. கலாத்தியர் 3:16ல் "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அது கிறிஸ்துவே" என்று கூறியபோது பவுல் இதையே வலியுறுத்தினார். ஆபிரகாமுக்குத் தேவன் அளித்திருந்த வாக்குத்தத்தம் நிறைவேறுதலைக் கொண்டுவருவதில், நாற்பதிற்கும் அதிகமான தலைமுறைகளுக்குப் பின்பு இயேசு, காலங்களின் கவனக் குறிப்பிடமாக வர வேண்டி இருந்தது. எனவே, புதிய ஏற்பாடு பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குவதில் வியப்பு எதுவும் இல்லை: "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" (மத்தேயு 1:1).

இயேசுவின் மூலமாகவே மக்களினங்கள் யாவும் குறிப்பாக ஆசீர்வதிக்கப்பட வேண்டியதாக இருந்தது. அவர் தேவனுடைய ஆசீர்வாதத்தை (ஆபிரகாமின் மாம்சப்பிரகாரமான சந்ததியார்களான) இஸ்ரவேல் மக்களினத்திற்கு வெளியே, "பூமியின் எல்லாக் குடும்பங்களுக்கும்" எடுத்துச் சென்றார் (ஆதியாகமம் 12:3). இயேசு பரலோகத்திற்குச் செல்வதற்குச் சற்றுமுன்னர், அவர் தமது சீஷர்களுக்கு, "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து" (மத்தேயு 28:19) என்று அறிவுறுத்தியபோது, அந்த வாக்குத்தத்தத்தின் தொடர்ச்சியானது தெளிவாக்கப்பட்டது. இங்கு ஆபிரகாமுக்குத் தேவன் அளித்திருந்த வாக்குத்தத்தத்தின் நிறைவான நிறைவேற்றம் இருந்தது; அவரது சந்ததியார் மூலமாக உலகம் முழுவதும் ஆசீர்வதிக்கப்படும்.

இரட்சிப்பு என்பது விசுவாசத்தைச் சார்ந்ததாக இருக்கும்

ஆதியாகமம் 12:1-4ல் தேவன் தமது வாக்குத்தத்தத்தை விசுவாசிக்கும்படியும், பூமிக்குரிய பாதுகாப்பான விஷயங்கள் யாவற்றையும் கைவிடும்படியும், ஆதாரமின்றியே தம்மீது நம்பிக்கை கொள்ளும்படியும் ஆபிரகாமுக்கு அறைகூவல் விடுத்தார். அவர் (தேவன்) அவருக்கு (ஆபிரகாமுக்கு), கானான் நாட்டின் வனப்புகளை விவரிக்கும் ஒரு பயணக் கையேட்டையோ அல்லது

அங்கு ஆதாயப்படுத்தக்கூடிய செல்வங்கள் பற்றிய முக்கிய அம்சங்களைக் கொண்ட புத்தகம் ஒன்றையோ அளிக்கவில்லை. அவர் தம்மையும் தமது வார்த்தையும் மாத்திரமே அளித்தார். அதுபோன்றே, சந்ததி ஒன்று தரப்படும் என்று வாக்களிக்கப்பட்டதில், குழந்தைகளுக்குத் தந்தையாகும் விஷயத்தைப் பொறுத்தமட்டில் "சரீரம் செத்தவர்" என்ற வகையில் முதிர் வயதாக இருக்கும் ஒரு மனிதர் மாபெரும் மக்களினத்திற்குத் தந்தையானவர் என்ற கேலிக்குரிய கருத்தை ஆபிரகாம் எதிர்கொண்டார் (எபிரெயர் 11:12; ரோமர் 4:19). இருந்தபோதிலும் ஆபிரகாம் "கர்த்தரை விசுவாசித்தார்" என்று ஆதியாகமம் 15:6ம் வசனம் கூறுகிறது. உலகப்பிரகாரமான ஆதாரம் நேர்மாறானதைக் கருத்தாகத் தெரிவித்த போதிலும், அவர் மீதும் அவரது வாக்குத்தத்தங்களைச் செயல்படுத்தும் அவரது திறன்மீதும் ஆபிரகாம் நம்பிக்கை வைத்தார்.

பிற்பாடு அந்த விசுவாசம் மிகச் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அந்த வாக்குத்தத்தங்கள் யார்மூலம் நிறைவேற்றப்பட இருந்ததோ அந்த நபரை, அதாவது ஆபிரகாமின் மகன் ஈசாக்கை அவர் மோரியா மலைக்குக் கூட்டிச்சென்று அங்கே அவரைப் பலிசெலுத்த வேண்டும் என்று தேவன் அறிவுறுத்தியதை ஆதியாகமம் 22ம் அதிகாரம் பதிவுசெய்துள்ளது. தேவன் இடையிட்டு ஆபிரகாம் அந்தச் சோதனையில் வெற்றிபெற்றார் என்று கூறாதிருந்தால் ஆபிரகாம் அவ்வாறே பலி செலுத்தி இருப்பார். இப்போது அவர் தமது விசுவாசத்தில் முழுமையான அளவுக்குத் தேறியிருந்ததைச் செயல்விளக்கப் படுத்தினார். ஈசாக்கைப் பலியிடுதலை ஆபிரகாம் சாத்தியமான வகையில் எவ்வாறு ஆழ்ந்து சிந்தித்து இருக்க முடியும் என்று நாம் வியப்படையலாம், அது சந்ததிகளின் "மக்களினம்" பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கு நேர் எதிராகச் செயல்பட்டு இருக்காதா? ஆபிரகாம், கீழ்ப்படியாமலிருப்பதற்கான தமது வழியைப் பகுத்தறிந்து பார்த்தல் என்பது அவருக்குச் சுலபமானதாக இருந்திருக்கும், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை - அது ஏன் என்பதை வேதாகமம் பிற்பாடு பின்வருமாறு கூறுகிறது:

> மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். "ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே"; இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், *மரித்தோரிலிருந்துமெழுப்பத் தேவன் வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி,* தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான் (எபிரெயர் 11:17-19; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

ஆபிரகாம் தமது மகனைப் பலிசெலுத்த விசுவாசத்தைத் திரட்ட எவ்வாறு முடிந்தது? தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மற்றும் அவர் வல்லமை ஆகியவற்றின்மீது அவர் கொண்டிருந்த முழுமையான நம்பிக்கையினால், அவர் ஈசாக்கைப் பலிசெத்தினாலும் அவரை மரித்தோரில் இருந்து எழுப்பத் தேவன் திட்டமிட்டு இருக்க வேண்டும் என்று அவர் முடிவு செய்தார். ஆபிரகாம் இடறி, தமது விசுவாசத்தில் அலைவு பட்டிருந்தாலும், அவர் எப்போதுமே, தம்மை

அழைத்து தமது முழுமையான வார்த்தையைத் தமக்குக் கொடுத்திருந்த தேவன் மீதான நம்பிக்கைக்குத் திரும்ப வந்தார். எனவே பவுல் "நிறைவான விசுவாசி" பற்றிய உதாரணத்தைக் கொடுத்தபோது, அவர் ஆபிரகாமின் பெயரைப் பயன்படுத்தியதில் வியப்பு எதுவும் இல்லை:

> *தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனைமகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காக மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார் (ரோமர் 4:20-25; காண்க வசனங்கள் 1-3, 11, 12).*

முடிவுரை

ஆபிரகாமைத் தேவன் சந்தித்த நிகழ்ச்சியானது, இரட்சிப்பு எவ்வாறு வரும் மற்றும் அது எவ்வாறு செயல்படும் என்பது பற்றிய பழங்காலக் கொள்கைகள் சிலவற்றை நிலைநாட்டிற்று. ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம் செய்தவற்றின் நிறைவேற்றத்தினுடைய கருத்து நோக்கில் இருந்தே நாம் இன்றைய நாட்களில் பின்வரும் இரட்சிப்பைக் கண்ணோக்கக் கூடியவர்களாக இருக்கும்படி ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்: இயேசுவின் வருகை, உலகம் முழுவதின் பாவங்களுக்கான அவரது மரணம் மற்றும் அவரது உயிர்த்தெழுதல். ஆபிரகாமிடத்தில் தேவன் முன்னுரைத்தவை, தேவன் அவற்றை முதலில் பேசிய போது இருந்ததைக் காட்டிலும் இன்றைய நாட்களில் குறைவான உண்மையாக இருப்பதில்லை: நமக்கு இரட்சிப்பு என்பது தேவன் கவனநிறைவுடன் செயல்படுத்திய திட்டத்தின் மூலமாகவே வந்துள்ளது. இது ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் ஆகியவற்றைக் காட்டிலும் மாபெரும் வாக்குத்தத்தங்கள் மற்றும் ஆசீர்வாதங்களைக் கொண்டுள்ள புதிய உடன்படிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது (காண்க எபிரேயர் 8:6, 7; 9:15). இந்த இரட்சிப்பு "ஆபிரகாமின் சந்ததியான" இயேசுவினால் நமக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது; மற்றும் இதைத் தழுவிக்கொள்ள நமது மனவிருப்பத்தின் மீதே இதன் நிறைவான வெற்றி அமைந்துள்ளது. விசுவாசத்தினால் நாம் தேவன் மீது நம்பிக்கை வைத்து, அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்து நமது வாழ்வை அவரது வசனத்திற்குக் கீழ்ப்படிதல் மூலமாக அவருடைய பராமரிப்பில் வைக்கக் கடவோம்.

புதிய ஏற்பாட்டில் ஆபிரகாம்

பழைய ஏற்பாட்டில் அடிக்கடி குறிப்பிடப்படுவது மாத்திரமின்றி, புதிய ஏற்பாட்டிலும் முப்பத்தி ஒன்பது முறை குறிப்பிடுமளவுக்கு, உலகத்தின் மீட்பிற்கான தெய்வீகத் திட்டத்தில் ஆபிரகாம் மிகவும் குறிப்பிடத்தக்கவராக இருக்கிறார். புதிய ஏற்பாட்டில் ஆபிரகாம் பல வகைகளில் பணிசெய்கிறார்:

1. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் தேவனுடைய பணித் தொடர்ச்சி மற்றும் அடையாளப் படுத்துதல் ஆகியவற்றைக் காண்பிக்க. பழைய ஏற்பாட்டில் போன்றே புதிய ஏற்பாட்டிலும் தேவன், "ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாகிய நம்முடைய பிதாக்களின் தேவன்" என்று அடையாளப்படுத்தப்படுகிறார் (நடபடிகள் 3:13; காண்க மத்தேயு 22:32; லூக்கா 1:55).

2. தேவனுடைய உண்மைத் தன்மையைச் செயல்விளக்கப்படுத்த. அவர் ஆபிரகாமுக்குத் தமது வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொண்டது போன்றே இன்றைய நாட்களிலும் தமது மக்களிடத்தில் அதைக் காத்துக்கொள்கிறார் (லூக்கா 1:73; நடபடிகள் 3:25, 26; எபிரெயர் 6:13).

3. இயேசு உண்மையிலேயே ஆபிரகாமின் "சந்ததியாக," இஸ்ரவேலுக்கும் உலகம் முழுவதற்கும் கூடத் தேவன் தமது திட்டங்களை நிறைவேற்றத் தேர்ந்துகொள்ளப்பட்ட சந்ததியாக இருக்கிறார் என்பதைச் சரிபார்க்க (மத்தேயு 1:1; கலாத்தியர் 3:14-16).

4. இரட்சிப்பு கிரியைகளின் மூலம் ஈட்டப்படுவதால் வருவதல்ல, ஆனால் விசுவாசத்தின் மூலம் தேவனிடமிருந்து பெறப்படுகிற கொடையாக உள்ளது என்பதை வலியுறுத்த (ரோமர் 4; கலாத்தியர் 3:14-29).

5. உடல் ரீதியான சந்ததியல்ல, ஆனால் விசுவாசமே ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகளாக (சந்ததியாக) ஆக்குகிறது என்பதைப் போதிக்க (யோவான் 8:33-45; ரோமர் 9:7).

6. விசுவாசத்தின் சாராம்சமான, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது முற்றான விசுவாசத்தின் உதாரணமாகப் பணிசெய்ய, மற்றும் விசுவாசத்தின் உண்மையான இயல்பை - அது தேவனை வெறுமனே ஒப்புக்கொள்வதை மாத்திரமல்ல ஆனால் செயல்முனைப்பான கீழ்ப்படிதலை உள்ளடக்கி இருக்கிறது என்பதை - விவரிக்க (எபிரெயர் 11:8-12, 17-19; யாக்கோபு 2:21-23; காண்க மத்தேயு 3:9).

7. விசுவாசிகள், ஆபிரகாம் மற்றும் விசுவாசத்தின் மற்ற மாபெரும் வீரர்களின் பிரசன்னத்தில் இருக்கப்போகும் பரலோகத்தின் சந்தோஷத்தை விவரிக்க (மத்தேயு 8:11; லூக்கா 13:28; 16:22, 23).

3

தேவன் ஒரு மக்களினத்தை மீட்கிறார்

[யாத்திராகமம் 3 & 14]

நாம் யாவருமே, "இன்னும் இது மற்றோரு நாள்" ஆக இருக்கும் என்று நினைத்துத் தொடங்கி, ஆனால் முற்றிலும் எதிர்பாராத சில விஷயங்கள் நடந்த நாளைக் கொண்டிருக்கிறோம். அதுவே யாத்திராகமம் 3ம் அதிகாரத்தில் மோசேக்கு நடந்தது. 1ம் வசனம், மோசே தமது மாமனாரின் ஆடுகளை மீதியான் வனப்பகுதியில் மேய்த்துக்கொண்டிருந்தார், அதை அவர் கடந்த நாற்பது ஆண்டுகளாகச் செய்து கொண்டிருந்தது போன்றே செய்தார், அப்போது வழக்கத்திற்கு மாறான சில விஷயங்கள் நடந்தன என்று நமக்குக் கூறுகிறது.

மோசே, ஆபிரகாமின் சந்ததிகளில் ஒருவராக, ஒரு எபிரெயராகப் பிறந்திருந்தார். இந்தக் குடும்பம் தேவன் வாக்களித்திருந்தபடியே ஒரு பெரிய மக்களினம் ஆனது; ஆனால் அவர்கள், எகிப்திய அரசரான பார்வோனால் படிப்படியாக அடிமைப்படுத்தப்பட்டனர். தேவனுடைய இடையிடுதலினால் மோசே பார்வோனின் வீட்டில் வளர்க்கப்பட்டார் (யாத்திராகமம் 2:1-10), ஆனால், எபிரெய அடிமை ஒருவரை அடித்ததற்காக எகிப்திய ஆளோட்டி ஒருவரை அவர் கொன்ற பின்பு, எகிப்தை விட்டு ஓடிப்போக நேர்ந்தது. (இது அவர் தமது மக்களை விடுவிப்பதற்காக மேற்கொண்ட, காலத்திற்கு முந்திய முயற்சியாக இருந்தது, இது தோல்வியடைந்தது என்பது உறுதி; நடபடிகள் 7:25.) மோசே மீதியான் நாட்டிற்குச் சென்று, திருமணம் செய்து, வாழ்வில் தேவனுடைய மக்களை வழிநடத்துதல் அல்ல, ஆனால் ஆடுகளை மேய்த்தலே தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பு என்று முடிவு செய்தார்.

இருப்பினும், தேவன் இன்னொரு திட்டத்தைக் கொண்டிருந்தார். வழக்கத்திற்கு மாறாக அந்த நாளில், மோசே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது, தீப்பற்றி எரிந்தும் தீயினால் அழிக்கப்படாத புதர் ஒன்றைக் கண்டார். அந்த வினோதமான காட்சியைப் பார்க்கப் புறம்பே திரும்பிய போது அவரிடத்தில் கர்த்தர் பேசி, அவர் பரிசுத்த பூமியில் நிற்பதாக அவருக்குக் கூறினார் மற்றும் அவர் தம்மை "நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" என்று அடையாளப்படுத்தினார் (3:6). நம்மால் கற்பனை செய்யக் கூடும்படி, இந்த நிகழ்ச்சி மோசேயின் அந்த நாளை மாத்திரமல்ல ஆனால் அவரது வாழ்வு முழுவதையுமே - மற்றும் இஸ்ரவேல் மக்களின் வாழ்வு முழுவதையுமே - மாற்றிப்போட்டது.

தேவன் பின்வரும் திட்டத்தைக் கொண்டிருப்பதாக மோசேக்குக் கூறப்பட்டது: அவர் இஸ்ரவேல் மக்களை அவர்களின் அடிமைத்தளையில்

இருந்து விடுவித்து அவர்களை “நல்ல மற்றும் விசாலமான ஒரு நாட்டிற்கு” (கானானுக்கு) வழிநடத்திச் செல்வார். மோசே தேவனுடைய பின்வரும் செய்தியுடன் பார்வோனிடத்தில் செல்லுதல் மூலம் இந்தச் செயல்முறையைத் தொடங்க வேண்டியிருந்தது: “என் ஜனங்களைப் போகவிடவேண்டும்!” (காண்க 5:1; 8:1; 9:1.) அந்தத் திட்டம் மோசேக்கு வசதியானதாக இருக்கவில்லை, எனவே அவர் அந்த வேலையைச் செய்யத் தாம் சரியான மனிதர் அல்ல என்று காண்பிக்கும் விருப்பநோக்குடன், பல சாக்குப்போக்குகளை அளித்தார். கடைசியாகத் தேவன் செயல் விளைவில், “போ!” என்று மாத்திரம் அவருக்குக் கட்டளையிட்டார். மோசே தயக்கத்துடன் சென்றார். தேவன் முன்னுரைத்திருந்தபடி (4:21), பார்வோன் இதைக் கவனிக்க மறுக்குமளவுக்கு அவரது இருதயம் கடினப்படுத்தப்பட்டது. தேவன் எகிப்தின் மீது பத்து வாதைகளை வரச்செய்த பின்புதான், மக்கள் செல்லும்படி பார்வோன் அனுமதித்தார் (யாத்திராகமம் 7-11). இருப்பினும் அதற்குப் பின்பும்கூட, பார்வோன் தமது மனதை மாற்றிக்கொண்டு இஸ்ரவேல் மக்களைப் பின்தொடர்ந்து சென்று, செங்கடலுக்கு எதிரே அவர்களைச் சிக்கவைத்தார். தேவன், தண்ணீரைப் பிளந்து மக்கள் உலர்நிலத்தின் வழியே கடந்து செல்லும்படி செய்தார். பார்வோன் தமது தேடுதலைத் தொடர்ந்தபோது, தண்ணீரானது எகிப்தியர்களை மூடிப்போட்டு, அவர்களின் படையை அழித்தது. நிகழ்வுகளின் இவ்வரிசை “வெளியே செல்லுதல்” என்று அர்த்தப்படும் *exodos* (“யாத்திரை”) என்று அது முதல் அறியப்பட்டுள்ளது. இவ்வார்த்தை, இந்நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்துள்ள பழைய ஏற்பாட்டின் புத்தகத்தின் தலைப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

யாத்திரை என்பது இஸ்ரவேல் வரலாற்றில் மாபெரும் தனிநிகழ்வாக இருந்தது. இது இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு மக்களினம் என்ற வகையில் அவர்களின் அடையாளத்தைக் கொடுத்தது. வல்லமையுள்ள இந்தச் செயலின் மூலமாகத் தேவன் அவர்களை விடுவித்து அவர்களை ஒரு மக்களினமாக உருவாக்கத் தொடங்கினார். அந்த நாளில் இருந்து, அவர்கள் தங்களை, கர்த்தர் இந்த வல்லமை நிறைந்த செயலின் மூலமாக விடுவித்த மக்களாகக் கண்டனர். இந்த அம்சத்தில் பழைய ஏற்பாட்டில் உள்ள இந்த யாத்திரை, இயேசு சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குச் சமமானதாக உள்ளது, ஏனெனில் இந்த இரு நிகழ்வுகளில் இருந்துதான் கிறிஸ்தவர்கள் தங்கள் மீட்பையும் ஒரு மக்களினம் என்ற வகையில் தங்கள் அடையாளத்தையும் தரவழைக்கின்றனர்.

யாத்திராகமம் இஸ்ரவேல் மக்களுக்கு அவர்களின் தேவனைப் பற்றிய உண்மையான அடையாளத்தை வெளிப்படுத்திற்று என்பது இதன் தனிச்சிறப்பிற்கான இன்னொரு காரணமாக உள்ளது. 430 ஆண்டுகள் அடிமைத்தளையில் இருந்த பின்னர் அவர்கள், ஏதோ ஒருவகையில் அவருடனான தொடர்பை இழந்திருந்தனர். அவர்கள் புறதெய்வ வணக்கச் சூழ்நிலையில் வாழ்ந்தனர், அவர்களை வழிநடத்தத் தேவனுடைய வார்த்தையோ, அவர்கள் ஆராதித்த தேவனின் நினைவாகச் சேவிக்க ஒரு ஆலயமோ அவர்களை அறிவுறுத்தி வழிநடத்த ஆசாரியத்துவமோ இல்லாதிருந்தனர். இஸ்ரவேல் மக்கள் மோசேயை அனுப்பியது யார் என்பது பற்றிய கருத்து எதுவும் கொண்டிருக்க மாட்டார்கள் என்பது, எகிப்திற்குச் செல்ல மோசே தயங்கியதற்கான

காரணத்தின் ஒரு பகுதியாக இருந்தது (யாத்திராகமம் 3:13). யாத்திராகமத்தின் நிகழ்வுகளில் இருந்து, இஸ்ரவேல் மக்கள் தங்கள் தேவனுடைய பண்புகளை அறிந்து கொண்டனர்:

> இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து ரட்சித்தார்; கடற்கரையிலே எகிப்தியர் செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேலர் கண்டார்கள். கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத்தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள்; அப்பொழுது ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியக்காரனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசம் வைத்தார்கள் (யாத்திராகமம் 14:30, 31).

தமது வார்த்தையைக் காப்பாற்றும் தேவன்

யாத்திராகமம், இஸ்ரவேல் மக்களின் அடிமைத்தனை மற்றும் விடுதலை ஆகியவற்றைப் பற்றி முதல் குறிப்பைக் கொண்டுள்ள புத்தகம் அல்ல. உண்மையில், ஆபிரகாமுடன் தேவன் தமது உடன்படிக்கையை ஏற்படுத்தியபோதே, அவர் இப்படிப்பட்ட நிகழ்வுகளின் வரிசை நடந்தேறும் என்று முன்னுரைத்திருந்தார்:

> … உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய். இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள் (ஆதியாகமம் 15:13, 14).

இஸ்ரவேல் மக்கள் அடிமைகள் ஆகும்படி தேவன் அவர்களை மறந்து விட்டிருக்கவில்லை என்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாகவே அவர், அவர்களைப் பிடித்து வைத்திருந்தவர்களைத் தோல்வியடையச் செய்து அவர்களை அடிமைத்தனையில் இருந்து வெளியே கொண்டு வருதலுக்கான தமது வாக்குத்தத்தத்தையும் மறந்துபோய்விடாதிருந்தார்.

> சிலகாலம் சென்றபின்பு, எகிப்தின் ராஜா மரித்தான். இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார். தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார் (யாத்திராகமம் 2:23-25).

தேவன் தமது மக்களுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்தி அவற்றைக் காத்துக்கொள்ளுதல் என்பது அவரது இயல்பில் ஒரு பகுதியாக இருக்கும் காரணத்தினால், ஒரு எழுத்தாளர் "தொடர்ச்சியின் தேவன்" என்று அவரை அழைத்தார்.[1] ஒருவேளை இஸ்ரவேல் மக்கள் தேவனை மறந்திருக்கலாம், ஆனால் தேவன் இஸ்ரவேல் மக்களை மறந்துபோய்விடவில்லை. அவர் ஆபிரகாமுக்குத் தாம் வாக்குத்தத்தம் செய்திருந்ததைக் காத்துக்கொள்ளும் விருப்பநோக்கம்

கொண்டிருந்தார்.

தேவன் தமது வார்த்தையைக் காத்துக்கொள்கிறார், அவர் மனம்போன போக்கின்படி செல்பவராகவோ அல்லது முரண்பட்ட உளப்போக்கு உடையவராகவோ இருப்பதில்லை என்பதை அறிதல் நமக்கு மிகவும் முக்கியமானதாக உள்ளது. மல்கியா 3:6ம் வசனம், "நான் கர்த்தர், நான் மாறாதவர்; ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை" என்று கூறுகிறது. இது பழைய ஏற்பாட்டின் முடிவுப் பகுதியில் உள்ள ஒரு முக்கியமான நினைவூட்டலாக உள்ளது, ஏனெனில் "பழைய ஏற்பாட்டின் தேவன்" என்பவர் "புதிய ஏற்பாட்டின் தேவன்" என்பவரில் இருந்து வேறுபட்டுள்ளார் என்று நினைக்கும் எண்ணப்போக்கு அடிக்கடி உள்ளது. தேவன், எழுதப்பட்ட தமது வசனத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஒன்றுபோலவே இருக்கிறார், எனவே நாம் பழைய ஏற்பாட்டில் இருந்து அவரைப் பற்றிக் கற்றுக்கொள்ளும் யாவையும் கிறிஸ்துவின் உடன்படிக்கையின்கீழ் வாழ்கிறவர்களுக்கு மதிப்புமிக்கதாகவே நிலைத்துள்ளது. அதுபோலவே புதிய ஏற்பாடும், "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என்று நமக்குக் கூறுகிறது (எபிரெயர் 13:8). அவர் முன்பு கூறியது இன்னமும் நிற்கிறதா இல்லையா என்பதைப் பற்றியோ அல்லது அவர் ஒரு மோசமான மனநிலையில் இருப்பதால் அவரைப் பிரியப்படுத்தும் வாய்ப்பு எதையும் நாம் கொண்டிருத்தல் பற்றியோ எந்தக் கவலையும் இல்லாமல், நாம் அவர்மீது நம்பிக்கை வைக்க முடியும் என்றே இது அர்த்தப்படுகிறது. தேவன் தமது வார்த்தையை எப்போதும் காத்துக்கொள்கிறார்.

"அப்படியானால், இஸ்ரவேல் மக்கள் சார்பாகச் செயல்படுவதற்குத் தேவனுக்கு ஏன் நானூற்று முப்பது ஆண்டுகள் ஆனது? அவர் தமது வார்த்தையைச் சற்று முன்னதாகவே காத்துக்கொண்டிருக்கக் கூடாதா?" என்று சிலர் கேட்கலாம். அவர் அவ்வாறு செய்திருக்க முடியும், ஆனால் அவ்வாறு செய்வதை அவர் தேர்ந்துகொள்ளவில்லை. தேவனுடைய காலமுறையும் எப்போது செயல்படுவது என்பது பற்றிய அவரது தேர்ந்துகொள்ளுதலும் அவருடைய சிறப்புரிமைகளாக உள்ளன மற்றும் நாம் அவரது ஞானத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அவர் செயல்படுவதற்காக நாம் காத்திருக்கையில், அவர் எப்போதுமே தமது வார்த்தையைக் காக்கிறார் என்பதில் நாம் முழு நிச்சயமாக இருக்க முடியும். காத்திருத்தல் என்பது நீண்ட காலத்திற்கு முன்பு இஸ்ரவேல் மக்களுக்கு இருந்ததில் இருந்து இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு வேறுபட்டு இருப்பதில்லை. நிறைவான விடுதலையாளரான இயேசு, காட்சிக்கு வருவதற்கு முன்னர், மோசேயின் காலத்தில் இருந்து ஆயிரம் ஆண்டுகள் கடந்து சென்றன. இயேசுவைப் பின்பற்றுபவர்கள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளாக அவரது மறுவருகைக்காகக் காத்திருக்கின்றனர். தேவன் செயல்படத் தொடங்கிச் செயல்படும்போது ஏன் இப்போது தேர்ந்து கொண்டார் என்பது நமக்குச் சொல்லப்படவில்லை. நாம் அவர்மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று மாத்திரம் நமக்குக் கூறப்பட்டுள்ளது.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற நாம் நீண்ட காலம் காத்திருப்பதாக நாம் நினைக்கும்போது, யோசுவா 1:5ம் வசனத்தின் வார்த்தைகளை நாம் நினைவுகூர முடியும். மோசேயின் மரணத்தைத் தொடர்ந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் மக்களை

வழிநடத்தும்படி யோசுவாவுக்குத் தேவன் ஆணையிட்டார். நாட்டை வெற்றிகொண்டு பிடித்தல் என்பது கடினமான யுத்தம் நடத்தும் முகாமாக இருக்கும். இந்த வெற்றியினூடே மக்களை வழிநடத்திச் செல்லுதல் என்பது ஊக்கமிழக்கச் செய்யும் பணிப்பொறுப்பாக இருக்கும் என்பதையும் மோசேயின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதல் என்பது (யோசுவா என்ற) இளம் மனிதருக்கு அச்சமூட்டும் செயலாக இருக்கும் என்பதையும் தேவன் அறிந்திருந்தார். அவர், "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார் (யோசுவா 1:5).

தேவன் ஆபிரகாமின் சந்ததிகளுக்குச் செய்யப்போவதாகக் கூறியவற்றின் ஒரு பகுதி நிறைவேற்றப்படப் போவதாக இருந்தது. அவர் ஆபிரகாமின் குடும்பத்தை மாபெரும் மக்களினமாக்கி இருந்தார் மற்றும் அவர்களை அவர் எகிப்திய அடிமைத்தளையில் இருந்து விடுவித்திருந்தார். அடுத்ததாக அவர் இஸ்ரவேல் மக்களின் முற்பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்த நாட்டை, அவர்கள் வெற்றி கொண்டு கைப்பற்றக் கூடியவர்கள் ஆக்குவார். தேவன் தமது வார்த்தையை எப்போதுமே காத்துக்கொள்கிறார்.

மற்ற எல்லாத் தேவர்களையும் விட மாபெரியவராக இருக்கிற தேவன்

பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு, விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்ணுதல் அல்லது விலக்குதல் பற்றிப் பவுல் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதியதில், பின்வரும் கூற்றை அவர் தமது அறிவுறுத்துதலுக்கு முன்னுரையாக்கினார்:

> விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப்பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லை யென்றும் அறிந்திருக்கிறோம். வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர்மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம் (1 கொரிந்தியர் 8:4-6).

ஒரே ஒரு உண்மையான தேவன்தாம் இருக்கிறார் என்பது நிச்சயம், ஆனால் ஆராதிக்கப்படுகிற எதுவும் ஒரு "தேவராக" உள்ளது; எப்போதுமே போட்டி "தேவர்கள்" (மற்றும் "தேவிகள்") உள்ளன. பழங்கால வசனங்களில் இருந்து நாம், ஏறக்குறைய நாற்பது மாறுபட்ட தேவர்கள் எகிப்தியர்களால் வணங்கப்பட்டன மற்றும் இன்னும் இதைக் காட்டிலும் அதிகமானவர்கள் இருந்திருக்கலாம் என்று அறிகிறோம். இருப்பினும் எகிப்தில் இருந்து இஸ்ரவேல் மக்கள் புறப்பட்ட பயணமானது, இஸ்ரவேல் மக்களின் தேவன் அவர்கள் எல்லாரைக் காட்டிலும் மாபெரியவராக இருந்தார் என்பதை நிரூபித்தது.

மோசே தேவனுடைய ஊழியம் செய்யாதிருக்க இன்னமும் சாக்குப்போக்குச் சொல்ல முயற்சி செய்துகொண்டிருந்போது, அவர் பின்வரும் கேள்வியைக் கேட்டார்: "நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், 'உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார்' என்று அவர்களுக்குச் சொல்லும்போது, 'அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால்,' நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்?" (யாத்திராகமம் 3:13). இஸ்ரவேல் மக்கள், தாங்கள் ஆராதிக்க வேண்டிய தேவனுக்குக் குறிப்பிட்ட இயற்பெயரை விரும்பினர் என்பதை மோசே உணர்ந்தறிந்தார் என்பது தெளிவு. எகிப்தியரின் பல்வேறு தேவர்கள் பெயர்களைக் கொண்டிருந்தனர் மற்றும் இஸ்ரவேல் மக்கள் தங்கள் தேவனுடைய பெயரை அறிவது அவசியமாயிருந்தது. அதற்கு கர்த்தரின் பதிலுரை பின்வருமாறு:

> *அதற்குத் தேவன்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார். மேலும், தேவன் மோசேயை நோக்கி: ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்வாயாக; என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம் (யாத்திராகமம் 3:14, 15) என்றார்.*

"இருக்கிறவராக இருக்கிறேன்" என்பது, "நான் என்னவாக இருக்கிறேனோ அவ்வாறே இருக்கிறேன்," அல்லது "நான் என்னவாக இருப்பேனோ அவ்வாறே இருப்பேன்" என்றும் மொழிபெயர்க்கப்படக்கூடிய எபிரெயச் சொற்றொடரின் தோராயமான மொழிபெயர்ப்பாக உள்ளது. "YHWH" *என்பது எபிரெய வினைச்சொல்லாக உள்ளது; இது அடிக்கடி,* "tetragrammaton" *என்று அழைக்கப்படுகிறது. பழங்கால எபிரெய வார்த்தைகள் எல்லாவற்றையும் போலவே, இது தோற்ற காலத்தில் உயிரெழுத்துக்கள் இன்றி எழுதப்பட்டது. இது மிகச்சரியாக எவ்வாறு உச்சரிக்கப்பட்டது என்பதை நாம் அறிவது இயலாது என்று இது அர்த்தப்படுகிறது.* "Yahweh" *(இது சிலவேளைகளில்* "Jahveh" *என்று எழுதப்படுகிறது ஆனால் ஒரே மாதிரி உச்சரிக்கப்படுகிறது) என்பது நல்லதொரு யூகமாக உள்ளது.*[2]

"YHWH" *என்பது அர்த்தப்படுத்துவது என்ன? தேவன் தம்மை ஏன் ஒரு வினைச்சொல் கொண்டு பெயரிட்டார்? சாத்தியக்கூறுகள் ஏராளமானவையாக இருந்தபோதிலும், இந்தப் பெயரானது "உண்மையாகவே தேவனாக இருக்கிற தேவன், எப்போதுமே இருந்துள்ளவர்" என்பது போன்ற கருத்தையே அர்த்தப்படுத்துவதாகப் பெரும்பாலும் காணப்படுகிறது. இது, தேவன் தாமே தம்மை உறுதிப்படுத்துபவராகவும் சுயமாக நிலைநிற்பவராகவும் இருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. இது அவருக்கும் எகிப்தியரின் பொய்த்தேவர்களுக்கும் (மற்றும் பிற எல்லா விக்கிரகங்களுக்கும்) இடையில் ஒரு கூர்மையான நேர்மாறைச் சுட்டிக்காண்பித்தது. விக்கிரகங்கள் தங்கள் உருவாக்கம், தங்கள் நடமாட்டம், தங்களுக்காகப் பேசுதல் மற்றும் தங்களைப் பராமரித்தல் ஆகியவற்றிற்குத் தங்களை ஆராதிப்பவர்களையே எப்போதும் சார்ந்துள்ளன.*

(ஏசாயா 44:9-20 வசனப் பகுதியில், விக்கிரக ஆராதனையின் அறிவற்ற நடத்தை பற்றி ஏசாயாவின் கொட்டுவது போன்ற விமர்சனத்தை வாசிக்கவும்.) இஸ்ரவேல் மக்களின் தேவனாக இருந்தவர் உண்மையான ஒரே தேவனாகவும் உயிருள்ள தேவனாகவும் இருக்கிறார். அவரது படைப்புயிர்கள், தங்கள் இருப்பு, பராமரிப்பு மற்றும் அக்கறை ஆகியவற்றிற்கு அவரையே சார்ந்துள்ளன. தேவன், பெயருக்குத் தகுதியானவராகக்கூட இருக்கிற ஒரே தேவனாக இருக்கிறார் என்று தம்மை அறிவித்துக் கொண்டிருந்தார்.

பார்வோனின் முரட்டாட்டத்தின் காரணமாகத் தேவன் எகிப்திற்கு எதிராகக் கொண்டு வந்த பத்து வாதைகள், எகிப்தின் பல்வேறு தேவர்கள் மீது தேவனுடைய வல்லமையைக் காண்பிக்கும்படி வடிவமைக்கப் பட்டிருந்தன. நைல் நதியானது ஆண்டுதோறும் தனது கரைகளின் மீது வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியதாலும் அது எகிப்தியரின் பண்ணை நிலங்களில் உயிர் வாழ்வை நிலைநிறுத்தும் ஈரப்பதத்தையும் மண்வளத்தையும் கொண்டு வந்ததாலும், அந்த நதியே ஒரு தெய்வமாக மதிக்கப்பட்டது. நதியோரச் சேற்றில் இருந்து தவளைகள் எழும்புவது அடிக்கடி காணப்பட்டதால், அவைகள் தெய்வீகத்தின் வெளிப்பாடுகள் என்று எகிப்தியர்கள் முடிவு செய்தனர், அதேபோன்று அழுகும் பொருள்களில் இருந்து அற்புதவிதமாகத் தோன்றியதாகக் காணப்பட்ட ஈக்களும் இருந்தன என்றும் முடிவு செய்தனர். பார்வோனே ஒரு தேவனாக இருக்கிறார் என்று நம்பப்பட்டு அவர் தமது மக்களால் ஆராதிக்கப்பட்டார். ஆகையால், வாதைகள் எகிப்தைத் தாழ்த்தியபோது அவைகள் "இயற்கைப் பேரழிவுகளின்" வரிசைத்தொடராக மாத்திரமல்ல, ஆனால் எகிப்தில் ஆராதிக்கப்பட்ட பொய்த்தேவர்களின் மீது வந்த நியாயத்தீர்ப்பாகவும் இருந்தன.

மோசே முதன் முதலாகப் பார்வோனைப் பார்க்கவும் இஸ்ரவேல் மக்களைப் புறப்பட்டுச் செல்லும்படி அவர் அனுமதிக்க வேண்டும் என்று கேட்கவும் சென்றபோது, பார்வோன், "நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை" என்று முரட்டுத்தனமாகப் பதில் அளித்தார் (யாத்திராகமம் 5:2). வாதைகள் முடிந்த வேளையில், தேவன் உண்மையிலேயே யார் என்பதை பார்வோனும் எகிப்தில் உள்ள எல்லாரும் அறிந்திருந்தனர்: மற்ற எல்லா "தேவர்களுக்கும்" மேலான ஒருவர் மற்றும் பார்வோன் கூட பணிந்து வணங்கியாக வேண்டிய ஒருவர். பார்வோனின் தலைப்பேறான மகனின் மரணமானது இந்த உண்மையைத் தெளிவாக்கிற்று.

கர்த்தர் மோசேயிடம், "இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக" என்று அறிவுறுத்திய போது (காண்க 3:14), அவர் (மோசே), உண்மையான ஒரே தேவனை விசுவாசித்து, உண்மையில் "தேவர்களாக இல்லாதிருந்த" மற்ற எல்லாத் "தேவர்களின்" உரிமைகோருதல்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று அவரை (மோசேயை) அழைத்தார் (காண்க 2 நாளாகமம் 13:9; நடபடிகள் 19:26; கலாத்தியர் 4:8). நமது சொந்த உலகத்தில் (செல்வம், சந்தோஷம், தொழில் நுட்பம், இராணுவ மற்றும் அரசியல் பலம் போன்ற) போட்டி "தேவர்கள்" பல இருக்கும் காரணத்தினால், இதையே (உண்மையான ஒரே தேவனை ஆராதனை) செய்யும்படி நாமும் அழைக்கப்பட்டிருக்கிறோம். தமது மக்களை மீட்கச் செயல்படுகிற மற்றும் நமது பாவம் என்ற பிரச்சனைக்குத் தீர்வு அளிக்கிற

ஒரே ஒரு தேவன் இன்னமும் இருக்கிறார்.

பரிசுத்தமான தேவன்

மோசே, எரியும் புதரை நெருங்குகையில். தேவன் அவரை அழைத்து, "இங்கே கிட்டிச்சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி" என்று கூறினார் (யாத்திராகமம் 3:5). தேவனுடைய பிரசன்னத்தின் காரணமாக, மோசே நின்றிருந்த இடம்கூடப் பரிசுத்தமானதாக இருந்தது. தேவனுடைய "பரிசுத்தம்" பற்றிப் பேசுதல் என்பது அவரது "தனித்தன்மை" பற்றிப் பேசுதலாக உள்ளது. அவர் தம்மில் தாமே உள்ள ஒரு வகையைச் சேர்ந்தவராக இருக்கிறார்; அவர் நம்மைப்போன்றவராக இருப்பதில்லை, மற்றும் நாம், அவரது அழைப்பினாலும் அவர் ஆணையிடும் நடக்கையினாலும் மாத்திரமே அவரை அணுக இயலும்.

யாத்திராகமத்தின் கடைசி பதினைந்து அதிகாரங்கள் யாவும் பரிசுத்தத்தைப் பற்றியதாக உள்ளது. இந்த அதிகாரங்களில் தேவன் மோசேயிடம். ஆசரிப்புக்கூடாரம் (எடுத்துச் செல்லப்படக் கூடியதான, ஆராதிக்கும் இடம்), அங்கு செலுத்த வேண்டிய பலிகள், ஆசாரியத்துவம் (ஆசாரியர்கள் எவ்வாறு உடை உடுத்த வேண்டும் என்பது உட்பட) மற்றும் ஆசரிப்புக்கூடாரத்தின் பொருட்கள் ஆகியவற்றைப்பற்றி அறிவுறுத்தினார். தேவனை ஆராதித்தலுடன் தொடர்புடைய பொருட்கள் எவற்றைக் கொண்டு செய்யப்பட வேண்டும் என்பது கூடக் குறிப்பிடப்பட்டது, மற்றும் உடன்படிக்கை பெட்டியை யார் தூக்கிச் செல்ல வேண்டும், அவர்கள் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதும் கூட குறிப்பிடப்பட்டது. நமக்கு "தேவையற்ற விபரங்கள்" போன்று காணப்படுபவை யாவும், தேவனுடைய இயல்பைப் புரிந்து கொள்வதற்கு இஸ்ரவேல் மக்களுக்கு இன்றியமையாத விபரங்களாக இருந்தன. இந்த குறிப்புரைகள், தேவன் பயபக்தியுடன் அணுகப்பட வேண்டும் என்று போதித்தன.

சில வேளைகளில் கிறிஸ்தவர்கள், "நாம் பழைய ஏற்பாட்டின்கீழ் வாழ்வதில்லை" என்பதால், ஆராதனையில் நாம் பயபக்தியுடன் தேவனை அணுகவேண்டும் என்பது போன்ற, பரிசுத்தம் பற்றிய விஷயங்களைக் குறித்து அக்கறைப்படத் தேவையில்ல என்ற கருத்தைக் கொண்டிருப்பது திகைப்புக்கு உரியதாக உள்ளது. இதை நம்பும்படி வேதவசனங்கள் எதுவும் நம்மை வழிநடத்துவதில்லை என்பதால் இது ஒரு வினோதமான கருத்தாக உள்ளது. கிறிஸ்துவின் சிலுவை தேவனுடைய பரிசுத்தமான இயல்பை மாற்றவில்லை. மாறாக தேவனுடைய பரிசுத்தத்தின் காரணமாகவே சிலுவை தேவைப்பட்டு இருந்தது. பாவம் பரிகரிக்கப்பட வேண்டியிருந்தது. அது வெறுமனே காணாமல் விடப்பட இயலாது இருந்தது. நிச்சயமாகவே நாம், பழங்கால இஸ்ரவேல் மக்களின் ஆராதனையின் அதே வடிவங்களைப் பின்பற்றுவதில்லை, ஆனால் நமது ஆராதனை நிறைந்த எண்ணப்போக்கு அவ்வாறே இருக்க வேண்டி உள்ளது.

தேவன் பரிசுத்தமானவராக இருப்பதால், நாம் அழிவைப் பெற்றுக்கொள்ளாமல் தேவனுக்கு அடங்கி நடக்க மறுக்க இயலாது என்பதை யாத்திராகமத்தின் எடுத்துரைப்பு சுட்டிக்காட்டுகிறது. மோசேயும் பார்வோனும் முதன் முதலாகச் சந்தித்தபோது, பார்வோன் மோசேயிடம்

பின்வரும் அகற்றப்பட வேண்டிய கேள்வியைக் கேட்டார்: "நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்?'' (யாத்திராகமம் 5:2). உண்மையில் இதுதான் யாத்திரை நிகழ்ச்சி முழுவதிலும் மற்றும் யாத்திராகமம் புத்தகத்திலும் மையமான கேள்வியாக உள்ளது: "கர்த்தர் என்பவர் யார்?'' பார்வோன் "தனது இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டதன்" மூலம் தேவனைப் புறக்கணித்த காரணத்தினால் ஒரு கடினமான வழியில் கற்றுக்கொண்டார் (காண்க யாத்திராகமம் 8:15, 32). தேவன் இந்தப் பதிலையே முன்னுரைத்திருந்தார். பார்வோன் கடைசி முறையாகத் தமது இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டபோது, மற்றும் இஸ்ரவேல் மக்கள் கடலுக்கு எதிராக அடைக்கப்பட்டு இருந்தபோது, மோசேயிடத்தில் தேவன் பின்வருமாறு கூறினார்:

> எகிப்தியர் உங்களைப் பின்தொடர்ந்து வரும்படி நான் அவர்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, பார்வோனாலும் அவன் இரதங்கள் குதிரைவீரர் முதலாகிய அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவேன். இப்படி நான் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைவீரராலும் மகிமைப்படும்போது, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள் என்றார் (யாத்திராகமம் 14:17, 18).

தேவன் தமது நியாயத்தீர்ப்பின் வல்லமையினால் கொடுத்த சாட்சியின் மூலமாக, எகிப்தியர்கள் தேவன் தேவனாக இருக்கிறார் என்ற வலிவார்ந்த பாடத்தைக் கற்றனர். தண்டனையின் மூலமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய அதே தவறை இஸ்ரவேல் மக்கள் செய்வதைத் தேவன் விரும்பவில்லை, எனவே அவர்களுக்கு அவர் தமது பரிசுத்தம் பற்றிய எச்சரிக்கையையும் அறிவுறுத்துதலையும் ஏராளமாகக் கொடுத்தார். அவர் புதிய ஏற்பாட்டின் பக்கங்களின் மூலமாக அதேபோன்ற எச்சரிக்கை மற்றும் அறிவுறுத்துதலை சபைக்குக் கொடுக்கிறார். கிறிஸ்தவர்கள், தேவனுடைய பரிசுத்த தன்மையை மதிக்கவும் நமது சொந்த வாழ்வில் அந்தப் பரிசுத்தத்தைப் பிரதிபலித்து பாவத்தை தவிர்க்கும் ஒழுங்கு நடக்கையைக் கொண்டிருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (உதாரணமாக, 2 கொரிந்தியர் 7:1; எபிரெயர் 10:26-31; 12:25-29; 1 பேதுரு 1:15 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்.)

தமது மக்களை அழைத்து வல்லமை தரும் தேவன்

இஸ்ரவேல் மக்களின் விடுதலையாளராக இருக்கும்படி மோசேயைத் தேவன் அழைத்தபோது, அவர் (தேவன்) அவருக்கு (மோசேக்கு) பணிவிபரத்தைக் கொடுத்தது மட்டுமின்றி அதைச் செய்யக் கூடிய திறனையும் கொடுத்தார். மோசே, தாம் மக்களிடத்தில் செல்லும்போது, அவர்கள் தம்மை நம்ப மாட்டார்கள் என்று மறுத்தபோது, அவர் நிரூபணமாகப் பயன்படுத்தும்படி அடையாளங்களை அவருக்குத் தேவன் கொடுத்தார்: பாம்பாக மாறும் கோல், தமது கையைத் தொழுநோய் கொண்டதாக ஆக்கி திரும்ப அதைச் சுத்தமாக்குதல் மற்றும் தண்ணீரை இரத்தமாக்கும் வல்லமை (4:1-9). அவர் தேவனுக்காகப் பேசப் போதிய பேச்சுத்திறன் கொண்டிருக்கவில்லை என்று மேலும் வேண்டுகோள் விடுத்தபோது, அவருக்குத் தேவன், தாமே மனிதரின் வாயை உண்டாக்கினர் என்பதையும், எந்த ஒரு நபரையும் தாம் விரும்பினால் நிச்சயமாகவே

பேச்சுத்திறன் உள்ளவராக்க முடியும் என்பதையும் நினைவூட்டினார். அத்துடன் கூடுதலாக, மோசேக்காக "பேசுபவராக" இருக்கும்படி மோசேயின் சகோதரரான ஆரோனை அவர் அனுப்பி வைத்தார் (4:10-17).

பிற்பாடு, இஸ்ரவேல் மகள் கடலுக்கு எதிராகத் தங்கள் முதுகுகள் இருக்கும்படி அகப்படுத்தப்பட்டு, எகிப்திய இரதங்களின் மேலான வலிமைக்குத் தப்பக் கூடாதவர்களாக இருந்தபோது, தப்பிக்கத் தேவன் ஒரு காட்சிக்குரிய வழியை அளித்தார். பின்பு அவர், நாற்பது ஆண்டுகள் அவர்கள் வெறும் வனாந்திரத்தில் அலைந்து திரிந்தபோது, அங்கே திரளான மக்கள் கூட்டம் உயிர்பிழைப்பதைச் சாத்தியமாக்கினார்.

தேவன் இன்னும் தமது மக்களை அழைத்து வல்லமை தருகிறார். இயேசு கிறிஸ்துவின் மூலமாக அவர், முழு உலகத்திற்கும் இயேசுவின் வரலாற்றைக் கூறி தேவனுடைய அன்பையும் பரிவிரக்கத்தையும் பகிர்ந்து கொள்ளும்படிக்குப் பரிசுத்தமான மக்களாக இருக்க சபையை அழைக்கிறார். இந்தப் பணிப்பொறுப்பு பெரும்பாலும் சிரமமானதாக உள்ளது, ஆனால் இந்தப் பணியைச் செய்து முடிக்கத் தேவையானது எதுவாக இருந்தாலும் அதை நமக்குத் தேவன் எப்போதுமே தருகிறார். இதனால்தான் சபையானது பரிசுத்த ஆவியானவர் பொழியப்படுதலுடன் தொடங்கிற்று. தேவன் வல்லமையைக் கொடுக்கும் வரையிலும், அப்போஸ்தலர்கள்கூட உதவியற்றவர்களாகவே இருந்தனர். ஆவியானவர் வந்த உடன், எல்லாம் மாறிற்று. அதே ஆவியானவர் இன்றைய நாட்களில், ஊழியத்திற்கு நம்மைப் பெலப்படுத்துவதற்கு, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற யாவருக்குள்ளும் தங்கியிருக்கிறார் (நடபடிகள் 2:1-38). கர்த்தருக்கு ஊழியம் செய்வதில் இருந்து (நாம் விலகியிருக்கும்படி), சாக்குப்போக்குக் கூற நாம் ஒருக்காலும் முயற்சி செய்யக் கூடாது. அவர் என்ன செய்யும்படி நம்மை அழைக்கிறாரோ, அதைச் செய்வதற்கு நம்மைப் பெலப்படுத்துகிறார்.

முடிவுரை

மோசேயும் இஸ்ரவேல் மக்களும், அவர்களை அடிமைத்தளையில் இருந்து வெளியேறும்படியும் தமது ஆச்சரியமான சுதந்தரத்திற்குள் வரும்படியும் அழைத்த தேவனை விசுவாசித்து அவர்மீது நம்பிக்கை வைக்கும்படி அவர்களுக்கு அறைகூவல் விடப்பட்டது. அவர் தமது வார்த்தையைக் காக்கிற தேவனாக, மற்ற எல்லா "தேவர்களை" பார்க்கிலும் மாபெரியவராக, முற்றிலும் பரிசுத்தமானவராக மற்றும் தமது மக்களை ஊழியத்திற்கென்று அழைத்து பெலப்படுத்துகிறவராக இருக்கிறார். இன்றைய நாட்களில் தேவன் அதேவிதமாக நிலைத்திருப்பது போன்றே, அவர் தம்மை விசுவாசித்துத் தமக்குக் கீழ்ப்படியும்படிக்கும் அறைகூவல் விடுதலும் உள்ளது.

குறிப்புகள்

[1]Paul R. House, *Old Testament Theology* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1998), 92. [2]"Jehovah" என்ற பெயரானது, "YHWH" என்ற வார்த்தையுடன், "Lord" (*'Adonay*) என்பதற்கான வார்த்தையில் இருந்து தழுவப்பட்டு உயிரெழுத்துக்களுடன் இணைகிற ஜெர்மானியக் கண்டுபிடிப்பாக உள்ளது.

பார்வோனின் இருதயம் கடினமாகுதல்

வேதாகமத்தை வாசிப்பவர்கள் சிலவேளைகளில், யாத்திராகமத்தில் உள்ள, தேவன் "பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்" என்ற கூற்றைப் பற்றியும், அவர் இந்தக் கடினப்படுத்துதல் பற்றிக் குறிப்பாக முன்னுரைத்தார் என்பதைப் பற்றியும் இடர்பாடு அடைகின்றனர். மேம்போக்காக வாசிப்பவருக்கு, இது பார்வோன் தேவனால் "முன்குறிக்கப்பட்டு," அவர் மீது தேவன் தமது வல்லமையைக் காண்பிக்கும்படி அவர் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டதாக ஒலிக்கலாம். (காண்க யாத்திராகமம் 4:21.) எவரொருவரும் தேவனை எதிர்த்து நிற்க இயலாது, எனவே பார்வோன் கொண்டிருந்த வாய்ப்பு என்ன? இது ஏறக்குறைய, அவர் கீழ்ப்படியாததற்குத் தேவனே காரணமாக இருந்தார் என்றும் பின்பு அவ்வாறு செய்ததற்காக அவரைத் தேவனே தண்டித்தார் என்றும் ஒலிக்கிறது. (பார்வோனின் இருதயம் கடினப்படுத்தப்படுதல் பற்றிய குறிப்புகளுக்கு, யாத்திராகமம் 9:12; 10:20, 27; 11:10 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும். மற்ற வசனங்கள், "பார்வோனின் இருதயம் கடினப்பட்டது" என்று மாத்திரமே கூறுகிறது, இதற்குப் பொறுப்பாக இருந்தது யார் என்பதைப் பற்றி அவைகள் கூறுவதில்லை [7:13, 22; 8:19; காண்க 9:7].)

வசனப்பகுதியானது, பார்வோன் தமது சொந்த இருதயத்தைத் தாமே கடினப்படுத்திக் கொண்டார் என்றும் கூறுகிறது; வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் இந்தச் செயல்பாடு முழுவதிலும் உதவியற்ற வெறும் கைப்பாவையாக மாத்திரம் இருக்கவில்லை (யாத்திராகமம் 8:15, 32; 9:34; 14:5). தொடக்கத்தில் இருந்தே பார்வோன், கர்த்தரிடம் ஒரு முரட்டுத்தனமான, அடங்காத எண்ணப்போக்கைக் கொண்டிருந்தார், மற்றும் அதன் விளைவுகளை அவர் அனுபவித்தார். தேவன் தாம், யாருடன் செயல்படுகிறாரோ, அந்த மனிதரின் வகையை நன்கு அறிந்திருந்தார், மற்றும் அவர் பரிசுத்தம் மீதான ஒரு பாடத்தை - எகிப்தியர்களுக்கு மாத்திரமல்ல ஆனால் இஸ்ரவேல் மக்களுக்கும்கூட - கற்பிக்கும்படி பார்வோனின் முரட்டுத்தனத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

> தேவனுடைய "கடினப்படுத்துதல்" என்பது, ஆடுகளைக் கழுதைகளாக்கி விடுவதில்லை; அது கழுதைகள் ஒரு தெய்வீக முறுக்குதலினால் தங்கள் உதைத்தலைச் செய்வதை மாத்திரம் உறுதிப்படுத்துகிறது. இதன் விளைவாக, முறுக்கப்படுதலின் மீதான ஒரு உதையானது அந்த மிருகத்தின் மன விருப்பம் அல்லது முறுக்கப்படுதலைக் கொடுக்கிறவரின் ஞானம் ஆகிய இரண்டின் மீது சமமான முன்னுரிமையைப் பண்புபடுத்தக் கூடும். பார்வோன், கடினப்பட்ட தமது இருதயத்தின் பாவத்திற்குத் தாமே பொறுப்பாளியாக எஞ்சியிருக்கிறார் (யாத்திராகமம் 9:34).[1]

குறிப்பு

[1]Stephen Westerholm, *Preface to the Study of Paul* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1997), 105, n.13.

4

உடன்படிக்கை & கட்டளை

(யாத்திராகமம் 20)

2001ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், அலபாமா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான ராய் மூர் அவர்கள், அலபாமா உயர்நீதிமன்றக் கட்டிடத்தில் பத்துக் கட்டளைகளைக் காட்சிப்படுத்த, ஐயாயிரம் பவுண்டு நிறையுள்ள கருங்கல் நினைவுச் சின்னத்தை எழுப்பியபோது, முரண்பாட்டின் விவாதப் புயல் ஒன்று உண்டாயிற்று. நீதிபதி மூர் அவர்கள் தமது செயல்பாட்டைத் தற்காக்க, பத்துக் கட்டளைகள் தான் அமெரிக்காவின் சட்டத்திற்கும் சட்ட முறைமைகளுக்கும் அடிப்படை என்று சுட்டிக் காண்பித்து, எனவே அவைகள் ஒரு நீதிமன்றக் கட்டிடத்தில் காட்சிப்படுத்த ஏற்புடையவையே என்று வாதிட்டார். இருப்பினும் இந்த விவாதம், பத்துக்கட்டளைகளை வெளியரங்கமாகக் காட்சிப்படுத்துதல் என்பது "சபையையும் நாட்டையும் பிரித்துப் பார்த்தல்" என்ற கொள்கையை மீறியதாகும் என்ற கருத்தைப் பராமரித்து, ஒரு வழக்கைப் பதிவு செய்வதில் இருந்து, அமெரிக்க குடிமை உரிமைக் கழகம் மற்றும் பிற நிறுவனங்களை நிறுத்தி வைக்கவில்லை. இரு ஆண்டுகளுக்குப் பின்பு அந்த நினைவுச் சின்னமானது வெளியரங்கமான காட்சியில் இருந்து நீக்கப்பட்டது மற்றும் நீதிபதி மூர் அவர்கள், அதனை நீக்க வேண்டும் என்ற ஐக்கிய நாட்டின் நீதிமன்ற ஆணையைப் புறக்கணித்தமைக்காகப் பணியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதில் உள்ளடங்கியிருந்த சட்டப் பிரச்சனைகள் இருந்தாலும், நீதிபதி மூர் அவர்கள் சரியாகவே செயல்பட்டார் என்பது பற்றிக் கேள்வி எதுவும் இல்லை: பத்துக் கட்டளைகள், அமெரிக்க சட்ட மற்றும் சட்டப்பூர்வ முறைமைகளுக்கு அடிப்படையை வடிவமைக்கின்றன - மற்றும் அவை அமெரிக்க நாட்டின் ஒழுக்க முறைமைக் கருத்துக்களுக்கும் பொதுவான அடிப்படையை வடிவமைக்கின்றன. இதற்கும் மேலாக, பத்துக் கட்டளைகள் மேற்கத்தியக் கலாச்சாரரீதியான சிந்தனையின் பாகமாக உள்ளன.

உதாரணமாக, ஏதேனும் ஒரு விஷயம் நிரந்தரமானது மற்றும் கட்டுப்படுத்தக் கூடியது என்று நாம் கூற விரும்பும்போது, அது "கல்லில் எழுதப்பட்டுள்ளது" என்று நாம் கூறுகிறோம், இது தேவனால் தோற்றக் காலத்தில் கற்பலகைகளில் பொறிக்கப்பட்ட கட்டளைகளுக்கான குறிப்பாக உள்ளது. திட்டவட்டமான எந்த ஒரு பட்டியலும் "பத்துக் கட்டளைகள்" என்று குறிப்பிடப்படலாம். பாடக்கருத்தானது ஏறக்குறைய எதுவாக வேண்டுமென்றாலும் இருக்கலாம்: மக்கள் "இ - மெயிலுக்கான பத்துக் கட்டளைகள்," "பந்து விளையாட்டிற்கான பத்துக்கட்டளைகள்," "மன இறுக்கத்தை வெற்றிகொள்வதற்கான பத்துக்கட்டளைகள்," போன்றவற்றை எழுதியுள்ளனர் - மற்றும் இந்தப் பட்டியல் தொடர்ந்து வளர்ந்து கொண்டுள்ளது.

பத்துக்கட்டளைகளின் அளவுகடந்த செல்வாக்கு இருக்கும் நிலையிலும், பல மனிதர்கள் அவற்றையோ, இஸ்ரவேல் வரலாற்றில் அவற்றின் இடத்தையோ அல்லது இன்றைய மார்க்கரீதியான வாழ்வில் அவற்றின் பணிப்பொறுப்பையோ புரிந்து கொள்வதில்லை. இந்தக் கட்டளைகளின் இன்னொரு கண்ணோக்கை நாம் மேற்கொண்டு அவைகள் எவற்றைப் பற்றியவை என்பதைப் புரிந்து கொள்ள நாம் முயற்சி செய்வோமாக.

பத்துக்கட்டளைகளைப் பற்றிய பொதுவான கடைப்பிடித்தல்கள்

பத்துக்கட்டளைகள் என்பவை தேவனுடைய பரிசுத்தம் மற்றும் கிருபை ஆகியவற்றின் வெளிப்படையான கூற்றுக்களாக உள்ளன. எகிப்தில் இருந்து விடுதலைப் பயணம் தொடங்கிய வேளையில், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் தேவனைப் பற்றி அதிகமான அறிவு இஸ்ரவேல் மக்களுக்குத் தேவைப்பட்டது. அவர்கள் நானூறு ஆண்டுகளாக, முற்றிலும் புறதெய்வ வணக்கக் கலாச்சாரத்தில் அடிமைத் தளையில் இருந்திருந்தனர். அவர்கள் ஒரு தேவாலயத்தையோ, ஆசாரியத்துவத்தையோ அல்லது ஆவிக்குரிய வகையில் தங்களை வழிநடத்துவதற்கான வேதவசனங்களின் அமைப்பையோ கொண்டிருக்கவில்லை. ஆகவே, அவர்களை எகிப்தில் இருந்து வெளியே கொண்டு வந்த பின்பு, அவர்களை அவர்களின் தேவனோடு மீண்டும் பழக்கப்படுத்துதல் என்பது முதன்மையான பணியாக இருந்தது.

தேவன் அவர்களை எகிப்தில் இருந்து வெளியே கொண்டு வந்த உடனே, அவர் அரபியத் தீபகற்பத்தின் மீதிருந்த சீனாய் மலையின் அடிவாரத்திற்கு அவர்களை வழிநடத்தினார். அங்கே அவர்களின் தேவனாகத் தாம் இருப்பதாகவும் அவர்கள் தம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாக இருப்பதாகவும் அவர் ஒரு உடன்படிக்கையை அவர்களுடன் ஏற்படுத்திக் கொண்டார். மோசேயின் மூலமாகத் தரப்பட்ட நியாயப்பிரமாணத்தைப் பின்பற்றுதல் என்பதே இந்த உடன்படிக்கையில் இஸ்ரவேல் மக்களின் பாகமாக இருந்தது. தேவனை முகமுகமாய் தரிசிப்பதற்காக மலையின் மீது ஏறிச் சென்ற மோசே, பத்துக் கட்டளைகளுடன் (எபிரெய மொழியில் இது "பத்து வார்த்தைகள்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது) இறங்கி வந்தார். இந்தக் கட்டளைகள் சில வேளைகளில் "பதின்ம உரைகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கர்த்தரிடம் இருந்து தரப்பட்ட "பத்து வார்த்தைகள்" அவரது இன்றியமையாத பண்புகள் இரண்டைச் சொல்விளக்கப்படுத்துகின்றன. அவைகள் அவருடைய பரிசுத்தத்தையும் அவருடைய கிருபையையும் எடுத்துரைக்கின்றன. யாத்திராகமம் 19:10-15 வசனப்பகுதியானது, மக்கள் தேவனுக்கு முன்பாக வருவதற்கு முன்பு மேற்கொள்ள வேண்டியிருந்த கவனமான ஆயத்தப்படுத்துதல்களை விவரிக்கின்றன. அவர்கள் தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளும்படியும், எவரொருவரும் பரிசுத்த மலையைத் தொடாதிருக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டனர். ஒரு மிருகம் கூட மலையைத் தொட்டால், அது கல்லால் எறிந்து அல்லது அம்பினால் எய்து கொல்லப்பட வேண்டியிருந்தது; எவரொருவரும் அதை தொடக் கூடும்படிக்கு அருகில் செல்லக் கூடாதிருந்தது. 20 முதல் 22 வரையுள்ள வசனங்கள், இந்தக் காட்சி

அமைவின் பரிசுத்தம் பற்றிய எச்சரிக்கைகளைக் கொண்டுள்ளது: கர்த்தருக்கு முன்பாக ஊழியம் செய்த ஆசாரியர்களும்கூட, கர்த்தர் "தங்களுக்குள்ளே சங்காரம் பண்ணாதபடி" (19:22) தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். முற்றிலும் பரிசுத்தமாக உள்ள தேவனுடைய பிரசன்னத்தில் மக்கள் பயபக்தி மற்றும் மாட்சிமை ஆகியவற்றை அனுபவிக்க, காட்சி முழுவதும் செயல் விளக்கமாக வடிவமைக்கப்பட்டிருந்தது.

முதல் நான்கு கட்டளைகள் (20:1-11) தேவனுடைய பரிசுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. தனிப்படப் பிரித்து மற்றும் தனிவகைப் பட்டவர்களாக இருக்கும் பண்புதான் பரிசுத்தத்தின் அடிப்படைக் கருத்தாக உள்ளது. தேவன், பல தேவர்களிடையில் "இன்னொரு தேவராக மட்டும்" இருக்கவில்லை என்பதை இஸ்ரவேல் மக்கள் உணர்ந்தறிய வேண்டியிருந்தது. உடல்ரீதியாக எவரொருவரையும் போலிருத்தல் என்பது அவரை ஒருக்காலும் போதுமான வகையில் பிரதிநிதித்துவப்படுத்த இயலாது, மற்றும் "தேவர்" என்று அழைக்கப்பட்ட வேறு எவரும், தேவனுடைய மக்கள் அவர் மீது கொண்டிருக்கும் பற்றுறுதியைப் பெறப் போட்டியிட அனுமதிக்க இயலாது. அவரது நாமம் பயபக்தியாகப் பேசப்பட வேண்டியதாக இருந்தது; மற்றும் உலகத்தை இருப்பில் கொண்டுவருவதில் அவரது படைப்பாக்கப்பணியைப் போலச் செய்தல், அவரது மக்கள் "ஓய்வுநாளை நினைவுகூர்ந்து அதைப் பரிசுத்தமாக ஆசரித்தல்" ஆகியவையும் பேசப்பட வேண்டியதாக இருந்தது. மீதியான கட்டளைகள் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களின் பரிசுத்த தன்மைக்கு அளவுகோல்களை வடிவமைத்தது. அவர் பரிசுத்தராக இருப்பதால், அவர்கள் பரிசுத்தமானவர்களாக இருக்க வேண்டும். இந்தக் கட்டளையானது பிற்பாடு நியாயப்பிரமாணத்தில் தெளிவாக உரைக்கப்பட்டது (லேவியராகமம் 11:44, 45) மற்றும் இது புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலரான பேதுருவினால் மீண்டும் உரைக்கப்பட்டது (1 பேதுரு 1:15, 16).

தேவன் எப்போதுமே, தமது கிருபையின் அடிப்படையிலேயே நம்மைப் பரிசுத்தராக இருக்கும்படி அழைக்கிறார். பத்துக்கட்டளைகள் என்பவை, தேவன் நம்மைக் காட்டிலும் அதிகம் வல்லமை உடையவராக இருப்பதால் நம்மீது சுமத்தப்பட்ட "சட்டங்களின் பட்டியல்" மாத்திரமே என்ற வகையில் நினைத்தல் தீவிரமான தவறாக இருக்கும். மாறாக அவைகள், அவரது முழுமையான கிருபையின் இயல்பினுடைய சொல் விளக்கங்களாக உள்ளன. இஸ்ரவேல் மக்கள் அவரது மக்களாக இருக்கும்படி தேர்ந்துகொள்ளப்பட்டது அவரது கிருபையினால் மாத்திரமே. அவர் கிருபையினாலேயே அவர்களை அடிமைத் தளையில் இருந்து விடுவித்தார் (19:4; 20:2). உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் யாவற்றுடனும், அவர்களுடன் அவர் அதை நிலைநாட்டியதானதும்கூட கிருபையின் செயலாகவே இருந்தது. எனவே கட்டளைகள் தேவனுடைய சொந்தப் பண்பை வெளிப்படுத்துகின்றன. ஒழுக்கமும் ஒழுக்க நெறியும் மேம்போக்கான முறைமைகளாக இருப்பதில்லை; மாறாக அவைகள், தேவன் யாராக இருக்கிறார் மற்றும் அவர் தம் மக்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

கட்டளைகள் செங்குத்தாகவும் கிடைமட்டமாகவும் ஆணையிடப்பட்டன. "செங்குத்தாக" என்பது, கட்டளைகள் தேவனுடனான நமது உறவுமுறையை ஆளுகை செய்கின்றன என்று அர்த்தப்படுகிறது, மற்றும் "கிடைமட்டமாக"

என்பது, அவைகள் மற்ற மக்களுடன் நமது உறவுமுறையையும் உள்ளடக்குகின்றன என்று அர்த்தப்படுகிறது. கட்டளைகளைக் கவனமாக வாசித்தலானது, முதல் நான்கு கட்டளைகள் முதன்மைக் கருத்தில் செங்குத்தாக ஆணையிடப்பட்டன (இவைகள் வேறே தேவர்கள் இல்லை, வேறே உருவங்கள் இல்லை, தேவனுடைய நாமத்தை ஜாக்கிரதையாகப் பயன்படுத்துதல் மற்றும் ஓய்வுநாளை ஆசரித்தல் ஆகியவற்றைக் கேட்டுக்கொள்கின்றன). எஞ்சியுள்ள ஆறு கட்டளைகள் கிடைமட்டமாக ஆணையிடப்பட்டன (பெற்றோரைக் கனப்படுத்துதல், கொலை செய்யாதிருத்தல், விபசாரம் செய்யாதிருத்தல், களவு செய்யாதிருத்தல், பொய்ச்சாட்சி சொல்லாதிருத்தல் மற்றும் இச்சியாதிருத்தல்).

இந்த அனுசரிப்பில் உள்ள தனிச்சிறப்பு என்ன? முதலாவது, இது நாம் மற்ற மக்களைத் தவறாக நடத்திக்கொண்டு அதே வேளையில் தேவனுடன் சரியான உறவுமுறையைக் கொண்டிருக்க இயலாது என்று நமக்கு நினைவூட்டுகின்றன. 1 யோவான் 4:20ல் யோவான், "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" என்று குறிப்பாக எடுத்துரைத்தார். தேவன் மீதான அன்பு மற்றும் அயலார் மீதான அன்பு ஆகிய இரண்டுமே ஒருசேரச் செல்ல வேண்டும் என்று இயேசு போதித்தார் (மத்தேயு 22:35-40).

இரண்டாவது, பத்துக்கட்டளைகளின் செங்குத்தான /கிடைமட்டமான ஆணையிடுதல், தேவனுடன் சரியான உறவுமுறையில் இருந்தே நல்ல மனித உறவுமுறைகள் வெளியே பாய்ந்தோடி வருகின்றன என்று நமக்குப் போதிக்கிறது. பல மக்கள் மற்றவர்களுடன் நல்ல உறவுமுறைகளை நிலைநாட்ட அல்லது பராமரிக்க இயலாது இருப்பதற்குக் காரணம், அவர்கள் தேவனிடத்தில் தொடர்பற்று இருப்பதே ஆகும். நாம் தேவனுடன் சமாதானமாக இராதபோது, நாம் மற்றவர்ளுடன் சமாதானமாக இருத்தல் சாத்தியமற்றதாக உள்ளது. (இந்த கொள்கையின் ஒரு விளக்கத்திற்கு யாக்கோபு 4:1-4ஐக் காணவும்.)

கட்டளைகள் உண்மை நிலை கொண்டவையாகவும் பாதுகாப்பவையாகவும் உள்ளன. பத்துக் கட்டளைகளில் எட்டுக் கட்டளைகள் எதிர்மறையாக - "செய்யாதிருப்பாயாக" என்று - உரைக்கப் பட்டுள்ளன. இது தேவன் ஒரு எதிர்மறையான தேவனாக இருக்கிறார் என்று சுட்டிக்காண்பித்தலுக்கும் அதிகமாக, அவர் நமது மனித விருப்பநோக்கங்களைப் பற்றி உண்மைநிலை கொண்டவராக இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறன. ஏற்புடைய தடைகள் இல்லாத நிலையில் நாம், கொலை செய்யவும், களவுசெய்யவும், பொய்கூறவும் மற்றும் பிற பாவங்களைச் செய்யவும்கூடும். மனிதரீதியான பாவத்தைக் கையாளுகையில், மறைமுகமாய்க் கூறுதல் செயல்விளைவற்றதாக உள்ளது, எனவே தேவன், பாவம் செய்வதற்கான நமது விருப்பநோக்குப் பற்றி நேரடியாகவும் உண்மை நிலையை மனதில் கொண்டும் பேசியுள்ளார்.

கட்டளைகள் நமது சுய - அழிவைத் தவிர்க்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு, ''பாதுகாப்பவை'' என்ற நிலையிலும் உள்ளன. யாரோ ஒருவர், "நீங்கள் கட்டளைகள் மீது விழுந்து முறிதல் என்பதைக் காட்டிலும் அதிகமாக 'கட்டளைகளை மீறுதல்' என்பதைச் செய்வதில்லை" என்று ஏற்புடைய வகையில் கூறியுள்ளார். தேவனுடைய பிரமாணங்களை

நாம் புறக்கணிக்கும்போது, நாம் நம்மையே புண்படுத்திக் கொள்கிறோம். எடுத்துக்காட்டாக, புவியீர்ப்பு விசையின் விதியானது நன்கு அறியப்பட்ட ஒரு உண்மையாக உள்ளது. திடப்பொருட்கள் கீழே விழுவதை ஏதொன்றும் தடை செய்யாது இருந்தால் அவைகள் கீழேயே விழும் என்பதை அறிவியலும் அனுபவமும் நமக்குக் கூறுகின்றன. மக்கள் அந்தக் கொள்கையை மறுத்து அது செல்லாதது என்று அறிவிக்கலாம்; ஆனால் யாரேனும் ஒருவர் ஒரு உயரமான கட்டிடத்தின் உச்சிக்கு ஏறிச்சென்றால், புவியீர்ப்பு விதியின் "மீது அவர் விழுந்து முறிவார்." விதி என்பது விஷயங்கள் உள்ள வழிமுறைகளாக இருக்கிறது மற்றும் அதை ஏற்றுக்கொள்ளுதல் என்பது நம்மைத் துன்பத்தில் இருந்து பாதுகாக்கிறது. அதன் நிபந்தனைகளை மறுத்தல் என்பது நமது அழிவுக்கு வழிநடத்துகிறது. ஆகவே தேவன் நமக்குக் கட்டளைகளைக் கொடுப்பதன் மூலம் நாம் நம்மைப் பாதுகாக்க முயற்சி செய்தார். தேவன் கட்டளையிட்டுள்ளது எதுவோ, அது நாம் அவரைக் கனப்படுத்துவதற்கும் நமது சுய பாதுகாப்பிற்குமானதாக உள்ளது.

எகிப்தில் இருந்து இஸ்ரவேல் மக்கள் தப்பி வந்த சற்றுப் பின்பு, பத்துக்கட்டளைகள், தேவனுக்குத் கீழ்ப்படிவதில் இருந்தே உண்மையான விடுதலை வருகிறது என்பதை மக்களுக்கு நினைவூட்டுவனவாக இருந்தன. கட்டுப்பாடற்ற தனித்தன்மை என்பது அடிமைத்தளையைத் தன்னிலே கொண்ட வடிவமாக உள்ளது; அவர்கள் தேவன் கூறுவதைக் கவனிக்க மறுத்திருந்தால், அவர்கள் திரும்பவும் கைதிகள் ஆகியிருப்பர்.

பத்துக் கட்டளைகளின் விளக்கம்

பத்துக்கட்டளைகள் பெரும்பாலும் சுய விளக்கம் உடையவையாகவும் விரிவாக்கம் தேவைப்படாதவையாகவும் உள்ளன. அவற்றைப் பற்றிப் பெரும்பான்மையான கலந்துரையாடல்கள் அவற்றின் அர்த்தத்தைக் காட்டிலும் அதிகமாக அவற்றின் நடைமுறைப் பயன்பாட்டைப் பற்றியவையாக உள்ளன. ஒரு சில விளக்கங்களே அவசியமானவையாக உள்ளன.

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்ற முதல் கட்டளை (20:3), இஸ்ரவேல் மக்கள் கர்த்தருக்கு முன்னுரிமை கொடுத்திருக்கும் வரையில் அவர்கள் மற்ற தேவர்களை ஆராதிக்க அனுமதிக்கப்பட்டனர் என்று அர்த்தப்படுவதில்லை. மாறாக அவர்கள், ஒரே ஒரு தேவனை ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர் (ஏசாயா 44:6). ஒரு தேவனை விசுவாசித்தல் என்பது "ஒருதெய்வக் கொள்கை" என்று அழைக்கப்படுகிறது, மற்றும் இஸ்ரவேல் மக்கள் பழங்கால உலகத்தில் ஒருதெய்வக் கொள்கை கொண்ட மக்களினமாக இருந்ததில் தனித்துவம் வாய்ந்தவர்களாக இருந்தனர். இஸ்ரவேல் மக்களைச் சுற்றிலும் இருந்த மக்களினங்களின் பலதெய்வ வணக்கத்தின் காரணமாக, அவர்கள் மற்ற தேவர்களை "கூட்டிக்கொள்ளும்படியாக" நிலையாகச் சோதிக்கப்பட்டனர்; ஆனால், சாமுவேலின் மற்றும் இராஜாக்களின் புத்தகங்கள் விரிவாக வெளிப்படுத்துகிறபடி, அவர்கள் தங்களின் இந்தத் தவறுக்காக எப்போதுமே உயர்ந்த விலையைச் செலுத்தினர்.

இரண்டாம் கட்டளை (20:4-6) விக்கிரகங்களை - உண்மையான ஒரே தேவனின் உருவத்தைக் கூட - ஆராதிப்பதைத் தடைசெய்கிறது. மக்கள், உருவத்திற்கும் அது பிரதிநிதித்துவப்படுத்தும் விஷயத்திற்கும் இடையில் ஒரு

வித்தியாசத்தை உரிமைகோரினாலும், உருவங்கள் என்பவை கடைசியாக மக்களின் மனதில் இருந்து தேவனை இடம்பெயரச் செய்கின்றன என்பது ஒரு காரணமாக உள்ளது. எந்த ஒரு உருவமும் தேவனைப் போதிய அளவுக்குச் சாத்தியமாகப் பிரதிநிதித்துவப்படுத்த இயலாது மற்றும் அவைகள் அவரது உண்மையான இயல்பிலிருந்து வெளியே தவறாக மாத்திரமே வழிநடத்தப்பட முடியும் என்பது இந்தக் தடைக்கான இன்னொரு காரணமாக இருந்தது. மேலும், விக்கிரகங்கள் என்பவை, நாம் தேவனுடைய படைப்பாக இருக்கிறோம் என்பதை ஒப்புக்கொள்வதற்கு மாறாக, "நமது சாயலில் தேவனை உருவாக்குதல்" என்பதற்கான முயற்சியாக இருந்ததே தவிர வேறுவிதமாக இருக்கவில்லை. மக்கள் "ஒரு தேவனை உருவாக்கிய" உடனே, அந்தத் தேவன் விரும்புவது என்ன என்பதை அவர்கள் தாங்களே தீர்மானிக்கின்றனர். பின்பு அவர்கள் உண்மையில், தங்கள் சுய எண்ணங்களை ஆராதிக்கின்றனர் (ரோமர் 1:18-23). தேவன் எந்தப் போட்டியாளர்களையும் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பதை இரண்டாவது கட்டளை தெளிவாக்குகிறது. அவர் "எரிச்சல் உள்ளவராக" இருக்கிறார் - இது மிகவும் கூருணர்வு கொண்டிருத்தல் அல்லது போட்டியினிமித்தம் அஞ்சுதல் என்ற அற்பமான மனித ரீதியான கருத்தில் அல்ல, ஆனால் தமது மக்களின் முற்றிலுமான மற்றும் தனிப்பட்ட வகையிலான பற்றுறுதியை வற்புறுத்துதல் என்ற கருத்தில் அமைந்துள்ளது. நாம் "அவரது மக்களாக" இருக்க வேண்டும் என்றால், அவர் நமது ஒரே ஒரு தேவனாக இருக்க வேண்டும்.

யாத்திராகமம் 20:7ம் வசனம் தேவனுடைய நாமத்தை "வீணிலே வழங்குதலை" தடைசெய்கிறது. "வீண்" என்ற வார்த்தை "வெறுமை" அல்லது "அர்த்தமற்றது" என்று அர்த்தப்படுகிறது. தேவனுடைய நாமம் ஒரு வெறுமையான ஆணையை அல்லது வாக்குறுதியைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படக் கூடாது என்பது தோற்றக்காலக் கருத்தாக இருந்தது - உதாரணமாக, நமது வாக்குறுதியை நிறைவேற்றும் விருப்பநோக்கம் எதுவுமின்றி "தேவனைக் கொண்டு" ஆணையிடுதல். "வீணிலே" என்ற சொல்விளக்கம், தேவனுடைய நாமத்தை வெறுமையான அல்லது அர்த்தமற்ற வகையில் பயன்படுத்தும் எந்த ஒரு விஷயத்தையும் உள்ளடக்குகிறது. இது இன்றைய நாட்களில் சமூகத்தில் அதிர்ச்சி தரத்தக்க வகையில் கனவீனப்படுத்தப்படும் ஒரு கட்டளையாக உள்ளது!

8 முதல் 11 வரையுள்ள வசனங்கள் "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" என்ற நான்காவது கட்டளையை அமைக்கின்றன. இந்தக் கட்டளையைத் தொடர்ந்து இதன் முக்கியத்துவம் பற்றிய ஒரு விளக்கம் தரப்படுகிறது. இது "உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்" என்று அழைக்கப்படுகிறது. இது கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட வேண்டியதும் வேலை செய்யாதிருக்க வேண்டியதுமான நாளாக இருந்தது. ஒவ்வொரு ஏழாவது நாளையும் தனியே பிரித்து வைத்தல் என்பது மக்களுக்கு அவர்களைப் படைத்தது யார் என்பதை நினைவூட்டி, அவர்களின் அன்றாட சாதாரண நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும்படி அழைப்பதாக இருந்தது. ஓய்வுநாள் என்பது இஸ்ரவேல் மக்களை ஒரு நாளில் ஆராதிக்க, ஓய்வெடுக்க மற்றும் தேவனை நினைவுகூர ஆணையிட்டு அழைப்பித்தது.

"உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" என்ற கட்டளையானது (யாத்திராகமம் 20:12) தன்னுடன் இணைந்த ஒரு

வாக்குத்தத்தத்தைக் கொண்டுள்ளது: “உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு ...” (பிற்பாடு பவுல் இந்தக் கட்டளையை “வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது” என்று குறிப்பிட்டார்; எபேசியர் 6:1, 2.) இந்தக் கட்டளையைக் கடைப்பிடிக்கும் தனிநபருக்கு, இவ்வாக்குத்தத்தம் நீண்ட வாழ்நாளைக் குறிப்பிடுவதாக சிலர் இதைப் புரிந்து கொண்டுள்ளனர். இவ்வாக்குத்தத்தம், அடிப்படை மதிப்பும் மரியாதையும் குறைவுபட்டால் எந்த ஒரு மக்களினமும் உயிர்பிழைக்க இயலாது என்பதற்கான ஒரு நினைவூட்டுதலாக இருப்பதற்கே அதிக சாத்தியம் உள்ளது. பெற்றோரைக் கனவீனப்படுத்துதல் என்பது, சமூகத்தைப் பெருங்குழப்பத்திற்கு வழிநடத்துகிறதும் கடைசியில் ஒரு மக்களினத்தின் வீழ்ச்சிக்கு வழிநடத்துகிறதுமான, முற்றிலும் சுய மையங்கொண்ட தன்மையைக் குறிப்பதாக உள்ளது.

கொலை செய்தலுக்கு எதிராக யாத்திராகமம் 20:13ல் உள்ள தடையானது, போர் செய்தல் மற்றும் மரண தண்டனை தருதல் ஆகியவற்றை நீக்கிப்போட தேவன் விருப்பநோக்கம் கொண்டிருந்தாரா இல்லையா என்பது பற்றி அதிகமான கலந்துரையாடலைத் தூண்டிஉள்ளது. “கொல்லுதல்” என்பதற்கான எபிரெய வார்த்தை “கொலை” என்று அர்த்தப்படுகிறது, எனவே இது போர் செய்தல் மற்றும் சட்டப்பூர்வமான மரண தண்டனைகள் ஆகியவற்றைத் தானாகவே நீக்கிப்போடுவதில்லை. பழைய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதி, இஸ்ரவேல் மக்கள் (பெரும்பாலும் தேவனுடைய கட்டளைப்படியே) இவ்விரு நடவடிக்கைகளையும் செயல்படுத்தியதைக் குறிப்பிடுகிறது.

14 முதல் 16 வரையிலான வசனங்கள் சுய விளக்கம் கொண்டுள்ளன, ஆனால் ஒரு குடிமை அரசைப் பராமரிப்பதற்கான இஸ்ரவேலின் திறன் மீது இவற்றின் (இவ்வசனங்களின்) முக்கியத்துவத்தைக் காணாமல் விட்டு விட இயலாது. மீண்டுமாக இந்தக் கட்டளைகள், ஒழுக்கம் மற்றும் ஒழுக்க நெறிகள் ஆகியவற்றின் மிகவும் அடிப்படையான அம்சங்களைக் கையாளுகின்றன. விபசாரம், களவு செய்தல் மற்றும் ஒருவரிடத்தில் அல்லது ஒருவரைப் பற்றிப் பொய்கூறுதல் ஆகியவை, சமூகத்தின் நெறிமுறையைச் சாத்தியமற்றவை ஆக்குகின்றன. இந்த செயல்முறைகளை நமது சொந்த சமூகத்தில் நாம் எவ்வளவு அதிகமாகக் காணுகிறோமோ அவ்வளவு அதிகமாக இது மிகவும் தெளிவாகிறது. இந்த அடிப்படை விதிகள் கடைபிடிக்கப்படாத இடத்தில், சமூகப் பெருங்குழப்பம் விளைகிறது.

பத்தாவது கட்டளை (20:17) இச்சித்தலை அல்லது நம்முடையதல்லாத சிலவற்றை நாம் கொண்டிருக்க விரும்புதலைத் தடைசெய்கிறது. இச்சித்தல் என்பது, விபசாரம், களவு, பொய்ச்சாட்சி மற்றும் கொலைசெய்தலுக்குக்கூட வழிநடத்தக்கூடிய, இருதயத்தின் அடிப்படை எண்ணப்போக்காக உள்ளது. கட்டளைகள் அவற்றின் தீவிரத்தன்மையின் “இறங்கு வரிசையில்” உள்ளன என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர், ஆனால் இச்சித்தலின் மறைமுகக் கருத்துக்கள் இந்த விளக்கத்திற்கு எதிரானவையாக உள்ளன. பலர் உற்றுநோக்கியுள்ளபடி, இந்தக் கடைசிக் கட்டளை மட்டுமே வெளிப்படையான செயல்பாட்டிற்கு மாறாக இருதயத்தின் எண்ணப்போக்கைக் கையாளுகிற ஒரே கட்டளையாக உள்ளது. இது, குறிப்பாகப் பவுல் புதிய ஏற்பாட்டில் பொருளாசையை விக்கிரக ஆராதனையுடன் சமமாக்கினார் என்ற உண்மையின் வெளிச்சத்தில்,

குறிப்பிடத்தக்க கருத்தாக உள்ளது (எபேசியர் 5:5; கொலோசெயர் 3:5). இருதயத்தின் எண்ணப்போக்குகளே செயல்களுக்கு வழிநடத்துகின்றன, மற்றும் கட்டுப்படுத்தப்படாத பொருளாசையின் விளைவுகள் மிகவும் தீவிரமானவையாக இருக்க முடியும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

தேவனிடத்தில் இருந்து வந்த ''பத்து வார்த்தைகளை'' நாம் ஆய்வுசெய்கையில், அவைகள் மோசேயின் மூலமாகத் தரப்பட்ட தேவனுடைய பிரமாணத்தின் முழுமையான பகுதியல்ல ஆனால் அதன் மையப்பகுதியாக மாத்திரமே இருந்தது என்பதை நினைவுகூருதல் முக்கியமானதாக உள்ளது. யாத்திராகமம் 21-23 மற்றும் லேவியராகமம் புத்தகம் முழுமையும், இன்னும் குறிப்பான பிரமாணங்கள் பலவற்றைக் கொண்டுள்ளன, இவைகள் இந்தப் பத்துக் கட்டளைகளின் அத்தியாவசியமான வெளிவளர்ச்சிகளாக உள்ளன. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளை நாம் ஒருக்காலும் மிகையாக எளிமையாக்கிவிடக் கூடாது. நாம், "நான் பத்துக் கட்டளைகளின்படி வாழ்வதால், தேவனுடன் நேராக இருக்கிறேன்'' என்று கூற இயலாது. கட்டளைகளின்படி வாழுதல் என்பது நல்லதொரு தொடக்கமாக இருக்கையில், தேவனுடன் நேராக இருப்பதற்கு அதைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் செய்யப்பட வேண்டியுள்ளன.

பத்துக்கட்டளைகளின் இன்றைய நாட்களுக்கான பயன்பாடு

பத்துக் கட்டளைகள் ஒரு குறிப்பிட்ட மக்களினத்திற்காக மிக நீண்ட காலத்திற்கு முன்பு தரப்பட்டன. நமது சொந்த கலாச்சாரமும் வரலாற்றுச் சூழ்நிலைகளும் அவர்களுடையவற்றில் இருந்து வெகுதொலைவில் இருப்பதால், கட்டளைகள் என்பவை இன்றைய நாட்களில் நமக்குக் கொண்டுள்ள பொருத்தம் என்ன?

முதலாவது, அவைகள் நித்திய மதிப்புடைய ஒழுக்கரீதியான முற்றான கோட்பாடுகளாக உள்ளன என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. "ஒழுக்கரீதியாக சார்பளவுத் தத்துவம்'' என்பதே நமது காலங்களின் ஆய்வுக்கருத்தாக உள்ளது. எளிமையாகக் கூறுவதென்றால், எந்த ஒரு விஷயமும் தன்னிலே முற்றிலும் சரியானது அல்லது தவறானது என்று கண்ணோக்கப்படுவதில்லை என்றே இது அர்த்தப்படுகிறது. ஒவ்வொரு விஷயமும் "சார்பளவில்'' உய்த்துணரப்படுகிறது; எது சரியானது என்பதும் எது தவறானது என்பதும் தனிநபரின் சூழ்நிலைகளைச் சார்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இவ்வகையான சிந்தித்தலின்படி, ஏதேனும் ஒருவிஷயம் ஒரு நபருக்குச் சரியானதாகவும் இன்னொரு நபருக்குத் தவறானதாகவும் இருக்க முடியும், அத்துடன் எந்த ஒரு விஷயமும் முற்றிலுமானதாக இராது.

கட்டளைகள் வேறுவிதமாகக் கூறுகின்றன. அவைகள், எப்போதுமே தவறான மற்றும் எப்போதுமே சரியான விஷயங்கள் உள்ளன என்ற கருத்தை உறுதிப்படுத்துகின்றன. அவைகள் தேவனுடைய ஒழுக்கரீதியான பிரமாணங்களின் முழுமைத்தன்மை பற்றிய வழுவற்ற கூற்றுக்களாக உள்ளன.

பத்துக்கட்டளைகளின் இந்தப் பண்பே, மிகச்சரியாக இவற்றைப் பொதுவான

உணர்வுகளில் இருந்து நீக்க வேண்டும் என்று விரும்பக் காரணமாகின்றன. இது, கிறிஸ்தவர்கள் அல்லது யூதர்களின் மதரீதியான உணர்வுகளைப் புண்படுத்தியதால் என்பதைக் காட்டிலும் அதிகமாக, முற்றிலும் சரியானது அல்லது தவறானது என்பது ஒன்றுமில்லை என்ற மேலோங்கிய கருத்தைப் புண்படுத்துதலின் காரணமாகவே இவ்வாறு இருந்தது. உண்மையில் பத்துக் கட்டளைகள் பெரும்பாலும், நித்தியத்துவத்திற்கான கருத்துக்களில் தங்களை நீக்கிக்கொள்ள விரும்பும் மக்களிடமிருந்து வருகிற தேவதூஷணமான தாக்குதல்களின் கீழாகவே வருகின்றன. பின்வருவன போன்ற கூற்றுக்கள் அசாதாரணமானவைகளாக இருப்பதில்லை:

> ... இந்த நம்பிக்கை உண்மை நிலையுடன் இணைவு கொண்டிருப்பதில்லை. முதல் நான்கு கட்டளைகள் ... பல விசுவாசப் பாரம்பரியங்களைக் கொண்ட மக்களுக்கு ஏற்புடையதல்லாத ஆராதனையின் குறிப்பிட்ட நடைமுறைகளை வேண்டிக்கேட்கின்றன.
>
> முதல் கட்டளை, யெகோவாவைத் தவிர வேறு எந்தத் தெய்வத்தையும் ஆராதிப்பதைத் தடைசெய்கிறது; இது புத்த மதம் (சில பாரம்பரியங்கள்), இந்து மதம், சீக்கிய மதம், விக்கா மதம் இன்ன பிறவற்றைக் கண்டனம் செய்கிறது. இது மத நம்பிக்கைகளில் சுதந்தரத்தை உத்தரவாதம் செய்கிற அமெரிக்க நாட்டின் சட்டத்தினுடைய முதல் பிரிவிற்கு நேர் முரணானதாக உள்ளது. இது மற்ற விசுவாசங்களைச் சகித்துக்கொள்ளக் கூடாததாக உள்ளது மற்றும் இது சிறுபான்மை மதங்களுக்கு எதிராக வெறுப்பையும் வன்முறையையும் உருவாக்கக் கூடும்.
>
> தோற்ற காலப் பத்துக்கட்டளைகளில் நான்கு கட்டளைகள், கடந்து சென்ற நூற்றாண்டுகளில் இருந்த ஒரு சிறு மக்களினமான எபிரெயர்களின் உள்ளூர்க்குலக்கடவுளான ஏல் என்பவரின் தன்முனைப்புத் தாக்குதலைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுவதில்லை. மற்ற கட்டளைகள் ஒன்று மிகவும் பலவீனமாக, அல்லது மிகவும் பலமானதாக அல்லது மிகவும் தெளிவற்றதாக உள்ளன.[1]

மேற்காணப்படுபவற்றில் கடைசிக்கூற்றின் எழுத்தாளர், ‘‘மனித ஒழுக்கத்திற்கான இந்தக் கற்கால வழிகாட்டியை இன்றைய நாட்களுக்கு ஏற்றவை’’ ஆக்குவதற்காகத் தமது சுயத்தில், “பகுத்தறிவுக்கேற்ற பத்துக் கட்டளைகள்’’ என்பதைக் கூடுதலாக்கும் அளவுக்குச் சென்றிருக்கிறார் (இவர் ஒரு பெண் எழுத்தாளர் ஆவார்). “உங்கள் விசுவாசத்தை உங்களுக்கே தனிப்பட்டதாகக் காத்துக்கொள்ளுங்கள், மற்றவர்களை மனமாற்றவோ அல்லது உங்கள் நம்பிக்கைகளை உங்கள் பிள்ளைகள் உட்பட, மற்ற எவர்மீதும் பலவந்தமாகத் திணிக்க நாடாதிருங்கள்’’ என்பது இவரின் ஒரு கட்டளையாகும்.

ஒரு குழுவானது, தனது சொந்தமான, “பத்துக்கட்டளைகளுக்கு மாற்றான கட்டளை அமைவுகளை’’ அளிக்கிறது, “இவைகள் பலவிதமான விசுவாசம் கொண்ட குழுக்களின் நபர்களால் அதிகம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவையாக” இருப்பதால், இவைகள் தேவனுடைய பத்துக்கட்டளைகளுக்குப் பதிலிகளாக

இருக்கின்றன என்று அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். அவர்களால் முன்மொழியப்பட்டுள்ள பட்டியல்களில் ஒன்று, தேவனைப்பற்றியோ அல்லது வேறு எந்த தெய்வத்தைப் பற்றியோ எந்தக் குறிப்பையும் ஏற்படுத்துவதில்லை! இப்படிப்பட்ட முன்மொழியப்பட்டுள்ள இரண்டாவது அமைவு ஒன்று, "உங்கள் விசுவாசப் பாரம்பரியத்திற்குள் இருக்கும் எந்தத் தெய்வத்தையும், நீங்கள் பின்பற்றினால், அதை மதித்து ஆராதியுங்கள்" என்று தொடங்குகிறது.

இப்படிப்பட்ட முன்மொழிதல்களின் பொதுவான இலக்கு தெளிவானதாக உள்ளது: சரி மற்றும் தவறு அல்லது சத்தியம் மற்றும் தவறு, என்பதைப் பற்றிய முற்றான தர அளவைகள் எதையும் நீக்கிப் போட்டு, மக்கள் தங்கள் சொந்தப் பிள்ளைகளுக்குக் கூடத் தங்கள் விசுவாசத்தைப் போதித்தலைத் தடைசெய்தல்! இது, தங்களின் கண்ணோட்டக் கருத்து மாத்திரமே "பகுத்தறிவுக்கு ஏற்றதாக" உள்ளது என்று வலியுறுத்தச் சுயாதீனம் கொண்டுள்ள, இந்தப் பதிவேடுகளின் எழுத்தாளர்களை விலக்கி வைக்கிறது என்பதை ஒருவர் கற்பனை மாத்திரமே செய்ய முடியும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட பாவங்கள் மனித இனத்துடன் தொடர்ந்து செல்லும் பிரச்சனைகளாக இருப்பதால், பத்துக் கட்டளைகள் பாவங்களைத் தடைசெய்கிறது. இந்தக் காரணத்தினால், பெரும்பான்மையான கட்டளைகள், புதிய ஏற்பாட்டில் இயேசு மற்றும் அவரது அப்போஸ்தலர்கள் ஆகியோரால் மீண்டும் உரைக்கப்பட்டன, இது அதே கொள்கைகள் இன்னும் அமுலில் இருப்பதைக் சுட்டிக்காண்பிக்கின்றன.

இரண்டாவது, பத்துக் கட்டளைகள் நம்மை இரட்சிக்கும் நோக்கங்கொண்டவை அல்ல, ஆனால் நமது மீட்பரைச் சுட்டிக்காட்டும் நோக்கம் கொண்டவை என்பதை நாம் நினைவுகூர வேண்டும். பத்துக் கட்டளைகள், நாம் எவ்வளவு நன்கு செயல்படுகிறோம் என்பதை அல்ல, ஆனால் தேவனுடைய கிருபையில் இருந்து நாம் எவ்வளவு குறைவுபட்டு விழுகிறோம் என்பதையே பத்துக் கட்டளைகள் காண்பிக்கின்றன என்பதை எந்த ஒரு நேர்மையான நபரும் காண முடியும். இதை நாம் உணர்ந்து அறிந்த உடனே, ஒரு மீட்பர் நமக்குத் தேவை என்பதை உணர்ந்து அறிதவில் நாம் இடர்பாடு எதையும் கொண்டிருக்கக் கூடாது. இதுவே மிகச்சரியாகப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் புரிந்து கொள்ளுதலாக உள்ளது:

> ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின்கீழ் காவல்பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும்பெண்ணென்றுமில்லை;நீங்களெல்லாரும்கிறிஸ்துஇயேசுவுக்குள்

ஒன்றாயிருக்கிறீர்கள் (கலாத்தியர் 3:23-28).

மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.

இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக் குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார் (ரோமர் 3:19-26).

எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். ஏனென்றால், விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்று சொன்னவர் கொலைசெய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆதலால் நீ விபசாரஞ்செய்யாமலிருந்தும் கொலைசெய்தாயானால் நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய் (யாக்கோபு 2:10, 11).

பத்துக் கட்டளைகளில் விளக்கப்பட்டுள்ளபடி, நியாயப்பிரமாணம் என்பது, பாவம் என்றால் என்ன என்று நமக்குக் காண்பிப்பதற்கு அவசியமான ஒரு படியாக இருந்தது; ஆனால் அது மாத்திரமே நம்மை இரட்சிக்க இயலாது. பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாக நம்மை இரட்சித்துக் கொள்ள முயற்சி செய்தல் என்பது வீணானதாக உள்ளது. நோயைச் சோதித்து அறிதல் என்பது அதற்கான சிகிச்சையாக இருப்பதில்லை. நியாயப்பிரமாணம் நோயைச் சோதித்து அறிதலை அளிக்கிறது: பாவம். சுவிசேஷமானது சிகிச்சையை அளிக்கிறது: இயேசு கிறிஸ்து. பத்துக் கட்டளைகளைக் கேள்விப்படுதல் நம்மை, நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்தலினால் பெற்றுக் கொள்ள இயலாத இரட்சிப்பிற்காகக் கிறிஸ்துவின் சிலுவையை நோக்கி ஓடும்படி நம்மைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு நியாயப் பிரமாணத்தைக் கொடுப்பதற்காக அவர்களைச் சீனாய் மலையின் அடிவாரத்தில் ஒன்று கூட்டியபோது, அவர் மோசேயுடனான தமது உடன்படிக்கையின் முதல்நிலை நிபந்தனைகளை உரைத்தார், மோசே அவற்றை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டி இருந்தது. இந்த நிபந்தனைகள் யாத்திராகமம் 19:5, 6அ வசனங்களில் தொகுத்துரைக்கப் பட்டுள்ளது: "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்." இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் மக்கள் கேள்விப்பட்டபோது, அவர்கள் ஒரே குரலில் பின்வருமாறு பதில் உரைத்தனர்: "கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்!" (யாத்திராகமம் 19:8அ). ஒப்புக்கொடுத்தல் மற்றும் கீழ்ப்படிதல் என்பவற்றின் இந்த எண்ணப்போக்கு மாத்திரமே, தேவனுடன் ஒரு உடன்படிக்கை உறவில் நாம் உள்நுழையக்கூடிய எண்ணப்போக்காக உள்ளது. "செய்ய வேண்டியவை" மற்றும் "செய்யக் கூடாதவை" என்பவற்றின் ஒரு உலர்ந்த பட்டியலாக மாத்திரமே இருத்தலில் இருந்து தூரத்தில், பத்துக்கட்டளைகள் இஸ்ரவேல் மக்களுக்கு, அன்பு மற்றும் பற்றுறுதி ஆகியவற்றின் உடன்படிக்கை உறவு ஒன்றை ஆணையிட்டது. கிறிஸ்துவின் மூலமாக நாம், நமது பின்னணிகள், நமது மக்களின் வகைகள், மற்றும் நமது பாவங்கள் ஆகியவற்றைத் தாண்டி, இன்றைய நாட்களில் ஒரு உடன்படிக்கை உறவில் உள்நுழையும்படி தொடர்ந்து ஆணையிடப் பட்டிருக்கிறோம். கர்த்தர் பேசியுள்ளார். நாம் கீழ்ப்படிவோமா?

குறிப்புகள்

[1]இந்தக் கூற்றுக்கள் யாவையும், தங்களை "மதரீதியாகச் சுதந்தரர்கள்" என்று விவரித்துக் கொள்ளும் எழுத்தாளர்களின் வலைத்தளம் ஒன்றில் உள்ளன (www.sealfd.hotmail.msn.com; Internet; accessed May 2009). இந்தக் தளத்தில் இத் தகவல்கள் இப்போது கிடைப்பதில்லை என்றாலும், இதே கூற்றுக்களில் சிலவும் இதைப் போன்ற கூற்றுக்களும் http://www.religioustolerance.org/chr_10cn.htm; Internet; accessed 3 February 2010 என்ற வலைத்தளத்தில் காணப்படலாம்.

ஓய்வுநாள்

யாத்திராகமம் 20:9, 10 வசனப் பகுதியானது, ஓய்வுநாள் (*shabbath*, "ஓய்ந்திருத்தல்") என்பது, தேவன் "ஓய்ந்திருந்த" நாளாக (ஆதியாகமம் 2:2, 3), படைப்பின் ஏழாம் நாளுக்கு இணையான, வாரத்தின் ஏழாம் நாள் என்பதைத் தெளிவாக்குகிறது. தேவன் களைத்துப் போய்விட்டார் என்று இவ்வார்த்தை மறைமுகமாக உணர்த்துவதில்லை, ஆனால் அவர் தமது படைப்புச் செயல்களை விட்டு ஓய்ந்து இருந்தார் என்று மாத்திரமே குறிப்பிடுகின்றன. தேவன் எல்லாவற்றையும் படைப்பவராகவும் காத்து நிலைநிறுத்துபவராகவும் இருக்கிறார் என்பதை நினைவூட்டுவதாக இருக்கும் வகையில், இஸ்ரவேல் மக்கள் ஒவ்வொரு வாரத்தின் ஏழாம்நாளையும் எந்த வேலையையும் செய்யாமல் ஆசரிக்க வேண்டியிருந்தது. ஓய்வுநாள் ஆசரிப்பிற்கு

உபாகமம் 5:15ம் வசனம் இன்னொரு காரணத்தைக் கூடுதலாகக் கூறுகிறது: இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் ஓய்வு மிகவும் அவசியமாகத் தேவைப்பட்ட நிலையில் அடிமைகளாக இருந்தனர் என்பதை நினைவூட்டும் வகையில் அவர்கள் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டி இருந்தது.

"ஓய்வுநாளை நினைவுகூருதல்" மற்றும் "அதைப் பரிசுத்தமாய் ஆசரித்தல்" என்பவை, அந்த நாளை மற்ற எல்லா நாட்களிலும் இருந்து வேறுபட்டதாக மதித்து, அது தேவனுக்கென்று விசேஷமாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள் என்று மதிக்க வேண்டும் என்பதாக அர்த்தப்பட்டது. இந்தக் கட்டளையை மீறுதல் என்பது, தேவன் இஸ்ரவேல் மக்களுடன் ஏற்படுத்தி இருந்த உடன்படிக்கையில் இருந்து தீவிரமாக விலகுதல் என்று கருதப்பட்டது (யாத்திராகமம் 31:12-17).

இயேசுவின் காலத்தில், ஓய்வுநாளின் பரிசுத்தத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி வடிவமைக்கப்பட்டிருந்த பல நிபந்தனைகளின் சேனையினால் அது சூழ்ந்து கொள்ளப்பட்டிருந்தது மற்றும் இவைகள் மூடநம்பிக்கையின் பண்பை மேற்கொண்டிருந்தன. குறிப்பாக, "அதிலே நீயானாலும், ... யாதொரு வேலையும் செய்யவேண்டாம்" (யாத்திராகமம் 20:10) என்று தேவன் கூறியபோது "வேலை" என்ற வார்த்தையின் மூலம் அவர் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை மிகச்சரியாக விளக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது சிலவேளைகளில், வியாதியாக இருப்பவர்கள் மற்றும் தேவையில் உள்ளவர்கள் ஆகியோருக்கு ஓய்வுநாளில் உதவி செய்தல் சட்டவிரோதமானது என்று கூறும் அளவுக்குக் கூட விரிவாக்கப்பட்டது. இயேசு மீண்டும் மீண்டுமாக, தமது நாட்களில் இருந்த மதத் தலைவர்களுடன் விவாதம் செய்ய வந்தார் - இது அவர் யாத்திராகமத்தில் காணப்பட்ட ஓய்வுநாளில் ஒழுங்குமுறைகளை மீறினார் என்பதற்காக இல்லாமல், அதன் ஆசரிப்புடன், குறிப்பாகப் பரிசேயர்களால் கூட்டப்பட்ட ஒழுங்கு முறைகளைப் புறக்கணித்தார் என்பதற்காகவே விவாதம் செய்யப்பட்டது (உதாரணத்திற்கு, மாற்கு 3:1-6; லூக்கா 13:10-17; யோவான் 5:1-16; 9:1-41 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்). அவரும் அவருடைய சீஷர்களும், ஓய்வுநாள் பற்றிய தங்களின் (பரிசேயர்களின்) கண்ணோட்டத்தை மீறினர் என்பதைப் பற்றிய அவர்களின் தொடர்ந்த விமர்சனம், இதைப் பற்றிய மாபெரும் இரண்டு சத்தியங்களை அறிவிக்கும்படி இயேசுவை வழிநடத்திற்று: "மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது" மற்றும் "ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்" (மாற்கு 2:23-28).

பத்துக் கட்டளைகளில் ஓய்வுநாள் பற்றிய கட்டளை மாத்திரமே (கட்டளை என்ற வகையில்) புதிய ஏற்பாட்டில் மீண்டும் எடுத்துரைக்கப்படவில்லை. மாறாக, தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளை (ஞாயிற்றுக் கிழமையை)த் தங்கள் ஆராதனை நாளாக ஆசரித்தனர், அதை அவர்கள் "கர்த்தரின் நாள்" என்று அழைத்தனர் (காண்க நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:1, 2; வெளிப்படுத்தின விசேஷம் 1:10). இந்த நாள் கர்த்தர் மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்த நாளாக இருந்தபடியால் இதைத் தேர்ந்து எடுத்தது தக்க வகையிலானதாகவே இருந்தது; மேலும் ஆராதனை நாட்களில் ஏற்பட்ட மாற்றமானது தொடக்ககால விசுவாசிகள், யூதத்தவத்தில் இருந்து பிரிந்து தங்கள் சொந்த அடையாளத்தை நிலைநாட்டிக்கொள்வதில் அவர்களுக்கு உதவிற்று.

நவீனப் பழக்க வழக்கங்கள் போலின்றி, கர்த்தருடைய நாள்

(ஞாயிற்றுக்கிழமை) என்பது வேத வசனங்களில் “ஓய்வுநாள்” என்று ஒருக்காலும் குறிப்பிடப்படவில்லை. “கிறிஸ்தவ ஓய்வுநாள்” என்ற கருத்தானது, கிறிஸ்தவத்தின் வரலாற்றில் பிற்பாடு, கிறிஸ்தவர்களின் ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பில் ஓய்வுநாளின் கட்டுப்பாடுகளை (அடிப்படையாக, வேலை செய்யாதிருத்தலை) வலிந்து திணிக்கும் விருப்பம் ஏற்பட்ட போது உருவாயிற்று. இது தனித்தனியான இரு உடன்படிக்கைகளில் இருந்து விளைந்த தனிப்பட்ட இரு அமைப்புகளுக்கு இடையில் ஒரு குழப்பத்தை உருவாக்குகிறது. இருப்பினும் தேவனுக்கென்று விசேஷமாக நேரத்தை அர்ப்பணித்தல் என்ற கருத்து இரு ஆசரிப்புகளிலும் முக்கியத்துவம் கொண்டுள்ளது.

5

தாவீதின் மகன்/தேவனின் மகன்

(2 சாமுவேல் 7:1–17)

எவ்வளவு பெரியதாக அல்லது சிறியதாக இருந்தாலும், ஒவ்வொரு நகரமும், மாற்கு 10:46-52ல் இயேசுவினால் எதிர்கொள்ளப்பட்ட "பார்வையற்ற பர்திமேயு" போன்ற ஒரு நபரையாவது குறைந்த பட்சம் கொண்டுள்ளது. இவர்கள் எப்போதுமே அங்கிருப்பவர்களாக, வழக்கமாகக் கவனத்தைக் கவரும் இடங்களில் இருப்பவர்களாக, இருப்பினும் எவரொருவரும் அவர்களுக்கு அதிக கவனத்தைச் செலுத்தாத காரணத்தில் உண்மையில் அங்கு இல்லாதவர்களாக உள்ளனர்.

பர்திமேயு எவ்வளவு காலமாகப் பார்வையற்று இருந்தார் என்றோ அல்லது சாலையின் ஓரத்தில் அவர் எவ்வளவு காலமாக நிறுத்தப்பட்டு இருந்தார் என்றோ நாம் அறிவதில்லை, ஆனால் அவர், அந்த வழியாக இயேசு ஒரு நாள் கடந்து சென்றதால், சரியான இடத்தில் சரியான வேளையில் இருந்தார். இயேசுவைப் பற்றியும் பார்வையற்றவர்களுக்குப் பார்வை அளிக்கும் அவரது வல்லமை பற்றியும் கேள்விப்பட்டிருந்த பர்திமேயு இந்த வாய்ப்பைத் தவறவிடக்கூடாது என்று தீர்மானித்தார். அவர் "கூப்பிடத் தொடங்கினர்." அவர் சத்தமிட்டுக் கூப்பிட்டது மாத்திரமல்ல, ஆனால் "இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்!" என்று ஒரு தரம் மாத்திரமல்ல, ஆனால் திரும்பத் திரும்பக் கூறினார் என்று மாற்கு 10:47 கூறுகிறது. "யாரென்று அறியப்படாத" இந்த நபரினால் உருவாக்கப்பட்ட இந்தக் கொந்தளிப்பினால் சங்கடம் அடைந்தவர்களான அங்கு இருந்த சிலர். அவரைக் கடிந்துகொண்டு சத்தம் போடாது இருக்கும்படி அவரிடம் கூறினர். மாற்கு சுவிசேஷ விபரம், "அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று, முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான்" என்று கூறுகிறது (வசனம் 48). அவரது விடாமுயற்சிக்குப் பலன் கிடைத்தது. இயேசு நின்று, அங்கு நின்று கொண்டிருந்தவர்களிடத்தில், "அவரை அழைத்து வரச்சொல்லி" அறிவுறுத்தினார். பின்பு அங்கு நின்றிருந்தவர்கள் பர்திமேயுவினிடத்தில், "திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார்" என்று கூறினர். பர்திமேயு கீழ்ப்படிந்தார், மற்றும் அவரை இயேசு குணமாக்கினார்.

பர்திமேயுவின் விபரக்குறிப்பு தனது சுயத்திலேயே ஒரு அற்புதமான வரலாறாக உள்ளது, ஆனால் இது ஆர்வமிக்க மற்றும் முக்கியமான ஒரு கேள்வியையும் எழுப்புகிறது: பர்திமேயு இயேசுவை "தாவீதின் குமாரனே" என்று அழைத்தது ஏன்? அவர் (பர்திமேயு), "தேவனுடைய குமாரன்," "ஆண்டவர்," "எஜமானர்," அல்லது இயேசு தம்மை வழக்கமாக அழைத்த சொற்றொடர் "மனுஷ குமாரன்" - போன்றவற்றைப் பயன்படுத்தாமல் இருந்தது ஏன்? பார்வையற்ற இம்மனிதரைக் குணமாக்கும் விஷயத்தில், தாவீதின் சந்ததி என்ற வகையில் இயேசுவின் பாரம்பரியம், பணிப்பொறுப்பு எதையாவது

செய்வதாக இருப்பது ஏன்?

வாக்குத்தத்தம்

தாவீதிற்கு ஒரு "வீட்டை" கட்டுதல்!

இவையாவும், 2 சாமுவேல் 7:1-17ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, ஒரு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தேவன் தாவீது அரசரிடம் ஏற்படுத்தியிருந்த ஒரு வாக்குத்தத்தத்தை நோக்கிப் பின்செல்லுகிறது. இஸ்ரவேல் நாட்டின் அரசர் என்ற வகையில் தாவீது, தமது ஆட்சியில் ஒரு அமைதியான நிலையை அடைந்திருந்தார். அவர் (ஒரு கூடாரத்திலோ அல்லது இராணுவ முகாமிலோ வாழ்வதற்கு மாறாக) நிரந்தரமான ஒரு தங்கும் இடத்தைக் கொண்டிருந்தார், "கர்த்தர் ராஜாவைச் சுற்றிலுமிருந்த அவனுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் அவனை நீக்கலாக்கி, இளைப்பாறப்பண்ணினார்" (வசனம் 1ஆ). தாவீதுக்குத் தமது சூழ்நிலையைப் பொறுத்தமட்டில் ஏதோ சில விஷயங்கள் முழுவதும் சரியானதாகத் காணப்படவில்லை, இதை அவர் தீர்க்கதரிசியான நாத்தானிடத்தில் வெளிப்படுத்தினார்: "பாரும், கேதுருமரங்களால் செய்யப்பட்ட வீட்டில் நான் வாசம்பண்ணும்போது; தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே" (வசனம் 2). இஸ்ரவேல் மக்கள் எகிப்து நாட்டில் இருந்து தப்பித்து வந்த பின்பு, அவர்கள் வடிவமைத்து ஆசரிப்புக் கூடாரத்தினுள் வைத்திருந்த பரிசுத்த பேழை (பெட்டி) இன்னமும் ஒரு கூடாரத்தில் வைக்கப்பட்டு இருக்கையில், தாவீது ஒரு நேர்த்தியான வீட்டில் வசித்து வந்தது அவருக்கு ஏற்புடையதாகக் காணப்படாது இருந்தது. தாவீது "தேவனுக்கென்று ஒரு வீட்டைக் கட்டவேண்டும்" என்று கூறியபோது, அவர் பேழைக்கு ஒரு தகுதியான கட்டமைப்பை - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஒரு தேவாலயத்தை - கட்டவேண்டும் என்பதைத் தமது மனதில் கொண்டிருந்தார் என்பதை வேதவசனம் மறைமுகமாய் உணர்த்துகிறது, ஆனால் அதை வெளிப்படையாகக் கூறுவதில்லை. அவர் தேவனைக் கனப்படுத்த விரும்பினார், மற்றும் காலம் சரியானதாகக் காணப்பட்டது. அவரது திட்டங்களைப் பொறுத்தமட்டில் அவரிடத்தில் நாத்தான், "கர்த்தர் உம்மோடு இருக்கிறார்" என்று உறுதிப்படுத்தினார். இருப்பினும் அன்று இரவில் அவர், தாவீதுக்குத் தரும்படி ஒரு செய்தியைத் தேவன் தமக்குக் கொடுத்த ஒரு தரிசனத்தைக் கண்டார்:

> *கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ? நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற் கொண்டு இந்நாள்வரைக்கும், நான் ஒரு ஆலயத்திலே வாசம்பண்ணாமல், கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவினேன். நான் இஸ்ரவேலாகிய என் ஜனத்தை மேய்க்கும்படி கட்டளையிட்ட இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தையாவது நோக்கி: நீங்கள் எனக்குக் கேதுரு மரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று நான் இஸ்ரவேல் புத்திரருக்குள் உலாவிவந்த எவ்விடத்திலாவது யாதொரு வார்த்தையைச் சொன்னதுண்டோ? (2 சாமுவேல் 7:5-7).*

செய்தி தெளிவானதாக இருந்தது: தேவனுக்கு ஒரு வீடு தேவைப்படவில்லை மற்றும் அவர் ஒரு வீடு வேண்டும் என்று கேட்டிருக்கவில்லை. மேலும், அவர் ஒரு வீட்டை விரும்பி இருந்தால், அதைத் தமக்காகக் கட்டும்படி அவருக்குத் தாவீது தேவைப்பட்டிருக்க மாட்டார். தாவீதின் மனவிருப்பம் நல்லதாக இருந்தது என்பது தெளிவு, ஆனால் அதே வேளையில் அது சற்று வரம்பு மீறிய துணிச்சல் கொண்டதாக இருந்தது. தாவீது ஒரு மாபெரும் அரசராக இருந்தார், ஆனால் தேவன் இன்னமும் தேவனாகவே இருந்தார்; அவருக்குத் "தயவு செய்ய" தாவீது தேவைப்படவில்லை.

8 முதல் 11அ வரையுள்ள வசனங்களில் தேவன், தாமே ஆசீர்வதிக்கும் ஒருவர் என்பதைத் தாவீதுக்கு நினைவூட்டினார். ஆடுகளை மேய்த்தல் என்ற தாழ்வான வேலையில் இருந்து தாவீதை எடுத்து இஸ்ரவேல் நாட்டின் அரியணையில் அமர்த்தியது அவர்தாம். தாவீதின் விரோதிகள் யாவரையும் தோற்கடித்து அவர்தாம், மற்றும் அவர் தமது மக்கள் இளைப்பாறவும் அவர்களுடைய விரோதிகள் இனியும் அவர்களைத் துன்புறுத்தாமல் பாதுகாக்கவும் ஒரு இடத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்தியது அவர்தாம்.

பின்பு 11ஆ வசனத்தில் நாம், உண்மையிலேயே திகைக்கச் செய்யும் பின்வரும் கூற்றைக் காணுகிறோம்: *"இப்போதும் கர்த்தர் உனக்கு வீட்டை உண்டுபண்ணுவார் என்பதைக் கர்த்தர் உனக்கு அறிவிக்கிறார்"* (என்னால் வலியுறுத்தப்படுகிறது). தேவனுக்காக ஒரு வீட்டைக் கட்டும்படி தாவீதை அனுமதிப்பதற்கு மாறாக, தாவீதுக்காக ஒரு வீட்டைக் கட்டப்போவதாகத் தேவன் வாக்குத்தத்தம் செய்தார். பின்தொடரும் வசனங்கள் தெளிவாக அறிவிக்கிறபடி, தேவன் உலகப்பிரகாரமான ஒரு இல்லிடத்தைப் பற்றிப் பேசவில்லை. அவர் தாவீதுக்கு ஒரு இராஜரீக வம்சத்தை, தாவீதின் மரணத்திற்குப் பின்பு ஆளுவதற்கு ஒரு சந்ததியை அவருக்கு அளித்தலைப் பற்றிப் பேசினார். பிரிட்டிஷ் மக்கள் "வின்ட்சரின் வீடு" என்று பேசும்போது குறிப்பிடுவது போன்று, இவ்விடத்தில் "வீடு" என்ற வார்த்தை ஒரு அரச வம்சத்தைக் குறிக்கிறது. தேவன் "தாவீதின் வீட்டைக்" கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்து கொண்டிருந்தார்.

தாவீதின் அரியணையை என்றென்றைக்கும் நிலைப்படுத்துதல்!

2 சாமுவேல் 7:12-16ல், உண்மையில் மூன்று வாக்குத்தத்தங்கள் உரைக்கப்பட்டுள்ளன: (1) தாவீதின் இடத்தில் ஆளுகை செய்ய ஒரு மகன்; (2) இந்த மகன் - தாவீது அல்ல ஆனால் இந்த மகனே - தேவனைக் கனப்படுத்த ஒரு வீட்டைக் கட்டுவார்; மற்றும் மிகவும் முக்கியமாக (3) "அவரது இராஜ்யத்தைத் தேவன் என்றென்றைக்கும் நிலைப்படுத்துவார்." இந்த உறுதி வாக்குகளுடன் தேவன், தாவீதின் மகனுக்குத் தாம் தகப்பனாக இருப்பதாக வாக்குத்தத்தம் செய்தார். அவரது பாவங்களுக்காக அவரைத் தேவன் சிட்சித்தாலும், அவர் தாவீதுக்கு முன்பு அரசாண்ட சவுலை விட்டுத் தமது அன்பை எடுத்துப் போட்டது போன்று, தாவீதின் மகனிடத்தில் இருந்து தமது நிலைவரமான அன்பை எடுத்துப் போடமாட்டார் (1 சாமுவேல் 15). தேவன், *"உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்"* என்று வாக்குத்தத்தம் செய்தார் (2 சாமுவேல் 7:16; என்னால் வலியுறுத்தப்படுகிறது). தாவீதின் நிலையில் உள்ள யாரேனும் ஒருவருக்கு இதைக்காட்டிலும் அதிகம் திருப்தி

தரும் வாக்குத்தத்தம் எதையும் ஏற்படுத்தி இருக்க இயலாது. இஸ்ரவேல் மக்களினம் நிறைவில் இளைப்பாறுதலைக் கொண்டிருக்கும் என்றும் தாவீதின் அரசவம்சம் என்றென்றைக்கும் தொடரும் என்றும் தேவன் தாவீதுக்கு உறுதி அளித்தார்! தாவீது மிகவும் ஆழ்ந்த வகையில் தம்மைப் தாழ்மைப்படுத்தி கர்த்தருடைய மறுப்பை ஏற்றுக்கொண்டு, நன்றியின் ஆழ்ந்த உணர்வுடன் அவரது ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொண்டார் என்பதை, இரண்டு சாமுவேல் 7:18-29 வசனப்பகுதி பதிவு செய்துள்ளது.

தாவீதுக்குத் தேவன் ஏற்படுத்திய வாக்குத்தத்தங்கள் மிக நெருக்கமான ஆய்வைச் சுமந்துள்ளன. பழைய ஏற்பாட்டின் மற்ற பல தீர்க்கதரிசனங்களைப் போன்றே, இவ்வசனப் பகுதியும், இது உரைக்கப்பட்ட காலத்தில் இருந்து அருகாமையில் ஒன்றும் தூரத்தில் ஒன்றுமாக, ஒரு இரட்டை நிறைவேற்றத்தைக் கொண்டுள்ளது. தாவீதின் மகனான சாலொமோன், தேவாலயத்தைக் கட்ட அனுமதிக்கப்பட்டார் என்பது அருகாமையில் இருந்த நிறைவேற்றமாகும் (1 இராஜாக்கள் 5-8). தேவன் சாலொமோனின் ஆளுகையினுடைய மகாப்பெரும் தன்மையை நிலைப்படுத்தினார். அதுபோன்றே 14ம் வசனம் உரைக்கிறபடி, சாலொமோன் தமது அந்நிய மனைவியர் பலரின் செல்வாக்கின் விளைவாக, கடைசியில் விக்கிரக ஆராதனையில் வீழ்ந்தபோது, தேவன் தாம் வாக்குத்தத்தம் செய்திருந்தபடியே அவரைத் தண்டித்தார் (1 இராஜாக்கள் 11). இந்த வாக்குத்தத்தங்கள் சாலொமோனின் ஆளுகையினூடேயும் அவருடன் தேவனுடைய செயல்கள் மூலமாகவும் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன என்பதைக் காணுதல் கடினமானதாக இருப்பதில்லை.

இருப்பினும் தாவீதின் அரியணை என்றென்றைக்கும் நிலைப்படுத்தப்படும் என்ற வாக்குத்தத்தம் சாலொமோன் மூலமாக நிறைவேற்றப்பட்டது என்று கூறுதல் கடினமாக இருக்கும். உண்மையில் இவ்வாறு இருக்கவில்லை என்பதைப் பழைய ஏற்பாடு செயல்விளக்கப்படுத்துகிறது. சாலொமோனின் காலத்திற்குப் பின்பு இராஜ்யம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது, அவற்றில் தெற்கு இராஜ்யம் மாத்திரமே (யூதா இராஜ்யம்) தாவீதின் வம்சாவழியில் வந்த அரசர்களைக் கொண்டிருந்தது. இந்த இராஜ்யமும்கூட, தேவனுக்கு எதிராக மக்களின் கலகம் மற்றும் பாபிலோனியப் பேரரசின் படையெடுப்பு ஆகியவற்றின் இணைவினால், கடைசியில் அழிக்கப்பட்டது. தாவீதில் இருந்து தோன்றிய அரசர்களின் வரிசையானது தற்காலிகமாக ஒரு முடிவுக்கு வந்தது. ஆகையால், 2 சாமுவேல் 7:13, 16ல் உள்ள “என்றென்றைக்கும்” என்ற வார்த்தையானது, சாலொமோனுக்கு அப்பால் வேறு யாரையோ சுட்டிக்காண்பிப்பதாக இருக்க வேண்டியதாயிற்று.

இந்த வாக்குத்தத்தத்தில் உள்ள மேசியாத்துவ நம்பிக்கை

மேசியாத்துவ நம்பிக்கை

2 சாமுவேல் 7ம் அதிகாரத்தில் தாவீதிற்குத் தேவனுடைய வாக்குத்தத்தமானது, வரவிருந்த ஒரு அரசரை, தமது மக்களை மீட்கும் ஒரு மேசியாவை (நேரடி அர்த்தத்தில் “அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர்”)

பற்றிய இஸ்ரவேல் மக்களின் எதிர்பார்ப்பிற்கு அடிப்படையை வடிவமைத்தது. இஸ்ரவேல் நாடு, அடுத்தடுத்து வந்த விரோதிகளால் தோற்கடிக்கப்பட்ட வேளையில் விடுதலையாளர் பற்றிய இந்த நம்பிக்கை வளர்ந்தது. குறிப்பாகப் பாபிலோனின் படையெடுப்பு மற்றும் அரசத்துவம் கலைக்கப்படுதல் ஆகியவற்றைத் தொடர்ந்து, "இஸ்ரவேல் நாட்டின் நல்வாய்ப்புக்களை மீளக்கட்டுவிக்க" (எரேமியா 33:7) யாரேனும் ஒருவர் வரவேண்டும் என்ற ஏக்கமானது யூதத்துவ அரசியல் மற்றும் மார்க்கரீதியான நம்பிக்கையின் நிலையான ஒரு பாகமாயிற்று.

இந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் யூத மக்கள், வரவிருந்த தங்கள் மேசியாவை, ஒரு "புதிய தாவீது," அதாவது இஸ்ரவேலுக்கு அதன் விரோதிகளிடத்தில் இருந்து இளைப்பாறுதலை அளிக்கத் தாவீதைப் போன்ற இன்னொரு யுத்தவீரர்/அரசர் என்ற வகையில் நினைத்தனர். இந்த மேசியா, ஒருக்காலும் முடிவு பெறாத அரசாட்சியைக் கொண்ட "தாவீதின் மகனாக" இருப்பார். பின்வருவன போன்ற எண்ணற்ற பழைய ஏற்பாட்டு வேதவசனப்பகுதிகளில் இந்த நம்பிக்கை தெளிவாக்கப்பட்டுள்ளது:

> இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே (ஏரேமியா 23:5, 6).

> அந்நாளில் நான் அவன் நுகத்தை உன் கழுத்தின்மேல் இராதபடிக்கு உடைத்து, உன் கட்டுகளை அறுப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அந்நியர் இனி அடிமை கொள்வதில்லை. தங்கள் தேவனாகிய கர்த்தரையும், நான் தங்களுக்கு எழுப்பப்போகிற தங்கள் ராஜாவாகிய தாவீதையுமே சேவிப்பார்கள் (ஏரேமியா 30:8, 9).

> நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும் (ஏசாயா 9:6, 7).

> என் தாசனாகிய தாவீது என்பவர் அவர்கள்மேல் ராஜாவாக இருப்பார்; அவர்கள் எல்லாருக்கும் ஒரே மேய்ப்பர் இருப்பார்; அப்பொழுது அவர்கள் என் நியாயங்களில் நடந்து, என் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படியே செய்து, நான் என் தாசனாகிய யாக்கோபுக்குக்

கொடுத்ததும், உங்கள் பிதாக்கள் குடியிருந்ததுமான தேசத்திலே குடியிருப்பார்கள், அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகளும் அதிலே என்றென்றைக்கும் குடியிருப்பார்கள்; என் தாசனாகிய தாவீது என்பவர் என்றென்றைக்கும் அவர்களுக்கு அதிபதியாயிருப்பார் (ஏசாயா 37:24, 25).

மேசியா ஒரு "இரண்டாவது தாவீதாக" இருக்க வேண்டியது ஏன்? என்று நாம் ஆச்சரியப்படலாம். அவர் ஒரு "இரண்டாவது மோசேயாக," ஒரு "புதிய ஆபிரகாமாக," அல்லது இன்னொரு நோவாவாக அல்லது தானியேலாக ஏன் இருக்கக் கூடாது? தேவன் தாவீதுக்கு ஒரு வாக்குத்தத்தத்தை ஏற்படுத்தியிருந்தார் என்பது முதன்மைக் காரணமாக உள்ளது. மேலும் தாவீதின் வாழ்வானது பல அம்சங்களில், இயேசு அனுபவிக்க வேண்டிய வாழ்வை முன்நிழலிட்டது. தாவீது ஒரு மேய்ப்பராகவும் அரசராகவும் இருந்தார், மற்றும் அதுபோன்றே, இயேசு தம்மைப் பின்பற்றுபவர்கள் மீது ஒரு மேய்ப்பராகவும் அரசராகவும் இருக்கிறார் என்று புதிய ஏற்பாடு அறிவிக்கிறது (உதாரணத்திற்கு, மத்தேயு 2:2; 27:37; யோவான் 10:11-18; 1 பேதுரு 5:1-4; வெளிப்படுத்தின விசேஷம் 17:14; 19:16 ஆகிய வசனப்பகுதியைக் காணவும்). இத்துடன் கூடுதலாக, தாவீதின் பாடுகள் இயேசுவின் பாடுகளை முன்நிழலிட்டன. தாவீது இஸ்ரவேலை ஆள்பவராக ஆவதற்கு முன்னர், அவரது வெற்றியைக் குறித்துப் பொறாமை கொண்ட சவுல் அரசரால் துன்புறுத்தப்பட்டார் (காண்க 1 சாமுவேல் 18:28, 29). பல ஆண்டுகளுக்குப் பின்பு அவர், மக்களின் பலரது தயவைப் பெற்று தனது தந்தைக்கு எதிராகக் கலகம் செய்த தமது சொந்த மகனான அப்சலோம் என்பவரால், அரசபதவியிலிருந்து ஏறக்குறைய நீக்கப்பட்டார் (2 சாமுவேல் 15:10-12). இவ்விரு விஷயங்களிலும் தாவீது தப்பியோடும்படியும், அரசால் தேடப்படும் நபரின் வாழ்வை வாழும்படியும் நிர்ப்பந்திக்கப்பட்டார், அவரது வாழ்வு எப்போதும் ஆபத்திலேயே இருந்தது (1 சாமுவேல் 19:10-12; 2 சாமுவேல் 15:14; காண்க சங்கீதம் 54). தாவீதின் பாடுகள் மற்றும் நமது கர்த்தரின் பாடுகள் ஆகியவற்றிற்கு இடையிலான இணைவுகள், சங்கீதம் 22ல் மிகவும் விரிவாகக் கொண்டுவரப்படுகின்றன, இதன் முதல் வசனத்தை இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது உரைத்தார். சங்கீதம் மற்றும் இயேசுவின் அனுபவம் ஆகியவற்றிற்கு இடையில் நாம் குறிப்பிடத்தக்க பல இணைவுகளைக் காணுகிறோம்: தேவனால் கைவிடப்பட்டதாக உணருதல், அருகில் இருப்பவர்களின் கேலி செய்யும் அவமானப்படுத்துதல்கள், முழுமையான பலவீனம் மற்றும் இளைப்படைதல் மற்றும் அவர்களின் உடைக்காகப் பிறர் சீட்டுப்போடுதல் என்பதும் கூட இதில் உள்ளடங்கி இருக்கிறது.

மேசியாத்துவ நம்பிக்கை நிறைவேற்றப்படுதல்

புதிய ஏற்பாடு எழுத்தாளர்கள், இயேசுவை "தாவீதின் மகன்" என்று அடையாளப்படுத்துவதில் வெளிப்படையாக இருந்தனர். பார்வையற்ற பர்திமேயு சரியானவராகவே இருந்தார்! இதனால்தான் இயேசு, மிகவும் அடிக்கடி "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று அர்த்தப்படும் வகையில், "கிறிஸ்து" (*christos*, இது "மேசியா" என்பதற்குச் சமமானதாக உள்ளது) என்று அழைக்கப்பட்டார்.

இயேசுவின் மேசியாத்துவம்/அரசத்துவம் என்பதைப் பற்றிய ஆய்வுக்கருத்து எண்ணற்ற வழிகளில் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. உதாரணமாக, இயேசுவை இஸ்ரவேல் மக்கள் நீண்ட காலம் எதிர்பார்த்துக் காத்திருந்த அரசராக முன்னிறுத்துதல் என்பது மத்தேயு சுவிசேஷத்தின் இலக்காக உள்ளது. இது, இந்த சுவிசேஷ விபரம், "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு": என்று தொடங்குவது ஏன் என்பதை விளக்கப்படுத்துகிறது. முதலாவதாக இயேசு, "கிறிஸ்து" என்றும், பின்பு அவர் தாவீதின் "மகன்" என்றும் அடையாளப்படுத்தப்படுகிறார் (இது 2 சாமுவேல் 7 மற்றும் அதன் வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றிற்கு நன்கு பழக்கப்பட்ட யூதர்களால் தவறவிடப்படாத ஒரு கருத்தாகும்). அடுத்ததாக இந்தப் புத்தகம், அவர் தாவீதின் சந்ததியில் வந்தவர் என்பதை உரிமைகோருதலை நிரூபிக்க அவரது வம்சாவழியைக் கொடுக்கிறது. லூக்கா 2:4, 5 வசனப் பகுதியும், யோசேப்பு "தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்த" காரணத்தாலும், அவர் ஜனத்தொகை கணக்கெடுப்புக்காகவும் வரிசெலுத்துவதற்காகவும் தமது முன்னோர்களின் இல்லத்திற்குச் சென்று அறிக்கை தர வேண்டியிருந்த காரணத்தாலும், இயேசு தமது சொந்த ஊரான நாசரேத்தில் அல்ல, ஆனால் பெத்லகேமில் தான் பிறந்தார் என்று விளக்குகிறது. இது வரலாற்றில் ஏற்பட்ட தற்செயலான நிகழ்வாக இருக்கவில்லை; "தாவீதின் நகரமான" பெத்லகேமில் இயேசு பிறக்க வேண்டி இருந்தது.

யோவான், தாம் எழுதிய சுவிசேஷத்தின் இலக்காகப் பின்வரும் கருத்தைக் குறிப்பிட்டார்: "... இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும் ..." (யோவான் 20:30, 31). இயேசு தமது சீஷர்களிடத்தில், "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டபோது, இயேசுவைப் பற்றிய பிற கருத்துகளுக்கு நேர் எதிராகப் பேதுரு பின்வருமாறு பதில் அளித்தார்: "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து." பேதுருவுக்கு இது தேவனாலேயே வெளிப்படுத்தப்பட்டது என்று கூறிய இயேசு, இந்த அறிக்கைக்காக அவரை (பேதுருவை)ப் பாராட்டினார் (மத்தேயு 16:15-17), புதிய ஏற்பாட்டின் முடிவுப் பகுதியில், வெளிப்படுத்தின விசேஷம் 19:16ம் வசனம், இயேசுவை "ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா" என்று அறிவிக்கிறது. அவர் இஸ்ரவேல் மக்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் மனிதகுலம் முழுமைக்கும் நிறைவான அரசராக இருக்கிறார்.

புறக்கணிக்கப்பட்ட வாக்குத்தத்தம்

இயேசுவின் நாட்களில் இருந்த பெரும்பான்மையான யூத மக்களால், மேசியா என்ற வகையில் அவர் புறக்கணிக்கப்பட்டது ஏன்? தீர்க்கதரிசனங்கள் மிகவும் தெளிவாக இருந்து, அவற்றை இயேசு மிகவும் தெளிவாக நிறைவேற்றினார் என்றால், இதை அவர்களால் தவற விடமுடிந்தது எப்படி?

மேசியாவைப் பற்றிப் பல நூற்றாண்டுகளாக எழுந்திருந்த பிரபலமான எதிர்பார்ப்புக்களை இயேசு நிறைவேற்றவில்லை என்பதே இதற்குப் பதிலாக உள்ளது. மேசியா எப்படி இருப்பார் மற்றும் என்ன செய்வார் என்பது பற்றி மக்கள் வித்தியாசப்பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர், மற்றும் "மேசியாத்துவ விஷயங்கள்" என்று எதிர்பார்க்கப் பட்டவற்றைச் செய்யாதவர்,

மேசியாத்துவத்திற்கான வேட்பாளராக இருக்கும் நிலையில் இருந்து புறம்பே தள்ளப்பட்டார்.

இயேசு வாழ்ந்திருந்த முதல் நூற்றாண்டு உலகத்தில் யூதர்கள், கி.மு.. 63ல் இருந்து பலஸ்தீன நாட்டைக் கட்டுப்படுத்தி இருந்த ரோமஅடக்குமுறையாளர்களைத் தோல்வியடையச் செய்து “இஸ்ரவேலின் முன்பிருந்த நிலைக்கு அதை மீளக்கட்டுபவராக” மேசியா இருப்பார் என்று நினைத்தனர். அவர் (தாவீதைப் போன்று) ஒரு யுத்த வீரராக/அரசராக இருப்பார் என்றும் அவர் தங்களின் விரோதிகளுக்கு எதிரான யுத்தத்தில் தங்களை வெற்றிகரமாக நடத்த ஒரு இராணுவத்தை எழுப்புவார் என்றும் அவர்கள் நம்பினர். அதற்குப் பதிலாக இயேசு, சமாதானத்தையும் ஒருவர் தமது விரோதிகள் மீது காண்பிக்க வேண்டிய அன்பையும் பற்றிப் பிரசங்கிக்க வந்தார் - இது உலகத்தின் மாபெரும் பேரரசிற்கு எதிராக முழுமையான அளவில் கலகம் செய்யும் ஒரு தலைவரிடம் எவரொருவரும் அரிதாகவே எதிர்பார்க்கும் விஷயமாக இருந்தது!

பின்பு, இயேசு சிலுவையில் அறையப்பட்டது பற்றிய பிரச்சனை இருந்தது. மேசியாவாக இருப்பவர் இஸ்ரவேல் நாட்டின் விரோதிகளால் கொலை செய்யப்படுவார் என்பதை யூத மனம் ஏற்றுக் கொள்ளக் கூடாதிருந்தது, அவர் ரோமர்களின் சிலுவையில் சிறுமையான மரணத்திற்குத் தம்மை ஒப்புக் கொடுப்பார் என்பது மிகவும் தாழ்ந்த விஷயமாக இருந்தது. இயேசுவின் கலிலேய ஊழியத்தின் தொடக்க நாட்களில் அவரைப் பின்பற்றிய திரளான கூட்டமானது, அவரது மேசியாத்துவம் ரோமாபுரி மீது வெற்றிக்கு அல்ல, ஆனால் சிலுவைக்கு வழிநடத்தியது என்று கண்டபோது, அவரை விட்டுச் செல் வதற்கு இதுவே சந்தேகத்திற்கு இடமின்றி காரணமாக இருந்தது.

இயேசுவுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர்கள்கூட இதை ஏற்றுக்கொள்வதைக் கடினமாகக் கண்டனர். இயேசு, தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட அபிஷேகம் பெற்றவர் என்று முதலில் அடையாளம் கண்டு கொண்டிருந்த யோவான் ஸ்நானன் (மத்தேயு 3:13-15; யோவான் 1:19-34; 3:25-30), பிற்பாடு, இயேசுதாம் எதிர்பார்க்கப்பட்டிருந்தவரா அல்லது வேறு யாரேனும்வர காத்திருக்க வேண்டுமா என்று கேள்வி எழுப்பினார் (மத்தேயு 11:2-6). யோவான் ஏரோது அரசரின் சிறையில் தளர்ச்சியடைந்து ஏங்கிக் கொண்டு, மேசியா எழுப்பப்பட்டு இருந்தார் என்றும் அவர் இஸ்ரவேல் நாட்டைப் புதுப்பிக்கத் தொடங்கிவிட்டார் என்றும் கேள்விப்படக் காத்துக் கொண்டிருந்தார் - ஆனால் இராணுவநடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டிருந்த மேசியாத்துவ நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தன என்பதை அவருக்கு இயேசு சுட்டிக்காண்பித்தார்.

இயேசுவின் சொந்த சீஷர்களே அவரது மேசியாத்துவத்தைப் புரிந்து கொள்வதில் சிரமம் கொண்டிருந்தனர். அவர் தமது ராஜ்யத்தில் வந்து ஆளுகை செய்யும்போது, யாக்கோபும் யோவானும் அவரது வலது மற்றும் இடது புறங்களில் அமர அனுமதிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளுக்குப் பின்னால், இராஜரீக இராணுவத்துவ ஆட்சியாளர் பற்றிய எதிர்பார்ப்பு இருந்தது என்பது உறுதி (மாற்கு 10:34-40; மத்தேயு 20:20-23). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள் புதிய நிர்வாகத்தில் உயர்ந்த தலைவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பினர். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பும்கூட,

அவரிடத்தில் அப்போஸ்தலர்கள், "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?" என்று கேட்டனர் என்பதை நடபடிகள் 1:6 வசனம் பதிவு செய்துள்ளது. எனவே, இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்கள், அவரது மேசியாத்துவத்தின் இயல்பைப் புரிந்து கொள்ளவும் அவர் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டவர் என்பதை ஒப்புக் கொள்ளவும் தவறியதில் சிறிதளவே ஆச்சரியம் உள்ளது. அவரே நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருந்த மேசியா என்பதைக் கேள்வியின்றி செயல்விளக்கப்படுத்தும் வகையில் அவர் காட்சிப்படுத்திய "அடையாளங்களை" அவர்கள் எண்ணவில்லை என்பதே அவர்களின் தவறாக இருந்தது (யோவான் 10:22-30).

உண்மை நிலையில் இயேசு, "தாவீதின் மகனாக" மாத்திரம் இருத்தலைவிட அதிகமானவராக இருந்தார் என்பது, பெரும்பான்மையானவர்கள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொள்ளாது போனதற்கு இரண்டாவது காரணமாக இருந்தது. மத்தேயு 22:41-46ல், இயேசு "கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவன் யாருடைய குமாரன்?" என்று கேட்டதன் மூலம் இந்தக் கருத்தைப் பரிசேயர்களிடத்தில் (இவர்கள் அவருக்கு மிகவும் தீவிரமான எதிராளிகளாக இருந்தனர்) நேரடியாகவே எடுத்துரைத்தார். அவர்கள், "அவர் தாவீதின் குமாரன்" என்று பதில் அளித்தபோது, இயேசு அவர்களுக்கு, தாவீது மேசியாவை "என் ஆண்டவர்" என்று அழைத்திருந்த, சங்கீதம் 110:1ஐச் சுட்டிக்காண்பித்தார். "தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி? என்றார்." இதற்கு அவர்கள் பதில் எதுவும் தரவில்லை. இயேசு தமது சொந்தமான, தாவீதின் குமாரத்துவத்தை மறுக்கவில்லை, ஆனால் அவர் தாவீதைவிடப் பெரியவராக இருந்ததால், இந்தப் பட்டப்பெயர் மாத்திரம் போதுமானதாக இருக்கவில்லை என்பதையே அவர் காண்பித்தார். இது, தேவன் தாவீதுக்கு, இஸ்ரவேல் நாட்டின் அரியணையின்மீது அமர இருந்த, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட "மகன், என் மகனாக இருப்பார்" என்று கூறியபோது முன்னுரைக்கப் பட்டது (1 நாளாகமம் 17:13; 22:10). இயேசு, தாவீதின் மகனாக மாத்திரம் இருக்கவில்லை; அவர் தேவனுடைய மகனாகவும் இருந்தார். பூமிக்குரிய வகையில் வெறும் ஆளுமைத்துவம் என்பதைக் காட்டிலும் அவரது ஊழியம் மிகவும் அதிகமானதாக இருந்தது - ஆனால் துரதிர்ஷ்டவசமாக இதுதான் (பூமிக்குரிய ஆளுகைதான்) யூத மக்களால் விரும்பப்பட்டதாக அல்லது எதிர்பார்க்கப்பட்டதாக இருந்தது.

தேவன் தாவீதுக்கு, அருகாமையில் இருந்த எதிர்காலம் மற்றும் மிகவும் தூரத்தில் இருந்த எதிர்காலம் ஆகியவற்றைப் பற்றி ஒரு இரட்டை வாக்குத்தத்தம் ஏற்படுத்தினார்: அவரது அரியணையில் அமருவதற்கு ஒரு மகன், மற்றும் அவரது சந்ததி என்ற வகையில் அவருடைய மகனாக மாத்திரமின்றி. தேவனுடைய குமாரனாகவும் இருக்கும் ஒரு மகன். சாலொமோன் அரசர் தமது தந்தைக்குப் பின்பு இஸ்ரவேல் நாட்டின் அரியணையில் அமர்ந்து, இவற்றில் முதலாவது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார். மேசியாவாகிய இயேசு கடைசியும் நிறைவுமான நிறைவேற்றத்தை அளித்தார், மற்றும் அவர் இன்னமும் "தாவீதின் அரியணைமீது அமர்ந்திருக்கிறார்!"

இன்றைய நாட்களுக்கான வாக்குத்தத்தம்

2 சாமுவேல் 7:5-16 வசனங்களில் தேவன் குறிப்பாகத் தாவீதுக்குப் பேசியிருந்தாலும், வேதாகம வரலாற்றில் அச்சாணி போன்றுள்ள இந்த நிகழ்வில் இருந்து இன்றைய நாட்களில் உள்ள கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது இன்னும் அதிகமாக உள்ளது:

முதலாவது, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மனிதரீதியான முழுமைத்துவத்தைச் சார்ந்து இருப்பதில்லை. தாவீதுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தம் நிபந்தனையற்றதாக இருந்தது. தாவீது மிகக் கொடிய பாவங்கள் சிலவற்றைப் பிற்பாடு செய்திருந்தாலும், அவரிடத்தில் தேவன் தமது வார்த்தையை காப்பாற்றினார். நாம் நமது சொந்தத் தோல்விகளையும் சபையின் தோல்விகளையும் கண்ணோக்குகையில் அடிக்கடி பெரிதும் வருத்தம் அடைகிறோம், ஆனால் நாம் அவ்வாறு வருத்தம் அடையக் கூடாது. தேவன் தமது வாக்குத்தத்தங்கள் யாவற்றையும் நிறைவேற்றுவார்: இயேசு இன்னும் அரியணை மீது இருக்கிறார், மற்றும் அவரது மக்களின் இரட்சிப்பு நிச்சயமானதாகவே நிலைத்துள்ளது.

இரண்டாவது, எவ்வளவு நாட்கள் ஆனாலும் சரி, தேவன் தமது திட்டங்களை நிறைவேற்றுவார். தாவீதில் இருந்து இயேசு காலம் வர ஒரு ஆயிரம் ஆண்டுகள் ஆயிற்று - ஆனால் எப்படி இருந்தபோதிலும் மேசியா வந்தார். அதுபோன்றே, இயேசு வந்த பின்பு இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்திருந்தபோதிலும், அவர் திரும்பவும் வருவார் என்று வேதவாக்கியங்கள் நமக்கு வாக்களிக்கின்றன. தேவன் நமது கால அட்டவணையின்படி பணிசெய்வதில்லை என்பதால் நாம் ஒருக்காலும் நம்பிக்கை இழந்து போய்விடக்கூடாது. மாறாக நாம், அவரது நோக்கங்கள் நிறைவேற்றப்படும்படி விசுவாசத்துடன் காத்திருப்பது அவசியமாக உள்ளது. நாம் அவர் மீது நம்பிக்கையாக இருந்து புறம்பே திரும்பாதிருந்தால், நாம் நிச்சயமாகவே ஆசீர்வதிக்கப்படுவோம்.

மூன்றாவது, இயேசுவைப் பற்றிய அரைகுறையான சத்தியங்களை ஏற்றுக்கொள்ளுதல் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இயேசுவை “தாவீதின் குமாரனே” என்று அழைத்தபோது பர்திமேயு சரியானவராகவே இருந்தார், இருப்பினும் அவர் கூறியது சத்தியத்தின் ஒரு பகுதியாக மாத்திரமே இருந்தது. இன்றைய நாட்களில் இயேசு அடிக்கடி, ஒரு மாபெரும் மனிதராக, ஒரு தீர்க்கதரிசியாக அல்லது “ஒரே மீட்பராக” அல்ல ஆனால் “ஒரு மீட்பராக” தயாளமாய் ஒப்புக்கொள்ளப்படுகிறார். இயேசுவே கிறிஸ்து/மேசியா மற்றும் தேவனுடைய மகன் என்ற முழுமையான அறிக்கையைக் காட்டிலும் குறைவான எதுவும் போதுமற்றதாக உள்ளது.

நான்காவது, நாம் செய்யக்கூடிய எதுவும் தேவன் நமக்காகச் செய்துள்ளவற்றிற்கு ஈடாகாது. தாவீது தேவனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டியெழுப்ப விரும்பினார். தேவன் தாமே உண்மையில் கொடுப்பவர் மற்றும் தமக்கு ஏதொன்றும் அளிக்கப்படத் தேவையில்லை என்பதை அவருக்கு நினைவூட்டினார். தேவன் தாவீதிற்கு, அவர் எதிர்பார்த்த அல்லது விரும்பிய எல்லாவற்றிற்கும் அதிகமாகவே அளித்திருந்தார். அதுபோன்றே நாம், நமது நன்மையான செயல்கள் அல்லது ஆவிக்குரிய சாதனைகள் ஆகியவற்றினால்

அவரது பார்வையில் ஏற்புடையதாக உள்ள வாழ்வைத் தேவனுக்கு அளிக்க முடியும் என்று நாம் நினைக்கும் போது, நம்மையே வஞ்சித்துக் கொள்பவர்களாக இருக்கிறோம். அதற்குப் பதிலாக நாம், பிற்பாடு காண இருக்கிறபடி, நமக்காக நாமே ஒருக்காலும் செய்ய இயலாது இருப்பவற்றைத் தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலமாக நமக்காக நிறைவேற்றியுள்ளார். நாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அழைக்கப்பட்டிருக்கிறோம்; ஆனால் நாம் அவ்வாறு செய்கையில், மேசியாவாகிய இயேசு மூலமாகத் தேவன் நமக்கு நிறைவேற்றி உள்ள யாவற்றுடனும் ஒப்பிடுகையில், "(நம்முடைய) நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது" என்பதை (ஏசாயா 64:6) நாம் நினைவில் வைக்க வேண்டும். பார்வையற்ற பர்திமேயு போல, நாம் அவரை "எங்கள் மீது இரக்கமாயிரும்!" என்று மாத்திரம் அழைக்க முடியும் - மற்றும் இயேசுவின் மூலமாக அதையே செய்வதாக அவர் வாக்குத்தத்தம் செய்கிறார்.

தேவாலயத்தைக் கட்டத் தாவீது தகுதியற்றவராக இருந்தது ஏன்?

தேவாலயத்தைக் கட்ட வேண்டும் என்று தாவீது நினைத்ததில், அவர் வரம்புமீறிய துணிச்சல் கொண்டிருந்தார் என்ற கருத்தைத் தவிர, தேவாலயத்தைக் கட்டத் தாவீதுக்குத் தேவன் அனுமதி மறுத்தமைக்கான காரணம், 2 சாமுவேல் 7 அல்லது 1 நாளாகமம் 17ல் அதன் இணைவசனப் பகுதி ஆகியவற்றில் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் 1 இராஜாக்கள் 5:3 மற்றும் 1 நாளாகமம் 22:8; 28:3 ஆகியவற்றில் ஒரு காரணம் தரப்படுகிறது: தாவீது அடிப்படையில் ஒரு யுத்த மனிதராக இருந்து அதிகமான இரத்தத்தைச் சிந்தியிருந்தார்.

இது அவரைத் தேவாலயம் கட்டத் தகுதியற்றவராக்கியது ஏன்? இரு பதில்கள் சாத்தியமானவையாக உள்ளன. முதலாவது பதில் 1 இராஜாக்கள் 5:3ல் இருந்து வருகிறது, அங்கு சாலொமோன், யுத்தச் செயல்கள் தாவீதை ஒரு தேவாலயம் கட்ட இயலாத அளவுக்கு பணிமும்முரமானவராகச் செய்திருந்தது என்று கருத்துத் தெரிவித்தார். இருப்பினும் இது முதன்மைக் காரணமாக இருக்கக் சாத்தியமற்று உள்ளது, ஏனெனில் 2 சாமுவேல் 7:1ம் வசனம், தேவாலயம் கட்ட வேண்டும் என்ற தாவீதின் விருப்பம், "கர்த்தர் ராஜாவைச் சுற்றிலுமிருந்த அவனுடைய எல்லாச் சத்துருக்களுக்கும் அவனை நீங்கலாக்கி, இளைப்பாறப்பண்ணினபோது" வந்தது என்று கூறுகிறது. மிகவும் சாத்தியமான காரணம் 1 நாளாகமம் 22:8ல் காணப்படுகிறது: "நீ திரளான இரத்தத்தைச் சிந்தி, பெரிய யுத்தங்களைப் பண்ணினாய்; நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்ட வேண்டாம்; எனக்கு முன்பாக மிகுதியான இரத்தத்தைத் தரையிலே சிந்தப்பண்ணினாய்'' (காண்க 1 நாளாகமம் 28:3). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தாவீது அதிகமான இரத்தத்தைச் சிந்தியதானது அவரை, தேவாலயம் கட்டும் பணிப்பொறுப்பைச் செய்வதில் ஏதோ ஒரு வகையில் அவரை "அசுத்தமானவராக" ஆக்கியிருந்தது. (இரத்தம் மற்றும் அதனுடன் இணைந்த சடங்காச்சாரமான அசுத்தம் ஆகியவற்றின் ஒழுங்கு முறைகள் சிலவற்றை லேவியராகமம் 17ல் காண்க.) அவரது மகன் சாலொமோன் இந்த பிரச்சனையைக் கொண்டிருக்கவில்லை, ஏனெனில் அவரது தொடக்க கால ஆட்சியானது சமாதானம் மற்றும் வளமை ஆகியவற்றின் காலமாக இருந்தது

(1 இராஜாக்கள் 5:4). சாலொமோன் பின்வருமாறு அறிவித்தார்:

> *ஆகையால்: நான் உன் ஸ்தானத்தில் உன் சிங்காசனத்தின்மேல் வைக்கும் உன் குமாரனே என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான் என்று கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதினிடத்தில் சொன்னபடியே, என் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று இருக்கிறேன் (1 இராஜாக்கள் 5:5).*

6

பாடுபடும் ஊழியக்காரர்

(ஏசாயா 53)

நடபடிகள் 8ம் அதிகாரம், பிலிப்பு என்ற பெயர்கொண்ட ஒரு சுவிசேஷ ஊழியருக்கும், எருசலேம் நகரில் தேவனை ஆராதித்த பின்பு தமது இல்லம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த எத்தியோப்பிய மந்திரிக்கும் இடையிலான ஒரு சந்திப்பைப் பற்றிப் பதிவு செய்துள்ளது. அந்த மந்திரி, ஆராதிப்பதற்கு எருசலேம் சென்றிருந்தார் என்பதால், அவர் யூத மார்க்கத்து அமைந்தவராக இருந்திருக்கலாம். அவர், இஸ்ரவேல் மக்களின் தேவனை ஆராதித்து ஜெப ஆலய வாழ்வில் பங்கேற்றிருந்த, ஆனால் விருத்தசேதனம் பெறாது நிலைத்திருந்த காரணத்தினால் முழுமையும் மனம் மாறாதவர்களாக இருந்த, "தேவனுக்குப் பயந்தவர்கள்" என்று குறிப்பிடப்பட்டவர்களில் ஒருவராக இருந்திருக்கலாம் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது (காண்க நடபடிகள் 10:1, 2; 13:26). ஆகவே, புறஜாதியைச் சேர்ந்த இவர், எபிரெய தீர்க்கதரிசிகளில் ஒருவரான ஏசாயா எழுதிய புத்தகத்திலிருந்து சில பகுதிகளை வாசித்துக் கொண்டிருந்ததில் வியப்பு எதுவும் இல்லை. அவர் வாசித்துக் கொண்டிருந்த, ஏசாயா 53:7, 8 என்ற வசனப்பகுதி கூட மிகச்சரியாக நமக்குக் கூறப்படுகிறது:

> *அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார்,*
> *ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை;*
> *அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும்,*
> *தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும்,*
> *அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.*
> *இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்;*
> *அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்;*
> *ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்;*
> *என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.*

இரதத்தில் இருந்த இந்த எத்தியோப்பிய மந்திரியைப் பிலிப்பு அணுகி, அவர் வாசித்துக் கொண்டிருந்ததைப் புரிந்து கொள்ள அவருக்கு உதவியளிப்பதாகக் கூறியபோது, முதலில் அந்த மனிதர், "தீர்க்கதரிசி யாரைக்குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார் (நடபடிகள் 8:34). பின்பு பிலிப்பு இந்த வசனப்பகுதியைக் கொண்டு தொடங்கி "இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தார்" என்று வேதாகமம் பதிவு செய்துள்ளது (நடபடிகள் 8:35).

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி ஒருவர், இயேசு பிறப்பதற்கு எண்ணூறு ஆண்டுகள் முற்பட்ட காலத்தில், இயேசுவைக் குறித்தும் அவரது மரணத்தைக் குறித்தும் எவ்வாறு எழுத முடிந்தது? 53ம் வசனத்தை நெருக்கமாகக் கண்ணோக்குதல் இதைப் பற்றி நமக்குக் கூறும்.

தீர்க்கதரிசனத்தின் அமைவு

தாவீதின் மரணத்தைத் தொடர்ந்து, அவரது மகனான சாலொமோனுடைய கைகளுக்குள், இஸ்ரவேல் நாட்டின் அரியணை சென்று சேர்ந்தது (1 இராஜாக்கள் 1; 2). இந்தக் காலக்கட்டத்தின் போது, இஸ்ரவேல் நாடு இன்னும் அதிகம் வளம்கொண்ட மற்றும் வல்லமைநிறைந்த நாடாயிற்று, இருந்த போதிலும், சாலொமோனின் ஆளுகையினுடைய முடிவின் போது, விக்கிரக ஆராதனையைச் சாலொமோன் சகித்துக்கொண்டது (மற்றும் அதை ஊக்குவித்ததும்கூட) என்பவற்றின் காரணமாக, இஸ்ரவேல் நாட்டிற்கு எதிராக விரோதிகள் எழும்புவதைத் தேவன் அனுமதித்தார் (1 இராஜாக்கள் 11). சாலொமோனுடைய மரணத்திற்குப் பின்பு, அவரது மகன் ரெகொபெயாம் அரசாட்சியை மேற்கொண்டார், ஆனால் அவர் ஞானமற்ற வகையில் இராஜ்யத்திற்குள் பூசல் ஒன்றை விரைவிலேயே நிகழச் செய்தார். இது நாடானது வடக்கு இராஜ்யம் மற்றும் தெற்கு இராஜ்யம் என்று பிரிவதை விளைவித்தது, இவை ஒவ்வொன்றும் தங்களின் சொந்த அரசர்களின் வம்சாவழியைக் கொண்டிருந்தன. (தெற்கு இராஜ்யத்தின் அரசர்கள் மாத்திரமே தாவீதின் வம்சாவழியில் வந்தவர்களாய் இருந்தனர்.) வடக்கு இராஜ்யம் பொதுவாக "இஸ்ரவேல்" என்றும் தெற்கு இராஜ்யம் "யூதா" என்றும் அழைக்கப்பட்டன, ஏனெனில் தெற்கு இராஜ்யத்தில் முதன்மையாக யூதா கோத்திரத்தாரும் மற்றும் மிகவும் சிறிய கோத்திரமான பென்யமீன் கோத்திரத்தாரும் இருந்தனர். இரு அரசுகளுமே தேவனுடைய பிரமாணத்தைக் கைவிட்டு, அந்நிய தேவர்களிடமாகத் திரும்பிக் குற்றப் பட்டிருந்தன மற்றும் தேவன், அவர்கள் தங்கள் வழிகளை மாற்றிக்கொள்ளாதிருந்தால், அவர்கள் மீது வரவிருந்த பேரழிவைப் பற்றி அவர்களை எச்சரிப்பதற்குத் திரும்பத் திரும்பத் தீர்க்கதரிசிகளை அனுப்பினார்.

ஏசாயா, கி.மு. எட்டாவது நூற்றாண்டின் பிற்பாதியில், யூதா மற்றும் எருசலேமில் இருந்த மக்களுக்குத் தேவனுடைய செய்தியை அறிவித்தார் (ஏசாயா 1:1), இது தாவீதின் ஆட்சிக் காலத்திலிருந்து, ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னால் நடந்ததாகும். இது இஸ்ரவேல் வரலாற்றில் பதற்றமான காலமாக இருந்தது: கி.மு. 722/721ல் வடக்கு இராஜ்யத்தை (இஸ்ரவேலை) அசீரியா கைப்பற்றி இருந்தது. தெற்கு இராஜ்யத்தின் (யூதாவின்) எதிர்காலம் இப்போது நிச்சயமற்றதாகக் காணப்பட்டது.

ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகத்தின் முதல் முப்பத்து ஒன்பது அதிகாரங்கள், யூதா தேசத்தார் தேவனுடைய பிரமாணத்தைப் புறக்கணித்த காரணத்தினால் அவர்கள்மீது அவர் கொண்டுவரத் திட்டமிட்டிருந்த நியாயத்தீர்ப்பைப் பற்றிய கருத்துக்கள் முதன்மையாக உள்ளன. கி.மு. 586ல் பாபிலோனியர்கள் எருசலேமை மிதித்து, சாலொமோன் அரசரால் கட்டப்பட்ட தேவாலயத்தை அழித்து, பெருந்தொகையான இஸ்ரவேல் மக்களை அவர்களின் தாய் நாட்டில் இருந்து பாபிலோனுக்கும் மற்ற இடங்களுக்கும் கூட்டிச் சென்றபோது அந்த

அழிவின் உச்சநிலை நடைபெற்றது.

இருப்பினும், நாம் ஏசாயா 40ம் அதிகாரத்தைப் படிக்கத் தொடங்குகையில், முந்திய அதிகாரங்களின் தொனி மற்றும் பாடக்கருத்தில் இருந்து கவனிக்கத்தக்க ஒரு மாற்றம் உள்ளது. ஏசாயா 40:1ம் வசனம், "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள் ... என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்" என்று வாசிக்கப்படுகிறது. ஏசாயா புத்தகத்தின் எஞ்சியபகுதியானது தேவன், தாம் தேர்ந்து கொண்ட மக்களை நிறைவாக மீளக்கட்டுவித்தல் பற்றிய ஆய்வுக்கருத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

தீர்க்கதரிசனத்தின் பாடக்கருத்து: பாடுபடும் ஊழியக்காரர்

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இந்த ஆறுதலில் அதிகமான பகுதி, இஸ்ரவேல் மக்கள் செய்யத் தவறியிருந்த யாவற்றையும் செய்து அவர்கள் மீளக்கட்டுவிக்கப்படுதலுக்குக் கருவியாக இருக்கப்போகும், கர்த்தருடைய மிகச்சிறந்த "ஊழியக்காரருடைய" ஊழியத்தின் மூலம் வரும் என்று ஏசாயா கூறினார். இந்த ஊழியக்காரர், "ஊழியக்காரர் பாடல்கள்" என்று அடிக்கடி அழைக்கப்படுகிற குறைந்த பட்சம் நான்கு வேதவசனப் பகுதிகளில் முக்கியமான உருவகமாக இருக்கிறார். ஏசாயா 42:1-4; 49:1-13; 50:4-11; 52:13-53:12 ஆகியவை இவ்வசனப்பகுதிகளாக உள்ளன, இவற்றில் கடைசியில் உள்ள வசனப்பகுதியில் நடபடிகள் 8ல் எத்தியோப்பிய மந்திரி வாசித்த வசனப்பகுதி உள்ளடங்குகிறது.

குறிப்பாக ஏசாயா 53ம் அதிகாரம் ஊழியக்காரரின் துன்பத்தைச் சித்தரிக்கிறது: அவர் தேவனால் அனுப்பப்பட்டிருந்தும் சொந்த மக்களால் புறக்கணிக்கப்பட்டார். அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் மக்களால் புறக்கணிக்கப்பட்டவருமாக இருந்தார் - இருப்பினும் அவரது பாடுகள் யாவற்றின் மூலமாகவும், ஆச்சரியத்திற்குறிய சில விஷயங்கள் நடந்து கொண்டிருந்தன. அவர் மற்றவர்களால் செய்யப்பட்ட தவறுகளுக்காகத் துன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தார். தீர்க்கதரிசியைப் பொறுத்தமட்டில், இவையாவும் மற்றவர்களின் இரட்சிப்பிற்காகச் செயல்படும் தேவனுடைய முழுமையான திட்டத்தில், ஏதோ ஒருவகையில் பொருந்தின. அந்த ஊழியக்காரரின் உண்மை நிறைந்த கீழ்ப்படிதலின் விளைவாக, அவர் ஏற்ற காலத்தில் உயர்த்தப்படுவார்.

ஏசாயா 53ம் அதிகாரம், இயேசு மற்றும் அவரது பாடுகள் என்ற உண்மைக்கு நீண்ட காலத்திற்கு முன்பே எழுதப்பட்டிருந்தாலும், அது அவரையும் அவரது பாடுகளையுமே குறிக்கிறது என்று புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் ஒருமுகமாகப் புரிந்து கொண்டனர். புதிய ஏற்பாட்டின் கருத்து நோக்கில் இருந்து, இஸ்ரவேல் மக்களின் நல்வாய்ப்புக்கள் மறுகட்டுமானம் செய்யப்படுதல் என்பது இராணுவ பலத்தினாலோ அல்லது அரசியல் மேலாதிக்கத்தினாலோ அல்ல, ஆனால் தேவனுடைய சொந்த மகன் என்ற ஊழியக்காரரின் பாடுகளினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது. மேலும் இந்த ஊழியக்காரர், இஸ்ரவேல் மக்களுக்கு மாத்திரமல்ல ஆனால் எல்லா மக்களினங்களுக்கும் மீட்பரானார் - மற்றும் அவர் கொண்டு வந்த "மீட்பு" என்பது சரீரசுகமளித்தலில் இருந்து ஆவிக்குரிய இரட்சிப்பு வரையிலும் பரவுகை கொண்டிருந்தது. இஸ்ரவேல் மக்கள் இந்த ஊழியக்காரரின் அடையாளம் பற்றி நிச்சயம்

அற்றவர்களாக இருந்திருக்கலாம், ஆனால் இவர் இயேசுதாம் என்பதில், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் முழுநிச்சயமாக இருந்தனர்.

உதாரணமாக, மத்தேயு 8:14-17ல் பேதுருவின் மாமியை இயேசு குணமாக்கிய நிகழ்ச்சி பற்றிய விபரத்தின் முடிவுப் பகுதியில், "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" என்று நாம் வாசிக்கிறோம், இது ஏசாயா 53:4ல் உள்ள ஒரு மேற்கோளாகும். அதுபோலவே, இயேசுவினால் நிகழ்த்தப்பட்ட அடையாளங்கள் மீது யூதர்கள் கொண்டிருந்த அவிசுவாசத்தைக் குறிப்பிடுதலில், ஏசாயா 53:1ஐ யோவான் மேற்கோள் காண்பித்தார்: "கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? ..." (யோவான் 12:36ஆ-41). கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்திற்காகத் துன்புற மனவிருப்பமாக இருக்கும்படி அழைக்கும் அழைப்பில் பேதுரு, ஏசாயா 53ல் இருந்து ஒரு வசனத்தை எடுத்துப் பொழிப்புரை செய்து, பின்வரும் வார்த்தைகளுடன் தமது குறிப்புரைகளை முன்னுரையாகக் கொடுத்தார்: "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" (1 பேதுரு 2:21). எனவே, ஏசாயா 53ம் அதிகாரம், இயேசுவைப் பற்றியும் அவரது வருகையைப் பற்றியும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் எவ்வளவு தெளிவாகப் பேசினர் என்று காண்பிக்கும் காரணத்தினால், இது ஒரு திறவுகோல் வசனமாக உள்ளது.

அவர் புறக்கணிக்கப்படுதல் (53:1-3)

ஏசாயா 53ம் அதிகாரம், இயேசு புறக்கணிக்கப்படுதல் என்ற பாடுகளை அனுபவிப்பார் என்று முதலில் முன்னுரைத்தது. வசனப்பகுதியின் முதல் மூன்று வசனங்கள், பாடுபடும் ஊழியக்காரர் புறக்கணிக்கப்படுதலைப் பற்றியதாக இருக்கிறது. 1ம் வசனம், "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?" என்று கேட்கிறது. இது பின்வரும் தெளிவான பதிலைக் கொண்ட சொல்லாட்சித் திறன் வாய்ந்த ஒரு கேள்வியாக உள்ளது: "பலர் அல்ல." இதில் ரோமர் 10:16 பவுல் பிரசங்கித்ததைக் கேட்ட யூதர்களில் ஒரு சிறுகுழுவினர்தாம் அறிவிக்கப்பட்ட செய்தியை விசுவாசிக்க மனவிருப்பம் கொண்டிருந்தனர் என்று சுட்டிக்காண்பித்ததில், பவுல் இதே வசனத்தைத் தான் மேற்கோள் காண்பித்தார். ஏசாயா 53:2ம் வசனம், இந்த ஊழியக்காரர் (இயேசு) "அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது" என்று கூறுகிறது. 2ம் வசனமானது, இயேசு விரும்பத் தக்க உடல்தோற்றம் கொண்டிருக்கவில்லை என்று அர்த்தப்படுவதாக அடிக்கடி விளக்கி உரைக்கப்பட்டாலும், இது அவரது காலத்தில் இருந்தவர்கள் அவரைப் பற்றி மேம்போக்காக முடிவுசெய்ய விருப்ப நோக்கம் கொண்டிருந்ததை, அவரைப்பற்றிய "விசேஷமான" எதையும் காணாதிருந்து, அதனால் அவருக்குள் உண்மையில் இருந்தது என்ன என்பதைக் காணத்தவறியதைச் சுட்டிக்காண்பிக்கவே அதிகம் வாய்ப்புள்ளது. பின்பு 3ம் வசனம், "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்த

வருமாயிருந்தார்; ... அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்” என்று கூறுகிறது.

இதுவே இயேசுவைப் பற்றி உண்மையாக இருந்துள்ளதாகப் புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிற மிகச்சரியான விஷயமாக உள்ளது: அவர் மேசியாவாக வந்த யூத மக்களில் பெரும்பான்மையினரால் அவர் புறக்கணிக்கப்பட்டார். உண்மையில் “புறக்கணிக்கப்படுதல்” என்பது யோவான் சுவிசேஷத்தின் முக்கிய ஆய்வுக்கருத்துக்களில் ஒன்றாக உள்ளது, இந்த சுவிசேஷத்தின் தொடக்க அதிகாரத்தில் உள்ள இந்த வசனங்களில் இது சுட்டிக்காண்பிக்கப்படுகிறது:

> உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை (யோவான் 1:9-11).

இந்தப் புறக்கணிப்பு இன்னும் நடந்து கொண்டுள்ளது! பாடுபடும் ஊழியக்காரரான இயேசு தமது சொந்தக் காலத்தில் போன்றே, சுயமையங்கொண்ட, சுயத்திற்கு ஊழியம் செய்கிற, சுயத்தைப் பெரிதாக்கும் மனநிலையால் மேற்கொள்ளப்பட்டுள்ள, இன்றைய நாட்களின் நமது உலகத்திற்கும் விரும்பத் தக்கவராக இருப்பதில்லை; எனவே அவர், மக்களின் பெரும்பான்மையினரால் புறக்கணிக்கப்படுகிறார். அவர் ஒரு வல்லமை நிறைந்த ஆட்சியாளராக, செல்வமிக்க வர்த்தகத் தலைவராக, திறமை வாய்ந்த ஒரு விளையாட்டு வீரராக அல்லது கவர்ச்சி நிறைந்த பொழுதுபோக்கச் செய்பவராக வந்து இருந்தால், அவர் ஒரு பெருங்கூட்டமான பின்பற்றாளர்களை இழுத்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஏசாயா 53ம் அதிகாரத்தின், இந்தப் பாடுபடும் ஊழியக்காரர் இருந்ததைக் காட்டிலும் அதிகம் “பிரபலமானவராக” அவர் இன்றைய நாட்களில் இருப்பதில்லை.

(மற்றவர்களுக்கு) பதிலாக அவருடைய பாடுகள் (53:4-6)

இயேசு மற்றவர்களுக்காகப் பாடு அனுபவிப்பார் என்றும் ஏசாயா 53ம் அதிகாரம் முன்னுரைத்தது. 4 முதல் 6 வரையிலான வசனங்கள், ஊழியக்காரரின் பாடுகள், தீர்க்கதரிசி உட்பட மற்றவர்களின் சார்பில் அனுபவிக்கப் படுவதாக இருக்கும் என்று வலியுறுத்துகின்றன. இதைக் கவனமாக வாசிப்பவர், “நாம்,” “நமக்கு” மற்றும் “நம்முடைய” என்ற வார்த்தைகள் இவ்வசனங்களில் பத்து முறைகள் வருவதைக் காண்பார். “மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் ... அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.” இயேசுவின் பாடுகளினுடைய இந்த அம்சத்தை இறையியலாளர்கள், “பதிலாகச் செய்தல்” அல்லது “பிரதிப் பரிகாரம்” என்று குறிப்பிடுகின்றனர், இந்தச் சொல்விளக்கங்கள், இயேசு நமக்காகத் தண்டனையைச் சுமந்தார் என்று அர்த்தப்படுத்துகின்றன. சிலுவையில் அவரது பாடுகள் மற்றும் மரணத்தில், நாம் பெறத் தகுதியான தண்டனையை

நம் சார்பில் அவர் அனுபவித்தார்.

இயேசுவின் சிலுவையைப் பற்றியும் உலகத்தில் பாவங்களுக்கு அவரது மரணத்தைப் பற்றியும் புதிய ஏற்பாடு கூறும் யாவுமாக உள்ளது பின்வருமாறு:

> நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமதுசரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1 பேதுரு 2:24).

> என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் (1 யோவான் 2:1, 2).

> தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. பிரியமானவர்களே, தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம் (1 யோவான் 4:9-11).

> அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே (ரோமர் 5:6-9).

பின்வருவது நமது இருதயங்களுக்குப் பிரியமானதாக இருக்கும் சுவிசேஷச் செய்தியின் பாகமாக உள்ளது: கிறிஸ்து நமக்காகப் பாடு அனுபவித்து மரித்தார் என்ற சத்தியம். இந்தக் கருத்தை இன்னும் அதிகம் தெளிவாகக் காண்பதற்கு, ஏசாயா 53ம் அதிகாரத்தில் தன்மை ஒருமைப் பெயர்ச்சொற்களை அமைத்து வாசித்தல் உதவிநிறைந்ததாக உள்ளது: "மெய்யாகவே அவர் *என்னுடைய* பாடுகளை ஏற்றுக்கொண்டு, *என்னுடைய* துக்கங்களைச் சுமந்தார் ... *என்னுடைய* மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, *என்னுடைய* அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் ... அவருடைய தழும்புகளால் *குணமாகிறேன்.*"

அவர் தவறாக நடத்தப்படுதல் (53:7-9)

இத்துடன் கூடுதலாக ஏசாயா, இயேசு அநீதியாகப் பாடு அனுபவிப்பார்

என்று காண்பித்தார். 7 முதல் 9 வரையிலான வசனங்கள், இந்த ஊழியக்காரர் மற்றவர்கள் சார்பாகச் சகிக்க வேண்டியதாக இருந்த பாடுகளின் முழுமையான அநீதியைப் பற்றிக் கூறுகின்றன. அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனால் அவையாவும் அவர் செய்திருந்த ஏதொரு விஷயத்தின் காரணத்தினாலும் அல்ல என்று ஏசாயா கூறினார். 7ம் வசனம், அவரது பலியின் தன்னார்வ இயல்பை வலியுறுத்துகிறது: அவர் பாடு அனுபவிக்கையில் மறுப்பு அல்லது எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் "தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை." அவரது ஜீவன் அவரிடத்தில் இருந்து எடுத்துப்போடப்பட்டது, மற்றும் "அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" (53:9ஆ) இருப்பினும் அவரது சவ அடக்கம்கூடச் சிறுமைப்படுத்துதலின் செயலாகவே இருந்தது.

ரோம ஆளுநராக இருந்த பிலாத்து என்பவர் முன்பாக இயேசு விசாரிக்கப்படுதல் பற்றிய லூக்கா சுவிசேஷ விபரத்தில் நாம் இதே வலியுறுத்தத்தைக் காணுகின்றோம். பிரதான ஆசாரியர்களாலும் அவர்களைப் பின்பற்றியவர்களாலும் இயேசுவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் கொண்டு வரப்பட்டபோதிலும், பிலாத்து, "இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" என்று உரைத்தார் (லூக்கா 23:4). பிற்பாடு இயேசுவைப் பரிசோதிப்பதற்காக, யூதர்களின் அரசரான ஏரோதிடம் அனுப்பி வைத்த பின்பு பிலாத்து பிரதான ஆசாரியர்கள் மற்றும் யூத மக்களின் அதிபதிகள் ஆகியோரை அழைப்பித்துப் பின்வருமாறு உரைத்தார்:

> ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே. ஆனபடியால் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன் (லூக்கா 23:13-16).

யூதத்தலைவர்கள், பரபாஸை விடுவித்து இயேசுவைச் சிலுவையில் அறையும்படி வற்புறுத்திய போது, பிலாத்து திகைப்புற்று சலிப்புற்று, "ஏன் இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவானகுற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே" என்று (லூக்கா 23:22). வியப்புற்றார். கடைசியில் பிலாத்து, அவர்களின் வற்புறுத்துதலுக்கு இணங்கி, கொலைகாரன் என்று அறியப்பட்டு இருந்த பரபாஸை விடுவித்து இயேசுவைச் சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தார்.

இதை நாம் வாசிக்கையில், இவை யாவற்றினுடைய அநீதியான பண்பினால் நாம் தாக்கப்படுகிறோம். அதுவே மிகச்சரியானக் கருத்தாக உள்ளது! இரட்சிப்பு என்பது நீதியைப் பற்றிய விஷயமாக இருப்பதில்லை; அது இரக்கத்தைப் பொறுத்த விஷயமாக உள்ளது. நமது சொந்த பாவங்களுக்கு நாமே பாடுகள் அனுபவிக்க வேண்டும் என்றே நீதி கோரும். இருப்பினும் சிலுவையின் காரணமாக நாம் இரட்சிக்கப்பட முடியும். இயேசு, தாம் அனுபவிக்கத் தேவையற்ற ஒரு தண்டனையை பெற்றுக்கொள்ள மனவிருப்பம்

கொண்டிருந்தார், மற்றும் அதில் நடக்க இருந்த எல்லாவற்றையும் ஏசாயா முன்னதாகவே கண்டார்.

அவர் மகிமைப்படுதல் (53:10-12)

ஏசாயாவின் கூற்றுப்படி, இயேசுவின் பாடுகள் மகிமைக்கு வழிநடத்தும். 53ம் அதிகராம், துன்புறும் ஊழியக்காரரின் உரிமையை நிறுவாமல் விடுவதில்லை. இந்த அதிகாரத்தின் கடைசி மூன்று வசனங்களில் நாம், நம்பிக்கை நிறைந்த வாக்குத்தத்தங்களைக் காணுகிறோம்:

> அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புகொடுக்கும்போது,
> அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்;
> கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.
> அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்;
> என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்;
> அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்.
> அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி,
> அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு,
> அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து,
> அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம்
> அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்;
> பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார் (53:10ஆ-12).

இதையே பிற்பாடு இயேசுவின் பாடுகளின் விளைவுகளாகப் பவுல் ரோமர் 4:1-8ல் மிகச்சரியாக விளக்கப்படுத்தினார். உண்மையில் நாம் தண்டனை பெறத் தகுதியான பாவிகளாக இருந்த போதிலும், இயேசுவின் மீது விசுவாசத்தினால் நாம் நீதிமான்கள் என்று எண்ணப்படுகிறோம் என்று அவர் கூறினார். ஏசாயா 53ல் உள்ள கடைசி மூன்று வசனங்களிலும், இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றிய மறைமுகமான முன்னுரைத்தல் ஒன்றுள்ளது. அவர் "ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்" (53:8) என்றாலும், அவர் எதிர்காலத்தில் "அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார்." 11ம் வசனம், "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்" என்று கூறுகிறது. அவர் சாதித்த செயலின் காரணமாக அவர் மேன்மைப்படுத்தப்படுவார் ("பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்"; 53:12அ). இது, இந்த உண்மைக்குப் பின்பு, பிலிப்பியர் 2:9-11ல் பவுல் கூறியதற்கு மிகவும் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது:

> ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.

எனவே பாடுபடும் ஊழியக்காரரைப் பற்றிய ஏசாயாவின் வார்த்தைகள், இயேசு சிலுவையில் அனுபவிக்க இருந்த துன்பங்களின் ஒரு முன்நிழல் இடுதலாக இருந்தன. அவைகள், அவர் சகித்துக் கொள்ள இருந்தவற்றை மட்டுமல்ல, ஆனால் அவ்வாறு செய்வதில் அவர் நமக்காக நிறைவேற்ற இருந்தது என்ன என்பதையும் பிரதிபலித்தன.

இயேசு, பரிபூரணமான பாவ நிவாரண பலி

துன்புறும் ஊழியக்காரரின் குற்றம் அறியாத்தன்மையை வலியுறுத்தியதில், ஏசாயா 53ம் அதிகாரம், புதிய ஏற்பாட்டில் உள்ள சிலவற்றை வெளிப்படையாக்குகிறது: இயேசு (முழுமையும் தெய்வீகமானவராக இருந்தது போன்றே; யோவான் 1:1; கொலோசெயர் 2:9; எபிரெயர் 1:8) அவர் முழுமையும் மனிதராக இருந்தபோதிலும், அவர் முற்றிலும் பாவம் இல்லாதவராக இருந்தார்.

இயேசுவின் வெளிப்படையான ஊழியம், அவர் வனாந்திரப் பகுதியில் நாற்பது நாட்கள் சோதிக்கப்பட்ட பின்பு மாத்திரமே தொடங்கிற்று, அங்கே அவர் தமக்கு சாத்தான் அளிக்கக் கூடிய மோசமான ஒவ்வொரு விஷயத்தையும் எதிர்த்து நின்றார் (மத்தேயு 4:1-11; லூக்கா 4:1-13). பவுல், "நாம் அவருக்குள் (தேவனுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை (இயேசுவை) நமக்காகப் பாவமாக்கினார்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 5:21). "பாவமாக்கினார்" என்ற சொற்றொடர், அவர் பாவத்தினால் குற்றப்பட்டார் என்றல்ல ஆனால் அவர் உலகத்தின் பாவங்களுக்கான விளைவைச் சுமந்தார் என்றே அர்த்தப்படுகிறது. அதுபோன்றே, 1 யோவான் 3:5ம் வசனம், "அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை" என்று கூறுகிறது.

விசுவாசிகள் எதிர்த்து நிற்காமல் பாடுகளைச் சகித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வதில் பேதுரு, "அவர் (இயேசு) பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" என்று கூறினார் (1 பேதுரு 2:22).

இயேசுவின் பாவமற்ற தன்மை பற்றிய மிகவும் வெளிப்படையான கூற்று எபிரெயர் 4:15ல் காணப்படுகிறது எனலாம்: "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்."

இயேசு பாவமற்ற தன்மையினால் மாத்திரமே, நமக்காகப் பூரணமான பாவநிவாரண பலியாக, மோசேயின் பிரமாணத்தில் கேட்டுக் கொள்ளப்பட்ட படியான (லேவியராகமம் 3; 4), "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாக" (1 பேதுரு 1:19) இருக்க முடிந்தது.

7

ஒரு புதிய உடன்படிக்கை

(எரேமியா 31)

பழைய ஏற்பாடு முழுவதிலும் தேவன், தமது மக்களுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்தி அதைக் காத்துக் கொள்பவராக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறார். "உடன்படிக்கை" என்பது தேவன் தமது ஆசீர்வாதத்தைக் கிருபையாக அளிக்கும் ஏற்பாடாகவும் தமது பெருந்தன்மைக்குப் பதில் அளிக்கும் வகையில் தமது சித்தத்திற்கு இணங்கி நடக்கும்படி அவர்களை அழைக்கும் கருவியாகவும் உள்ளது.

தேவனுடைய நான்கு கூட்டல் ஒன்று உடன்படிக்கைகள்

தேவன் தம்முடைய மக்களுடன் ஏற்படுத்திய நான்கு உடன்படிக்கைகள் பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ளன:

1. *நோவாவுடன் தேவனுடைய உடன்படிக்கை.* ஆதியாகமம் 6:18ல் தேவன் நோவாவையும் அவரது குடும்பத்தாரையும் வர இருந்த பெருவெள்ளத்தில் இருந்து பாதுகாப்பதாக வாக்குத்தத்தம் செய்தார். பிற்பாடு (ஆதியாகமம் 9:11) அவர், இனி ஒருக்காலும் பூமியை வெள்ளத்தினால் அழிப்பதில்லை என்று வாக்குத்தத்தம் செய்தார்.

2. *ஆபிரகாமுடன் தேவனுடைய உடன்படிக்கை.* ஆதியாகமத்தில் (அதிகாரங்கள் 12; 15; 17), தேவன் தம்மைப் பின்பற்றும்படி ஆபிரகாமை அழைத்தார் மற்றும் அவரை ஒரு பெரிய மக்களினம் ஆக்குவதாகவும் அவர் மற்ற எல்லா மக்களினங்களையும் ஆசீர்வதிக்கக் கூடும்படிக்கு அவரை ஆசீர்வதிப்பதாகவும் வாக்குத்தத்தம் செய்தார். இந்த உடன்படிக்கை, கிறிஸ்து நிறைவில் வர இருந்த, ஆபிரகாமின் சரீரப்பிரகாரமான சந்ததியாரான இஸ்ரவேல் மக்களினம் நிலைநாட்டப்படுதலை விளைவித்தது. இவ்வாறாக பூமியில் மக்கள் யாவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

3. *தாவீதுடன் தேவனுடைய உடன்படிக்கை.* 2 சாமுவேல் 7ம் அதிகாரத்தில் தாவீது, கர்த்தருக்கென்று ஒரு "வீட்டை" (ஆலயத்தை) கட்டுவதற்கான தமது விருப்பத்தை வெளியிட்டார், அதற்குத் தேவன், தாவீதிற்கென்று தாம் ஒரு "வீட்டை" (பரம்பரையை அல்லது அரச வம்சத்தை)க் கட்டப்போவதாகக் கூறிப் பதில் அளித்தார். மீண்டுமாக இந்த வாக்குத்தத்தம், என்றென்றைக்கும் ஆளுகை செய்பவராக வரவிருந்த "தாவீதின் மகனான" இயேசு கிறிஸ்துவின் மூலம் நிறைவேற்றப்பட்டது.

4. *இஸ்ரவேல் மக்களுடன் தேவனுடைய உடன்படிக்கை,* பழைய ஏற்பாட்டின் முதன்மை உடன்படிக்கையானது, இஸ்ரவேல் மக்களை எகிப்தில் அவர்கள் அனுபவித்திருந்த 400 ஆண்டுகள் கால அடிமைத்தளையில்

இருந்து விடுவித்த பின்பு, சீனாய் மலையில் அவர்களுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கையாகும் (யாத்திராகமம் 20). இதில் தேவன் இஸ்ரவேல் மக்களின் தேவனாக இருப்பார் மற்றும் அவர்களைத் தாம் தேர்ந்து கொண்ட மக்களினமாக்குவார் என்ற தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அடங்கியிருந்தன மற்றும் அவர் மோசேயின் மூலமாகக் கொடுக்க இருந்த பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய உறுதிப்பாடு கொண்டிருக்க வேண்டும் என்ற விஷயமும் அடங்கியிருந்தது. இந்த உடன்படிக்கையில், குறிப்பாக பிரமாணத்தைக் கொடுத்தல் பற்றிய விஷயத்தில், மோசேயின் மையப்பணிப்பொறுப்பின் காரணமாக, இது "மோசேயின் உடன்படிக்கை" என்று அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. இந்த உடன்படிக்கை தேவனுக்கும் மோசேக்கும் இடையிலானதாக அல்ல, ஆனால் தேவனுக்கும் இஸ்ரவேல் மக்களினம் முழுவதற்கும் இடையிலானதாக இருந்தது என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

பழைய ஏற்பாடு, எதிர்காலத்தில் வர இருந்த, ஆனால் பழைய ஏற்பாட்டு எழுத்துக்களில் கூறிமுடிக்கப்பட்ட காலத்தின்போது வராதிருந்த, ஐந்தாவது உடன்படிக்கை ஒன்றைப் பற்றியும் பேசுகிறது. இந்த "புதிய உடன்படிக்கை" எரேமியா 31:31-34ல் முன்னுரைக்கப்பட்டது: "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன் ..."

எரேமியா தீர்க்கதரிசனப் புத்தகத்தின் முதல் இருபத்தி ஒன்பது அதிகாரங்கள், வரவிருந்த தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றி, கலகக்கார மக்களுக்கு அறிவித்தல் என்ற எரேமியாவின் பணிப்பொறுப்பினுடைய வரலாற்றைப் பற்றி முதன்மையாகக் கூறுகின்றன. இக்கால கட்டத்தின்போது, வடக்கு இராஜ்யம் (இஸ்ரவேல்) ஏற்கனவே அசீரியர்களால் அடிமைப்படுத்தப்பட்டு இருந்தது, மற்றும் இப்போது தெற்கு இராஜ்யம் (யூதா) பாபிலோனியர்களின் கைகளில் அதே விதமாக அழிவைச் சந்தித்திருந்தது. இந்த படையெடுத்தல் பற்றிய தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பலரின் எழுத்துக்களில் காணப்படுகின்றன. அவர்கள் யாவரும் ஒன்றுபோல, அடிமைத்தளைக்குப் பின்னர் வரவிருந்த மேன்மையான நாட்களைப் பற்றிய நம்பிக்கையைக் கொடுத்தனர். அழிவு என்பது தவிர்க்க இயலாததாக இருந்தது, ஆனால் தேவன் இன்னும் இஸ்ரவேலுடன் தமது கிரியையை முடிக்கவில்லை; அவர் மீண்டும் ஒருமுறை அவர்களை ஆசீர்வதிக்கப் போவதாக வாக்குத்தத்தம் செய்தார்.

மற்ற தீர்க்கதரிசிகளின் செய்திகளைப் போன்றே எரேமியாவின் செய்தியிலும், அழிவு மற்றும் நம்பிக்கை என்ற கூறுகள் அடங்கியிருந்தன. அழிவு பற்றிய அவரது தீர்க்கதரிசனங்கள் 1 முதல் 29வரையிலான அதிகாரங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன, மற்றும் நம்பிக்கையின் செய்தியானது 30ம் அதிகாரத்தில் தொடங்குகிறது:

> இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் ஒரு புஸ்தகத்தில் எழுதிக்கொள். இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தினுடைய சிறையிருப்பைத் திருப்பி, நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த

> தேசத்துக்கு அவர்களைத் திரும்பவரப்பண்ணுவேன்; அதை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (வசனங்கள் 2, 3).

அழிவிற்குப் பின்னர் மீளக்கட்டுவித்தல் பற்றிய இதுபோன்ற வாக்குத்தத்தங்கள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களுக்கே உரியவையாக இருக்கின்றன, ஆனால் மீளக்கட்டுவித்தலின் இந்த நம்பிக்கைக்கு ஏரேமியா தனிச்சிறந்த ஒரு பங்களிப்பை ஏற்படுத்தினார். தேவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையிலான ஒரு புதிய உடன்படிக்கை ஏரேமியா 31:31-34ல் மாத்திரமே காணப்படுகிறது. எரேமியாவின் கூற்றுப்படி, இஸ்ரவேல் மக்களுடன் உறவுபடுவதற்கு, முந்திய உடன்படிக்கையைக் காட்டிலும் அதிகமான ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் ஒரு புதிய வழியை தேவன் நிலைநாட்டுவார்:

> இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும். ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.

புதிய உடன்படிக்கையைப் பற்றிய எரேமியாவின் தீர்க்கதரிசனம்

எரேமியா 31ல் உள்ள உடன்படிக்கையானது முந்திய உடன்படிக்கையில் இருந்து பிரித்து வைக்கப்படும் அளவுக்கு, அதில் அவ்வளவு "புதியதும்" வேறுபாடுமாக இருப்பது என்ன? எரேமியாவின் தீர்க்கதரிசனம் இந்தப் புதிய உடன்படிக்கையின் முக்கியமான பல பண்புகளை புறக்குறிப்பிடுகிறது:

1. *இது எதிர்காலத்தில் வரும்.* எரேமியா காலத்தைப் பற்றித் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை; அவர், "'இதோ, நாட்கள் வரும்' ..." என்று மாத்திரம் கூறினார் (31:31). திட்டவட்டம் இல்லாத இப்படிப்பட்ட வகையில் எதிர்காலத்தைப் பற்றிப் பேசுதல் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளிலேயே தனிப்பட்ட விஷயமாக இருந்தது. "அந்நாட்களுக்குப்பின்பு," "பின்வரும் நாட்களில்" அல்லது வெறுமனே "பின்பு" என்பவை போன்ற சொல்விளக்கங்கள், தேவன் மீண்டும் ஒருமுறை மக்களுக்குத் தயவுடன் நடந்துகொள்வார் என்று

உறுதிப்பாடுகள் அளிக்கப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டன. எரேமியா, இந்தப் புதிய உடன்படிக்கையின் நிலைநாட்டம் பற்றிக் குறிப்பிட்ட காலம் எதையும் கொடுக்கவில்லை என்றாலும், இது இயல்பாகவே, வரவிருந்த மேசியாவின் காலத்துடன் மக்கள் மனங்களில் இணைவு கொண்டிருக்க வந்தது. தேவனால் அபிசேஷகம் பெற்ற ஒருவர் வரும்போது, அவர் இந்தப் புதிய உடன்படிக்கையின் யுகத்தைத் தொடக்கி வைப்பார்.

2. இது இஸ்ரவேல் மற்றும் யூதா கோத்திரங்களை மறுபடியும் ஒன்றிணைக்கும். புதிய உடன்படிக்கை "இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும்" இருக்கும் என்று எரேமியா குறிப்பிட்டார் (வசனம் 31). இந்த வாக்குத்தத்தம் இரு காரணங்களினால் குறிப்பிடத் தக்கதாக இருந்தது. முதலாவது, சாலொமோனின் காலத்திற்குப் பின்பு, முன்னூறு ஆண்டுகளுக்கும் மேலாக நாடானது பிரிந்து கிடந்தது. இரண்டாவது, இஸ்ரவேல் நாட்டில் இருந்த பத்துக் கோத்திரங்கள் - வடக்கு இராஜ்யம் - அரசியல் உயிர்ப்பொருள் என்ற வகையில் நிலைத்திருக்கவில்லை. அந்தக் கோத்திரங்கள் அசீரியர்களால் வெற்றிகொள்ளப்பட்டு சிதறடிக்கப்பட்டிருந்தனர். மீளக்கட்டுவித்தல் என்பது முந்திய கோத்திரம் மற்றும் அரசியல் முறைமையுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டிராது. ஏற்கனவே எரேமியா, ''இஸ்ரவேலை'' மீளக்கட்டுவித்தல் என்பதில் "எல்லா மக்களினங்களும்" உள்ளடங்கும் என்று கருத்துத் தெரிவித்திருந்தார். (காண்க 3:16-18; இந்த வாக்குத்தத்தத்தின் உலகளாவிய அம்சம் எரேமியா 31ல் குறிப்பிடப் பட்டிருப்பதில்லை.)

3. இது மக்களின் இருதயங்களில் தங்கியிருக்கும். பழைய உடன்படிக்கையானது, தேவனிடத்தில் இஸ்ரவேல் மக்களின் பொறுப்புக்களை முன்வைத்த பிரமாணங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. இந்தப் பிரமாணங்களைக் கைக்கொள்ளுதல் என்பது அவர்களைத் தேவன் விரும்புகிற வகையில் இருக்கும் பரிசுத்த மக்களாக்கும். புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியதில் தேவன், "நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி ..." என்று வாக்குத்தத்தம் செய்தார் என்பதாக எரேமியா கூறினார் (வசனம் 33). வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், புதிய உடன்படிக்கைக்குள் இருக்கும் தேவனுடைய சித்தத்தை மக்கள் விரும்பும் வகையில் அது அவர்களின் ஒரு பாகமாகும். இருப்பினும், "இருதயப் பூர்வமான மார்க்கம்" என்ற இந்தக் கருத்தானது பழைய ஏற்பாட்டிற்கு முற்றிலும் புதியதாக இருப்பது இல்லை. உபாகமம் 30:6ல் மோசே, "உன் தேவனாகிய கர்த்தரில் நீ உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து பிழைக்கும்படி, உன் தேவனாகிய கர்த்தர் உன் இருதயத்தையும் உன் சந்ததியாரின் இருதயத்தையும் விருத்தசேதனம்பண்ணி," என்று கூறினார். தேவனுடைய மக்கள், பழைய உடன்படிக்கையைத் தேவன் விரும்பிய அளவிற்குத் தங்கள் இருதயங்களில் காத்துக் கொண்டு இருந்தது இல்லை - ஆனால் வரவிருந்த புதிய உடன்படிக்கையில் அது நடக்கும் என்று எரேமியா கூறினார்.

4. இது போதிக்கப்பட வேண்டியிருப்பதற்கு மாறாக எல்லாராலும் அறியப்பட்டு இருக்கும். "இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும்

என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் ...” (வசனம் 34). பழைய உடன்படிக்கையின் கீழ், ஆபிரகாமின் மாம்சப் பிரகாரமான சந்ததியார் - இஸ்ரவேல் மக்களினம் - தேவனுடைய உடன்படிக்கையின் மக்களாக இருந்தனர்; ஆனால் இஸ்ரவேல் மக்களின் பின்தொடரும் சந்ததி ஒவ்வொன்றிற்கும் கர்த்தருடைய வழிகளைப் பற்றி அறிவுறுத்தவும் அவரைப் பற்றி அறியப் போதிக்கவும் வேண்டியிருந்தது. இருப்பினும் புதிய உடன்படிக்கையின் கீழ், அதில் உள்ளடங்கியிருக்கும் ஒவ்வொருவரும், உடன்படிக்கையின் மக்கள் மத்தியில் இருப்பதற்கான ஒரு முன்தகுதி என்ற வகையில் “கர்த்தரை அறிந்து” இருப்பார்.

5. *இது மீறப்படாது இருக்கும்.* 32ம் வசனத்தில் எரேமியா, “நான் அவர்கள் பிதாக்களை ... அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ... அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே” என்று கூறினார். இஸ்ரவேல் மக்கள் பழைய உடன்படிக்கையின் நிபந்தனைகளைத் திரும்பத் திரும்ப மீறினார்கள் என்பதே அந்த உடன்படிக்கையின் குறிப்பிடத்தக்க உண்மையாக இருந்தது. அந்த ஒப்பந்தத்தில் தேவன் தமது பகுதியை உயர்த்திப்பிடித்திருந்தாலும், அவர்கள் தங்கள் பகுதியில் அடிக்கடி உண்மையற்றவர்களாக இருந்தனர். யாத்திராகமம் 32ம் அதிகாரத்தின்படி, பரிதாபகரமான கீழ்ப்படியாமை என்பது, பொன் கன்றுக்குட்டியை வணங்குதல் என்ற நிகழ்வுடன், ஏறக்குறைய அந்த உடன்படிக்கை நிலைநாட்டப்பட்ட உடனே தொடங்கிற்று. அவர்களின் வரலாறு முழுவதிலும் மீறுதல்கள் திரும்பத் திரும்ப நடைபெற்றது. நடபடிகள் 7ல் ஸ்தேவான், மனதைக் கலக்கும் தமது உரையில், இஸ்ரவேல் மக்கள் கர்த்தருடனான தங்கள் உடன்படிக்கையின்படி வாழத்தவறிய வரலாற்றை ஆய்வு செய்கையில் விஷயம் இவ்வளவு அதிகமாக இருந்தது, அவர் பின்வரும் கொடிய அச்சுறுத்தலுடன் தமது உரையை முடித்தார்:

> வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாங்களைப்போல நீங்களும் பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள். தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலைசெய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்குத் துரோகிகளும் அவரைக் கொலைசெய்த பாதகருமாயிருக்கிறீர்கள். தேவதூதரைக்கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள் என்றான் (நடபடிகள் 7:51-53).

புதிய உடன்படிக்கையானது, மாறுபட்டதாக இருக்கும், அது ஒருக்காலும் மீறப்படாது என்று தேவன், எரேமியா மூலமாக வாக்குத்தத்தம் செய்தார்.

6. *இது ஒருக்காலும் முடிவுறாது. எரேமியா,* புதிய உடன்படிக்கையின் வருகை பற்றிய தமது அறிவிப்பைப் பின்வரும் வாக்குத்தத்தத்துடன் தொடர்ந்தார்: “இந்த நியமங்கள் [பௌதீகரீதியான அண்டம், தனது இயற்கை விதிகளுடன்; வசனம் 35] எனக்கு முன்பாக இல்லாதபடிக்கு ஒழிந்து போனால், அப்பொழுது இஸ்ரவேல் சந்ததியும் எனக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார்” (வசனம் 36).

புதிய உடன்படிக்கையின் நிரந்தரத்தன்மை என்பது பழைய உடன்படிக்கையுடன் பொருந்தியிருப்பது சாத்தியமில்லை. இந்த உடன்படிக்கை நிலைநாட்டப்பட்ட உடன், வேறொன்றிற்கு ஒருக்காலும் அவசியமிராது.

7. இது முற்றிலுமான மன்னிப்பைக் கொண்டுவரும். ஒருவேளை இந்தப் புதிய உடன்படிக்கையின் மாபெரும் வாக்குத்தத்தம் என்பது, 34ம் வசனத்தின் பின்பகுதியில் காணப்படலாம்: "நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." தேவனுடைய பிரமாணத்தை மீறி அவர்கள் செய்திருந்த எல்லாவற்றையும் பற்றி ஆழ்ந்து சிந்திக்கையில், மன்னிப்பின் வாக்குத்தத்தம் என்பது உண்மையிலேயே குறிப்பிடத் தகுந்ததாக இருந்தது.

நிலைநாட்டப்பட்ட தேவனுடைய புதிய உடன்படிக்கை

இந்தப் புதிய உடன்படிக்கையின் காலம் பற்றி எரேமியா திட்டவட்டமாகக் குறிப்பிடாத உண்மையை நாம் யாவரும் இன்னமும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறோம். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இதை எதிர் கொண்டிருக்கவில்லை; அவர்கள் புதிய உடன்படிக்கையானது சிலுவையில் இயேசுவின் மரணத்தில் நிலைநாட்டப்பட்டது என்று ஒருமனதாக உறுதிப்படுத்தினர். இயேசு தமது சீஷர்களுடன் இணைந்து கடைசி இரவு உணவை உண்டு, பின்வரும் பின்பற்றாளர்கள் கடைப்பிடிக்கக் கர்த்தருடைய பந்தியை நிலைநாட்டியபோது, அவர் எரேமியாவினால் பேசப்பட்ட இந்தப் புதிய உடன்படிக்கை தமது மரணத்தில் நிலைநாட்டப்படும் என்ற உண்மைக்குத் திட்டவட்டமான குறிப்பை ஏற்படுத்தினார்: "போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்" (லூக்கா 22:20).

இயேசுவின் வருகை மற்றும் மரணம் ஆகியவற்றினால் புதிய உடன்படிக்கை இப்போது நிலைநாட்டப்பட்டிருக்கிறது என்ற உண்மையைப் புதிய ஏற்பாட்டின் பல குறிப்புகள் உறுதிப்படுத்துகின்றன. ஏரேமியாவினால் குறிப்பிடப்பட்ட வாக்குத்தத்தங்கள் யாவையும் இப்போது நிறைவேற்றப்பட்டு (அல்லது நிறைவேற்றப்படும் செயல்முறையில்) உள்ளது.

1. புதிய உடன்படிக்கையானது முன்னுரைத்தலைக் காக்கும் வகையில் வந்தது. ஏரேமியாவின் காலத்தில் இருந்து தோராயமாக அறுநூறு ஆண்டுகளுக்குப் பின்பு இயேசு வந்தார்; மற்றும் அவர் தம்மைப் புதிய உடன்படிக்கையைக் கொண்டு வருபவராக மனபூர்வமாகக் கண்டார் (காண்க லூக்கா 22:20). லூக்கா 4:18, 19 வசனப்பகுதியானது, ஏசாயா 61:1, 2ல் காணப்படுகிற மேசியாத்துவ முன்னுரைத்தலை அவர் வாசித்ததைப் பதிவுசெய்துள்ளது, மற்றும் அவர் ஜெப ஆலயத்தில் இருந்தவர்களிடம், "உங்கள் காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று" என்று கூறினார் (லூக்கா 4:21). பவுல் பின்வருமாறு எழுதியதன் மூலம், தீர்க்கதரிசனத்தை இயேசு நிறைவேற்றியதை உறுதிப்படுத்தினார்:

நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார் (கலாத்தியர் 4:4, 5).

கிறிஸ்தவர்கள் (இன்றைய நாட்களில் மற்றும் சிலுவையில் இயேசுவின் மரணத்தில் இருந்து) புதிய உடன்படிக்கையின் யுகத்தில் வாழ்கின்றனர் என்பதே புதிய ஏற்பாட்டின் நிலைப்பாடாக உள்ளது என்பது தெளிவு. இயேசுவின் நிமித்தமாக எரேமியா 31ன் வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்மை நிலையாகி உள்ளன.

2. *புதிய உடன்படிக்கையானது மீளக்கட்டுவிக்கப்பட்ட மக்களைக் கொண்டு வந்துள்ளது.* மீளக்கட்டுவிக்கப்பட்ட "இஸ்ரவேலில்" தேவனுக்கென்று "எல்லா மக்களினங்களும்" ஒன்றுகூட்டப்படும் என்று எரேமியா முன்னுரைத்தார் (3:16-18). இயேசுவில் விசுவாசம் கொள்ளும் யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகிய இருசாராருமே, தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மக்களாக "புதிய இஸ்ரவேலில்" உள்ளனர் என்று புதிய ஏற்பாடு அறிவிக்கிறது. பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம். இந்த பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக" என்று விளக்கப்படுத்தினார் (கலாத்தியர் 6:15, 16). சுவிசேஷம் (இயேசுவைப் பற்றிய நற்செய்தி), "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" என்று ரோமர் 1:16ம் வசனம் வலியுறுத்துகிறது. பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபம், கிறிஸ்துவின் சிலுவையில் தேவன், யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் இடையில் இருந்த "பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து" "இருதிறத்தாரையும் ஒன்றாக்கி" னார் என்று அறிவிக்கிறது (எபேசியர் 2:14). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "புதிய இஸ்ரவேல்" என்பது யூதர்களையும் புறஜாதியாரையும் கொண்டிருக்கிறது. தேவன் யூதாவையும் இஸ்ரவேலையும் அரசியல் ரீதியான உயிர்ப்பொருள்களாக மீளக்கட்டுவிக்கவில்லை, ஆனால் அவர்களைக் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளும் புறஜாதியார்களையும் உள்ளடக்கும் ஆவிக்குரிய வீட்டின் பாகமாக மீளக்கட்டுவித்தார்.

3. *புதிய உடன்படிக்கை மக்களின் இருதயங்களில் எழுதப்பட்டு இருக்கிறது.* கிறிஸ்துவின் சுவிசேஷத்தின்கீழ், சரியானவற்றைச் செய்வதற்கான நமது நோக்கமானது, சட்டங்களின் தொகுப்பில் உள்ள நிபந்தனைகளைக் கொண்டுள்ளதாக இருப்பதில்லை, ஆனால் அது நமது வாழ்வின் சிறந்த வகைக்கு நம்மை அழைக்கும் தியாகம் செய்த அன்பான மீட்பரைப் பற்றிய அறிவைக் கொண்டுள்ளது. (வாழ்வின் அந்த வகையானது வேதவாக்கியங்களின் எழுத்துக்களில் அமைத்து வைக்கப்பட்டுள்ளது, எனவே நாம் இன்னமும் "பிரமாணங்களை" கொண்டுள்ளோம்.) தேவன் நமக்கு ஒரு "புதிய பிரமாணத்தை" (புதிய கட்டளைகளை) கொடுத்தது மாத்திரமல்ல; வாழ்வதற்கென்று அவர் நமக்கு ஒரு புதிய ஊக்கப்படுத்துதலையும் (கிறிஸ்துவின் சிலுவை) ஒரு புதிய வல்லமையையும் (பரிசுத்த ஆவியானவர்) கொடுத்துள்ளார். (காண்க நடபடிகள்

2:38; 5:32; ரோமர் 8:6-14; எபேசியர் 1:11-14.)

4. *புதிய உடன்படிக்கையின் தேவன், அதன் பகுதியாக உள்ள ஒவ்வொருவராலும் அறியப்பட்டு இருக்கிறார்.* பழைய உடன்படிக்கை ஆபிரகாமின் உடல்ரீதியான சந்ததியார் எல்லாரையும் உள்ளடக்கிற்று. இஸ்ரவேல் குலத்தில் பிறந்தார் என்பதாலேயே அவர் தேவனுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவராக இருப்பார் என்று அர்த்தப்படவில்லை. அது ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவுடனான நாட்டளவிலான உடன்படிக்கையாக இருந்தது. இதற்கு நேர்மாறாகப் புதிய உடன்படிக்கை, நாட்டளவிலானதாக இல்லாமல் இயல்பில் ஆவிக்குரியதாக உள்ளது. இயேசு தேவனுடைய குமாரனாக மற்றும் மேசியாவாக இருக்கிறார் என்று விசுவாசிக்காதவரையிலும், மனப்பூர்வமாக ஞானஸ்நானம் பெறுதல் மூலம் உடன்படிக்கையின் மக்களுடன் இணைவுகொள்ளப்படாத வரையிலும், எவரொருவரும் இந்தப் புதிய உடன்படிக்கையின் அங்கமாவதில்லை (காண்க நடபடிகள் 2:37, 38; கலாத்தியர் 3:26, 27; ரோமர் 6:3-5). உடன்படிக்கையின் மக்களுடைய அங்கமாக இருப்பதற்கு விசுவாசம் அத்தியாவசியமானதாக இருப்பதால், உடன்படிக்கைக்குள் இருக்கும் எவரொருவருக்கும் "கர்த்தரை அறிந்துகொள்ளும்படி" போதிப்பது அவசியமில்லை. (இது, உடன்படிக்கைக்கு *வெளியே இருக்கும்* மக்களுக்குப் போதிக்க வேண்டிய அவசியத்தை நீக்கிப்போடுவதில்லை; காண்க மத்தேயு 28:18-20.)

5. *புதிய உடன்படிக்கை ஒருக்காலும் முறித்துப் போடப்படாது.* கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையானது, ஒருக்காலும் முறித்துப் போடப்படாது என்ற வாக்குத்தத்தத்தைச் சாத்தியமான வகையில் எவ்வாறு நிறைவேற்றக்கூடும் என்று நாம் வியப்படையலாம். தேவன் நிச்சயமாகவே, உடன்படிக்கையின் தம்முடைய பாகத்தை நிறைவேற்றுவார். அவர் முதல் உடன்படிக்கையின் தமது பாகத்தைக் காத்துக்கொண்டார் - ஆனால் அதைக் காட்டிலும் அதிகமான விஷயம் உள்ளது. புதிய உடன்படிக்கையானது சபையினால் பூரணமாகக் காத்துக்கொள்ளப் பட்டுள்ளது என்று நாம் உரிமைகோர முடியுமா? இல்லை. விசுவாசிகளாக உள்ள தனிநபர்கள் புதிய உடன்படிக்கையைக் கைவிட்டு இனியும் அதன் அங்கமாக இராது போவதைத் தேர்ந்து கொண்டாலும் (கலாத்தியர் 5:2-4; எபிரெயர் 6), உடன்படிக்கையானது தன்னிலே முறிவுறாத நிலையில் நிலைத்துள்ளது. சபை என்பது கிறிஸ்துவுடனான தனது உடன்படிக்கையில் உண்மைத் தன்மையுடன் உள்ளது; அவ்வாறு இல்லை என்றால் அது சபையாக இராது.

6. *புதிய உடன்படிக்கை ஒருக்காலும் முடிவுறாது.* (புதிய ஏற்பாட்டில் புதிய உடன்படிக்கையைப் பற்றி அதிகமாகக் கூறும் புத்தகமான) எபிரெயருக்கு எழுதிய நிருபம் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்கிகிறது:

> பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் (எபிரெயர் 1:1, 2).

கிறிஸ்துவின் வருகையுடன் நாம், "கடைசி நாட்களில்" - அதாவது, தேவன் ஏற்படுத்தும் கடைசி உடன்படிக்கையின் ஏற்பாட்டிற்குள் - பிரவேசித்திருக்கிறோம். இயேசுவே தேவனுடைய "கடைசி வார்த்தையாக"

இருக்கிறார், மற்றும் இரட்சிப்பைக் கண்டறியும் எவரும் அதை அவர் மூலமாகவே செய்வார். இந்த உடன்படிக்கை இன்னொரு உடன்படிக்கையைக் கொண்டு இடம் மாற்றப்படாது. புதிய ஏற்பாட்டில், எபிரெயர் 8:8-12 வசனங்கள் மாத்திரமே, ஏரேமியா 31:31-34 வசனப்பகுதி முழுமையாக மேற்கோள் காண்பிக்கப்படும் ஒரே இடமாக உள்ளது, இது பழைய உடன்படிக்கை முடிக்கப்பட வேண்டும் என்ற (தேவனுடைய) விருப்பநோக்கத்தைக் காண்பிக்க எரேமியாவின் தீர்க்கதரிசனத்தைக் குறிப்பிடுகிறது: "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது" (எபிரெயர் 8:13). இதற்கு நேர்மாறாக, புதிய உடன்படிக்கை என்றென்றைக்கும் நிலைத்துள்ளது.

7. *புதிய உடன்படிக்கை முழுமையான மன்னிப்பைக் கொண்டுவருகிறது.* பழைய உடன்படிக்கையின்கீழ் கேட்டுக்கொள்ளப் பட்டிருந்த பலிசெலுத்துதல்கள் (விபரமான முறைமைகளுக்கு லேவியராகமத்தைக் காணவும்), இஸ்ரவேல் மக்களை அவர்களின் தேவனுடனான ஐக்கியத்தைப் பராமரிக்கக் கூடியவர்கள் ஆக்கியிருந்தாலும், அவர்களுக்கு ஏதோ ஒரு விஷயம் குறைவு பட்டிருந்தது. அவர்கள் பாவங்களை ஒரேதரமாக நீக்கிப்போடப் பலன் இல்லாதவர்களாக இருந்தனர். இதன் விளைவாக, அவர்கள் (பலிசெலுத்துதலை) திரும்பத் திரும்பத் தொடர்ந்து செய்ய வேண்டி இருந்தது. புதிய உடன்படிக்கையின் விஷயத்தில் ஒருவருடைய பாவங்கள் "இனியும் நினைக்கப்படாது" இருக்கக் கூடும் என்று எரேமியா உறுதிப்படுத்தியதற்கு மாறாக பழைய உடன்படிக்கையில் பலிசெலுத்துதல்கள் அந்தப் பாவங்களைத் தொடந்து நினைவூட்டுபவையாக இருந்தன. எபிரெயருக்கு எழுதிய நிருபம், சிலுவையில் இயேசு மரித்தது அது எல்லாவற்றையும் மாற்றியது என்று விளக்கப்படுத்துகிறது. அவர் முந்திய பலிகள் ஒருக்காலும் நிறைவேற்ற இயலாது இருந்த விஷயத்தை நிறைவேற்றும் ஒரு பலியை அளித்தார்:

> கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார் ...
>
> ஆகையால், முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார் (எபிரெயர் 9:11-15).
>
> அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே

> *இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார். பிரதானஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்தஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை. அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார். அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார் (எபிரெயர் 9:24-28).*

புதிய உடன்படிக்கையில் மறைவாக உள்ள கருத்துக்கள்

புதிய உடன்படிக்கையின் வருகையை அறிவித்த எரேமியா அதன் மறைவான கருத்துக்களைக் கூறாவிட்டாலும், புதிய ஏற்பாடு - குறிப்பாக எபிரெயருக்கு எழுதிய நிருபம் - அதைக் கூறுகிறது. உடன்படிக்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றமானது, இன்றைய நாட்களில் வேதாகமத்தை விளக்கப்படுத்துவதில் அடிக்கடி காணப்படாமல் விடப்படுகிறது; அவ்வாறு காணப்படாமல் விடப்படும்போது, அதிகமாகத் தவறாகப் புரிந்துகொள்ளுதல் விளையக்கூடும். இங்கு எபிரெயர் 8-10 அதிகாரங்களில் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ள, புதிய ஏற்பாட்டின் மறைவான கருத்துக்கள் சில உள்ளன:

1. *இயேசுவின் நிமித்தமாக, பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவம் ஒழிக்கப்பட்டது* (காண்க 7:1-8:13). இப்போது இயேசு நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார், நமக்கு வேறு யாரும் தேவையில்லை. உண்மையில் புதிய ஏற்பாடு, இப்போது நிலவுகிற சட்டப்பூர்வமான ஒரே ஆசாரியத்துவம் கிறிஸ்துவினுடையது மாத்திரமே என்று போதிக்கிறது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாமே, "ராஜரீகமான ஆசாரியக்கூட்டம்" என்று அழைக்கப்படுகிறோம் (1 பேதுரு 2:9, 10) மற்றும் சிலவேளைகளில் "எல்லா விசுவாசிகளின் ஆசாரியக்கூட்டம்" என்று அழைக்கப்படுகிறோம். 1 தீமோத்தேயு 2:5ல் பவுல், "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே" என்று கூறியுள்ளபடி, கிறிஸ்துவின் பரிந்து பேசுதலினால், நமக்கு இனியும் மனிதரீதியான பரிந்துரையாளர்கள் தேவையில்லை.

2. *இயேசுவின் நிமித்தமாக, பழைய உடன்படிக்கையின்படியான ஆராதனை இடம் மாற்றப்பட்டுள்ளது* (காண்க 9:1-11). கிறிஸ்துவின் மூலமாக ஆராதனை என்பது குறிப்பிட்ட ஏதோ ஒரு இடத்தில் செய்யப்பட வேண்டியதில்லை. (வனாந்தரத்தில் இஸ்ரவேலர் தூக்கிச் சென்ற பரிசுத்த ஸ்தலமான) ஆசரிப்புக் கூடாரமும் எருசலேமில் இருந்த தேவாலயமும், இஸ்ரவேல் மக்களின் பலிமுறைமையில் மைய இடங்களாக இருக்கையில், கிறிஸ்தவ விசுவாசமானது பூகோளரீதியான எந்த இடத்தையும் மையங்கொண்டிருப்பதில்லை. மாறாக அது கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து அவருக்குக் கீழ்ப்படிபவர்களின் இருதயத்தில் நிலவுகிறது (யோவான் 4:21-24). கிறிஸ்தவர்கள் எங்கு வேண்டுமானாலும் எல்லா

இடங்களிலும் ஆராதிக்க முடியும்.

3. கிறிஸ்துவின் நிமித்தம், பழைய உடன்படிக்கையின் பலிகள் இனியும் செல்லுபடியாவதில்லை (காண்க 9:12-10:18). தற்காலிகப் பலிகளின் குறைபாடுகள், பரிபூரணமான, எல்லாக்காலத்திற்கும் ஒரேமுறையிலான இயேசுவின் பலியினால் நிவிர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. உலகத்தின் பாவங்களுக்காக "தேவனுடைய ஆட்டுக்குட்டியானவர்" பலியிடப்பட்டுள்ள இந்த வேளையில், பழைய பலிகள் சாத்தியமானவகையில் எந்த மதிப்பையாவது கொண்டிருக்கக் கூடுவது எப்படி?

4. கிறிஸ்துவின் நிமித்தம், புதிய உடன்படிக்கையின் வேதவாக்கியங்கள் பழைய உடன்படிக்கையின் வேதவாக்கியங்களுக்கும் மேலாக முக்கியத்துவம் பெறவேண்டும். இந்தக் கொள்கையானது, எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் வெளிப்படையாகக் கூறப்படாது இருக்கையில், இது நிச்சயமாகவே மறைமுகமாக உணர்த்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் முன்னிழலிடப் பட்டது என்ன என்பதன் உண்மையான அர்த்தம், தனிச்சிறப்பு மற்றும் அவற்றின் நிறைவேற்றம் ஆகியவற்றைப் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் விளக்கப்படுத்தினர் என்ற உண்மையே, அவற்றிற்கு (புதிய ஏற்பாட்டு வேதவசனங்களுக்கு) நாம் நெருங்கிய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று காண்பிக்கிறது. ஏவுதல் பெற்ற இந்த விளக்கங்கள் நமக்குப் புதிய ஏற்பாட்டைப் புரிந்துகொள்வதில் உதவிகரமாக இருப்பது மட்டுமின்றி, குறிப்பாகப் பழைய ஏற்பாட்டைப் புரிந்துகொள்வதில் உதவிகரமாக இருப்பது மட்டுமின்றி, குறிப்பாகப் பழைய ஏற்பாட்டைத் தக்க வகையில் விளக்கப்படுத்தவும் உதவுகின்றன. புதிய உடன்படிக்கை என்ற உருப்பெருக்கியின் மூலமாக வாசிக்கும்போது மட்டுமே நாம் பழைய உடன்படிக்கையைப் புரிந்துகொள்ள இயலும்.

தேவனுடைய சித்தம் பற்றிய அவரது வெளிப்படுத்துதல் வளர்நிலை கொண்டதாக இருந்துள்ளது; அவர் தமது படைப்பிற்காகத் தாம் கொண்டுள்ள திட்டங்கள் மற்றும் இலக்குகளைப் படிப்படியாக விரித்துரைத்துள்ளார். அதுபோன்றே, வேதாகமத்திற்குள் காணப்படுகிற எழுதப்பட்ட வெளிப்படுத்துதலும் படிப்படியானதாக இருந்துள்ளது. இது, பழைய ஏற்பாட்டில் மிகவும் முக்கியமானவையாக இருந்த (ஆசாரியத்துவம் மற்றும் பலிசெலுத்தும் முறைமை போன்ற) சில விஷயங்கள், கிறிஸ்துவின் வருகையினுடைய வெளிச்சத்தில் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும், அவைகள் கிறிஸ்தவர்களால் வெறுமனே தழுவப்படலாகாது என்று அர்த்தப்படுகிறது. எவ்வகையிலும் இது, இவைகள் முக்கியத்துவம் கொண்டிருப்பதில்லை என்று கருத்துத் தெரிவிப்பதில்லை, ஏனெனில் முன்பு எழுதப்பட்டவைகளெல்லாம் "நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" என்று புதிய ஏற்பாட்டு நமக்கு கூருகிறது (ரோமர் 15:4; 1 கொரிந்தியர் 10:6-11). அவற்றைப் படிப்பதனால் நாம் அதிகமானவற்றைக் கற்றுக்கொள்ள முடியும், மற்றும் அவைகள் நமக்குத் தேவனுடைய வார்த்தையாகவே இருக்கத் தொடருகின்றன. அவைகள் புதிய ஏற்பாட்டில் செய்யப்பட்டதாக நாம் கண்டறியும், இயேசு என்ற தேவனுடைய மேசியாவின் வருகையின் வெளிச்சத்தில் விளக்கப்படுத்தப்பட வேண்டும்.

பழைய உடன்படிக்கை, தேவனுடைய மக்களான இஸ்ரவேலருக்கு ஒரு அற்புதமான கொடையாக இருந்தது. அது அவர்களைத் தேவனுக்குள்

ஒரு உடன்படிக்கையின் உறவினுள் அழைப்பதற்கு அவருடைய பகுதியில் செய்யப்பட்ட கிருபையும் இரக்கமும் நிறைந்த ஒரு செயலாக இருந்தது. அவர்களுக்கு அவர் கொடுத்திருந்த இந்த உயர்வான அழைப்பிற்கு ஏற்றபடி வாழ அவர்கள் தவறினர் என்பது எவ்வளவு கவலைக்குரியதாக உள்ளது! தேவன் கிருபையும் இரக்கமும் உள்ளவராக இருப்பதால், அவர் தமது மக்களை அந்த நிலையிலேயே விட்டுவிட மனவிருப்பம் இல்லாதிருந்தார். அவர் ஒரு புதிய உடன்படிக்கையையும் அதைத் தமது குமாரனுடைய பலியின் மூலமாக நடப்புக்குக் கொண்டுவருவதையும் வாக்குத்தத்தம் செய்தார். இப்போது கிறிஸ்தவர்கள், நமக்குத் தேவன் இவ்வளவு கிருபையாகக் கொடுத்துள்ள உடன்படிக்கையின் மூலமாக அவருக்கு உண்மையுள்ளவர்களாக வாழும்படியான சிலாக்கியத்தையும் அறைகூவலையும் கொண்டுள்ளோம்.

பழைய & புதிய "ஏற்பாடுகள்"

நமது வேதாகமங்கள் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்று இரு முதன்மைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவினையானது, ஏரேமியாவினால் உரைக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் நிலைநாட்டத்துடன் நேரடியாக உறவுபட்டுள்ளது மற்றும் இது எபிரெயருக்கு எழுதிய நிருபம் (காண்க 9:15) போன்ற புதிய ஏற்பாட்டு எழுத்துக்களினால் உறுதிப்படுத்தப்பட்டும் இருக்கிறது. பழைய ஏற்பாடு, பழைய உடன்படிக்கை நிலைநாட்டப்படுதல் மற்றும் அந்த உடன்படிக்கையின் மூலமாகத் தேவன் இஸ்ரவேல் மக்களுடன் செயல்பட்டவிதம் ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைக்கையில், புதிய ஏற்பாடு, இயேசு கிறிஸ்துவினால் கொண்டுவரப்பட்ட புதிய உடன்படிக்கையின் இருப்பைப்பற்றி விவரிக்கிறது.

திட்டவட்டமாகப் பேசுவதென்றால், வேதாகமத்தின் இரு பிரிவுகளும் "பழைய உடன்படிக்கை" மற்றும் "புதிய உடன்படிக்கை" என்றே அழைக்கப்பட வேண்டும். வேதாகமம் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டபோது, (*diatheke*, "உடன்படிக்கை" என்ற) கிரேக்க வார்த்தையை மொழிபெயர்ப்பதற்கு *testamentum* ("ஏற்பாடு") என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. இதற்கு இணையான ஆங்கில வார்த்தை "testament" என்பதாகும் (தமிழில் இது "ஏற்பாடு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). இதன் விளைவாக, நாம் "பழைய ஏற்பாடு" மற்றும் "புதிய ஏற்பாடு" என்று பேசத் தொடருகிறோம், இது வேதவசனங்கள் விவரித்து விளக்குகிற இரு உடன்படிக்கைகளை அர்த்தப்படுத்துகிறது. மொழிபெயர்ப்பின் செயல்பாட்டில், தேவனால் நிலைநாட்டப்பட்ட இரு உடன்படிக்கைகளின் மீதான சில வலியுறுத்தங்களை நாம் தவறவிடுகிறோம்; ஆனால் வேதாகமத்தின் எழுத்துக்களின் மீது நாம் ஜாக்கிரதையாகக் கவனம் செலுத்தினால், அவைகள் இதைப் போதிய அளவுக்குத் தெளிவாக்குகின்றன.

தேவனால் "மறக்க" முடியுமா?

புதிய உடன்படிக்கையின்கீழ் தேவன், "... அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." என்று வாக்குத்தத்தம் செய்தார் (எரேமியா 31:34). மறத்தல் என்பதை ஒரு கடன், ஒரு பலவீனம், தகவலைத் திரும்ப நினைத்துப் பார்க்க இயலாத மனத்திறன் குறைவு என்ற வகையில் நாம் நினைக்கிறோம்.

அப்படி என்றால், பரிபூரணமான மற்றும் சர்வ வல்லமையுள்ள நமது தேவன் பாவங்களை "மறக்க" முடிவது எவ்வாறு?

உண்மையில் வேதாகமமானது, சில பொருட்களை எவ்விடத்தில் வைத்தோம் என்பதை நீங்களும் நானும் மறப்பது போன்று தேவன் பாவத்தை மறக்கிறார் என்று போதிப்பதில்லை. மாறாக, நமது பாவங்களைத் தேவன் "மறக்கிறார்" என்ற வகையில், "மறத்தல்" என்பது நமது பாவங்களை இனியும் நமக்கு எதிராகப் பிடித்துக் கொண்டு இருப்பதில்லை என்றே அர்த்தப்படுகிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டுமே காண்பிக்கிறபடி, தேவன் நமது தோல்விகள் யாவற்றையும் நன்கு நினைவில் வைத்துள்ளார்; ஆனால் கிறிஸ்துவின் மூலமாக மன்னிப்பு வருவதால், அவைகள் (தோல்விகள்) ஒருக்காலும் நடக்காததவை போன்றுள்ளது.

தேவனைப் போன்று நாமும் "மன்னித்து மறக்க" வேண்டும் என்று மக்கள் கூறுவதை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம், இது மற்றவர்கள் நமக்கு எதிராகச் செய்யும் தவறுகளை நாம் இனியும் நினைவில் கொண்டிராத திறனை நாம் கொண்டிருக்க வேண்டும் என்று மறைமுகமாகக் குறிப்பிடுகிறது; ஆனால் நாம் உண்மையிலேயே மன்னித்திருந்தால், நாம் மன்னித்தவற்றைத் திரும்ப நினைவுக்குக் கொண்டுவராதவர்கள் போன்று செயல்பட்டு அந்தக் தவறுகளுக்கு மற்றவர்களைத் தொடர்ந்து கணக்கு ஒப்புவிப்பவர்களாக நிறுத்தி வைப்பதைச் செய்ய மறுத்துவிடுகிறோம். இந்தக் கருத்தில் நாம், தேவனைப் போன்று "மன்னித்து மறப்பவர்களாக" இருக்கிறோம், ஏனெனில் அவர் மிகச்சரியாக இதையே செய்கிறார்.

> *இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்டபின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா? அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே (எபிரெயர் 10:1-4).*

இயேசுவின் வருகை மற்றும் சிலுவையின் மீது அவரது மரணம் ஆகியவற்றுடன், எரேமியா 31ன் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து புதிய உடன்படிக்கையின் கீழ் உள்ளவர்களின் பாவங்கள் முற்றிலுமாக மன்னிக்கப்பட்டு இனியும் நினைவில் வைக்கப்படாது உள்ளன. இயேசுவின் வரலாறு "நற்செய்தி" என்று அழைக்கப்படுவதில் வியப்பு எதுவும் இல்லை!

8

தாவீதின் குமாரன்/ ஆபிரகாமின் குமாரன்

(மத்தேயு 1)

தேவன் உங்களுக்கு, இயேசுவின் வரலாற்றைக் கூறுவதற்காகப் புதிய ஏற்பாட்டை எழுதும் பணிப்பொறுப்பைக் கொடுத்திருந்தால், நீங்கள் எவ்வாறு தொடங்கியிருப்பீர்கள்? அனேகமாக நீங்கள் மத்தேயு தொடங்கிய விதத்தில் தொடங்கியிருக்க மாட்டீர்கள், அவர் நாற்பத்தி இரண்டு தலைமுறைகள் பற்றிக் கூறி முடிக்கும் பதினேழு வசனங்கள் கொண்ட பரம்பரைப் பட்டியல் (முன்னோர்களின் பட்டியல்) கொண்டு அதைத் தொடங்கினார். மத்தேயு 1:1-17 வசனங்கள் வேதாகமம் முழுவதிலும் மிகக் குறைவாக வாசிக்கப்பட்டுள்ள வேதவசனப் பகுதிகளில் ஒன்றாக உள்ளது. நம்மில் பெரும்பாலானோர் 18ம் வசனத்திற்குத் தாவிச்சென்று விடுகிறோம் மற்றும் இந்த முதல் பதினேழு வசனங்கள் அங்கு இல்லை என்பது போன்று செயல்படுகிறோம்.

வேதாகமரீதியான வெளிப்படுத்துதல் எல்லாவற்றின் சந்தர்ப்பப் பொருளில் காணும்போது, மத்தேயு 1ம் அதிகாரம் புதிய ஏற்பாட்டை எழுதத் தொடங்குவதற்குப் *பூரணமான* வழியாக உள்ளது. மத்தேயு சுவிசேஷம் புதிய ஏற்பாட்டில் முதலாவதாக இருப்பதற்குக் காரணம், அது முதலாவதாக எழுதப்பட்டது என்பதல்ல. பவுலின் நிருபங்கள் யாவையும் மத்தேயு சுவிசேஷம் எழுதப்படுவதற்கு முன்னரே எழுதப்பட்டு விட்டன. நமது புதிய ஏற்பாடானது எழுதப்பட்ட *வரிசைமுறைப்படி* அமைக்கப்படவில்லை; அது *தர்க்கப்பொருத்தமான* வரிசையில் அமைக்கப்பட்டுள்ளது. முதலாவதாக நான்கு சுவிசேஷ நூல்களும் உள்ளன, இவைகள் இயேசுவின் வரலாற்றைக் கூறுகின்றன. பின்பு இயேசுவினால் தொடங்கப் பட்ட இயக்கத்தின் வரலாற்றைக் கூறும் நடபடிகள் புத்தகம் வருகிறது. பின்பு சபையாக இருத்தல் என்பது அர்த்தப்படுத்துவது என்ன என்பதைப் பற்றிக் குறிப்புகள் தருவதற்கு, சபைகளுக்கும் தனிநபர்களுக்கும் எழுதப்பட்ட பல்வேறு நிருபங்கள் வருகின்றன. கடைசியாக, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது, இயேசுவை மகிமைப்படுத்தப்பட்ட மற்றும் வெற்றிபெற்ற தேவனுடைய ஆட்டுக்குட்டியாக, தமது மக்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லத் திரும்பவும் வருபவராக முன்னிறுத்துவதன் மூலம் எல்லாவற்றையும் ஒரு மாபெரும் உச்சக்காட்சிக்குக் கொண்டுவருகிறது.

புதிய ஏற்பாடு இந்தத் தலைமுறை அட்டவணையுடன் தொடங்குவது ஏன்? ஏனென்றால் இது பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் ஒரு பூரணமான பாலத்தை அளிக்கிறது. மத்தேயு சுவிசேஷத்தை முதன் முதலில் வாசித்தவர்களுக்கு (அவர்கள் சந்தேகமின்றிப் பெரும்பாலும் யூதர்களாக

இருந்தனர்), இந்தத் தலைமுறை அட்டவணையானது பெயர்களின் வெறும் பட்டியலாக மாத்திரம் இருக்கவில்லை. மாறாக, தாமஸ் G. லாங் அவர்கள் சுட்டிக்காண்பித்தபடி, இது "வரலாற்றுகளின் பாடல் திரட்டாக, ஒவ்வொரு பெயரும் நினைவுகளின் வெளி ஓட்டத்தைத் துண்டுவதாக" உள்ளது.[1] எபிரெய வேதவசனங்களைக் கற்பதில் வளர்ந்திருந்த வாசகர்களுக்கு, "ஆபிரகாம்," "போவாஸ்," "உரியா," "செருபாபேல்" மற்றும் பிற பெயர்களைக் குறிப்பிடுவதில் மாத்திரமே, அவர்களுடன் தொடர்புடைய பழைய ஏற்பாட்டு வரலாறுகளை அவர்களின் மனதிற்குக் கொண்டுவருவதாக இருந்தது. இந்த "குடும்ப மரம்" (பெயர் அட்டவணை), சுருக்கமான வடிவத்தில் குடும்ப வரலாறுகளின் சேகர ஏடு போன்ற ஒன்றாக உள்ளது - மற்றும் இந்தக் குடும்ப வரலாறு முழுவதும், இதன் உச்சக்காட்சியும் இதில் உள்ள யாவற்றின் நிறைவேற்றமுமான இயேசுவை நோக்கி வழிநடத்துவதாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மத்தேயு 1ம் அதிகாரத்தில், தலைமுறை அட்டவணையைக் காட்டிலும் அதிகமான விஷயங்களும் உள்ளன. தலைமுறை அட்டவணையைத் தொடர்ந்து, 18 முதல் 25 வரையுள்ள வசனங்கள், இயேசுவினுடைய பிறப்பின் வரலாற்றைக் கூறுகின்றன (இந்த வியத்தகு நிகழ்வைப் பற்றிப் புதிய ஏற்பாட்டில் வேறொரு இடமான லூக்கா 2ம் அதிகாரத்துடன் சேர்ந்து, இரு விபரங்கள் மாத்திரம் உள்ளன). தலைமுறை அட்டவணையும் பிறப்பு வரலாறும் ஒன்று சேர்ந்து, மத்தேயு சுவிசேஷத்திலும் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியிலும் கூறப்பட்ட எல்லாவற்றின் தொகுப்புரையை நமக்குக் கொடுக்கிறது.

குறிப்பாக, மத்தேயு 1ம் அதிகாரம் நமக்கு, இயேசுவைப் பற்றியும் அவர் யாராக இருக்கிறார் என்பதைப் பற்றியும் முக்கியமான சத்தியங்களைக் கூறுகிறது.

இயேசு, இஸ்ரவேலின் மேசியா

மத்தேயு 1:1ம் வசனம், "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" அன்று தொடங்குகிறது. "கிறிஸ்து" என்பது இயேசுவின் பெயரின் கடைசிப்பாகம் என்று நாம் நினைக்கும் அளவிற்கு, "இயேசு கிறிஸ்து" என்ற பெயருடன் நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். அது அவ்வாறு பயன்படுத்தப்பட்டிருந்தாலும், அதன் தோற்றகால விருப்பநோக்கம் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

"கிறிஸ்து" என்ற பெயர், *christos* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது, "Messiah" என்பது இதற்குச் சமமான எபிரெயச் சொற்றொடராக உள்ளது. ஆகையால், "இயேசு கிறிஸ்து" என்பது ஒரு பெயர் என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது; இது விசுவாசத்தின் அறிக்கையாக உள்ளது. புதிய ஏற்பாட்டின் சில மொழிபெயர்ப்புகளில் (KJV; ASV; NIV; ESV) மத்தேயு 1:1ல் "இயேசு கிறிஸ்து" என்று மாத்திரம் உள்ளது; ஆனால் மற்ற மொழிபெயர்ப்புகள் (NASB; NRSV; NLT) "இயேசு கிறிஸ்து" என்று கூறுதலானது "மேசியாவாகிய இயேசு" என்று கூறுதலாகவே உள்ளது என்பதை நமக்கு நினைவூட்டும்படி, *christos* என்பதை "மேசியா" என்று மொழிபெயர்த்துள்ளன. (16 முதல் 18 வரையிலான வசனங்களை, முதலில் "மேசியா" என்ற வார்த்தையையும் பின்பு "கிறிஸ்து" என்ற வார்த்தையையும் பயன்படுத்தி, இது எவ்வாறு மாறுபட்டு ஒலிக்கிறது என்பதைக் காண்பதற்கு, உரக்க வாசிக்க

முயற்சி செய்யுங்கள்.)

"மேசியா" என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? நேரடியான அர்த்தத்தில் இது, "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று அர்த்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் அரசர்களும் தீர்க்கதரிசிகளும் தேவனுடைய அலுவல்ரீதியான பிரதிநிதிகளாக இருப்பதற்காக, அவரது நாமத்தில் பேசுவதற்காக, அவரால் அபிஷேகம் பண்ணப்பட்டனர். "மேசியா" என்ற சொற்றொடர், 2 சாமுவேல் 7ம் அதிகாரத்தில் தாவீதின் அரியணையில் வீற்றிருந்து இஸ்ரவேல் மக்களை என்றென்றைக்கும் அரசாளுவார் என்று தாவீதுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட, நீண்ட காலம் எதிர்பார்க்கப் பட்டிருந்த, குறைவற்ற அரசருக்குப் பயன்படுத்தப்பட்டதாக இருந்தது. ஒரு விடுதலையாளர் பற்றிய இந்த நம்பிக்கை, ஏசாயா போன்ற தீர்க்கதரிசிகளால் திரும்பத் திரும்ப உரைக்கப்பட்டது, இது தேவன் ஒருநாளில் இஸ்ரவேல் மக்களுக்கு "இராஜ்யத்தைத் திரும்பக் கொடுப்பார்" என்ற வாக்குத்தத்தமாகக் கூறப்பட்டது, இதை அவர்கள் தங்களை அடக்கியாண்ட விரோதிகளைத் தோல்வியுறச் செய்யும் வாக்குத்தத்தம் என்று புரிந்துகொண்டிருந்தனர்.

இயேசுவானவர், ஆபிரகாம் மற்றும் தாவீது ஆகியோரின் வம்சவழியில் வந்தவராக இருந்தார் என்று காண்பிப்பதும், வாக்களிக்கப்பட்ட மேசியா என்ற வகையில் அவரது அடையாளத்தை நிலைநாட்டுவதுமே, மத்தேயு சுவிசேஷத்தில் கூறப்பட்ட தலைமுறை அட்டவணையின் நோக்கமாக உள்ளது. ஆபிரகாம் தலைமுறை வரிசையில் தாவீதிற்கு முற்பட்டவராக இருந்தாலும், ஆங்கில வேதாகமத்தில், மத்தேயு 1:1ல் தாவீதின் பெயரானது ஆபிரகாமின் பெயருக்கு முன்னதாக வருகிறது. கருத்து தெளிவானதாக உள்ளது: இயேசுவானவர், தாவீதின் வழிவந்த மேசியாவாக, என்றென்றைக்கும் அரசாளுவார் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்த சந்ததியாக இருக்கிறார்.

தாவீதுக்கும் இஸ்ரவேல் முழுவதற்கும் தேவனுடைய வாக்குத்தத்தமானது இயேசு என்ற நபரில் நிறைவேற்றப் பட்டிருந்தது என்பதே மத்தேயு சுவிசேஷத்தின் செய்தியாக உள்ளது. அதனால்தான் மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்கள் (இவைகள் "ஒப்பீட்டு" சுவிசேஷங்கள் என்று அழைக்கப்படுகின்றன), "தேவனுடைய இராஜ்யம்" பற்றிய இயேசுவின் போதனைகளை வலியுறுத்துகின்றன: இயேசு குறைவற்ற அரசராக இருக்கிறார், அவரது வருகையுடன் பூமியின் மீது தேவனுடைய ஆளுகை தொடங்கியது. "அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்" (மத்தேயு 4:17). காத்திருந்த காலம் முடிவடைந்தது. மேசியா/அரசர் வந்திருக்கிறார்! அதனால்தான் அவரது வருகையின் வரலாறு "சுவிசேஷம்" ("நற்செய்தி") என்று அழைக்கப்படுகிறது - இது தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றத்தின் காலத்தினுடைய நற்செய்தியாக உள்ளது.

இயேசு, உலகத்தின் இரட்சகர்

இயேசு, இஸ்ரவேலின் மேசியாவாக மாத்திரம் இருந்திருந்தால், அது யூதரல்லாத மக்களுக்குக் குறிப்பான நற்செய்தியாக இருந்திராது. இருப்பினும் அவர் மக்களின் ஒரு குழுவின் விடுதலையாளர் என்பதைக் காட்டிலும் அதிகமானவராக - இன்னும் அதிகமானவராக - இருக்கிறார் என்று மத்தேயு

நமக்குக் கூறுகிறார். அவர் உலகத்தின் "இரட்சகராகவும்" இருக்கிறார்.

1:21ல் கர்த்தருடைய தூதர் யோசேப்பினிடத்தில், மரியாளின் குழந்தைக்கு "இயேசு" என்று அவர் பெயரிட வேண்டும், "ஏனெனில் அவர் தமது ஜனங்களின் *பாவங்களை நீக்கி* அவர்களை இரட்சிப்பார்" என்று கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). "இயேசு" என்பது "கர்த்தர் இரட்சிக்கிறார்" அல்லது "கர்த்தர் இரட்சிப்பாக இருக்கிறார்" என்று அர்த்தப்படுகிற "Joshua" (அல்லது "Yehoshua") என்ற எபிரெயப் பெயரின் கிரேக்க வடிவத்தில் இருந்து வந்துள்ளது. மேசியாவுக்கு இந்தப் பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டது ஏன்? ஏனென்றால் அவர் "அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பவராக" இருந்தார். இயேசு, ரோம அடக்குமுறையில் இருந்து மக்களினத்தை விடுவிப்பவராக மாத்திரம் இருக்கவில்லை; அவர் ரோமாபுரியைக் காட்டிலும் அதிகமாக சாவுக்கேதுவாக ஒரு விரோதியிடத்தில் இருந்து எல்லா மக்களையும் இரட்சிப்பவராக இருந்தார்.

தலைமுறை அட்டவணையானது தன்னிலேயே இந்த இரட்சிப்பின் உலகளாவிய பண்பை (அதாவது இயேசு யூதர்களுக்கு மாத்திரமல்ல ஆனால் எல்லாப் பாவிகளுக்கும் உரியவர் என்ற கருத்தை) வலியுறுத்துகிறது. அந்த நாற்பத்தி இரண்டு தலைமுறையின் பட்டியலைக் கண்ணோக்குவதில் நமக்கு, பாவத்தின் அதிர்ச்சியூட்டக் கூடிய சில வரலாறுகள் நினைவூட்டப்படுகின்றன. தாவீது தாமே, விபசாரம், கொலை மற்றும் பொய்கூறுதல் என்ற பாவத்தில் விழுந்தவராக இருந்தார் (2 சாமுவேல் 11; 12). இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களின் முற்பிதாவான யாக்கோபு வஞ்சிப்பவராக இருந்தார் - இவருடன் வர்த்தகம் செய்ய எவரொருவரும் ஒருக்காலும் விரும்ப மாட்டார்கள் (ஆதியாகமம் 27-31)! உலகில் வாழ்ந்தவர்களிலேயே மிகவும் ஞானமுள்ளவரான சாலொமோன், தமது பிந்திய ஆண்டுகளில் நம்ப இயலாத அளவுக்கு மதியீனரானார், அவர் அந்நியப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு, இஸ்ரவேலில் விக்கிரக ஆராதனையை அறிமுகப்படுத்த அவர்களை அனுமதித்தார் (1 இராஜாக்கள் 11:1-8). இஸ்ரவேலின் மிகமோசமான அரசர்களில் ஒருவரான மனாசே, தேவாலயத்தின் உள்ளேயே விக்கிரக ஆராதனைக்கென்று பலிபீடங்களை கட்டச் செய்தார் (2 இராஜாக்கள் 21:1, 4-6). இருந்தபோதிலும் இவர்கள் யாவரும் இயேசுவின் குடும்ப மரத்தில் உள்ளனர், இது அவர் "உண்மையான பாவிகளை" அவர்களின் பாவங்களில் இருந்து இரட்சிக்க வந்தார் என்பதைச் சுட்டிக்காட்டும் குறிப்பாக உள்ளது. (இது, மத்தேயு இயேசுவுக்கு செயற்கையாக ஒரு "தூய" வம்சவழியைக் கொடுப்பதற்காக அதை "சுத்தப்படுத்த" வில்லை என்பதால், அவர் தலைமுறை அட்டவணையை "புனைந்துரைக்க" வில்லை என்பதையும் சுட்டிக்காட்டும் குறிப்பாக உள்ளது.)

முன்னோர்களின் அட்டவணையானது இரு பாலரையும் உள்ளடக்கியதாகவும் இருக்கிறது. இந்தப் பட்டியலில் ஐந்து பெண்களின் பெயர்கள் உள்ளன: தாமார், ராகாப், ரூத், பத்சேபாள் மற்றும் மரியாள். யூதர்களின் தலைமுறை அட்டவணையில் பெண்களின் பெயர்களை உள்ளடக்குதல் என்பது அறியப்படாததாக இருக்கவில்லை, ஆனால் அது எழுதப்படாத சட்டமாக இருக்கவில்லை. (உதாரணத்திற்கு, ஆதியாகமம் 4:17-22ஐ ஆதியாகமம் 10:1-20 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.) ஐந்து பெண்களை உள்ளடக்கியதின் மூலம்

மத்தேயு பின்வரும் கருத்தைத் தெளிவாக்கினார்; இயேசு, ஆண்கள் பெண்கள் ஆகிய இருசாராருக்கும் இரட்சகராக இருப்பதற்கென்று வந்தார். அவர், தேவனுடைய திட்டத்தை பலன்தருவதாகக் கொண்டுவருவதில் பெண்களின் இன்றியமையாத பணிப்பொறுப்புகளை ஒப்புக்கொள்ளவும் செய்தார்.

இத்துடன் கூடுதலாக, தலைமுறை அட்டவணையானது நோக்கெல்லையில் பன்னாட்டுக்கு உரியதாக இருக்கிறது, ஏனெனில் இதில் குறிப்பிடப் பட்டுள்ள ஐந்து பெண்களில் நால்வர் இஸ்ரவேலைச் சேர்ந்தவர்களாக இருக்கவில்லை. தாமார் என்பவள், யூதா தமது மகனுக்குத் திருமணம் செய்விக்கத் தேர்ந்துகொண்ட கானானியப் பெண்ணாக இருந்தாள். ராகாப், ஒரு கானானிய விபசாரியாக இருந்தாள். ரூத், இஸ்ரவேல் குடும்பத்தில் திருமணம் செய்துகொள்ளப்பட்ட ஒரு மோவாபியப் பெண்ணாக இருந்தாள். பத்சேபாளுடன் தாவீது விபசாரத்தில் ஈடுபட்டார், இவள் ஏத்தியனாகிய உரியாவின் மனைவியாக இருந்தாள், எனவே அவள் ஏத்தியப் பெண்ணாக இருந்தாள் என்பதில் சந்தேகம் இல்லை. தலைமுறை அட்டவணையில் கூட நாம், மத்தேயு சுவிசேஷத்தின் முடிவுப் பகுதியில் உள்ள "பிரதான கட்டளையின்" முன்சுவையைக் கண்டறிகிறோம்: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், *சகல ஜாதிகளையும்* சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" (28:19, 20அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

மீண்டுமாக, மத்தேயுவின் கருத்து தெளிவாக உள்ளது: இயேசு எல்லாருக்கும் இரட்சகராக - ஆண் அல்லது பெண், யூதர் அல்லது புறஜாதி என்ற - எல்லாரிலும் *பாவிகளான* நம் யாவருக்குமானவராக இருக்கிறார்.

இயேசு, தேவனும் மனிதனுமானவர்

இயேசு உற்பவித்தல் மற்றும் பிறத்தல் ஆகியவற்றின் வரலாற்றை எடுத்துரைப்பதில், இயேசு யோசேப்பின் உடல்ரீதியான மகன் அல்ல என்பதை மத்தேயு வலியுத்தினார். மரியாளுக்கும் யோசேப்புக்கும் ஏற்கனவே "திருமணம் நியமிக்கப்பட்டு" இருந்தாலும் (திருமணம் செய்துகொள்ளலாம் என்று உறுதி செய்தல்), "அவர்கள் கூடிவரும் முன்பே" - அதாவது, அவர்களுக்குள் உடல் உறவு நிகழ்வதற்கு முன்பே - மரியாள் கர்ப்பமானாள் (1:18). 25ம் வசனமானது, "அவன் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து," என்று வலியுறுத்துகிறது. மேலும் மரியாள் பரிசுத்த ஆவியானவரின் செயலினால்தான் கர்ப்பமானாள் என்று மத்தேயு இருமுறை கூறுகிறார் (வசனங்கள் 18, 20), மற்றும் அவள் ஒரு கன்னிப்பெண்ணாக இருந்தாள் என்று 23ம் வசனம் குறிப்பாகக் கூறுகிறது. (இயேசு யோசேப்பின் உடல்ரீதியான மகன் அல்ல என்ற உண்மையானது தலைமுறை அட்டவணையின் சட்டப் பூர்வப்பண்பைப் பாதிப்பதில்லை. தத்து எடுக்கப்பட்ட ஒரு மகன் தன்னைத் தத்தெடுத்த தந்தைக்குச் சட்டப்பூர்வமான வாரிசு ஆகிறார்.) மத்தேயு சுவிசேஷத்தின்படி, இயேசுவின் உற்பவமும் பிறப்பும், தீர்க்கதரிசியான ஏசாயாவின் மூலமாகக் கர்த்தர் உரைத்திருந்ததை "நிறைவேற்றம்" அடையச் செய்வதற்காக, இந்த அசாதாரண முறையில் நடைபெற்றன: "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார்

என்று அர்த்தமாம்" (ஏசாயா 7:14). வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், தேவன் தமது குமாரனைத் தெய்வீகமானவராகவும் மனுஷீகமானவராகவும் இந்த உலகத்திற்குக் கொண்டு வருவதற்கு இவ்வழியைத் தேர்ந்துகொண்டார். இயேசு 100 சதவிகிதம் மனிதராகவும் 100 சதவிகிதம் தேவனாகவும் இருந்தார் ஆனால் அவர் "பாதியும் பாதியுமாக" அல்லது சில தெய்வீகப் பண்புகளைக் கொண்ட ஒரு மனிதராக இருக்கவில்லை - என்று புதிய ஏற்பாடு தொடர்ந்து அறிவிக்கிறது. எல்லைக்கு உட்பட்ட நமது சிந்தைகளுக்கு, அது கணக்கில் அடங்குவது இல்லை, ஆனால் அது தேவனுடைய இயல்பின் அற்புதத்தினுடைய ஒரு பகுதியாக உள்ளது.

இயேசு, வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த ஒரு உண்மையான மனிதராக இருந்தார் மற்றும் அவர் குறிப்பிட்ட மனித முன்னோர்களைக் கொண்டிருந்தார் என்று வலியுறுத்துதல், இந்தத் தலைமுறை அட்டவணையின் ஒரு செயல்விளைவாக உள்ளது. (இயேசுவை அவரது வரலாற்று அமைவில் அமைத்தல் மீதான லூக்காவின் வலியுறுத்தத்திற்கு லூக்கா 3:1, 2ஐக் காணவும்.) இந்த எளிய உண்மையானது, இயேசு என்பவர் ஒரு கருத்தாக அல்லது உண்மையான வரலாற்று உருவம் என்பதைக் காட்டிலும் அதிகமாக ஒரு உணர்வாக இருக்கிறார் என்று நம்புகிற பல மக்கள் அறியாத வகையில் தப்புகிறது. புதிய ஏற்பாடு, "ஒரு காலத்தில் இயேசு என்று பெயர்கொண்ட மனிதர் ஒருவர் இருந்தார்" என்று தொடங்குவதில்லை. நாம் புனைகதைகள் அல்லது கற்பனைக் கதைகள் பற்றிப் பேசுவதில்லை; நாம், தேவனுடைய முற்றிலும் மனிதவடிவிலான குமாரனைப் பற்றிப் பேசுகிறோம்.

அதே வேளையில், இயேசு முற்றிலும் தேவனாக இருக்கிறார். அவரது சீஷர்களில் மூவர், மறுரூப நிகழ்வில் அந்த உண்மையை நேரடியாகக் காணக்கூடிய சிலாக்கியத்தைப் பெற்றனர் (மத்தேயு 17:1-8). பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர் இயேசுவுடன் மலையின் மீது ஏறிச்சென்றனர், அவரை அவரது முழுமையான தெய்வீக மகிமையில் அவர்கள் காணக்கூடும்படிக்கு, அவர்களின் கண்களுக்கு முன்பாகவே அவர் மாற்றம் அடைந்தார் ("மறுரூபப்பட்டார்"). மோசேயும் எலியாவும் அவருடன் தோன்றினர், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கூடாரத்தைக் கட்டப் பேதுரு விரும்பியபோது, அந்தக் காட்சியானது ஒரு மேகத்தினால் நிழலிடப்பட்டது. ஒரு குரல் (இது தேவனுடையது என்பது தெளிவு) பேசி, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்று உரைத்தது. இந்த இடம் வரையிலும், அவர்கள் இயேசுவை ஒரு மனிதராக மாத்திரமே, மிக விசேஷித்த வகையிலான ஒரு மனிதராக மாத்திரமே கண்டிருந்தனர். இந்த நிகழ்வில் அவர்கள் அவரை ஒரு மனிதர் என்பதைக் காட்டிலும் மிகவும் மேலானவராகக் கண்டனர்; மாம்சத்தில் வந்த தேவகுமாரனாக இருந்தார், பவுல் பிற்பாடு எடுத்துரைத்தபடி (கொலோசெயர் 1:19; 2:9) அவர் தெய்வீக இயல்பில் முழுவதும் பங்கேற்றவராக இருந்தார்.

தேவனுடைய தனிச்சிறப்பான மகன் என்ற வகையில், இயேசு கவனமிக்க திட்டமிடுதல் மற்றும் தயாரிப்பு ஆகியவற்றின் விளைவாக உலகத்திற்கு வந்தார், இது மத்தேயு 1 மற்றும் 2 ஆகிய இரு அதிகாரங்களிலும் வலியுறுத்தப்படுகிறது. அவரது வருகையானது எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே ஏசாயா தீர்க்கதரிசியினால் முன்னுரைக்கப் பட்டிருந்தது (ஏசாயா 7:14; 9:1-7). மத்தேயு

1:21, 25ன்படி, அவரது பெயர்கூட தெய்வீகத்துவமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது. 2ம் அதிகாரத்தில், அவர் பச்சிளம் குழந்தையாக இருந்தபோது பெற்றுக்கொண்ட தெய்வீகப் பாதுகாப்புப் பற்றிய பல குறிப்புகளும் அவரது வளர்ப்புத் தந்தைக்குத் தரப்பட்ட வழிகாட்டுதல்களும் உள்ளன. குழந்தை இயேசுவைக் கொல்வதற்கு ஏரோது தீட்டிய கொலைத்திட்டம் அவரைப் பிடிப்பதற்கு முன்னதாக, ஏரோதிடம் திரும்பிச் செல்ல வேண்டாம் என்று ஞானிகளும் கனவில் எச்சரிக்கப்பட்டனர் (இது தெய்வீகத் தூண்டுதல் என்பது தெளிவு), இல்லையென்றால் அவர்கள் புதிய அரசர் எங்கிருக்கிறார் என்று கூறும்படி நிர்ப்பந்திக்க பட்டிருப்பர் (2:12). அதேபோன்று யோசேப்பும் தமது குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு ஓடிப்போகும்படி ஒரு தூதனால் கனவில் எச்சரிக்கப்பட்டார் (2:13-15). ஏரோதுவின் மரணத்தைத் தொடர்ந்து, ஏரோதுவின் மகன் அர்க்கெலாயு ஆண்டுகொண்டிருந்த யூதேயாவின் பகுதிக்குச் செல்லாமல், இஸ்ரவேல் நாட்டிற்குத் திரும்பும்படி யோசேப்பு மீண்டும் ஒரு தூதனால் அறிவுறுத்தப்பட்டார்.

தேவனுடைய குமாரன் ஒரு மனித வடிவில் இந்த பூமிக்கு வந்தார், அவர் நாம் யாவரும் செய்கிறபடி இருப்பின் தமது வட்டாரத்திற்குள் - ஒரு பச்சிளம் குழந்தையாக - பிரவேசித்தார். உதவியற்ற அந்த நிலையிலும்கூட, அவர் உலகத்தின் பாவங்களுக்காகத் தமது ஜீவனைப் பிணையமாகக் கொடுக்கக்கூடும் வரையில் - இது தேவனும் மனிதருமான இயேசு மாத்திரமே செய்யக்கூடிய செயலாகும் - அவர் தமது பிதாவினால் கவனிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டார்.

மத்தேயு சுவிசேஷத்தின் தொடக்க வசனங்கள், இஸ்ரவேலின் வளமான மற்றும் விரிவான வரலாற்றின் நிறைவான நிறைவேற்றமாக இயேசு இருக்கிறார் என்று நமக்குக் காண்பிக்கும்படிக்கு, அவ்வரலாற்றைப் பற்றிய விரைவான ஒரு ஆய்வினூடே நம்மை எடுத்துச் செல்கின்றன.

முடிவுரை

நமக்கு வெறுமனே ஒரு வரலாற்றுப் பாடத்தைக் கொடுத்தல் என்பது (மத்தேயு) சுவிசேஷ எழுத்தாளரின் நோக்கமாக இருக்கவில்லை. அவர் நமது மேசியாவைப் பற்றி, நமது இரட்சகரைப் பற்றி, மாம்சத்தில் வந்த நமது தேவனைப் பற்றி நமக்குக் கூற விரும்பினார். இது நம்மில் எவரும் புறக்கணிக்க கூடாத செய்தியாக உள்ளது, ஏனெனில் பாவிகளின் நீண்ட வரிசையில் நாமும் நிற்கிறோம். நம் யாவருக்கும் மீட்பு, பாவமன்னிப்பு தேவைப்படுகிறது, மற்றும் அதன் முழுமையை இயேசு மாத்திரமே தர முடியும்.

மத்தேயு சுவிசேஷம் (மற்றும் புதிய ஏற்பாடு முழுமையும்), இயேசு என்ற பெயர்கொண்ட மனிதரைப் பற்றிய நேர்த்தியான வரலாறு என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. இது விசுவாசித்து கீழ்ப்படிந்து மீட்பைக் கண்டடைவதற்கான ஒரு அழைப்பாக உள்ளது. இது நாம் யாவரும் கேட்க அவசியமான நற்செய்தியாக உள்ளது.

குறிப்புகள்

[1]Thomas G. Long, *Matthew,* Westminster Bible Companion (Louisville: Westminster John Knox Press, 1997), 8.

மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் உள்ள (இயேசுவின்) பிறப்பின் வரலாறு

இயேசுவின் பிறப்புப் பற்றி நமக்கு புதிய ஏற்பாட்டில் இரு பதிவுகள் மாத்திரமே இருப்பதால் (மத்தேயு 1; 2; லூக்கா 1; 2), இவை இரண்டையுமே கண்ணோக்குதல், இவை எவ்வாறு ஒன்றுபடுகின்றன மற்றும் இவை எவ்வாறு வேறுபடுகின்றன என்பதைப் பற்றி நமக்கு அறிவுறுத்துவதாக இருக்கிறது.

இயேசுவின் பிறப்பு பற்றிய வரலாற்றைக் கூறுவதில் மத்தேயு, யோசேப்பின் மீதும் அவருடன் தேவன் கொண்ட செய்தித்தொடர்பின் மீதும், மரியாளின் கர்ப்பம் பற்றி அவர் நினைத்தவற்றின் மீதும் அதிகம் கவனம் குவிக்கிறார். லுக்காவோ, மரியாளின் கண்ணோக்கக் கருத்தில் இருந்து இந்த வரலாற்றைக் கூறுகிறார்: யோசேப்புக்குத் தூதன் தரிசனமானதைப் பற்றியல்ல, ஆனால் மரியாளுக்குத் தூதன் தரிசனமானதைப் பற்றியும், அவளது ஐயம் நிறைந்த கவலை பற்றியும் தேவன் அவளுக்கென்று நியமிக்க பணிப்பொறுப்பை அவள் உண்மைநிறைவுடன் ஏற்றுக்கொண்டது பற்றியும் அவள் எலிசபெத்தைச் சந்திக்கச் சென்றது பற்றியும் அவர் எடுத்துரைக்கிறார்.

மத்தேயு சுவிசேஷத்தில், ஞானிகள்தாம் புதிதாகப் பிறந்திருந்த அரசரை ஆராதிக்க முதலில் வந்தவர்களாக இருந்தனர், இவர்களின் விலையுயர்ந்த வெகுமதிகள் இவர்கள் செல்வந்தர்களாக இருந்தனர் என்று கருத்துத் தெரிவிக்கின்றன. இருப்பினும் லூக்கா சுவிசேஷத்தில், இயேசுவின் பிறப்பு, சிறுமையான மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

மத்தேயு சுவிசேஷம் இயேசுவின் வம்சவழியை ஆபிரகாமில் இருந்து தொடங்கும் ஒரு தலைமுறை அட்டவணையைக் கொண்டு தொடங்குவது போல், லூக்கா சுவிசேஷத்திலும் ஒரு தலைமுறை அட்டவணை உள்ளது (லூக்கா 3:23-38). ஆனால் லூக்கா தரும் தலைமுறை அட்டவணை, இயேசுவில் தொடங்கி தலைமுறை வரிசைகளின் பின்னோக்கிச் செல்வதாக உள்ளது. இந்த அட்டவணை ஆபிரகாமுடன் நின்றுவிடுவதில்லை; இது இயேசுவின் முன்சந்ததிகளை ஆதாம் மற்றும் தேவன் வரையிலும் பின்னோக்கிச் சென்று உரைப்பதாக உள்ளது. உலகளாவிய இரட்சகர் என்ற வகையில் இயேசுவின் பணிப்பொறுப்பு இருந்தது என்பது லூக்கா சுவிசேஷத்தின் முதன்மை ஆய்வுக் கருத்துக்களில் ஒன்றாக இருந்தபடியால், அவர் இயேசுவை இஸ்ரவேல் இனத்தோடு மாத்திரமல்ல, ஆனால் மனிதகுலம் முழுமையுடன் அடையாளப்படுத்துவதாகக் காணப்படுகிறது. இரு தலைமுறை அட்டவணைகளும், பொதுவாகக் கூறும் தலைமுறைகளிலும் கூட, மிகச்சரியாக ஒன்றுபோல் இருப்பது இல்லை. இவற்றில் எதுவும், இவ்விரு விபரங்களில் ஒன்று தவறானது என்று கருத்துத் தெரிவிப்பது இல்லை - இவ்விரு எழுத்தாளர்களும், நடந்தது என்ன என்பதை வலியுறுத்த வேறுபட்ட அம்சங்களை தேர்ந்துகொண்டனர் என்பது மாத்திரமே உண்மையாகும்.

மத்தேயு சுவிசேஷத்தில் இருந்து லூக்கா சுவிசேஷத்தின் இரு விபரங்கள் அதைத் தனிப்படடப் பிரித்து வைக்கின்றன: யோவான் ஸ்நானகனின் பிறப்பு பற்றிய விபரங்கள் லூக்கா சுவிசேஷத்தில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளன, இது ஒன்று மாத்திரமே இயேசுவின் பிள்ளைப் பருவத்தில் இருந்து ஒரு நிகழ்வை விவரிப்பதாக உள்ளது: அவர் பன்னிரெண்டு வயதில் தேவாலயத்திற்குச் சென்ற நிகழ்வு (லுக்கா 2:41-52).

வேதவசனத்தின் “நிறைவேற்றம்”

ஒரு வேதவசனம் “நிறைவேற்றப்பட்டுள்ளது” என்று நாம் வாசிக்கையில், மேசியா பிறக்க இருந்த இடம் பற்றிய மீகா 5:2ன் முன்னுரைத்தல் (மத்தேயு 2:3-6) போன்று, வழக்கமாக நாம், ஒரு முன்னுரைத்தல் “உண்மையானது” - யாரோ ஒருவர் இவ்வாறு நடக்கும் என்று கூறிய வண்ணமே அது நடந்தது - என்பதைப் பற்றி நினைக்கின்றோம். இருப்பினும் வேதவசனம் “நிறைவேறியது” என்ற கருத்தானது இதைக்காட்டிலும் அதிகம் எளிதற்றதாக உள்ளது.

வேதவசனத்தை, அதன் விருப்ப நோக்கமான அர்த்தம் ‘‘முழுவதும் நிறைந்திருத்தல்’’ என்று நினைத்தல் என்பது, ‘‘நிறைவேற்றம்’’ என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை நினைவில் வைக்க ஒரு சுலபமான வழியாக உள்ளது. உதாரணமாக, மரியாளிடத்தில் இயேசு பிறந்தது, ஏசாயா 7:14ஐ “நிறைவேற்றியது” என்று மத்தேயு எழுதும்போது, ஏசாயாவினால் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட பிறப்பு ஆகாஸ் அரசருக்கு ஒரு அடையாளமாக இருக்கும் என்பது தேவன் தமது சிந்தையில் கொண்டிருந்த திட்டத்தின் ஒருபகுதியாக மாத்திரம் இருந்தது என்று அவர் அர்த்தப்படுத்தினார். “மரியாள்” என்ற பெயருடைய ஒரு கன்னிப் பெண்ணுக்கு இயேசு பிறத்தல் என்பதே உண்மையான வரலாற்றின் நிறைவான பகுதியாக இருந்தது.

சிலவேளைகளில், ‘‘நிறைவேற்றப்’’ பட்டுள்ளது என்று கூறப்படும் பழைய ஏற்பாட்டு வசனப்பகுதி, புதிய ஏற்பாட்டு எழுத்தாளரால் தரப்படும் நிறைவான அர்த்தத்தைச் சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படுவதில்லை. இதற்கு மத்தேயு 2:13-15 ஒரு உதாரணமாக உள்ளது, இதில் புதிதாகப் பிறந்த அரசரை ஏரோது கொல்வதில் இருந்து தவிர்ப்பதற்காக யோசேப்பு எகிப்துக்கு ஓடிப்போகுதல் பற்றிக் கூறப்படுகிறது. பிற்பாடு இந்தக் குடும்பம் பாலஸ்தீனத்திற்குத் திரும்பியது. மத்தேயு “எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது” என்று எழுதினார். ஓசியா 11:1ம் வசனம் இங்கு மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது. இதன் தோற்றக்காலச் சந்தர்ப்பப் பொருளில் இது, தேவன் தமது மக்களை எகிப்திய அடிமைத்தளையிலிருந்து விடுவித்து அவர்கள் பயணமான வனாந்திர யாத்திரையைப் பற்றிப் பேசியது. இருப்பினும் மத்தேயுவைப் பொறுத்த மட்டில், இந்த நிகழ்வு, தேவனுடைய மாபெரும் மகனான இயேசுவை எகிப்தில் இருந்து அழைத்த நிகழ்வின் முன்நிழலிடுதலாக இருந்தது.

புதிய ஏற்பாட்டில் நாம் இந்த ‘‘நிறைவேற்றம் பெற்ற’’ வசனப்பகுதிகளை எதிர்கொள்ளுகையில், தேவனுடைய வசனம் பன்முகப் பண்புடையது மற்றும் அது, இயேசு யார் என்பதையும் அவர் செய்தது என்ற என்பதையும் வெளிப்படுத்துவதற்குப் பல வழிகளைப் பயன்படுத்துகிறது என்பதையும் நாம் புரிந்து கொள்வதற்கு ஏவுதல் பெற்ற எழுத்தாளர் நமக்கு உதவுகிறார் என்பதை நாம் நினைவில் வைப்போமாக.

9

வார்த்தை மாம்சமானார்

(யோவான் 1:1-18)

இப்போது துருக்கி என்று அழைக்கப்படும் நாட்டின் வடமேற்குப் பகுதியில் இருந்த நீசியா என்ற நகரில், கி.பி. 325ம் ஆண்டில், சபை நடத்துனர்கள் 318 பேர் கொண்ட குழு ஒன்று, இயேசுவின் மிகச்சரியான இயல்பு மற்றும் பிதாவாகிய தேவனுடன் அவருக்குள்ள உறவு ஆகியவற்றின் மீதான கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்காகக் கூடியது. அவர்கள், இயேசு தேவனால் உண்டாக்கப்பட்ட ஒரு படைப்புயிராக இருந்தார், அவருக்கு ஒரு தொடக்கம் இருந்தது மற்றும் அவர் மாற்றத்திற்கு உட்பட்டவராக இருந்தார் என்று கூறிய ஆரியுஸ் என்ற மனிதரின் போதனைக்குப் பதில் அளிப்பதற்காகக் கூடியிருந்தனர்.

நீசியாவின் இந்த ஆலோசனைக் குழுவானது நீசியாவின் உபதேச சட்டம் என்று அறியப்பட்டுள்ள பின்வரும் உபதேசக் கூற்றைப் பதிலாகக் கொடுத்தது:

> *ஆளுகை யாவற்றின் பிதாவும், காணப்படுகிற மற்றும் காணப்படாத யாவற்றையும் படைத்தவருமான ஒரே தேவனை நாம் விசுவாசிக்கிறோம்;*
>
> *மற்றும், தேவனுடைய குமாரனும், பிதாவினால் பெறப்பட்டவரும் அவரால் பெறப்பட்ட ஒரே ஒருவருமான, அதாவது பிதாவின் சாராம்சத்தைக் கொண்டுள்ள, தேவனிலிருந்து வந்த தேவனும், ஒளியிலிருந்து வந்த ஒளியும், உண்மைத் தேவனில் இருந்து வந்த உண்மைத் தேவனும், படைக்கப் பட்டவராயிராமல் பெறப்பட்டவரும், பிதாவின் அதே சாராம்சத்தைக் கொண்டுள்ளவரும், பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள சகலத்தையும் படைக்கக் காரணமாக இருந்தவருமான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நாம் விசுவாசிக்கிறோம்; நாம் மனிதர்களாகிய நமக்காகவும் நமது மீட்புக்காகவும் வானத்திலிருந்து இறங்கி வந்தார் மற்றும் மனிதராக அவதாரம் எடுத்தார். அவர் பாடுபட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, பரலோகத்திற்கு எழுந்து சென்றார். மேலும் மரித்தோரையும் உயிருடன் இருப்போரையும் நியாயந்தீர்க்க அவர் வருவார் என்று விசுவாசிக்கிறோம்.*
>
> *மற்றும் பரிசுத்த ஆவியானவரை (நாம் விசுவாசிக்கிறோம்).*
>
> *ஆனால் ஒருகாலத்தில் அவர் இல்லாதிருந்தார் அல்லது அவர் தமது தலைமுறைக்கு முன்பு இருந்ததில்லை அல்லது அவர் ஒன்றுமில்லாது இருப்பதற்காக வந்தார் என்று கூறுகிறவர்களை அல்லது அவர் வேறுபட்ட hypostasis (சாராம்சம்) அல்லது ousia (இருப்பு) கொண்ட தேவனுடைய குமாரனாக இருக்கிறார் அல்லது அவர் ஒரு படைப்புயிராக அல்லது மாற்றப்படக் கூடியவராக அல்லது நிலையற்றவராக இருக்கிறார் என்று கூறுகிறவர்களை கத்தோலிக்க அப்போஸ்தலிக்க சபையானது சபிக்கப்பட்டவர்கள் என்று அறிவிக்கிறது.[1]*

மனிதரால் உண்டாக்கப்பட்ட இந்த உபதேச சட்டமானது, இயேசு "பிதாவின் சாராம்சமாக," "உண்மைத் தேவனில் இருந்து வந்த உண்மைத் தேவனாக," "உண்டாக்கப்பட்டவரல்ல ஆனால் பெறப்பட்டவர்" என்று உரைக்கிறது. இதற்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருந்த யாவர்மீதும், அந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள், அலுவலகரீதியான "திருச்சபை சாபத்தை" உச்சரித்து, அதனால் தங்கள் நிலைப்பாட்டை மேலும் உறுதிப்படுத்தினர். நீசியா உபதேச சட்டமானது இயேசுவின் இயல்பு பற்றிய கேள்வியை முற்றிலும் தீர்த்து வைக்கவில்லை; விவாதங்கள் இன்றைய நாட்களில் போன்றே தொடர்ந்தன.

நீசியா உபதேச சட்டத்தை எழுதியவர்கள், இயேசுவைப் பற்றித் தங்கள் விசுவாசித்தது என்ன என்பதை விவரிக்க, வேதாகம அடிப்படையில்லாத *hypostasis* என்ற சொற்றொடரை (இது "சாராம்சம்" அல்லது "உண்மைநிலை" என்று அர்த்தப்படுகிறது) புகலிடமாகக் கொண்டனர் என்பது அந்த உபதேச சட்டத்தின் பிரச்சனையினுடைய ஒரு பகுதியாக உள்ளன.[2] இருப்பினும், இயேசுவின் இயல்பைப் பற்றிய மிகச்சிறந்த தெளிவுரை, மனிதரால் உண்டாக்கப்பட்ட எந்த உபதேசசட்டத்திலும் காணப்படுவதில்லை, ஆனால் யோவான் 1:1-18ல் இது காணப்படுகிறது. இது இயேசுவின் இயல்பைப் பற்றிய பிரச்சனையை நேரடியாக எடுத்துரைக்கிறது மற்றும் விசேஷமாக இது, "இயேசு தேவனாக இருந்தாரா அல்லது அவர் தேவனைப் போல மாத்திரம் இருந்தாரா?"; "அவர் தெய்வீகப் பண்புகள் சிலவற்றைக் கொண்ட ஒரு 'தெய்வீக மனிதராக,' பாதி தேவனாகவும் பாதி மனிதராகவும் இருந்தாரா?" என்ற மிகப் பழமையான கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறது. இவற்றிற்கு யோவான் 1:1-18 நமக்காகப் பதில் அளிக்கிறது, எனவே இயேசுவின் இயல்பு பற்றி இந்த வேதவசனப் பகுதி கூறுவது என்ன என்பதை நாம் கவனமாகக் கண்ணோக்குவோமாக.

இயேசு முழுமையும் தேவனாக இருக்கிறார்

யோவான் சுவிசேஷத்தில் இயேசுவின் வரலாறு, மற்ற மூன்று சுவிசேஷங்களில் கூறப்பட்டதைக் காட்டிலும் மிகவும் பின்னான காலத்தில் இருந்து தொடங்குகிறது. மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய இருவரும் இயேசுவின் வரலாற்றை அவர் உற்பவித்தது மற்றும் அவரது பிறப்பு ஆகியவற்றில் இருந்து எடுத்துரைக்கையில், அவரது இளம் வயதில் இருந்து மாற்கு தொடங்குகிறார். இதற்கு நேர்மாறாக யோவான், நித்தியத்தை நோக்கி மிகவும் பின்னோக்கிச் செல்லுகிறார்: "ஆதியிலே வார்த்தை இருந்தது." இதனால்தான் நாம் கிறிஸ்துவின் "முன் இருப்பை" பற்றிப் பேச முடிகிறது - ஏனென்றால் "ஆதியில்" வார்த்தையானது ஏற்கனவே இருந்தது. "ஆதியிலே" என்ற வார்த்தை இயல்பாகவே நமது மனங்களை, ஆதியாகமம் 1ம் அதிகாரத்திற்கு எடுத்துச் செல்கிறது. உண்மையில் இந்தச் சொற்றொடர் யோவான் 1ல் என்ன அர்த்தப்படுகிறதோ அதே அர்த்தத்தையே ஆதியாகமம் 1லும் கொண்டுள்ளது: இயேசுவின் இருப்பின் "ஆதியில்" அல்ல ஆனால் வேறு எந்தப் பொருளும் இருக்கத் தொடங்கும் முன்னர் வார்த்தை இருந்தது.

இயேசுவை "வார்த்தை" என்று யோவான் அழைத்தது ஏன்? அதற்குப் பதில் அளிப்பதற்கு முன்னர், 14ம் வசனமானது அவர் (யோவான்) இயேசுவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார் என்று காண்பிக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும்: "அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம்பண்ணினார்."

பின்பு அவர் இயேசுவின் வரலாற்றைக் கூறத் தொடர்ந்தார் - ஆனால் அவரை (இயேசுவை) அவர் (யோவான்), "வார்த்தை" என்று அழைத்தது ஏன்? புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களில், யோவான் ஒருவரே இயேசுவுக்கு இந்த புதுமையான இயற்பெயரைப் பயன்படுத்தியவராக இருந்தார் (வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தையும் யோவான் எழுதினார்; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 19:13). இதன் மூலம் எதை அர்த்தப்படுத்தினார்?

முதலாவது, "வார்த்தை" (logos) என்பது, தேவனுடைய சிந்தையின் வெளிப்பாட்டில் இயேசு இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. "வார்த்தை" என்பது பேசப்பட்டதாக அல்லது எழுதப்பட்டதாக, எவ்வாறு இருந்தாலும், அது தேவனுடைய சிந்தையில் உள்ளதை அவருடைய சித்தத்தை நமக்கு கொண்டு செல்லும் வழியாக இயேசு இருந்தார் என்று யோவான் கூறினார். எபிரெயர் 1:1, 2 ம் வசனப்பகுதி இதே விஷயத்தைக் கூறுகிறது: "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்."

இரண்டாவது, இயேசுவை "வார்த்தை" என்று அழைத்தலானது, அவர் தேவனுடைய வல்லமையின் வெளிப்பாடாக இருக்கிறார் என்று கருத்துத் தெரிவிக்கிறது. ஏசாயா 55:8-11ன்படி, நமது வார்த்தைகளுக்கு இல்லாத ஒரு பண்பு தேவனுடைய வார்த்தைக்கு உள்ளது: அது எப்போதுமே செயல்விளைவு கொண்டுள்ளது மற்றும் அது எப்போதுமே தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறது. தேவன் எதைக் கூறினாலும் அது நடக்கிறது. அதனால்தான் ஆதியாகமம் 1ம் அதிகாரமானது, படைப்பு பற்றிய செயல்முறையை "பின்பு தேவன் ... என்றார்" என்ற வார்த்தைகைளைக் கொண்டு திரும்பத் திரும்ப விவரிக்கிறது. தேவன் கூறியபடியே எல்லாம் ஆயிற்று. "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும் ... உண்டாக்கப்பட்டது" (சங்கீதம் 33:6அ). இயேசுவின் நபர்த்துவத்தில், தேவன் தமது வல்லமையை - ஜீவனையும் வெளிச்சத்தையும் கொண்டுவருதலுக்கான அவரது வல்லமையையும் (வசனங்கள் 4, 5) பாவிகளை அவர் தமது பிள்ளைகளாக்கக் கூடிய அவரது வல்லமையையும் - மிகமேன்மையாக வெளிப்படுத்தினார்.

"அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது" என்று கூறியதன் மூலம் யோவான், குமாரானாகிய இயேசுவும் பிதாவாகிய தேவனும் ஒன்றேயான ஜீவிகள் அல்ல ஆனால் தனித்தனி நபர்த்துவம் கொண்டவர்கள் என்று சுட்டிக்காண்பித்தார். இது ஒரு முக்கியமான கருத்தாக உள்ளது: இயேசுவில் தேவன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வேறுபட்ட வடிவத்தைக் கொண்டிருந்தார் என்று நாம் நினைத்து விடக்கூடாது. தேவன் ஒரே ஒரு நபராக நிலவுகிறார், அவர் சில வேளைகளில் குமாரன் என்ற வடிவத்தையும் பரிசுத்த ஆவியானவர் என்ற வடிவத்தையும் எடுத்துக்கொண்டார் என்று யூகித்தலானது "Modalism" *என்று அழைக்கப்படுகிறது. இதைப் பரிந்துரைக்கும்* "Modalists" *எனப்படுபவர்கள், இந்த விளக்கமானது, ஒரே ஒரு தேவன் தாம் இருக்கிறார் என்ற வேதாகமக் கூற்றுகளுக்கு நியாயம் செய்கிறது மற்றும் "ஒருவரில் மூன்று நபர்கள்" பற்றிப் பேசும்போது ஏற்படும் குழப்பத்தைக் தவிர்க்கிறது என்று விவாதிக்கின்றனர். இருப்பினும்* Modalism *என்ற கொள்கையானது வேதாகமத்தில் உள்ள சில முக்கியமான புள்ளிவிபரத்தைக் காணாது விடுகிறது. உதாரணமாக, தேவன்*

தமது குமாரனை இந்த உலகத்திற்கு “அனுப்பினார்” என்றும் அந்த இயேசு பிற்பாடு பரிசுத்த ஆவியைத் தமது சீஷர்களுடன் இருக்கும்படி “அனுப்பினார்” என்றும் நமக்குக் கூறப்படுகிறது (பல உதாரணங்களுக்கு இடையில், யோவான் 16:5-11ஐக் காணவும்). இந்த விளக்கங்கள், பிதா, குமாரன் மற்றும் ஆவியானவர் மூன்று நபர்களாக இருக்கின்றனர், இருப்பினும் ஒரே தேவன் இருக்கிறார் என்ற உண்மையைப் புறக்கணித்தலை சாத்தியமற்றதாக ஆக்குகின்றன.

அடுத்ததாக நாம், “... அந்த வார்த்தை தேவனாயிருந்தது” என்று வாசிக்கிறோம். பிதா தெய்வீகமானவராக இருப்பது போன்றே இயேசுவும் தெய்வீகமானவராக இருக்கிறார். ஒரே ஒரு தேவனே இருக்கிறார் என்று பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டும் அறிவிக்கும் அளவுக்கு இவர்கள் இருவரும் மிகநெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளனர். இந்தக் கருத்தைப் புரிந்து கொள்ளுதல் கடினமாக உள்ளது, மற்றும் இதுவே எல்லா கருத்து வேறுபாடுகளுக்கும் காரணமாக உள்ளது. இருப்பினும், யோவான் சுவிசேஷத்தின் பிற்பகுதியில், தாமே நிரூபணத்தைக் காணமுடிந்தால் அன்றி (இயேசுவின்) உயிர்த்தெழுதலை நம்பப் போவதில்லை என்று அறிவித்திருந்த தோமாவுக்கு இயேசு தரிசனம் தந்தபோது, இதே கருத்து பிரதிபலிக்கப்படுகிறது. இயேசு, ஆணிகள் துளைத்த தமது கரத்திலும் ஈட்டியால் ஊடுருவப்பட்ட தமது விலாவிலும் விரலைப் போடும்படி தோமாவை அழைத்த போது, அவர் “என் ஆண்டவரே! என் தேவனே!” என்று அறிக்கையிடுதலினால் பதில் அளித்தார் (யோவான் 20:28).

இயேசு தேவனாக இருக்கிறார் என்பது அண்டத்தின் படைப்பில் வார்த்தையின் பணிப்பொறுப்பு பற்றிய கூற்றுக்களினால் யோவான் 1ல் மேலும் விளக்கப்படுகிறது: “சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை” (வசனம் 3); “அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை” (வசனம் 10).

தேவன் ஒருவரே நித்தியத்தில் இருந்து நித்தியம் வரையிலும் இருக்கிறார். தேவன் ஒருவர் மாத்திரமே அண்டத்தைப் படைத்திருக்க முடியும். தேவன் ஒருவர் மாத்திரமே ஒளியையும் ஜீவனையும் கொடுக்கிறார். இந்தக் கூற்றுக்கள் யாவையும் வார்த்தையாகிய இயேசுவுக்கு உண்மையாக உள்ளன என்று யோவான் சுவிசேஷம் கூறுகிறது.

இயேசு முழுமையும் மனிதராக இருந்தார்

யோவான் 1:14அ வசனப் பகுதியானது, இயேசு இந்த பூமிக்கு வந்தபோது அவர் ஒரு மனித வடிவை எடுத்தார் என்பதை இயன்ற வரையில் மூடி மறைக்காமல் விளக்குகிறது: “அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம்பண்ணினார்.” யோவான், “வார்த்தை மனித இனமானார்” என்றோ அல்லது “வார்த்தை ஒரு மனிதரானார்” என்றோ கூறியிருக்க முடியும், ஆனால் அவர் இயேசுவின் பூமிக்குரிய பிரசன்னத்தின் மாம்சப் பிரகாரமான இயல்பை வலியுறுத்துவதைத் தேர்ந்து கொண்டார். இதைச் செய்ததில் யோவான், தமது நாட்களில் இயேசு உண்மையில் மனித வடிவை எடுக்கவில்லை, ஆனால் அவ்வாறு காணப்பட மாத்திரம் செய்தார் என்று உரிமை கோரிய மக்களின் முகத்தில் அறைவது போன்று பேசினார் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் "காணப்பட, அவ்வாறு இருப்பதாகத் தோன்றுகிற" என்று அர்த்தப்படும் *dokeo* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து பெறப்பட்ட "Docetists" என்று அழைக்கப்பட்டனர். மேலும் இந்த மக்கள், பருப்பொருள் தீயது மற்றும் ஆவி நல்லது என்றும் நம்பினர்; எனவே யோவான் தமது கருத்தை இயன்ற வரையிலும் வெளிப்படையாகத் தெரிவித்தார்: "வார்த்தை மாம்சமானார்." Docetists என்னப்பட்ட இவர்கள் யோவானின் இலக்குக் கூட்டமாக இருந்தார்களோ இல்லையோ, ஆனால் அவர் தமது கருத்தை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

வார்த்தை மாம்சம் "ஆனார்" என்ற கூற்று, மனிதத்தன்மை என்பது இயேசுவின் தோற்றக்கால அத்தியாவசிய இயல்பின் பாகமாக இருக்கவில்லை, ஆனால் பூமியில் அவர் இருந்தபோது அவரது நிலையாக இருந்தது என்பதைக் காண்பிக்கிறது. இது "நமக்குள்ளே வாசம்பண்ணினார்" என்ற வார்த்தைகளை யோவான் பயன்படுத்தியதில் மேலும் வலியுறுத்தப்படுகிறது. "வாசம்பண்ணினார்" என்பது "கூடாரமிட்டார்" அல்லது "தமது கூடாரத்தை ஊன்றினார்" என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. கூடாரம் என்பது வழக்கமாக ஒரு நிரந்தரமான தங்குமிடமாக இருப்பதில்லை, ஆனால் அது பொதுவாக எடுத்துச் செல்லப்படக் கூடியதாகவும் தற்காலிகமானதாகவும் உள்ளது. அதுவே இயேசுவின் மாம்சப்பிரகாரமான இயல்பின் தன்மையாகவும் இருந்தது. அவர் சற்றுக்காலம் மாத்திரமே நம் மத்தியில் "தமது கூடாரத்தை ஊன்றி" இருந்தார். இதை நாம் "மாம்சம்" என்பதற்கான இலத்தீன் வார்த்தையிலிருந்து "அவதாரம்" (incarnation) என்று அழைக்கிறோம். நேரடி அர்த்தத்தில் இது இயேசுவின் "மாம்சவதாரமாக" இருந்தது. அது, மனித இருப்பின் பண்புகளாக உள்ள ஒவ்வொன்றையும் அனுபவிக்க இயேசு முற்றிலும் திறன் கொண்டிருந்தார் என்று அர்த்தப்படுகிறது. நம்மைப் போன்றே அவருக்குப் பசி ஏற்பட்டது, அவர் களைப்படைந்தார் மற்றும் அவருக்குத் தூக்கம் வந்தது. மாற்கு 14:33 வசனமானது, சிலுவையை நோக்கிச் செல்லும் நிலையில், அவர் "திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்" என்று கூடச் சுட்டிக்காண்பிக்கிறது. (இந்தக் கருத்து ஆங்கில மொழிபெயர்ப்புகள் பலவற்றில் மறைக்கப்பட்டுள்ளது.) நமது மாம்சப்பிரகாரமான உடல்களுக்கு உண்மையாக உள்ள ஒவ்வொன்றும் அவருடைய மாம்சப்பிரகாரமான உடலுக்கும் உண்மையாக இருந்தது.

தெய்வீகமானவர் மாம்சமாக வரவேண்டியிருந்தது ஏன்? அதற்கு யோவான் 1:18ம் வசனம் தெளிவாகப் பதில் அளிக்கிறது: "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்." "வெளிப்படுத்தினார்" என்பது *exegeomai* என்ற கிரேக்க வினைச் சொல்லில் இருந்து வருகிறது, இதிலிருந்தே நாம் "exegesis" என்ற நமது ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம். "Exegesis" என்பது வேதாகம வசனப்பகுதி ஒன்றின் அர்த்தத்தை வெளிப்படுத்தி அதை மற்றவர்களுக்கு விளக்கியுரைக்கும் ஒரு விளக்கவுரையாளர் செய்யும் பணியாகும். இது, "வெளிப்படுத்த, விளக்கப்படுத்த" என்று அர்த்தப்படுகிறது. அதுவே இயேசுவின் வருகை நம் யாவருக்கும் செய்த விஷயமாக மிகச்சரியாக உள்ளது: நாம் வேறு எவ்வகையிலும் கற்று அறிந்திருக்க இயலாத தேவனுடைய சத்தியங்கள் சிலவற்றை நமக்குப் போதிப்பதற்காகவே வார்த்தை மாம்சமானார். வரையறைக்கு உட்பட்ட மனிதர்கள் என்ற வகையில் நாம், மாம்சத்தில் தேவனை "பார்த்தல்"

என்பதைத் தவிர வேறு எவ்வகையில், அவரது வரையறைக்கு உட்படாத மகிமையையும் வல்லமையையும் அன்பிரக்கத்தையும் புரிந்துகொள்ள முடியும்? 1 யோவான் 4:9, 10 வசனப்பகுதி, "தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" என்று கூறுகிறது. தேவன் எப்போதுமே அன்பின் தேவனாகவே இருந்துள்ளார்; ஆனால் இயேசு வந்து சிலுவையில் மரித்த காலம் வரையிலும் அவரது மக்கள் அவரது அன்பின் ஆழத்தை அறிய இயலாதிருந்தது.

பிலிப்பு பிற்பாடு இயேசுவினிடத்தில், ஆண்டவரே, "பிதாவை எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப் போதும்" என்று வேண்டிக் கேட்டுக்கொண்டபோது, இயேசு "பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்ன அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் ..." என்று பதில் அளித்தார் (யோவான் 14:8, 9). இயேசுவை பிலிப்பு போன்று நபராகக் காணுதல் அல்லது நாம் செய்வது போன்று வேதவசனங்களின் பக்கங்கள் மூலமாகக் காணுதல் என்ற இரண்டில் எதைச் செய்தாலும் அது, தேவனை வேறு எவ்வழியிலும் அறிய இயலாத சிலவற்றைக் காணுதலாக உள்ளது.

யோவான் 1:17ம் வசனம், "நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" என்று கூறுகிறது. இதை நாம், இயேசுவின் வருகைக்கு முன்னர் கிருபையும் சத்தியமும் இல்லாதிருந்தன என்றோ அல்லது அவற்றைப் பற்றிய அறிவும் இல்லாதிருந்து என்றோ அர்த்தப்படுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அது பழைய ஏற்பாட்டைத் தீவிரமாக உருச்சிதைப்பதாகவும் அதைத் தவறாகப் புரிந்துகொள்வதாகவும் இருக்கும். இயேசு வந்த காலத்திற்கு முன்னர் இயல்பாகவே கிருபை இருந்தது மற்றும் சத்தியமும் இருந்தது. இஸ்ரவேல் மக்களைத் தேவன் பொறுமையாகக் கையாண்டதைக் கண்ணோக்குதல் மாத்திரமேகூட, அவரது கிருபையின் இயல்பை நிலைநாட்டப்போதுமானதாக உள்ளது. "பத்துக் கட்டளைகள்" மற்றும் தீர்க்கதரிசிகளின் முன்னுரைத்தல்கள் போன்றவற்றின் மூலமாக, அவரது சத்தியம் அவரது வசனத்தில் எப்போதுமே விளக்கப்படுத்தப் பட்டுள்ளது. இயேசு வந்த காலம் வரையிலும் கிருபையும் சத்தியமும் இருக்கவில்லை (அல்லது விளக்கப்படுத்தப்படவில்லை) என்பது யோவானின் கருத்தாக இருக்கவில்லை, ஆனால் அவர் வந்த காலம் வரையிலும் அவைகள் (கிருபையும் சத்தியமும்) தங்களின் முழுமைத் தன்மையில் அறியப்படவில்லை என்பதே யோவானின் கருத்தாக இருந்தது. சங்கீதம் 103:8ம் வசனம், "கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்" என்று நமக்குக் கூறுகிறது, ஆனால் அவரது கிருபையும் சத்தியமும் இயேசுவின் நபர்த்துவம் மற்றும் வாழ்வு ஆகியவற்றில் அவதாரமாக்கப்படுவதற்கு முன்பு வரையில் மற்றும் சிலுவையில் அவரது மரணத்திற்கு முன்பு வரையில் இந்தக் கிருபை எவ்வளவு கிருபை நிறைந்தது என்பதை நாம் ஒருக்காலும் அறியாது இருந்தோம்.

யோவான் 1:1-18 வசனப் பகுதி, இயேசுவின் இயல்பைப் பற்றி தைரியமான

இரு கூற்றுக்களை ஏற்படுத்துகிறது: *அவர் இந்தப் பூமியில் இருக்கையில், அவர் முழுமையும் தேவனாக இருந்தார்*, மற்றும் *அவர் முழுமையும் மனிதராக இருந்தார்.*

முக்கியமான இரண்டு கேள்விகள்

யோவானின் வார்த்தைகள், இயேசுவின் இயல்பைப் பற்றிக் குறிப்பிடப்பட வேண்டியவை குறித்து இரண்டு கேள்விகளை எழுப்புகின்றன. முதலாவது நாம், *"[இயேசு முழுமையும் தேவனாகவும் முழுமையும் மனிதராகவும் இருந்தார் என்ற] இந்தப் போதனையானது, வேதவசனங்களின் எஞ்சிய பகுதிகளுடன் சீர்பொருத்தமாக இருக்கிறதா?"* என்று கேட்கிறோம். அந்தக் கேள்விக்குப் பவுல் தாம் எழுதிய நிருபங்களில் மூன்றில் மிக உன்னதமான பதிலை அளித்தார். *பிலிப்பியர் 2:5-8ல்* அவர் பின்வருமாறு எழுதினார்:

> கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் *தேவனுடைய ரூபமாயிருந்தும்*, தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, *மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு*, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். (என்னால் வலியுறுத்தப்படுகிறது.)

சாய்வெழுத்துக்களில் உள்ள சொற்றொடர்கள், யோவான் சிந்தித்தது போன்றே பவுலும் சிந்தித்தார் என்று காண்பிக்கின்றன: இயேசு "தேவ சாயலாக" இருந்தார் ("வார்த்தை தேவனாக இருந்தது"), ஆனால் அவர் "மனிதத் தோற்றத்தை" மேற்கொண்டார் ("வார்த்தை மாம்சமானார்").

அது போன்றே, கொலோசெயர் *1:15-19ல்* பவுல் பின்வருமாறு கூறினார்:

> அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும் துரைத்தனங்களானாலும் அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், ... அவருக்குப் பிரியமாயிற்று.

இது கொலொசெயர் *2:9ல்* மேலும் மறுவலியூட்டப்படுகிறது: "ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது." வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தேவனுடைய இயல்பு குறித்து உண்மையாயிருப்பவைகள் யாவும் இயேசுவுக்கும் உண்மையாக

உள்ளன. மீண்டுமாக, தேவத்துவத்தின் "பரிபூரணமெல்லாம்" என்பது பற்றிப் பவுலின் குறிப்புகளுக்கும் யோவான் "வார்த்தை தேவனாக இருந்தார்" என்று கூறுவதற்கும் இடையில் இணைவு தெளிவாக உள்ளது. சிலர், இந்த வேதவசனப்பகுதியானது, ஆரியஸ் நான்காம் நூற்றாண்டில் பராமரித்த கருத்தை - அதாவது, உண்மையில் இயேசு முதல் படைப்புயிராக இருக்கும்படி தேவனால் படைக்கப்பட்டார் ("சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்") என்ற கருத்தை - மிகச்சரியாகப் போதிக்கிறது என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். இருப்பினும் அந்த விளக்கமானது இந்த சந்தர்ப்பப் பொருளில் எந்தக் கருத்தையும் ஏற்படுத்தாது. தேவனுடைய "பூரணத்துவமெல்லாம்" இயேசுவுக்குள் வாசம் பண்ணியது என்றால், பின்பு அவர் சாத்தியமான வகையில் ஒரு படைப்புயிராக இருந்திருக்க இயலாது. "முந்தின பேறுமானவர்" என்ற சொல்விளக்கம், வம்சவழி என்பதைக் காட்டிலும் முன்னுரிமை மற்றும் சிலாக்கியம் ஆகியவற்றை அதிகமாகக் குறிப்பதாக உள்ளது. பழைய ஏற்பாட்டில், முதற்பிறந்த மகனுக்கு அவரது தந்தையின் பரம்பரைச் சொத்தில் இருந்து இரண்டு மடங்கு பாகம் தரப்பட்டது, மற்றும் அவர் தந்தையின் இறப்பின் வேளையில் குடும்பத்தின் நடத்துவத்துவப் பொறுப்பை ஏற்கும்படியாக இருந்தது. சிலாக்கியத்திற்கு உரிய நிலைபற்றிய - இயேசு "முதலாவதாகப் படைக்கப்பட்டவரல்ல" என்ற - அந்தக் கருத்தையே பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்திருப்பார் என்பது உறுதி. இல்லையென்றால், அவர் கருத்து எதையும் தெளிவுபடுத்தாத எதையாவது எழுதியிருப்பார்.

பின்பு தீத்து 2:11-13 வசனப்பகுதி உள்ளது:

> ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிகஇச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

இங்கு பவுல் இயேசுவை "தேவன்" என்று வெளிப்படையாகவே அழைத்தார் (இது யோவான் 1:1ல் உள்ளது போன்றே, *Theos* என்ற வார்த்தையாகவே உள்ளது). RSV மற்றும் NRSV வேதாகமங்களில் இவ்விடத்தில் உள்ள அடிக்குறிப்புகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டபடி, இந்தச் சொல்விளக்கமானது, "மகா தேவனும் மற்றும் நமது இரட்சகருமாகிய" என்று சட்டப்பூர்வமாக மொழிபெயர்க்கப்பட முடியும், இது இயேசுவை "தேவன்" என்று அழைப்பதற்கு மாறாக, தேவனுக்கும் இயேசுவுக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தைக் கொண்டுவருகிறது. இருப்பினும் கிரேக்க வசனப்பகுதியில் இது மிகவும் இயல்பான வாசிப்பாக இருப்பதில்லை. ஒரு சில ஆங்கில மொழிபெயர்ப்புகள் இதை அவ்வாறு தரவழைக்கின்றன. இயேசுவை "தேவன்" என்று அழைப்பதில் பவுல் யோவானுடன் இணைந்திருந்தார் என்பது மிகவும் சாத்தியமானதாக உள்ளது.

மேலும், இயேசுவின் இயல்பு பற்றிய இந்தக் கண்ணோட்டத்தில், யோவானும்

பவுலும் மாத்திரம் தனித்திருக்கவில்லை. எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் 1:3ம் வசனம், “இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும்தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், ...” என்று கூறுகிறது. “அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து” என்பது தேவனுடைய இயல்பின் மிகச்சரியான பிரதி வடிவம் என்று அர்த்தப்படுகிறது. ஒரு சில வசனங்களுக்குப் பின்பு எபிரெயருக்கு எழுதிய இந்த நிருபமானது சங்கீதம் 45:6, 7 மற்றும் பிற பழைய ஏற்பாட்டு வசனங்களைக் குமாரனுக்கு நடைமுறைப்படுத்தி, அவரை “தேவன்” என்று அழைக்கிறது (1:8). இந்த நிருபமானது அவரை, தேவனுக்குப் பழைய ஏற்பாட்டில் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் “கர்த்தர்” என்ற வார்த்தையைக் கொண்டும் அழைக்கிறது (காண்க 7:14). இயேசுவின் தெய்வீகத்துவம் மற்றும் மனித இயல்பு ஆகியவற்றைப் பற்றிய யோவானின் அறிவித்தல், புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிகளில் உள்ள வெளிப்படுத்தலுடன் முற்றிலும் சீர்பொருத்தமாக உள்ளன என்பது தெளிவாக உள்ளது.

“பிதாவும் குமாரனும் ஒரே தேவனாக இருக்கின்றனர் என்று நாம் எப்படி விசுவாசிக்க முடியும்?” என்பது யோவானின் உறுதிப்படுத்துதல்களிலினால் எழுப்பப்படும் இரண்டாவது கேள்வியாக உள்ளது. தர்க்கரீதியாக, இரு நபர்கள் ஒருவராக இருக்க முடியாது - எனவே, பிதாவாகிய தேவனும் குமாரனாகிய இயேசுவும் ஆகிய இருவருமே எப்படி தேவனாக இருக்க முடியும்? இந்தக் கேள்வியில், மூன்று நபர்கள் இருந்தும் ஒரே ஒரு தேவனையே நாம் கொண்டிருக்கும்படி, பரிசுத்த ஆவியானவரை நாம் சேர்த்துக்கொள்ளும்போது, சூழ்நிலை இன்னும் அதிக சிக்கலாகிறது. இது சட்டப்பூர்வமான அக்கறையாக உள்ளது, மற்றும், இதற்கு இரண்டு முக்கியமான பதில்கள் தரப்பட முடியும்.

1. நாம் புரிந்துகொள்ளாது இருப்பவற்றை விசுவாசித்தல் வேண்டும் என்பது முதல் பதிலாக உள்ளது. எல்லாக் காலத்திலும் நாம் யாவரும் இதைச் செய்கிறோம். உதாரணமாக, விமானங்கள் எவ்வாறு பறக்கின்றன என்பதை நான் ஒருகாலத்திலும் புரிந்து கொண்டிருப்பதில்லை. தூக்கப்படுதல் மற்றும் அழுத்தப்படுதல் பற்றிய எல்லா விளக்கங்களையும் நான் கேள்விப்பட்டு இருக்கிறேன், ஆனால் இன்னமும் நான் அதைப் புரிந்து கொள்வதில்லை. ஒரு 747 ஜெட்விமானத்தின் அளவையும் பருமனையும் அதில் பயணிக்கும் எல்லாப் பயணிகள், அதில் ஏற்றப்படும் சுமைகள் மற்றும் எரிபொருள் ஆகிய எல்லா எடைகளையும் கூட்டிக் காணும்போது, அது இன்னும் எனக்குச் சாத்தியமற்றதாக உள்ளது. இவையாவையும் இருந்தும்கூட, நான் அப்படிப்பட்ட விமானங்கள் ஒன்றில் பறந்திருக்கிறேன் எனவே அது வேலைசெய்கிறது என்று நான் நம்பி இணங்குகிறேன். அதுபோன்றே, யோவான் 3:16 நமக்குக் கூறுவது என்ன என்பதை நாம் விசுவாசிக்க மாத்திரம் வேண்டியுள்ளது: “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” இதையும் நான் புரிந்து கொள்வதில்லை. தேவன் தமது ஒரே பேறான குமாரனைக் கொடுக்குமளவுக்கு, பாவம் நிறைந்த மக்களை அவரால் எவ்வாறு அன்புகூர முடியும்? எல்லைக்கு உட்பட்ட மனிதனின் சிந்தைக்கு இது கருத்து எதையும் ஏற்படுத்துவது இல்லை - ஆனால் கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் இதை விசுவாசிக்கிறோம். பின்பு ஏன் நாம், நம்மால் புரிந்துகொள்ள

இயலாத தேவனுடைய இயல்பின் சில விஷயங்களை ஏற்றுக்கொள்ளுதல் பற்றி இடர்பாடு அடைய வேண்டும்?

2. தேவனைப் பற்றியும் அவரது இயல்பைப் பற்றியும் நாம் புரிந்துகொள்ளாது இருக்கும் சில விஷயங்களை ஏற்றுக்கொள்ளுதல் என்பது இரண்டாவது பதிலாக உள்ளது. இது நம்மைத் திகைக்க வைக்கக் கூடாது. நாம் தேவனை முற்றிலுமாகப் புரிந்து கொண்டிருந்தால், அவர் எந்த வகையில் தேவனாக இருப்பார்? உண்மையில் தேவனைப் பற்றி நாம் புரிந்துகொள்ளாத விஷயங்கள் பல உள்ளன. அவர் ஒன்றுமில்லாமையில் இருந்து எவ்வாறு உலகத்தை உண்டாக்கினார்? அவரது வார்த்தையானது, அவர் "பேசிய" உடன் பொருட்கள் படைக்கப்படுமளவுக்கு அவ்வளவு வல்லமை கொண்டிருந்தது எப்படி? பூமியில் பலகோடிக்கணக்கான மக்கள் இருக்கையில், நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் நடக்கும் விஷயங்கள் என்ன என்பதை அவர் எவ்வாறு அறிகிறார்? நமது தலையில் உள்ள முடிகள் யாவும் எண்ணப்பட்டிருக்கும் அளவுக்குத் தேவன் நம்மைப் பற்றி அறிந்திருக்கிறார் என்று இயேசு கூறினார். ஒருவேளை பின்வரும் கருத்து எல்லாவற்றிலும் மாபெரும் அற்புதமாக இருக்கலாம்: அவர் ஏன் நம்மைக் குறித்துக் கவலைப்படுகிறார்? பாவிகள் நிறைந்த, அவரைப் பற்றி அக்கறை இல்லாத பலர் நிறைந்த ஒரு உலகத்திற்காக அவர் தமது குமாரனை எவ்வாறு பலியாக ஒப்புக்கொடுக்க முடியும்? பின்வருவதை நாம் அறிக்கை இடுவோமாக: நாம் தேவனைப் பற்றிய பலவிஷயங்களை அறிவதில்லை.

முடிவுரை

இயேசு தேவனாக இருக்கிறாரா? ஆம், அவர் ஒரு மனிதராக இருந்தாரா? ஆம். நாம் அதைப் புரிந்துகொள்கிறோமா? இல்லை, ஆனால் அப்படியிருந்தபோதிலும் நாம் அதை விசுவாசிக்க முடியும். நமது ஆத்துமாக்கள் அதைச் சார்ந்துள்ளன! "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவான் 1:1); "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (யோவான் 1:12).

குறிப்புகள்

[1]John H. Leith, *Creeds of the Churches* (Atlanta: John Knox, 1973), 30-31. [2]*வேதாகமக் கருத்துக்களை விளக்கப்படுத்த முயற்சிப்பதற்கு வேதாகமரீதியல்லாத மொழிநடையைப் புகலிடமாகக் கொள்ளுதல் என்பது உபதேச சட்டங்களின் தனித்தன்மையாக உள்ளது (இல்லை என்றால், உபதேச சட்டமானது வேதவசனத்தைக் திரும்பக் கூறுவதாகவே இருக்கும்). முந்திய உபதேச சட்டங்களை விளக்கப்படுத்த அல்லது திருத்த ஏற்பட்ட பிந்திய உபதேச சட்டங்கள் அதிகமான விவாதத்திற்கும் கலந்துரையாடலுக்கும் உட்படுத்தப்பட்டதற்கு இதுவே மிகச்சரியான காரணமாக உள்ளது.*

டொசீட்டிஸ்டுகள் & நாஸ்டிக்குகள்

"டொசீட்டிஸ்டுகள்" என்று அறியப்பட்ட குழுவானது, "நாஸ்டிசிஸம்"

(“அறிவு” என்று அர்த்தப்படுகிற *gnosis* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து இது வந்துள்ளது) என்று அறியப்பட்டுள்ள கடவுள் மறுப்பு நம்பிக்கையின் ஒரு பிரிவினைக் குழுவாக இருந்தனர். நாஸ்டிசிஸம் என்பது கிறிஸ்தவத்தின் மீது கிரேக்க தத்துவத்தின் செல்வாக்கினுடைய விளைவாக இருந்தது, மற்றும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வாக்கில் இது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு முற்றிலும் இடர்ப்பாடு விளைவிக்கும் எதிராளியாக ஆனது.

பருப்பொருள் தீயது, ஆவி நல்லது என்ற நம்பிக்கையிலான ஒருவகையான தத்துவார்த்த இரட்டியமே நாஸ்டிக் நம்பிக்கையாக இருந்தது. நாஸ்டிஸம் பற்றி அதிகமாக வேறு எதையும் அறியாமலேயே, உலகம் தெய்வீகத்தால் படைக்கப்பட்டது (ஒரு “நல்ல தேவன்” பொல்லாதவற்றைப் படைப்பாரா?) மற்றும் இயேசுவின் திரு அவதாரம் (தேவன் எவ்வாறு பொல்லாத உலகப்பிரகாரமான உடலுக்குள் வாசம் செய்ய முடிந்தது?) என்பது போன்ற கிறிஸ்தவ நம்பிக்கைகளில் இடர்பாடு கொண்டிருந்தனர் என்பதை நாம் தெளிவாகக் காணமுடியும். இந்த இயக்கம் முன்னேற்றம் அடைகையில், இது சபையுடன் கூர்ந்த முரண்பாடு கொண்டதாக வந்தது.

யோவான் 1ல் அவர், சிலர் நம்புகிறபடி உண்மையிலேயே “நாஸ்டிக்குக்கு எதிராக” எழுதினாரா இல்லையா என்பது கேள்விக்குரியதாக உள்ளது, ஏனெனில் இரண்டாம் நூற்றாண்டின் காலகட்டத்திற்கு முன்பு வரையிலும் நாஸ்டிக்குகளின் இயக்கம் முழுமையான செல்வாக்குக் கொண்டிருந்ததில்லை. இருப்பினும் நாஸ்டிக கண்ணோக்குகளை நோக்கிய விருப்பநோக்கங்கள் இன்னும் முற்பட்ட காலத்திலேயே எழும்பின, மற்றும் யோவான் அவற்றில் சிலவற்றிற்குப் பதில் செயல் அளித்தார் என்பது சாத்தியமற்றதாக இருப்பதில்லை. மேலும் யோவான், “வெளிச்சம்” மற்றும் “ஜீவன்” போன்ற நாஸ்டிக்குகளின் பிரியமான சொற்றொடர்களை அடிக்கடி பயன்படுத்தினார். அப்படி என்றால் யோவான் நாஸ்டிஸத்திற்குப் பதில்செயல் செய்தாரா அல்லது ஒருவேளை நாஸ்டிக்குகள் தங்களின் சொல்லாக்கத்தை யோவானிடமிருந்து கடனாகப் பெற்றிருந்தார்களா?

நாஸ்டிக்குகளின் கண்ணோக்கங்களுக்கு எதிராக இயக்கப்பட்டதாக உள்ளதென்று திட்டவட்டமாகக் காணப்படும் ஒரு உதாரணம் 1 யோவான் நிருபமாகும்.

நான்கு சுவிசேஷங்கள் ஏன்?

மத்தேயு, மாற்கு, லுக்கா மற்றும் யோவான் (“சுவிசேஷங்கள்”) யாவும் இயேசுவின் வரலாற்றைக் கூறுகின்றன என்பதால், இயேசுவைப் பற்றிய முற்றிலுமான ஒரே ஒரு வரலாற்றைக் கொண்டிருப்பதற்கு மாறாகப் புதிய ஏற்பாடு நான்கு சுவிசேஷங்களை உள்ளடக்கி இருப்பது ஏன்? கிறிஸ்தவம் தொடங்கிய பின் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இருந்தே கிறிஸ்தவர்களின் சிந்தைகளில் இந்தக் கேள்வி இடம் பெற்றுள்ளது.

முதலாவதாக, ஒவ்வொரு சுவிசேஷ எழுத்தாளரும், தாம் என்ன எழுதினார் என்பதை மிக உயர்வாகத் தேர்வு செய்து, தமது கருத்தை வலியுறுத்த அவசியமான தகவல் துணுக்குகளை மாத்திரம் உள்ளடக்கி, தாம் விரும்பிய விசேஷித்த வலியுறுத்தத்தைக் கொடுத்தனர் என்பதை நாம் நினைவில் வைக்க

வேண்டும் (யோவான் 20:30, 31). இவர்களில் எவரும், எல்லாவற்றையும் கூறுவதில்லை, மற்றும் இந்த நான்குபேரும் சேர்ந்தும்கூட இயேசுவைப் பற்றி நமக்குத் தரும் தகவல்களில் இடைவெளிகளை விட்டுள்ளனர்.

இரண்டாவதாக, இந்த நான்குபேரும் வரலாற்றுக் கருத்து நோக்கில் மதிப்புக் கொண்டுள்ளனர். தொடக்ககால சபையானது, புதிய ஏற்பாட்டு மார்க்க சட்டத்தை (தேவனுடைய ஏவுதல் பெற்ற வார்த்தை என்று ஏற்றுக்கொள்ளப்படும் புத்தகப் பட்டியலை) மேம்படுத்துவதில், அப்போஸ்தலர்களின் அதிகாரத்துவம் பின்புலமாக இருந்ததென்று அவர்கள் கருதிய புத்தகங்களை உள்ளடக்கினர். மத்தேயு மற்றும் யோவான் ஆகியோர் அப்போஸ்தலர்களாக இருந்ததாலும், மாற்குவும் லூக்காவும் அப்போஸ்தலர்களின் நெருங்கிய கூட்டாளிகளாக இருந்ததாலும், அவர்கள் எழுத்தாங்கங்கள் தேவனுடைய அதிகாரத்துவமுள்ள வசனமாக இருப்பதாக கேள்வியின்றி முற்றிலுமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவற்றின் அதிகாரத்துவத்தை அங்கீகரித்த கிறிஸ்தவர்கள் அவற்றை வேத வாக்கியங்களாக ஏற்றுக்கொண்டனர்.

மூன்றாவதாக, நாம் ஒரே ஒரு சுவிசேஷத்தை மாத்திரம் கொண்டிருந்தால், இயேசுவைப் பற்றிய நமது புரிந்து கொள்ளுதல் எவ்வளவு வறியதாக இருந்திருக்கும் என்பதை நாம் காண முடியும்! நான்கு சுவிசேஷ விபரங்களும் அடிக்கடி இயேசுவைப் பற்றிய நான்கு சித்தரிப்புகளாக ஒப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் எதுவும் அவரைப் பற்றிய எல்லாவற்றையும் நமக்குக் கூறுவதில்லை, ஆனால் இவை ஒவ்வொன்றும் அவரது இயல்பு மற்றும் அடையாளத்துவம் ஆகியவற்றின் குறிப்பிட்ட அம்சங்களை வலியுறுத்துகிறது. உதாரணமாக, மத்தேயு சுவிசேஷம் இயேசுவின் அரசத்துவத்தை வலியுறுத்துகிறது. மாற்கு சுவிசேஷம் அவரது மாபெரும் வல்லமை மற்றும் அதிகாரத்துவம் ஆகியற்றின் மீது அதிகமாக கவனம் குவிக்கிறது. லூக்கா சுவிசேஷம் இயேசுவை மனிதகுலம் முழுமைக்கும் நற்செய்தியாக இருக்கும்படி வந்தவர் என்று காண்பிக்கிறது. யோவான் சுவிசேஷம் இயேசுவை தேவனுடைய குமாரனாக, தேவன் தமது சித்தத்தை மாத்திரமல்ல ஆனால் தமது இயல்பையே நமக்கு வெளிப்படுத்த பயன்படுத்திய வார்த்தையாக இயேசுவை முன்னிறுத்துகிறது.

தனித்தனி சுவிசேஷங்களை நாம் எவ்வளவு அதிகமாக வாசிக்கிறோமோ அவ்வளவுக்கு நாம், ஒவ்வொரு எழுத்தாளரின் தனித்தன்மை வாய்ந்த கருத்துநோக்கைப் பாராட்ட வருகிறோம் மற்றும் நாம் ஒரே ஒரு சுவிசேஷத்தைக் கொண்டிராமல் நான்கு சுவிசேஷ விபரங்களைக் கொண்டிருப்பதற்காக அதிகம் நன்றி நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

10

சிலுவையில் அறையப்பட்டார் & உயிர்த்தெழுந்தார்

(யோவான் 19 & 20)

இயேசுவின் மரணத்தினுடைய நித்திய தனிச்சிறப்புத் தரப்பட்ட நிலையில், அவர் சிலுவையில் அறையப்பட்ட நிகழ்ச்சியானது குறிப்பிடத்தக்க வகையில் சுருக்கமாக, யோவான் 19:18அ வசனப் பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளது: "அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்." ஆங்கில மொழியில் (மற்றும் தமிழ் மொழியிலும்) நான்கு வார்த்தைகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளன; யோவான் எழுதிய மூல கிரேக்க வேதாகமத்தில் மூன்று வார்த்தைகள் மாத்திரமே தேவைப்பட்டன.

அவர் சிலுவையில் அறையப்பட்டது பற்றி பிரசங்கிக்கப்படும்போது, இன்றைய நாட்களில் அடிக்கடி செய்யப்படுவது போன்று, அவருடைய பாடுகள் பற்றிய விபரங்களில் தங்கியிருத்தல் என்பது இருப்பதில்லை என்ற விஷயம் குறிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளது. இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னரும் அவர் சிலுவையில் இருந்த வேளையிலும் அவர் அனுபவித்த பாடுகளின் பயங்கரங்களை விவரிப்பதன் மூலம் வாசகரின் உணர்வுகளுடன் விளையாடும் முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இது இரண்டு காரணங்களுக்காக இவ்வாறு உள்ளது.

முதலாவது, நம்மைப் போலின்றி, யோவான் சுவிசேஷத்தின் தொடக்ககால வாசகர்கள், சவுக்கால் அடிக்கப்படுதல் மற்றும் சிலுவையில் அறையப்படுதல் என்பவற்றின் நடைமுறைகளை நன்கு அறிந்திருந்தனர். இயேசு அனுபவித்திருந்தவை, ஆயிரக்கணக்கான மற்றவர்களுக்கும் நடந்திருந்தன; மற்றும் குற்றம் செய்யவிருந்த மற்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும் வகையில், அவை யாவும் வெளியரங்கமாகச் செய்யப்பட்டன.

யோவான் 18:33ல் இயேசுவைப் பிலாத்து விசாரணை செய்த நிகழ்ச்சி பற்றிய விபரம் தொடங்குகிறது. இயேசு ரோமாபுரிக்கு அச்சுறுத்தலாக இருக்கவில்லை, ஆனால் மதரீதியான பூசலின் நிமித்தம் அவர் தனக்கு முன்பாகக் கொண்டுவரப் பட்டிருந்தார் என்று பிலாத்து விரைவாக முடிவு செய்தார். பிலாத்து இயேசுவைச் சவுக்கால் அடிப்பித்தபோது (19:1-5), அவர் மதரீதியான அதிகாரிகளின் இரத்த தாகத்தைத் திருப்தி செய்யவே அவ்வாறு செய்தார் என்பது உறுதி, அது அவர்கள் அவரை மரணதண்டனைக்கு உட்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துவதை நிறுத்த உதவும் என்று அவர் நம்பினார் (காண்க லூக்கா 23:16, 22). யோவான் 19:4ம் வசனம், பிலாத்து இயேசுவை அவரது சிறுமைப்பட்ட நிலையில் அவர்களுக்கு முன்பாக, "நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில்

இவனை வெளியே கொண்டுவருகிறேன்" என்ற வார்த்தைகளுடன் வெளியே கொண்டுவந்து நிறுத்தினார் என்று தெளிவாக உரைக்கிறது. பின்பு அவர் இயேசுவை அவர்களுக்கு முன்பாக, "இதோ, இந்த மனுஷன்" என்ற வார்த்தைகளுடன் முன்னிறுத்தினார் (வசனம் 5). இது வெறுப்புணர்வு மற்றும் ஏளனம் ஆகியவற்றின் சொல்விளக்கமாக இருந்தது என்பது உறுதி: "இவரைப்பாருங்கள்! இவரைக் குறித்தா நீங்கள் பயப்பட்டீர்கள்?" இன்னமும் அவர்கள் இயேசுவின் இரத்தத்திற்காகக் கூக்குரலிட்டனர், பிலாத்து மிகவும் வெறுப்படைந்தவராக, நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள், "நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" என்று கூறும் அளவிற்கு அவர்கள் கூக்குரலிட்டனர் (வசனம் 6ஆ).

சவுக்கால் அடித்தல் என்பது சிலுவையில் அறையப்படுவதற்கு முன் வழக்கமாகச் செய்யப்படும் ஒன்றாக இருந்தது. இதில், தோலினால் செய்யப்பட்டு, உலோகம், எலும்பு அல்லது கண்ணாடித் துண்டுகள் மணி மணியாகப் பிணைக்கப்பட்டிருந்த, பல வார்கள் இணைக்கப்பட்ட ஒரு சவுக்கினால், குற்றம் சாட்டப்பட்டவரை அடித்தல் என்பது உள்ளடங்கியிருந்து. சதையைக் கிழித்தல் என்பதே அதன் நோக்கமாக இருந்தது மற்றும் அது அடிக்கடி சிலுவையில் அறையப்படுதலுக்கு முன்பே மரணத்தை ஏற்படுத்துவதாக இருந்தது. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த வரலாற்றாளரான ஈசுபியஸ் என்பவர், குற்றம் சாட்டப்பட்ட சிலர், தங்களின் உள் உறுப்புகள் வெளியே கொண்டுவரப்படுமளவுக்குக் கடுமையாக சவுக்கால் அடிக்கப்பட்டனர் என்று எழுதினார்.[1] இயேசு சவுக்கால் அடிக்கப்பட்டது அனேகமாக, பிற்பாடு அவர் தண்டனை தரப்பட்ட இடம் வரையிலும் சிலுவை மரத்தைத் தூக்கிச் செல்ல இயலாதிருந்தது ஏன் என்பதை விளக்கப்படுத்துவதாக இருக்கலாம் (மத்தேயு 27:32).

சிலுவையில் அறையப்படுதல் என்பது எப்போதுமே, பொதுமக்களுக்கு எச்சரிக்கை செய்வதின் மிக உயர்ந்த செயல்விளைவைச் சாதிக்கும் வகையில், முதன்மைச் சாலைகளுக்கு அருகாமையில் உள்ள இடம் போன்ற பொதுவான இடங்களில்தான் செய்யப்பட்டது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் "நகரத்திற்குச் சமீபமாயிருந்து" என்று யோவான் குறிப்பிட்டார். இதன் விளைவாக, "யூதரில் அநேகர்" இயேசுவின் தலைக்குமேல் வைக்கும்படி பிலாத்து எழுதிக் கொடுத்திருந்த மேல்விலாசத்தை வாசித்தனர் (19:19, 20; காண்க மத்தேயு 27:37). யோவானின் நாட்களில் இருந்த மக்கள், சிலுவையில் அறையப்படுதல் பற்றிய யாவற்றையும் - ஆணிகள் குற்றம் சாட்டப்பட்டவரின் மணிக்கட்டுகளின் வழியாகவும் பாதங்களின் வழியாகவும் (அல்லது சிலருடைய குதிங்கால்களில்) துளைக்கப்படும் மற்றும் மரணம் மெதுவாக வரும், சில வேளைகளில் ஒருசில நாட்களாகிவிடும் என்பது போன்ற எல்லா விஷயங்களையும் - அறிந்திருந்தனர். ஆகையால் இவற்றை விபரமாகக் கூறுவது தேவையில்லாது இருந்தது. "அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்" (வசனம் 18அ) என்பது கூறப்போதுமானதாக இருந்தது.

இருப்பினும், இயேசுவின் பாடுகள் பற்றி விபரமாகக் கூறச் செல்லாது இருந்ததற்கு இரண்டாவது காரணம் ஒன்றிருந்தது. யோவானைப் பொறுத்த மட்டில் இந்தக் கொடூரமான உண்மைகள் இயேசுவின் மரணம் பற்றிய வரலாற்றுத் தகவல்களின் மிகவும் குறிப்பிடத் தக்கவைகளாக இருக்கவில்லை.

அவர் இன்னும் அதிகமுக்கியத்துவம் வாய்ந்த அக்கறைகளைக் கொண்டிருந்தார்: (1) சிலுவையில் அறையப்பட்டவர் யார்?, (2) அவர் ஏன் மரித்தார்? மற்றும் (3) அவர் மரித்தவராகவே இருந்துவிடவில்லை.

சிலுவையில் அறையப்பட்டது யார்: யூதர்களின் அரசர்

யோவான் 18:33-38ல் இயேசுவின் அரசத்துவம் பற்றி அவரிடத்தில் பிலாத்து கேள்வி கேட்டார், இது இவ்விடத்திலும் 19ம் அதிகாரத்திலும் மாபெரும் வலியுறுத்தத்தைப் பெறும் ஒரு ஆய்வுக்கருத்தாக உள்ளது. இந்த சந்தர்ப்பப் பொருளில் இயேசு, உண்மையில் தாம் ஒரு இராஜாவாக இருந்தார் என்பதை ஒப்புக்கொண்டு, தமது இராஜ்யம் ''இவ்வுலகத்திற்குரியதல்ல'' என்று பிலாத்துவிடம் தெரிவித்தார் (யோவான் 18:36அ) - அது, ரோம அதிகாரி என்ற வகையில் பிலாத்துவைக் கவலைப்படச் செய்யும் தற்காலிக வகையானதல்ல. பஸ்கா பண்டிகையின்போது ஒரு கைதியை விடுவிக்கும் தமது வழக்கமான அளிப்பைப் பிலாத்து வெளியிட்டபோது, "யூதருடைய ராஜாவை நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டா?'' என்று கேட்டார் (வசனம் 39ஆ). இதற்குக் கும்பல், "இவனையல்ல, பரபாசை விடுதலைபண்ண வேண்டும்'' என்று பதில் கொடுத்தது (இந்தப் பெயரானது நேரெதிரான வகையில் ''பிதாவின் குமாரன்'' என்று அர்த்தப்படுகிறது) (வசனம் 40).

19ம் அதிகாரத்திற்கு நாம் கடந்து செல்கையில், இயேசு ஒரு அரசர் என்ற வகையில் முள்முடி சூட்டப்பட்டு சிவப்பு அங்கி அணிவிக்கப்பட்டு, வீரர்களினால் கிண்டலான மரியாதை செலுத்தப்பட்டு ஏளனம் செய்யப்பட்டதைக் காணுகிறோம் (வசனம் 1-3). 12 முதல் 16 வரையிலான வசனங்களில் உள்ள எடுத்துரைப்பில் அரசத்துவம் பற்றிய கருத்து மீண்டும் முன்னணியில் உள்ளது, இதில் இயேசுவின் அரசத்துவம் இராயனின் அரசத்துவத்திற்கு எதிராக அமைக்கப்பட்டுள்ளது. மீண்டும் ஒருமுறை பிலாத்து, "இதோ, உங்கள் ராஜா'' என்றும் ''உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா?'' என்றும் கூறினார். இந்தக் கூற்றுகள் ஒவ்வொன்றிலும் பிலாத்து சத்தியத்தின் அறிக்கை ஒன்றை அறியாமலேயே ஏற்படுத்தியதை யோவான் கண்டார் என்பது தெளிவு. 15ம் வசனத்தில் பிலாத்துவின் கேள்விக்குப் பதில் அளித்த யூதர்கள், "இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை'' என்று கூறியதன் மூலம் தங்கள் உண்மையான அரசரான தேவன்மீதிருந்த வரலாற்றுப் பூர்வமான தங்கள் விசுவாசத்தை மறுதலித்தனர். அதிர்ச்சியூட்டும் இந்தக் கூற்றுதான் கடைசியாகப் பிலாத்து இயேசுவை சிலுவையில் அறையும்படி அவர்களிடம் ஒப்புக்கொடுக்க வற்புறுத்துவதாக இருந்தது.

இருப்பினும் வசனப்பகுதியில் அரசத்துவத்தின் ஆய்வுக்கருத்து இன்னும் முடிக்கப்படாது உள்ளது. யாரேனும் சிலுவையில் அறையப்படும்போது அவர்மீது சுமத்தப்பட்ட குற்றம் பற்றிய விபரத்தை எழுதிவைப்பது வழக்கமாக இருந்தது. பிலாத்து, "நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா'' என்று ஒவ்வொருவரும் வாசிக்கக் கூடும்படிக்கு, அப்போது வழக்கத்தில் இருந்த பொதுவான மூன்று மொழிகளிலும்[2] எழுதுவித்தார் (வசனம் 19). இதை இயல்பாகவே யூதர்கள்

எதிர்த்தனர்; ஆனால் இயேசு மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் பிலாத்துவை கட்டாயப்படுத்திய செயலுக்குப் பதில் செயலாகப் பிலாத்து, "நான் எழுதினது எழுதினதே" என்று கூறினார் (வசனம் 22). அவரது நடவடிக்கை இவ்வாறு செய்யப்பட்டு இருந்தாலும், இயேசு யூதர்களின் அரசராக இருந்தார் என்று அறிவித்ததன் மூலம் அவர் மீண்டும் ஒருமுறை சத்தியத்திற்குச் சாட்சியானார்.

இயேவின் அரசத்துவமானது 30ம் வசனத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப் பட்டிராது இருக்கையில், இயேசு "தமது ஆவியை ஒப்புக்கொடுத்த" இராஜரீகமான வகையில் அது மறைமுகமாக உணர்த்தப்படுகிறது. காடியை ஒரு வாய் சுவைத்த பின்பு (இது அவர் பேச முடிவதற்காக என்பது உறுதி), "முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்." சுவிசேஷங்களில் எதுவும் இயேசு "கொல்லப்பட்டார்" அல்லது "கொலைசெய்யப்பட்டார்" என்று கூறுவதில்லை. மாறாக அவர் ஏற்ற வேளையில் தமது ஜீவனைத் தாமாகவே ஒப்புக்கொடுத்தார்.

"முடிந்தது" என்று இயேசு கூறியபோது அவர் அர்த்தப்படுத்தியது என்ன? எது முடிக்கப்பட்டது? இதைத் தொடங்குவதில், இந்த பூமியின் மீது அவரது ஊழியம் நிறைவேற்றப்பட்டது. இந்தக் கருத்தைப் பற்றி இன்னும் அதிகம் கூறுவதென்றால், வரவிருந்த மேசியா/அரசர் - தமது மக்களை விடுவிப்பவர் என்று ஏசாயா 53ல் கூறப்பட்ட பாடுபடும் ஊழியக்காரர் - என்பவருக்கான தேவனுடைய தெய்வீக திட்டம் நிறைவேற்றத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. மற்றும், ஆபிரகாமின் சந்ததி வழியாக பூமியின் எல்லா மக்களினங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று அவருக்குத் தரப்பட்டிருந்த வாக்குத்தத்தம், இஸ்ரவேலின் அரியணையில் அமர தாவீதிற்கு ஒரு "மகன்" தரப்படுவார் என்று அவருக்குத் தரப்பட்டிருந்த வாக்குத்தத்தம், மற்றும் "வரவிருந்த ஒருவர்" மக்களை விடுவிப்பவராக இருப்பார் என்று தீர்க்கதரிசிகள் மூலமாகத் தரப்பட்டிருந்த வாக்குத்தத்தம் ஆகிய யாவும் நிறைவேற்றப்பட்டன. இயேசுவின் மரணமானது சாதாரண யூதரான இன்னொரு மனிதரின் மரணமாகவோ அல்லது கெட்டபெயர் எடுத்த கலகக்காரத் தலைவன் ஒருவனின் மரணமாகவோ இருக்கவில்லை. அது மக்களை விடுவித்தல் என்ற தமது ஊழியத்தை நிறைவேற்றிய மேசியாவின்/அரசரின் மரணமாக இருந்தது - இது அவர்கள் எதிர்பார்த்திருந்த வழியில் அல்ல, ஆனால் உலகத்தோற்றத்திற்கு முன்பே தேவன் திட்டமிட்டிருந்த வழியில் நிறைவேறிற்று.

அவர் மரித்தது ஏன்: பாவங்களை நீக்கிப்போட

யோவான் சுவிசேஷத்தின் தொடக்கத்திற்குத் திரும்பிச் சென்று நாம், யோவான் ஸ்நானன் இயேசுவை "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று சுட்டிக்காண்பிப்பதைக் கண்டறிகிறோம் (1:29). வழக்கத்திற்கு மாறான இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தியதினால் யோவான், இயேசுவே நிறைவான பலி ஆட்டுக்குட்டி என்று சுட்டிக்காட்ட விருப்பநோக்கம் கொண்டிருந்தார் என்பது உறுதி. அவர் மக்களுக்காக ஒரேதரம் செலுத்தப்படும் பலியாக இருக்க வேண்டியிருந்தது. பிற்பாடு பிரதான ஆசாரியரான காய்பா, தாம் அறியாமலேயே "ஜனங்களெல்லாரும் கெட்டுப் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும் ..." என்று தீர்க்கதரிசனம் உரைத்தார் (11:50). யோவான் மேலும் பின்வருமாறு

கூறினார்:

> இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூதஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காகமாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான் (11:51, 52).

வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், இயேசு யூதமக்களுக்காக மாத்திரமல்ல, ஆனால் இஸ்ரவேல் நாட்டிற்குப் புறம்பே உள்ள மக்களுக்காகவும் மரிக்க இருந்தார். இது "நான் பூமியிலிருந்து [சிலுவையின் மீது; வசனம் 32] உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" என்று இயேசு அறிவித்த இடமான யோவான் 12:31-33ல் மறுவலிவூட்டப்பட்டுள்ளது.

இயேசு பலியாகும் ஆட்டுக்குட்டியாக இருந்தார் என்ற ஆய்வுக்கருத்தானது, பஸ்கா பண்டிகை வேளையில் இயேசு சிலுவையில் அறையப்படுதல் நடந்தது என்று அடிக்கடி சுட்டிக்காட்டப்படுதலுடன் யோவான் 19, 20ம் அதிகாரங்களுக்கு முன்னரே வருகிறது. ஏற்கனவே நாம், "பஸ்கா பண்டிகையின் போது" மக்கள் விரும்பும் கைதி ஒருவரை விடுவிக்கும் சலுகையைப் பிலாத்து செயல்படுத்தினார் என்று கூறுகிற 18:39ஐக் குறிப்பிட்டுள்ளோம். இயேசு கும்பலுக்கு முன்பாக நின்றதும் பிலாத்து "இதோ, உங்கள் ராஜா" என்று கூறியதுமான "அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்த நாளாக" இருந்தது என்று யோவான் திட்டவட்டமாகக் கூறினார் (19:14). ஆயத்தநாள் என்பது பஸ்கா பண்டிகைநாளுக்கு முந்திய நாளாக இருந்தது, அந்தநாளில் பலிசெலுத்தப்படும் ஆட்டுக்குட்டிகள் அந்த மாலையில் பண்டிகையின் போது உண்ணப்படுவதற்காகக் கொல்லப்பட்டன (யாத்திராகமம் 12:6; லுக்கா 22:7). 31ம் வசனம் ஆயத்தநாள் பற்றி மீண்டும் குறிப்பிடுகிறது, இது அந்த மாலைவேளையில் பஸ்கா பண்டிகை தொடங்குவதால், மரித்த உடல் தாங்கள் அறையப்பட்ட சிலுவைகளில் (சாதாரணமாக நடைபெறுவதுபோன்று) தொங்கலாகாது என்ற யூதர்களின் கவனச்செயல்களைக் குறிப்பதாக உள்ளது.

பின்வரும் கருத்தை நாம் தவறவிடுவதை யோவான் விரும்பவில்லை: உலகத்தின் பாவங்களைப் போக்கும் பலி ஆட்டுக்குட்டியாக இயேசு மரித்தார். துன்புறும் அந்த அன்பின் வரலாறு நம்மை சிலுவையினிடத்தில் "இழுக்க" விருப்பநோக்கம் கொண்டுள்ளது, அங்குதான் நாம் மன்னிப்பையும் நித்தியஜீவனையும் கண்டறிய முடியும்.

மரணத்தைத் தொடர்ந்தது எது: அவர் எழுந்தார்

யோவான் 20ம் அதிகாரம், தொடர்ந்து வந்த "வாரத்தின் முதல்நாளில்" (ஞாயிற்றுக்கிழமை காலையில்) நடந்த மகிமையுள்ள உண்மையான, இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்த விஷயத்தைப் பதிவு செய்துள்ளது (வசனம் 1அ). மகதலேனா மரியாள் அன்று அதிகாலையில் கல்லறைக்குச் சென்றபோது, கல்லறையை அடைந்திருந்த கல் "கல்லறையில் இருந்து ஏற்கனவே எடுத்துப் போடப்பட்டிருந்ததை" கண்டாள் (வசனம் 1ஆ). (மற்ற சுவிசேஷங்கள், வேறுசில

பெண்களும் அங்கு அவளுடன் இருந்தனர் என்று குறிப்பிடுகிறது, ஆனால் யோவான் சுவிசேஷத்தில் மரியாள் மீது மாத்திரமே கவனம் குவிக்கப்படுகிறது.) பிற்பாடு பேதுருவும் யோவானும் கல்லறைக்குள் எட்டிப் பார்க்கையில், அங்கு இயேசுவின் கல்லறைத் துணிகள் இருக்கக் கண்டார், அவைகள் களையப்பட்டு கசங்காதநிலையில் வைக்கப்பட்டிருந்தன. இது நிச்சயமாக கல்லறையில் சடலத்தைத் திருடும் நிகழ்வு நடைபெற்ற விஷயமாக இருக்கவில்லை என்பது தெளிவு!

மரியாள் வெறுமையான கல்லறை மற்றும் உயிர்த்தெழுந்த கர்த்தருக்கும்கூட முதல் சாட்சியானாள் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. சில கல்வியாளர்கள் கொண்டுள்ளதைப் போன்று, இயேசு என்ற கற்பனைக் கதையை நிறைவு செய்வதற்காகத் தொடக்ககாலக் கிறிஸ்தவர்களால் இந்த வரலாறு புனையப்படவில்லை என்பதற்கு இது ஒரு வலுவூட்டும் குறிப்பாக உள்ளது. முதல்நூற்றாண்டில் வாழ்ந்திருந்த எவர் ஒருவரும் இப்படிப்பட்ட கதையை ஏற்படுத்தியிருக்க மாட்டார் மற்றும் முதன்மைச் சாட்சிகளாக இருக்கும்படி பெண்களைத் தள்ளியிருக்க மாட்டார், ஏனெனில் பெண்களின் சாட்சியம் நம்பத்தக்கதாகக் கருதப்படவில்லை. நான்கு சுவிசேஷங்களும் பெண்களை முதல் சாட்சியங்களாகப் பெயர்குறிப்பிடுவதால், இது நான்கு சுவிசேஷங்களுக்கும் உள்ள வரலாற்று ரீதியான நம்பகத்தன்மைக்குப் பலத்த ஆதாரமாக உள்ளது.

உயிர்த்தெழுதலுக்குப் பின்பு தரப்பட்ட நான்கு தரிசனங்களின் வரிசை ஒன்று தொடருகிறது. யோவான் 20:11-18ல் இயேசு மரியாளுக்குத் தரிசனமானார், அவள் அவரைக் கண்டபோது, அவரைத் தோட்டக்காரர் என்று தவறாக நினைத்தாள். பின்பு அவர் அப்போஸ்தலர்களில் பத்து பேருக்குத் தரிசனமானார் (இதில் தவறி வீழ்ந்த யூதாஸும், ஏதோ காரணத்திற்காக வெளியே சென்றிருந்த தோமாவும் இருக்கவில்லை; வசனங்கள் 19, 20). மற்றப் பத்துப் பேரின் அறிக்கையைத் தோமா கேள்விப்பட்ட பின்பும், நம்பிக்கையற்றவராக இருந்தார், அவர் தாம் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதைக் கண்ணால் பார்த்து உடலால் உணராத வரையிலும் அதை நம்பப்போவது இல்லை என்று அறிவித்தார், எட்டுநாளைக்குப் பின்பு, அந்த வாய்ப்பை அவருக்கு இயேசு அளித்தார், அப்போது தோமா, “என் ஆண்டவரே, என் தேவனே” என்று பதில் உரைத்தார் (வசனம் 28).

சுவிசேஷங்கள் உயிர்த்தெழுதலுக்குப் பின் பல தரிசனங்களைப் பதிவு செய்துள்ளன,[3] இவைகள் நாற்பது நாட்கள் அளவும் நடைபெற்றன என்று நடபடிகள் 1:3 வசனம் கூறுகிறது. சுவிசேஷப் புத்தகங்களில் எதுவும் ஒவ்வொரு தரிசனத்தையும் பதிவு செய்துள்ளதாக உரிமைகோருவதில்லை, ஆனால் ஒவ்வொரு எழுத்தாளரும் தமது தனிப்பட்ட நோக்கத்திற்கு மிகச்சிறந்ததாகப் பொருந்துபவற்றைத் தேர்ந்து கொண்டுள்ளனர். 1 கொரிந்தியர் 15:5-8ல் பவுல், சில தரிசனங்களைக் குறிப்பிட்டார் - இதில் யாக்கோபுக்கு (இவர் இயேசுவின் சகோதரர்) தரப்பட்ட தரிசனமும் “ஒரே வேளையில் ஐந்நூறுக்கும் அதிகமான சகோதரர்களுக்குத் தரப்பட்ட தரிசனமும்’’ மிகவும் குறிப்பிடத்தக்கவை - இவைகள் சுவிசேஷப் புத்தகங்கள் எதிலும் இல்லை.

இந்தத் தரிசனங்களின் பணி என்னவாக இருந்தது, மற்றும் இவைகள் இயேசுவின் வரலாற்றிற்கு இவ்வளவு தனிச்சிறப்புக் கொண்டவையாக இருப்பது ஏன்? முதலாவதாக இவைகள், இயேசு உண்மையிலேயே உயிருடன்

இருந்தார் என்பதை அவரைப் பின்பற்றியவர்களுக்கு உறுதிப்படுத்தின, இது அவர்கள் சாட்சிகளாக இருப்பதற்கு அவர்களைத் தகுதிப்படுத்திற்று. இது, இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டது முதல் அவர் பரலோகத்திற்கு எழுந்து சென்றது வரையில், அவரது ஊழியத்தைக் கண்ணால் கண்ட சாட்சியாக இருந்திருக்க வேண்டும் என்ற அப்போஸ்தலராவதற்குரிய ஒரு நிபந்தனையாக இருந்தது (நடபடிகள் 1:21, 22). பவுல் "நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா? ..." என்று கூறி தமது அப்போஸ்தலத்துவத்தைத் தற்காத்துக் கொண்டார் (1 கொரிந்தியர் 9:1). அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம், தமஸ்கு சாலையில் சவுல்/பவுல் என்பவருக்கு இயேசுவின் தரிசனத்தை மிகச்சரியாக இந்தக் காரணத்திற்காகவே பதிவு செய்துள்ளது (இது ஒருமுறையல்ல ஆனால் மூன்று முறை பதிவாகியுள்ளது; நடபடிகள் 9; 22; 26). பவுல் தோற்றக்கால அப்போஸ்தலர்கள் பன்னிருவரில் ஒருவராக இராததால், உண்மையில் அவர் கர்த்தராலேயே ஒரு அப்போஸ்தலராக இருக்கும்படி தேர்ந்து கொள்ளப்பட்டிருந்தார் என்ற கருத்து நிலைநாட்டப்பட வேண்டியிருந்தது - இது அவர் உயிர்த்தெழுதலுக்குப் பின் தரப்பட்ட தரிசனங்கள், சுவிசேஷத்தைப் பரப்புவதில் வலிவார்ந்த பணிப்பொறுப்பைக் கொண்டுள்ளன.

இரண்டாவதாக, தேவனுடைய குமாரன் என்ற வகையில் இயேசுவின் அடையாளத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு இந்தத் தரிசனங்கள் உதவுகின்றன. அவரது சரீரம் கல்லறையிலேயே இருந்திருக்கும் என்றால், அவர் ஒரு வஞ்சகர் என்று வெளிப்படுத்தப் பட்டிருப்பார் மற்றும் கிறிஸ்தவம் என்பது ஒரு பொய்யாகப் போயிருக்கும். போலியான மார்க்க இயக்கங்கள் பலவற்றைப்போன்று, இதுவும் ஆவிக்குரிய வகையில் உயிர்ப்பொருளற்றது என்று புறக்கணிக்கப்பட்டதாக இருந்திருக்கும். இருப்பினும், தரிசனங்கள் உறுதிப்படுத்துகிறபடி, இயேசு உண்மையிலேயே கல்லறையில் இருந்து வெளியே வந்திருந்தார் என்றால் (இதுவே உண்மை), சித்தரிப்பானது முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. இதை ரோமர் 1:4ல் பவுல், இயேசு "பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்" என்று கூறியதில் வலியுறுத்தினார். "ரூபிக்கப்பட்ட" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது "நியமனம்" அல்லது "அறிவித்தல்" என்ற கருத்தைக் கொண்டிருக்க முடியும். இயேசு மரித்தோரில் இருந்து எழுந்ததற்குப் பின்பு மாத்திரமே தேவனுடைய குமாரன் ஆனார் என்று பவுல் கூறவில்லை, ஆனால் அவர் தமது உயிர்த்தெழுதலினால் தேவனுடைய குமாரன் என்று "அறிவிக்கப்பட்டார்" அல்லது "காண்பிக்கப்பட்டார்" என்றே அவர் கூறினார்.

கிறிஸ்தவர்கள் இரத்த சாட்சியாக இறந்துபோன ஒருவரின் நினைவாக ஆராதிப்பதில்லை, ஆனால் சிலுவையில் அறையப்பட்ட உயிர்த்தெழுந்த - இந்தக் கணத்தில் பரலோகத்தில் இருப்பவரும் நமது சார்பாகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருப்பவருமான - கர்த்தரின் நினைவாக அவர்கள் ஆராதிக்கின்றனர். நமது கர்த்தர் அவருடைய பரிசுத்த ஆவியின் நபருடன் நம்முடன் கூட இருக்கும் ஒருவராக இருக்கிறார். அவருடன் கர்த்தருடைய பந்தியில் நாம் ஒரு "விருந்தை" பகிர்ந்துகொள்ளும் சிலாக்கியத்தை நாம் பெற்றுள்ளோம். இந்த இராப்போஜனமானது கடந்த காலத்தில் செய்யப்பட்ட

ஒன்றின் நினைவுகூருதலாக மாத்திரமல்ல, ஆனால் அதைக்காட்டிலும் அதிகமானதாக உள்ளது, இது உயிர்த்தெழுந்த கர்த்தருக்கும் அவரைப் பின்பற்றுபவர்களுக்கும் இடையிலான ஜீவனுள்ள விருந்தாக உள்ளது. இயேசு மரித்தவராக இருந்துவிடவில்லை. அதன் காரணமாக, நாம் ஒரு ஜீவனுள்ள நம்பிக்கையையும் நமது கர்த்தருடன் தற்கால ஐக்கியத்துவம் ஒன்றையும் கொண்டுள்ளோம்.

"நீங்கள் விசுவாசிக்கும்படி"

யோவான் 20ம் அதிகாரத்தின் கடைசி இரண்டு வசனங்கள், அவர் தமது சுவிசேஷத்தை எழுதியதற்கான "நோக்கக் கூற்றை" கொண்டுள்ளன. அவர் தாம் கூறியதைக் காட்டிலும் அதிகமானவற்றைக் கண்டிருந்தாக ஒப்புக்கொள்வதில் தொடங்கினார், அவர் கண்டவற்றை ஒரே புத்தகத்தில் எழுதிவிட இயலாது என்று அவர் கூறினார் (இதே போன்ற ஒரு கூற்றுக்கு யோவான் 21:25ஐக் காணவும்). யோவான், தாம் அறிந்த எல்லாவற்றையும் கூற முயற்சி செய்வதற்குப் பதிலாக, இயேசுவின் ஊழியத்தில் இருந்து, அவிசுவாசிக்குள் விசுவாசத்தை உண்டாக்கக் கூடியதும் விசுவாசியின் விசுவாசத்தைப் பெலப்படுத்தக் கூடியதுமான "அடையாளங்களை" கவன நிறைவுடன் தேர்ந்தெடுத்திருந்தார்; நம்மை மனம்மாற்றுதல் மற்றும்/அல்லது இயேசுவில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தைப் பெலப்படுத்துதல் என்பதே அவரது விருப்பநோக்கமாக இருந்தது.[4] "விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும்" (வசனம் 31) என்பதே அவரது எழுத்தாங்கங்களின் நிறைவான இலக்காக இருந்தது. (அவரது) வரலாற்றை அறிதல் என்பது நமது விசுவாசத்திற்கு மிகவும் இன்றியமையாததாக உள்ளது. ஜீவனைப் பெறுவதற்கு விசுவாசம் இன்றியமையாததாக உள்ளது.

முடிவுரை

இயேசு சிலுவையின் மீதிருந்த வேளையில் அவரது பாடுகள் என்பவற்றின் மீது அதிகம் சிந்தனையாக இருப்பதற்கு மாறாக, அவற்றைக் காட்டிலும் மாபெரும் தனிச்சிறப்புக் கொண்ட உண்மைகளை நோக்கி நமது கவனத்தை யோவான் திருப்பினார். இயேசு, யூதர்களுக்கு அரசராகவும் உலகத்திற்கு இரட்சகராகவும் மரித்தார்; அவர் நம் எல்லாரையும் நமது பாவங்களில் இருந்து இரட்சிப்பதற்கு மரித்தார்; மற்றும் அவர் தமது அடையாளத்துவத்தைச் செயல்விளக்கப்படுத்துவதற்கும் நாமும் கூட அவரது உயிர்த்தெழுதலில் பங்கேற்கக் கூடும்படிக்கு நமக்கு "ஜீவனுள்ள நம்பிக்கையை" அளிக்கும்படிக்கும் கல்லறையில் இருந்து உயிர்த்தெழுந்தார்.

குறிப்புகள்

[1]Eusebius *Ecclesiastical History* 4.15.4. [2]யோவான் 19:20ஐக் காணவும், இவ்விடத்தில் "எபிரெயமொழி" என்பது பலஸ்தீனத்தில் இருந்த யூதர்களால் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட அந்த மொழியின் அரமாயிக் வடிவத்தைக் குறிப்பதாக இருக்கலாம். இலத்தீன் என்பது ரோமப் பேரரசின் அலுவலகரீதியான மொழியாக இருந்தது. கிரேக்கு என்பது, நானூறு ஆண்டுகளுக்கு முன்னதாக மகா அலெக்சாண்டர் என்பவர்

மத்தியதரைக்கடல் பகுதிகளைக் கைப்பற்றியதன் விளைவாகப் பொதுவாக எல்லாராலும் அறியப்பட்டிருந்த மொழியாக இருந்தது. [3]மாற்கு 16:9-20 வரையுள்ள வசனப்பகுதி சுவிசேஷத்தின் மூலத்தில் இல்லை என்று கருதப்பட்டால், இதற்கு மாற்கு சுவிசேஷம் ஒரு விதிவிலக்காக உள்ளது. பல்வேறு மொழிபெயர்ப்புகளில் உள்ள குறிப்புகள், வசனத்தின் இந்தப் பகுதியானது தொடக்ககாலக் கையெழுத்துப் பிரதிகளில் இல்லை என்று விளக்கப்படுத்துகின்றன. [4]மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்களைப் பொறுத்தவரையிலும் கூட இது உண்மை என்பது தெளிவாக இருந்தாலும், யோவான் தமது நோக்கத்தை மிகத்தெளிவாக உரைத்தவராகவும் வாசகர்களிடத்தில், முன்னிலைப் பெயரில் ("நீங்கள்") நேரடியாக (தமது எழுத்தின்மூலம்) பேசும் ஒரே ஒரு சுவிசேஷ எழுத்தாளராகவும் இருக்கிறார். (இயேசுவின்) வரலாறு பொதுவாகக் கூறப்பட்டிருக்கவில்லை, ஆனால் தாம் அளிக்கும் விபரத்தை வாசிக்கும் ஒவ்வொரு தனிநபரை நோக்கியும் இலக்காக இருந்தது என்பதை வாசகர்கள் அறியவேண்டும் என்று அவர் விரும்பினார்.

11

பெந்தெகொஸ்தே & அதற்கு அப்பால்

(நடபடிகள் 2)

நடபடிகள் 2ல் விவரிக்கப்பட்டுள்ள யூதர்கள் கொண்டாடிய பெந்தெகொஸ்தே என்னும் பண்டிகை, இயேசு (பஸ்காவில்) சிலுவையில் அறையப்பட்டு ஐம்பது நாட்களுக்குப் பின்னரும் அவர் பரலோகத்திற்கு எழுந்து சென்றபின் பத்து நாட்களுக்கு பின்னரும் வந்தது. இது கோதுமை அறுப்பின் முதற்பலன்களைக் கொண்டாடும் நாளாக இருந்தது; ஆனால் பிற்பாடு இது சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த நிகழ்வுடன் இணைவிக்கப் பட்டதாயிற்று (ஏன் அல்லது எப்படி என்று எவரும் அறிவதில்லை). அது தேவனுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கு இடையிலான உடன்படிக்கையைப் புதுப்பிக்கும் வேளையாயிற்று. நடபடிகள் 2ல் உள்ள பெந்தெகொஸ்தே நாளானது, வேதாகமரீதியான வெளிப்படுதலின் வரைவளவைப் புரிந்து கொள்வதில் நடபடிகள் 2ம் அதிகாரம் ஒரு திறவுகோல் வசனப்பகுதியாகக் கருதப்பட வேண்டும் என்ற அளவுக்கு, கிறிஸ்தவத்தின் தோற்றம் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றில் விசேஷித்த வகையிலான தனிச்சிறப்பு உடையதாக இருக்கிறது.

குறிப்பிட்ட இந்த பெந்தெகொஸ்தே நாள் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது? "பெந்தெகொஸ்தே நாள்" என்பது எதைப்பற்றியதாக இருந்தது?

இந்தக் கேள்விகளுக்கு இரண்டு வழக்கமான பதில்கள் தரப்பட்டுள்ளன. முதலாவது சிலர், பெந்தெகொஸ்தே நாள் என்பது பரிசுத்த ஆவியானவருடைய வருகை மற்றும் பல்வேறு மொழிகள் பேசும் வரம் பொழியப்படுதல் பற்றியதாக உள்ளது என்று பதில் உரைக்கின்றனர். பல் வேறு மொழிகள் (அந்நியபாஷை) பேசும் வரத்தை இன்றைய நாட்களில் நடைமுறைப்படுத்துவோரை "பெந்தெகொஸ்துகள்" என்றும் அவர்களின் இயக்கத்தை "பெந்தெகொஸ்தே கொள்கை" என்றும் நாம் குறிப்பிடும் அளவுக்கு, குறிப்பிட்ட இந்த வரம் பொழியப்படுதலுடன் பெந்தெகொஸ்தே அதிகமாக அடையாளப்படுத்தப்படுகிறது.

நடபடிகள் 2ன் பெந்தெகொஸ்தே நாளானது, அலுவலகரீதியாக சபை நிலவ வந்த நாளாக "சபை பிறந்தநாளை" குறிப்பிடுகிறது என்பது அதன் முக்கியத்துவத்தைப் பொறுத்தமட்டில் அடிக்கடி கூறப்படும் இன்னொரு பதிலாக உள்ளது.

நடபடிகள் 2ஐ மேம்போக்காக வாசித்தல்கூட, இவ்விரண்டு ஆய்வுக்கருத்துக்களுமே நடபடிகள் 2ல் மாபெரும் முக்கியத்துவம்

வாய்ந்தவைகளாக உள்ளதைக் காண்பிக்கும். இருப்பினும் இவற்றில் எதுவும் உண்மையில் இந்த அதிகாரத்தின் முதன்மைக் கவனக்குவிப்பாக இருப்பதில்லை. உண்மையில், இயேசு மற்றும் அவர் கொண்டுவரும் இரட்சிப்பு ஆகியவையே நடபடிகள் 2ன் முதன்மைக் கவனக்குவிப்பாக உள்ளது. இந்த பெந்தெகொஸ்தே நாளன்று இயேசுவின் சுவிசேஷம் அதன் முழுமைத்தன்மையில் முதன்முறையாகப் பிரசங்கிக்கப்பட்டதால், இந்த நாள் மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த நாளாக உள்ளது. இயேசு சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்து தமது பிதாவினிடத்தில் எழுந்து செல்லும் வரையிலும் "முழுமையான சுவிசேஷம்" பிரசங்கிக்கப்படக் கூடாததாக இருந்தது. அது முதன் முறையாக நடபடிகள் 2ல் நடைபெற்றது.

ஆவியானவரின் வருகை மற்றும் சபை நிலைநாட்டப்படுதல் என்பவற்றின் ஆய்வுக் கருத்துகள் இயேசுவைப் பற்றி அறிவித்தலுடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளன என்பது உண்மையே. ஆவியானவரின் வருகையானது இயேசுவைப் பற்றி அறிவித்தலுக்கு வல்லமை அளித்தது, மற்றும் இந்த அறிவித்தலில் இருந்தே சபை நிலைநாட்டப்படுதல் விளைந்தது. இருப்பினும் சுவிசேஷ செய்தியே, நடபடிகள் 2 மற்றும் பெந்தெகொஸ்தே நிகழ்வின் முதன்மைக் கவனக்குவிப்பாக உள்ளது.

அறிவித்தலின் வல்லமை:
ஆவியானவரின் வருகை (2:1-21)

இயேசு பரலோகத்திற்கு ஏறிச் செல்வதற்கு முன்னர் தமது அப்போஸ்தலர்களுக்கு, "… நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" என்று வாக்களித்திருந்தார் (நடபடிகள் 1:5). அவர்களிடத்தில் அவர், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றும் கூறியிருந்தார் (நடபடிகள் 1:8). உயிர்த்தெழுந்த இயேசுவை அறிவிப்பதற்காக அப்போஸ்தலர்கள் வல்லமை/பெலன் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது, மற்றும் அந்த வல்லமை பரிசுத்த ஆவியானவரிடம் இருந்து வரும், அவர்கள் பரிசுத்த ஆவியானவருக்குள் "ஞானஸ்நானம் பெறுவார்கள்" (இது "மேற்கொள்ளப்படுதல்" அல்லது "மூழ்கடிக்கப்படுதல்" என்று அர்த்தப்படுகிறது, இது இவ்வார்த்தையின் உருவகப்பயன்பாடு என்பது தெளிவு).

இது எவ்வாறு நடைபெற்றது என்பதை நடபடிகள் 2:1-13 வசனப்பகுதி விவரிக்கிறது. அப்போஸ்தலர்கள் ஒரு வீட்டில் அமர்ந்திருக்கையில், பலத்த காற்று அடிக்கும் முழக்கம் கேட்டது. மேலும் "அக்கினிமயமான நாவுகள்" (வசனம் 3) தோன்றின, இவைகள் அப்போஸ்தலர் ஒவ்வொருவருடைய தலையின் மீதும் வந்திறங்கின என்பது உறுதி. இது நடந்தபோது அவர்கள் "பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" (வசனம் 4). இந்தக் கொந்தளிப்பின் விளைவாக, ஒரு பெரிய கூட்டம் கூடிற்று. இந்தவேளையில் நடந்தது என்ன என்பதை அந்தக் கூட்டத்தார் அறியத்தொடங்கியதால், அப்போஸ்தலர்கள் அறைக்கு வெளியே வந்தனர், அங்கு கூடியிருந்த

கூட்டத்தினரை நோக்கிப் பேதுரு பேசத்தொடங்கினார். அதைத்தொடர்ந்து கூட்டத்தினரின் பகுதியில் கணிசமான அளவுக்குக் குழப்பத்தின் காட்சி ஏற்பட்டது. பேசிய அப்போஸ்தலர்கள் யாவரும் கலிலேயர்களாக, பல் வகை மொழிகளை அறியாதவர்களாக இருந்தாலும், அவர்கள் பேசியதை ஒவ்வொரு நபரும் தங்கள் சொந்த மொழியில் கேட்க முடிந்தது. நடபடிகளின் எழுத்தாளரான லூக்கா, அங்கு கூடியிருந்த மக்களின் இனங்கள் சிலவற்றைப் பட்டியலிட்டார், இது பல்வேறு இடங்களில் இருந்து யூதர்களும் யூதமார்க்கத்து அமைந்தவர்களும், பஸ்கா மற்றும் பெந்தெகொஸ்தே என்ற இரட்டைப் பண்டிகைக்காக அங்கு வந்திருந்தனர் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. அவர்கள் "நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்கேட்கிறோமே" (நடபடிகள் 2:11) என்று கூறினர். அவர்கள் மத்தியில் இந்த நிகழ்வு பற்றிக் கணிசமான கலந்துரையாடல் நிகழ்ந்தது, அதில் சிலர், அப்போஸ்தலர்கள் மதுபானம் அருந்தியிருந்ததாகக் கூறினர்.

இவை யாவற்றையும் நாம் எவ்வாறு விளக்கப்படுத்த வேண்டியுள்ளது? முதலாவதாக நாம், மொழிகள் பேசும் வரத்தைப் பொழிதல் மாத்திரமே ஆவியானவருடைய வருகையின் நோக்கமாக இருக்கவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். 2 மற்றும் 3 ஆகிய வசனங்கள், ஆவியானவரின் வருகையுடன் கூடுதலாக (காற்று மற்றும் "அக்கினி நாவுகள்"[1] என்ற) இரு அற்புதங்கள் இணைந்திருந்தன என்று சுட்டிக்காண்பிக்கின்றன. மொழிகள் பேசுதல் என்பதன்மீது தனிப்பட்ட வகையில் கவனம் குவிக்கக் காரணம் எதுவும் இருப்பதில்லை. இரண்டாவதாக, பேசப்பட்ட மொழிகள் ஆவியானவரின் பிரசன்னத்திற்குச் சாட்சிகளாக இருந்தன, அவைகள் தங்களிலேயே ஒரு முடிவாக இருக்கவில்லை. இது அப்போஸ்தலர் (காற்று முழக்கம் மற்றும் அக்கினியின் தோற்றம் ஆகியவற்றுடன்) பிறமொழிகளில் பேசுதல் என்பது கூட்டத்தினர் அதைப் பற்றி வேறு ஏதாவது கருத்தைக் கொள்ளும் முன்னர் பேதுருவினால் விளக்கப்பட வேண்டியிருந்தது என்ற உண்மையிலிருந்து தெளிவாகிறது. கூட்டத்தினர் யோவேலுடைய தீர்க்கதரிசனத்தின் (யோவேல் 2:28-32) நிறைவேற்றத்தைக் கண்டுகொண்டிருந்தனர் என்று பேதுரு அவர்களுக்குக் கூறும் வரையிலும், அந்தக் கூட்டத்தினர் தாங்கள் கண்டு கேட்டதைப் பற்றி என்ன நினைப்பது என்று அறியாதிருந்தனர். அப்போஸ்தலர்கள் பிறமொழிகளில் பேசுதல் என்பது மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த சிலவற்றை நோக்கிச் சுட்டிக்காண்பித்தது.

ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட நிகழ்வானது, மொழிகளில் பேசுதலை முதன்மையானதாகக் கொண்டிருக்கவில்லை என்றால், அது எதைப்பற்றியதாக இருந்தது? *முதலாவது, ஆவியானவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு அப்போஸ்தலர்கள் சாட்சிகளாக இருக்கும்படி அவர்களுக்கு வல்லமை அளிக்க வந்தார்.* சுவிசேஷப் புத்தகங்களின் முடிவுப்பகுதியில், அப்போஸ்தலர்கள் தாங்கள் கண்டிருந்த எல்லாவற்றினாலும் ஊக்கம் இழந்து குழப்பம் அடைந்து இருந்தனர் (லூக்கா 24:19-21; நடபடிகள் 1:6, 7). இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அளித்த தரிசனங்கள்கூட அவர்களுக்குத் தங்களின் ஊழியம் பற்றிய தெளிவான கருத்தையோ அல்லது குறைந்தபட்சம் அதைச் செய்வதற்கான மனவிருப்பத்தையோ அல்லது திறனையோ அவர்களுக்குத் தரவில்லை. இருப்பினும் ஆவியானவர் வரும்போது அவர் அவர்களை "சகல

சத்தியத்திற்குள்ளும் ... நடத்துவார்" மற்றும் "வரப்போகிற காரியங்களை ... அறிவிப்பார்" என்று இயேசு வாக்களித்திருந்தார் (யோவான் 16:13). ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாளின்போது வந்த உடனே, அப்போஸ்தலர்கள் இயேசுவைச் சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்து எழுந்தவர் என்று அறிவிப்பதில் ஒரு தைரியத்தைப் பெற்று அனுபவித்தனர். அவர்கள் அதற்கு முன்னர் அப்படிப்பட்ட தைரியத்தைப் பெற்று அனுபவித்து இருந்ததில்லை; அது இயற்கையான எல்லா விளக்கங்களுக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது (அது 2:36ல் பேதுருவின் தைரியமான குற்றச்சாட்டினால் தெளிவாக்கப்பட்டது).

இரண்டாவது, ஆவியானவர் இஸ்ரவேல் மீளக்கட்டுவிக்கப்படுதலின் யுகத்தைத் தொடங்குவதற்காக வந்தார். பெந்தெகொஸ்தே கருத்தை விளக்குவதற்காகப் பேதுரு, 16 முதல் 21 வரை உள்ள வசனங்களில், யோவேல் தீர்க்கதரிசனத்தில் இருந்து மேற்கோள் காண்பித்தார். இந்த மேற்கோள் மற்றும் இதன் தோற்றகாலச் சந்தர்ப்பப் பொருள் ஆகியவற்றின் முழுச்செயல் விளைவையும் பெறுவதற்கு நாம், யோவேலின் தீர்க்கதரிசனப் புத்தகம் முழுவதையும் வாசிக்க வேண்டும். அது ஒழுக்கவீனமான மற்றும் தோற்கடிக்கப்பட்ட இஸ்ரவேல் மக்களுக்குத் தீர்க்கதரிசனச் செய்தியாக இருந்தது, அது தேவன் இன்னும் அவர்களுடன் தமது செயல்களை முடித்திருக்கவில்லை என்று அவர்களுக்கு வாக்களித்தது. எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட வேளையில் மீளக்கட்டுவிக்கப்படும் நாள் வரும் என்று யோவேல் அறிவித்தார். ஆவியானவருடைய வருகை மற்றும் "மனிதகுலம் முழுமைக்கும்" ஆவியானவர் கிடைக்கப் பெறுதல் ஆகியவற்றினால், "கடைசி நாட்களில்" (நடபடிகள் 2:17; யோவேல் 2:28ல் "அதற்குப் பின்பு" என்று மாத்திரம் உள்ளது) மீளக்கட்டுவித்தலின் அந்த யுகமானது தொடங்கி வைக்கப்படும்.

மீளக்கட்டுவித்தலின் காலத்தில் தீர்க்கதரிசனம் புதுப்பிக்கப்படுதல் பற்றி யோவேல் குறிப்பிட்டார். (பழைய மற்றும் புதிய) ஏற்பாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் (பழைய ஏற்பாட்டு முடிவில் இருந்து இயேசுவின் வருகையின் காலத்திற்கு இடைப்பட்ட காலத்தில்) இருந்து, தீர்க்கதரிசனத்தின் உண்மையான குரல் ஒழிந்து போயிருந்ததை யூதத்துவம் உணர்ந்து அறிந்திருந்தது. மேசியாவின் வருகை மற்றும் தேவனுடைய ஆவியானவர் பொழியப்படுதல் ஆகியவற்றுடன் மாத்திரமே தேவனுடனான அப்படிப்பட்ட தகவல் தொடர்பு மீளக்கட்டுவிக்கப்படும் என்று பொதுவாக நம்பப்பட்டது. பழைய ஏற்பாட்டில் ஆவியானவரின் கொடையானது விதியாக அல்ல ஆனால் விதிவிலக்காக இருந்தது. இன்றைய நாட்களில் ஒவ்வொரு கிறிஸ்தவரும் கொண்டிருப்பது போன்று சராசரி இஸ்ரவேல் மனிதர் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டிருக்கவில்லை. அரசர்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் நியாயாதிபதிகள் ஆகியோர் தங்கள் பணிப்பொறுப்புகளை நிறைவேற்ற வல்லமை அளிப்பதற்காகப் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் "மீது வந்தார்" என்று கூறப்பட்டது. இருப்பினும் யோவேல், பரிசுத்த ஆவியானவர் எல்லாருக்குமான கொடையாக இருப்பார் என்று வாக்களித்தார், அந்த வேளை வந்திருந்தது என்று பேதுரு அறிவித்தார். தேவன் புதிதான சிலவற்றைச் செய்துகொண்டிருந்தார். இந்தப் புதுப்பித்தல் "மாம்சப்பிரகாரமான இஸ்ரவேல்" மக்களுக்கு மாத்திரம் அல்ல, ஆனால் புறஜாதியாரும் இஸ்ரவேல் மக்களும் உள்ளங்கிய, புதுப்பிக்கப்பட்ட "ஆவிக்குரிய இஸ்ரவேல்" மக்களுக்கானது என்று நடபடிகள் 2:39ம் வசனம் சுட்டிக்காண்பிக்கிறது. "தூரத்திலுள்ள யாவருக்கும்"

என்பது, தேவனிடத்தில் இருந்து தூரமாயிருந்த புறஜாதியாரைக் குறிப்பதாக இருந்தது. (காண்க எபேசியர் 2:12, 13.)

நடபடிகள் 2ல் ஆவியானவரின் வருகை முக்கியமாக இருப்பது போன்றே, பெந்தெகொஸ்தே வரலாறு அங்கு முடிவடைய இயலாது. ஆவியானவருடைய வருகையுடன் தொடர்புடைய அற்புதங்கள் கூட்டத்தின் கவனத்தைக் கவர்ந்து, இந்த நிகழ்வுகள் எதை அர்த்தப்படுத்தின என்று பேதுரு விளக்கி உரைத்த உடனே, அவர் இந்த நிகழ்வை, இயேசுவைப் பற்றியும் அவர் கொண்டு வந்திருந்த மீட்பைப் பற்றியும் அறிவிக்க பயன்படுத்தினார்.

அறிவித்தல்: இயேசுவைப் பற்றிப் பேதுருவின் பிரசங்கம் (2:22-40)

பெந்தெகொஸ்தே அற்புதம் பற்றிப் பேதுருவின் விளக்கத்தைத் தொடர்ந்து, 22ம் வசனத்தில் பிரசங்கம் தொடங்குகிறது. பிரசங்கத்தின் தொடக்கமானது "நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்" என்ற வார்த்தைகளைக் கொண்டு குறிப்பாக உணர்த்தப்படுகிறது. சுருக்கமான இந்த அறிமுகத்திற்குப் பின்பு முதலாக அவர் கூறிய வாக்கியத்தில், "நசரேயனாகிய இயேசு" என்ற வார்த்தைகள் உள்ளன.

பேதுருவின் பிரசங்கத்தினுடைய வரைகுறிப்பு எளியதாக உள்ளது. அவர் தமது உரையைக் கேட்பவர்கள் மறுக்க இயலாத உண்மையான, "நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்" என்று இயேசுவை அடையாளப்படுத்துதலைக் கொண்டு தொடங்கினார் (வசனம் 22). பின்பு அவர், இயேசு அக்கிரமக்காரராலே கொலை செய்யப்பட்டார் என்றும் தமது உரையைக் கேட்டவர்கள் இந்த விஷயத்தில் குற்றவாளிகளாக இருந்தனர் என்றும் குற்றம்சாட்டினார்: "... இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்" (வசனம் 23). ரோமர்களே தொழில்ரீதியாக இயேசுவைச் சிலுவையில் அறைந்திருந்தனர் என்றாலும், யூதக்கும்பல், அதிலும் குறிப்பாக மார்க்கத் தலைவர்கள் வற்புறுத்தியிராவிட்டால், அவர்கள் அதைச் செய்திருக்க மாட்டார்கள். பின்பு பேதுரு, இவையாவும் "தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும்" நடந்தது என்று அறிவித்தார். அவர் இயேசுவின் மரணத்தை, ஒரு துரதிர்ஷ்டவசமான விபத்தாக அல்ல, ஆனால் அவரது வருகைக்கு முன்பு - வரவிருந்த மேசியா பற்றிய வாக்குத்தத்தமான ஆதியாகமம் 3:15ல் இருந்து - நடந்திருந்தவற்றின் தொடர்ச்சி மற்றும் நிறைவேற்றம் என்ற வகையில் முன்வைத்தார். புதிய ஏற்பாடு என்பது பழைய ஏற்பாட்டு வரலாற்றின் தொடர்ச்சியில் இருந்து இயேசுவின் வருகை வரைக்குமான நிகழ்வுகளைச் சித்தரிக்கிறது. இது யாவும் தேவனுடைய தையல் இணைப்பற்ற திட்டத்தின் பகுதியாக இருந்தது.

பேதுருவின் அடுத்த கருத்து அவரது முதன்மைக் கருத்தாகக் காணப்படுகிறது, அதற்கென்று அர்ப்பணிக்கப்பட்ட இடத்தின் அளவைக் கொண்டு இவ்வாறு முடிவு செய்யப்படுகிறது: இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின்பு அவர்

மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தார் (வசனம் 24-35). உயிர்த்தெழுதல் என்பது தவிர்க்க இயலாததாக இருந்தது என்பதற்கு ஆதாரமாக பேதுரு சங்கீதங்களில் இருந்து இரு வசனப்பகுதிகளை அளித்தார். முதலாவது, சங்கீதம் 16:8-11 வசனப்பகுதி 25 முதல் 28 வரையுள்ள வசனப்பகுதிகளில் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது. "என் ஆத்துமாவைப் பாதாளத்தில்விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்" என்ற கூற்றில் திறவுகோல் வசனம் உள்ளது (வசனம் 27). பேதுரு இந்த மேற்கோளைத் தொடர்ந்து, தாவீது இதைக் கூறியபோது அவர் தம்மைப் பற்றிக் கூறிக்கொள்ளவில்லை, ஏனெனில் அவரது உடல் இன்னமும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டதாக இருந்தது என்ற உறுதிப்பாட்டை எடுத்துரைத்தார். (பேதுருவின் காலத்தில் கூடத் தாவீதின் கல்லறை இருந்த இடம் அறியப்பட்டிருந்தது என்பது உறுதி. இன்றைய நாட்களில் அடிக்கடி பார்க்கப்படுகிற பாரம்பரியப்படியான அவரது கல்லறை இருக்குமிடம் உறுதிப்பாடு பற்றிக் கேள்விக்குரியதாக உள்ளது.) தாவீது அரசராகவும் மேய்ப்பராகவும் மாத்திரம் அல்ல, ஆனால் ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்து, கிறிஸ்துவின் (மேசியாவின்) உயிர்த்தெழுதலை முன்னுரைத்தார் என்று பேதுரு அறிவித்தார். "... கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் ..." (நடபடிகள் 2:31). அடுத்ததாகப் பேதுரு, உயிர்த்தெழுந்த மேசியா, தேவனுடைய வலது கரத்திற்கு உயர்த்தப்பட்டிருப்பது பற்றிப்பேசி, இந்தக் கருத்தை சங்கீதம் 110:1ன் மேற்கோளுடன் மறுவலிவூட்டினார் (இது தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பிரியமான "ஆதார வசனமாக" இருந்தது; காண்க மத்தேயு 22:44; மாற்கு 12:36; லூக்கா 20:42, 43; எபிரெயர் 1:13). தாவீது, "ஆண்டவர்" என்று உரிமை நிறைந்த வகையில் அழைக்கத் தக்க ஒருவரிடத்தில் "கர்த்தர்" (தேவன்), "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்" என்று கூறுவதாகச் சித்தரித்தார் (நடபடிகள் 2:34, 35). இது பேதுருவின் பிரசங்கத்தினுடைய உச்சக்காட்சிக்கு வழிநடத்திற்று: "ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவு (மேசியாவு) மாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்" (வசனம் 36). சிலுவையில் அறையப்பட்ட இயேசு, உரிமைநிறைந்த வகையில் "ஆண்டவர்" மற்றும் "மேசியா" என்று அழைக்கப்பட முடியும். அவரே, மீளக்கட்டுவிக்கப்படுதல் மற்றும் மீட்பு ஆகியவற்றிற்கு இஸ்ரவேலின் நம்பிக்கைகள் யாவற்றினுடைய நிறைவேற்றமாக இருந்தார் - ஆனால் அவரது சொந்த மக்களே அவரைச் சிலுவையில் அறைந்திருந்தனர்.

இதுவே தமது பிரசங்கத்தின் முடிவாக இருக்க வேண்டும் என்று பேதுரு விருப்பம் கொண்டிருந்தாரா அல்லது அவரது உரையைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அவரை இடைமறித்தார்களா என்பது தெளிவற்றதாக உள்ளது. அவரது வார்த்தைகள் அவற்றின் விருப்பம் நோக்கச் செயல்விளைவைக் கொண்டிருந்தன என்பது தெளிவு, ஏனெனில் 37ம் வசனம், அவர்கள் "இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி"னர் என்று கூறுகிறது, இது ஆழமான குற்ற உணர்வு மற்றும் உள்ளான வேதனை ஆகியவற்றைக் கருத்தாகத் தெரிவிக்கும் ஒரு உருவகமாக இருந்தது. இது அவர்களை, "சகோதரரே, நாங்கள்

என்னசெய்யவேண்டும்?" என்று கேட்கும்படி தூண்டிற்று. அவர்கள் அவ்வளவு பெரிய பாவத்திற்கு மன்னிப்புப் பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்டனர் என்பது தெளிவு. பேதுருவின் பதிலானது தெளிவானதாகவும் ஐயப்பாட்டிற்கு இடமற்றதாகவும் இருந்தது: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (வசனம் 38). அவர்களின் கேள்வி மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது, மற்றும் பேதுருவின் பதில் தெளிவானதாகவும் வலிமை நிறைந்ததாகவும் இருந்தது. நாமும்கூட இதே கேள்வியைக் கேட்டு இதற்கான பதிலுக்கு நெருங்கிய கவனத்தைச் செலுத்தலாம்.

''மனந்திரும்புதல்'' என்பது நேரடியான அர்த்தத்தில் திரும்புதல் என்று அர்த்தப்படுகிறது, இது பாவத்தில் இருந்து திரும்பி தேவனிடமாகத் திரும்புவதைக் குறிக்கிறது. பாவிகள் அறியாமையில் வாழ்வதை அல்லது தேவனைப் புறக்கணிப்பதை விட்டுவிடுதல் அவசியமாக உள்ளது, மேலும் அவர் கேட்டுக்கொள்ளும் யாவற்றிற்கும் திறந்தமனதுடன் (பதில்செயல்) அளித்தல் அவசியமாக உள்ளது. மனந்திரும்புதல் என்பது வெறுமனே உள்ளான உணர்வு மாத்திரமல்ல, ஆனால் நேர்மறையான செயலுக்கு வழிநடத்துகிற ஒரு தீர்மானமாக உள்ளது. பேதுரு, "ஒவ்வொருவரும் ... ஞானஸ்நானம்பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினார். அவர் ஞானஸ்நானத்தை ஒரு விருப்பத் தேர்வாக அல்ல, ஆனால் செய்யத் தேவையான எல்லாமுமாக முன்வைத்தார். இது திகைக்கச் செய்வதாக இருக்கக் கூடாது, ஏனெனில் அவர் "பாவமன்னிப்பு" என்பதே ஞானஸ்நானத்தின் நோக்கம் என்று அடையாளப்படுத்தினார். அது "இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே" பெறப்பட வேண்டியதாகவும் உள்ளது, இது அவரது அதிகாரத்தின் பேரில் செய்யப்படுகிறது என்று அர்த்தப்படுகிறது மற்றும் இது, அவர் அளிக்கும் இரட்சிப்பின் அடிப்படையாகவும் அமைந்துள்ளது.

இந்தக் கட்டளையுடன் ஒரு வாக்குத்தத்தம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது: "... அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்." "பரிசுத்த ஆவியின் வரம்" என்பது ஆவியானவரால் தரப்படும் வரமாக இருப்பதில்லை, மாறாக ஆவியானவரே வரமாக இருக்கிறார் (காண்க நடபடிகள் 5:32; 8:14-16; லூக்கா 11:10-13). இது மாம்சமான யாவர் மேலும் ஆவியை ஊற்றுதல் பற்றி யோவேலின் மூலமாக வந்ததும் பேதுரு மேற்கொள் காண்பித்ததுமான வாக்குத்தத்தத்திற்கு இணையாகிறது. ஆவியானவர் எல்லாருக்கும் கிடைக்கும் இந்த வேளையில், ஒவ்வொரு தனிநபரும், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் பெறுதல் ஆகியவற்றின் மூலமாக அந்த வரத்தைத் தனக்குக் கிடைக்கச் செய்யத் தீர்மானித்தாக வேண்டும். பெந்தெகொஸ்தே நாளன்று அங்கிருந்தவர்களுக்கு மாத்திரமல்ல ஆனால் யூத விசுவாசிகளின் எதிர்காலத் தலைமுறைகளுக்கும் "தூரத்தில் உள்ள யாவருக்கும்" (அதாவது, புறஜாதியாருக்கும்) இந்த இரட்சிப்பும் ஆவியானவரின் வரமும் கிடைக்கும் என்று அறிவித்ததன் மூலம், 39ம் வசனம் வாக்குத்தத்தத்தின் ஆய்வுக்கருத்தை எடுத்துக் கொள்கிறது. வேறுவார்த்தைகளில் சொல்வதென்றால், இந்த மாபெரும் வாக்குத்தத்தத்தில் இருந்து எவரொருவரும் விலக்கி வைக்கப்படுவதில்லை. அது போன்றே, பேதுருவின் மூலமாகத் தரப்பட்ட தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதில் இருந்து எவரொருவரும் விலக்கிவைக்கப்பட்டிருப்பதும் இல்லை.

பேதுரு வேறு என்ன கூறியிருக்கலாம் என்பதை நாம் கற்பனை மாத்திரமே செய்ய முடிகிறது, ஏனெனில் எஞ்சியவற்றை லூக்கா "இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி ... புத்திசொன்னான்" என்று கூறியதன் மூலம் தொகுத்துரைத்தார் (வசனம் 40அ). அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் உள்ள மற்ற எல்லா உரைகளையும் போன்றே, இந்த உரையும், கூறப்பட்டவற்றின் முழுமையான மற்றும் மிகச்சரியான எழுத்துருவமாக இன்றி, ஒரு தொகுப்புரையாக மட்டுமே உள்ளது. பேதுருவின் "இன்னும் அநேக வார்த்தைகள்" என்பவை, இரட்சிப்பிற்கான வாய்ப்பை அந்த மக்கள் தங்களுக்கு எவ்வாறு கிடைக்கச் செய்வது என்பது பற்றிய புத்திமதிகளையும் உள்ளடக்கி இருக்கலாம். அவர், "மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தார் (வசனம் 40ஆ). நற்செய்தியைக் கேள்விப்பட்ட யாவருக்கும், வரவிருந்த தேவனுடைய கோபத்திற்குத் தப்பிக்கொள்வதற்கும் இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கும் வாய்ப்புத் தரப்பட்டது, இதே விஷயம் இன்றைக்கும் உண்மையாக உள்ளது.

இயேசுவைப் பற்றிப் பின்தொடர்ந்த அறிவித்தலில், "மனந்திரும்பி ... ஞானஸ்நானம் பெறுங்கள்" என்ற பேதுருவின் எளிய மற்றும் நேரடியான தூண்டுதல் கூற்றுகள் அடிக்கடி திரித்துக் கூறப்பட்டுள்ளன அல்லது முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இயேசுவைப் பற்றிய சத்தியத்தைப் பிரசங்கித்தலுடன், அவரை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது பற்றிய சத்தியத்தின் அறிவித்தலும் இணைந்திருக்க வேண்டும், இல்லையென்றால் உரையைக் கேட்பவர்கள், வற்புறுத்தும் செய்தியை மாத்திரமே பெற்று, அச்செய்தியின் வாக்குத்தத்தை அடைய வழியில்லாத நிலையில் விடப்படுவார்கள். மக்கள் சுவிசேஷத்திற்குப் பதில்செயல் செய்யும்படி போதிப்பதற்குப் பேதுருவின் சொந்த வார்த்தைகளைக் காட்டிலும் வேறு எந்த மிகச்சிறந்த வழியில் நாம் போதிக்க முடியும்? மக்கள் இயேசுவைப் பெற்றுக்கொள்ள ஜெபிக்க வேண்டும் என்று வற்புறுத்துவதற்குப் பதிலாக (இது அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் கிறிஸ்துவில் உள்ள இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு எவரொருவருக்கும் கூறப்படாத விஷயமாகும்) பெந்தெகொஸ்தே நாளன்று வெளிப்படுத்தப்பட்ட விதத்திலேயே முழுசுவிசேஷச் செய்தியை நாம் பிரசங்கிப்பது அவசியமாக உள்ளது. சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்த இயேசுவைப் பற்றிய அப்போஸ்தலிக்கச் செய்தியானது இன்னமும் மதிப்புடையதாக இருக்கிறது என்றால், அதேபோன்று "மனந்திரும்பி, ... ஞானஸ்நானம் பெறுங்கள்" என்ற அப்போஸ்தலிக்கக் கட்டளையும் அதற்குப் பதில் செயலும் இன்னமும் மதிப்புடையதாகவே உள்ளது.

அறிவித்தலின் விளைவு:
சபையின் தொடக்கம் (2:41-47)

பேதுருவின் கட்டளைகளுக்கு ஏறக்குறைய மூவாயிரம் பேர் நேர்மறையான வகையில் பதில் செயல் செய்தனர் என்ற திகைப்புக்குரிய உண்மையை 41ம் வசனம் அறிக்கை செய்கிறது. அவரது வார்த்தையை "பெற்றுக்கொண்டதன்" (ஏற்றுக்கொண்டதன்) விளைவாக, இந்தத் திரளான

எண்ணிக்கையிலான விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். இவ்வசனத்தில் (அல்லது நடபடிகள் 2ல் வேறு இடத்தில், KJV வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் இவ்வார்த்தையை இடைச்செருகி இருந்தாலும்) "சபை" என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை என்றாலும், இந்த மக்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட நிகழ்வானது சபையின் தொடக்கத்தைக் குறிப்பிடுகிறது, ஏனெனில் மனந்திரும்பியவர்கள் இதன்பின்பு "சபையார்" என்று குறிப்பிடப்படுகின்றனர் (நடபடிகள் 8:1; காண்க 5:11). இருப்பினும் இது, இயேசுவைப் பின்பற்றியவர்களைக் கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட குழுவினருக்கு பயன்படுத்தப்பட்ட ஒரே இயற்பெயராக மாத்திரம் இருந்திருக்க வழியெதுவும் இல்லை. வேதவசனங்கள் இவர்களை, "விசுவாசிகள்" (5:14; காண்க 4:32), "சீஷர்கள்" (6:1; 9:26), "மார்க்கத்தார்" (9:2) மற்றும் "கிறிஸ்தவர்கள்' (11:26) என்றும் அழைக்கிறது.

சுவிசேஷ செய்தியைப் பிரசங்கித்தல் மற்றும் அதற்கு ஏற்புடைய வகையில் பதில் செயல் செய்தல் ஆகியவற்றில் இருந்து சபை விளைகிறது. உண்மையில் அதுவே புதிய ஏற்பாட்டுக் கருத்தமைவில் சபையாக இருக்கிறது - அவர்கள் செய்தி அறிவிக்கப்படுகையில் அதைக் கேள்விப்பட்டு, விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருந்தனர். இந்தக் குழுவானது உடனடியாக 42ம் வசனத்தில், கீழ்ப்படிதல் உள்ள ஆராதிக்கும் விசுவாசிகளின் சமூகம் என்று விவரிக்கப்படுகின்றனர்: "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்." "அப்பம் பிட்குதல்" என்பது கர்த்தருடைய பந்திக்கான குறிப்பாக உள்ளது, மற்றும் "ஜெபம் பண்ணுதல்" என்பது தனிப்பட்ட முறையில் ஜெபித்தல் என்பதைக் காட்டிலும் அதற்கு மாறாக, சபையார் கூடி ஜெபித்தலைக் குறிக்கிறது. 43ல் இருந்து 46 வரையிலான வசனங்கள், இந்த விசுவாசிகள் எண்ணிக்கையில் அதிகமானவர்களாக இருந்தாலும், குழு முழுவதிலும் இருந்தவர்களின் பெருந்தன்மையின் மூலமாக, எல்லாருடைய பொருள்ரீதியான தேவைகளும் சந்திக்கப்படும் அளவிற்கு ஐக்கியத்தில் ஒரு நெருங்கிய வலைப்பின்னல் அமைப்பைக் கொண்டிருந்தனர் என்று சுட்டிக்காண்பிக்கின்றன. இன்றைய நாட்களில் சபையார் பின்பற்றுவதற்கான ஒரு நல்ல ஆச்சரியமான முன்மாதிரியைத் தொடக்க கால சபையார் நிலைநாட்டினர். 47ல் வசனம், இது தொடர்ந்து நடைபெற்ற வாழ்வு நடையாக இருந்தது என்றும் இது தினந்தோறும் மனமாற்றம் அடைபவர்களை விளைவித்தது என்றும் காண்பிக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், பெந்தெகொஸ்தே நாளின் சுவிசேஷ அறிவிப்பு நிகழ்ச்சிகள் அந்த ஒருநாளுடன் மட்டுப்படுத்தப்பட்டுவிடாமல், இப்போதும் கூடத் தொடருகின்றன எனலாம்.

சபை என்ற பாடக்கருத்தை மிகவிரிவாக ஆராய்வதற்கு இங்கு இடம் போதுமானதாக இருப்பதில்லை. இருப்பினும் இந்த அத்தியாயம், சபை என்றால் என்ன என்பதைப் பற்றிய சில தவறான கருத்துக்களை எடுத்துப்போடுகிறது.

முதலாவது, சபை என்பது கிறிஸ்தவ விசுவாசத்தில் உள்ள ஒரு விருப்பத் தேர்வு செய்யக்கூடிய பின்னிணைப்பாக அடிக்கடி மதிக்கப்பட்டாலும், நடபடிகள் 2ல் இரட்சிப்பு மற்றும் சபை ஆகியவற்றிற்கு இடையில் உள்ளநெருங்கிய தொடர்பானது விஷயம் அவ்வாறு இருப்பதில்லை

என்பதைத் தெளிவாக்குகிறது. நடபடிகள் புத்தகத்தில் இங்குள்ளது போன்றே, புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியிலும், சபையாராக இருத்தல் என்பதே இரட்சிக்கப்பட்டு இருத்தலாக உள்ளது; சபை அளிக்கிற ஐக்கியம், போதித்தல் மற்றும் ஊக்கப்படுத்துதல் ஆகியவை தேவைப்படாத தனிமையான ஒரு விசுவாசி என்ற கருத்து எதுவும் இருப்பதில்லை.

இரண்டாவது, சபையானது தலைவர்களின் படிநிலை அமைப்பு அல்ல என்பது தெளிவு. அப்படிப்பட்ட முறைமை எதுவும் நடபடிகள் 2ல் நிலவவில்லை, இருப்பினும் சபையானது அப்போதும் இருந்தது. இன்றைய நாட்களில் நாம், மக்கள் அடிக்கடி "சபை" விசுவாசிப்பது அல்லது செய்வது என்ன என்பதைப் பற்றி மக்கள் பேசுகையில், அவர்கள் உயர்தலைமைப் பதவியில் உள்ள தலைவர்களின் முடிவுகளைப் பற்றிக் குறிப்பிடுவதைக் கேள்விப்படுகிறோம்; ஆனால் அது புதிய ஏற்பாட்டின் கருத்தாக இருப்பதில்லை.

மூன்றாவது, சபையானது மனித முயற்சியால் அல்லது மனிதப் பாரம்பரியத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட ஒரு நிறுவனம் அல்ல. இயேசுவைப் பற்றிய நற்செய்தி பிரசங்கிக்கப்பட்டு அந்தச் செய்தியில் உள்ள கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்ததன் விளைவாக, தேவனால் இரட்சிக்கப்பட்ட மக்கள் கூட்டமே புதிய ஏற்பாட்டு சபையாக உள்ளது. இது மனிதரீதியான முடிவினால் அல்ல ஆனால், முற்றிலுமாக தேவனுடைய முதல்செயலால் கொண்டுவரப்பட்டுள்ளது.

கடைசியாக, சபையானது மக்களை இரட்சிப்பதாக இருப்பதில்லை. 41 முதல் 47 வரையில் உள்ள வசனங்கள், இரட்சிக்கப்பட்டவர்களைத் தேவன் சபையில் "சேர்த்துக்கொள்கிறார்" என்று சுட்டிக்காண்பிக்கிறது; எனவே இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் இருக்கின்றனர், ஆனால் மக்கள் சபையில் இருப்பதால் அவர்கள் இரட்சிக்கப்படுவதில்லை. சுவிசேஷமே இரட்சிப்பின் காரணமாக உள்ளது; சபை என்பது அதன் காரியமாக (செயல்விளைவாக) உள்ளது. நாம் இந்த வித்தியாசத்தை உற்றுநோக்கி, இரட்சிப்பு என்பது தெய்வீகத்தில் இருந்து விளைவதைக் காட்டிலும் அதிகமாக மனுஷீகத்தில் இருந்து விளைகிறது என்று ஒருக்காலும் நினைக்கலாகாது.

முடிவுரை

பெந்தெகோஸ்தே நாளானது, ஒரு புதிய யுகத்தின், "கடைசி நாட்களின்" மேசியாத்துவ யுகத்தின் தொடக்கத்தை அடையாளப்படுத்திற்று. இயேசு மீண்டும் வரும் வரையில், கிறிஸ்தவர்கள் "இந்தக் கடைசி நாட்களில்" (எபிரெயர் 1:2) வாழத் தொடருவார்கள், நாம் தேவனுடைய மக்களின் இரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டத்தின் கடைசி நிகழ்வுக்காகக் காத்திருப்போம். இப்போது நாம், புதிய இஸ்ரவேலின் பகுதியாக (காண்க கலாத்தியர் 6:15, 16), இயேசு என்ற மேசியாவினால் மீட்கப்பட்ட விசுவாசிகளின் சமூகமாக, தேவனுடைய ஆவியானவரால் வல்லமை அளிக்கப்பட்ட மக்களாக மற்றும் அவரது சபை என்ற சிலாக்கியம் கொண்டவர்களாக வாழும் வாய்ப்பைக் கொண்டுள்ளோம்.

குறிப்பு

[1]தேவனுடைய பிரசன்னத்தைச் சுட்டிக்காண்பிக்கக் காற்றும் அக்கினியும் பழைய

ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருந்தன (காண்க யாத்திராமம் 19:18; 1 இராஜாக்கள் 19:11, 12; ஓசியா 13:15).

நடபடிகள் 2 & வேறிடத்தில் "மொழிகள்"

நடபடிகள் 2ம் அதிகாரம், பெந்தெகொஸ்தே நாளன்று பேசப்பட்ட "மொழிகளின்" இயல்பு மீதான கணிசமான கலந்துரையாடல் மற்றும் விவாதம் ஆகியவற்றின் கவனக் குறிப்பிற்குரிய இடமாக உள்ளது. இது, நடபடிகள் புத்தகத்தின் பிற்பகுதியில் நடந்த மற்றும் 1 கொரிந்தியர் 12-14 அதிகாரங்களில் குறிப்பிடப்பட்ட அதே வியப்புக்குரிய நிகழ்ச்சியாக உள்ளதா இல்லையா என்பது ஒரு கேள்வியாக இருக்கிறது.

"*Glossa*" என்ற கிரேக்க வார்த்தை "நாவு" என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது. இது ஆங்கில மொழியில் பயன்படுத்தப்படுவது போன்று, பேச்சிற்கான உறுப்பை நேரடியாகக் குறிப்பிடவோ அல்லது உருவக வழியில் ஒரு மொழியைச் சுட்டிக்காண்பிக்கவோ பயன்படுத்தப்பட முடியும்.

அப்போஸ்தலர்களால் பேசப்பட்ட மொழியானது அவர்களுக்கு அந்நியமாக இருந்த உண்மையான மொழிகள் என்பதை நடபடிகள் 2ம் அதிகாரம் தெளிவாக்குகிறது. லூக்கா *dialektos* (வசனம் 6) என்ற வார்த்தையையும் பயன்படுத்தினார், இதிலிருந்தே நாம் *dialect* ["வட்டார வழக்கில் உள்ள மொழி"] என்ற இவ்வார்த்தையைப் பெற்றுள்ளோம் மற்றும் அது ஒரு பாஷையைத் தெளிவாகக் குறிக்கிறது. இந்த வார்த்தை ["ஜென்மபாஷைகள்"] 8ம் வசனத்தில் மீண்டும் வருகிறது, இதைத் தொடர்ந்து, இந்த நிகழ்வின்போது அங்கு எருசலேமில் இருந்த மக்களினங்களின் பட்டியல் ஒன்று தரப்பட்டுள்ளது, அவர்கள் பல்வேறு மொழிகளைப் பேசும் அந்தந்த நாட்டில் வாழ்ந்தவர்களாக இருந்தனர். *Glossa* மற்றும் *dialektos* என்ற சொற்றொடர்கள் நடபடிகள் 2ல் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன, இது "மொழிகள்" என்பவை அப்போஸ்தலர்கள் பேசும்படி அற்புதமாக வல்லமை அளிக்கப்பட்டிருந்த மொழிகள் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.

புதிய ஏற்பாட்டில் பிற்பாடு "மொழிகள்" வரும் இடங்களைப் பற்றிய விஷயம் என்ன? நடபடிகள் புத்தகத்தில் மேலும் இரு இடங்களை மாத்திரமே (10:46ல் கொர்நேலியுவும் அவரது வீட்டாரும் மற்றும் 19:6ல் எபேசு நகரில் இருந்த சீஷர்களில் பன்னிரெண்டுபேர்) கண்டறிகிறோம். இவ்விரு நிகழ்வுகளில் எதுவும் நடபடிகள் 2ஐப் போன்று குறிப்பானதாக இருப்பதில்லை, ஆனால் பிந்திய இந்த வசனப்பகுதிகளில் (பேசப்பட்ட) மொழிகளின் இயல்பு வேறுபட்டதாக இருந்திருக்கும் என்று யூகிக்கக் காரணம் எதுவும் இல்லை; மறைவானவற்றை (நடபடிகள் 10; 19) விளக்கப்படுத்துவதற்கு தெளிவானதை (இந்த விஷயத்தில், நடபடிகள் 2) அனுமதித்தல் என்பது வேதாகமத்தை விளக்கி உரைப்பதற்கு ஒரு நல்ல விதியாக உள்ளது.

புதிய ஏற்பாட்டில் 1 கொரிந்தியர் 12-14 அதிகாரங்கள் மாத்திரமே மொழிகளைப் பற்றிக் கலந்துரையாடும் வேறு ஒரே வசனப்பகுதியாக உள்ளது. கொரிந்து நகரில் இருந்த சபையில் பேசப்பட்ட மொழிகள் ஒரு வகையான பரவச உச்சரிப்பு என்றும் அவைகள் உண்மையில் மனிதர் பேசும் மொழிகள் அல்ல என்றும் அடிக்கடி உரிமைகோரப் பட்டுள்ளது, இருப்பினும் இந்த மூன்று அதிகாரங்களில் எந்த இடத்திலும் இது இவ்வாறு குறிப்பிடப் பட்டிருப்பதில்லை.

மீண்டுமாக, மறைவானவற்றை விளக்கப்படுத்த தெளிவானதை அனுமதித்தல் மிகச்சிறந்ததாகக் காணப்படுகிறது. மற்றும் "மொழி" என்ற சொற்றோடர் 1 கொரிந்தியர் 14:9-11ல் மொழிகளுடன் தொடர்புடைய வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது, இது கொரிந்து நகரில் இருந்த சபையில் பேசப்பட்ட மொழிகள், நடபடிகள் 2ல் இருந்தவற்றைப் போன்று உண்மையான மொழியாக இருந்தன என்பதைச் சுட்டிக்காண்பிக்கலாம்.

இவ்வசனப் பகுதிகளில் எதுவும், மொழிகளைப் பேசுதல் என்பது இரட்சிப்பின் அடையாளம் என்றோ அல்லது இரட்சிப்பிற்கு முன் கேட்டுக்கொள்ளப்படுவது என்றோ கருத்துத் தெரிவிப்பதில்லை.

நடபடிகள் புத்தகத்தில் "ஞானஸ்நானம்" & "ஆவியானவர்"

நடபடிகள் 2:38ல் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும் வேளையில் நடப்பதாக முன்வைக்கப்படுகிறது என்பதில் கேள்வி எதுவும் இருப்பதில்லை. இருப்பினும் நடபடிகளின் சில நிகழ்வுகளில், ஆவியானவரின் வரம் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னால் குறிப்பிடப்படுகிறது அல்லது ஞானஸ்நானம் பெறும் நிகழ்வு நடந்தபோதிலும் (ஆவியானவர் அருளப்படுகிற) அந்த வரம் குறிப்பிடப்படுவதே இல்லை.

உதாரணமாக, நடபடிகள் 10ல் ஒரு தரிசனத்திற்குப் பதில்செயல் செய்யும் வகையில் பேதுரு, ரோம நூற்றுக்கு அதிபதியாயிருந்த கொர்நேலியு என்ற பெயர் கொண்டவரின் வீட்டிற்குச் சென்றார். அவர் அங்கு சென்று சேர்ந்த உடனே, கொர்நேலியுவுக்கு அவரது வீட்டார் மற்றும் நண்பர்களுக்கும் கிறிஸ்துவைப் பற்றிப் பிரசங்கித்தார். பேதுருவின் செய்தியின் இடையில் 44ல் இருந்து 46அ வசனப் பகுதியானது, "இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும் போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள்" என்று உரைக்கிறது, பின்பு அவர்கள் யாவரும் ஞானஸ்நானம் பெற்றனர். நிகழ்வுகளின் இந்த வரிசை முறை, ஞானஸ்நானத்தின் விளைவாகவே ஆவியானவரின் வரம் வாக்களிக்கப்பட்ட நடபடிகள் 2:38ல் இருந்து வேறுபட்டிருப்பது ஏன்? இதற்கான பதிலானது இந்த நிகழ்வின் தனிப்பட்ட சூழ்நிலைகளில் காணக்கிடைக்கிறது. இது இயேசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவர் சுவிசேஷத்தைப் புறஜாதிகளுக்கு வெளிப்படையாக அறிவித்த முதல் வேளையைக் குறிக்கிறது, இது தொடக்ககால சபையாரால் முன்னெதிர் நோக்கப்படாத ஒரு விஷயமாக இருந்தது. இது பிற்பாடு பேதுரு, புறஜாதியாருக்கு பிரசங்கித்து ஞானஸ்நானம் கொடுத்த தமது செயல்களை எருசலேமில் விளக்கப்படுத்தத் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவர்களே என்பதைக் கேள்விக்கு இடமின்றி யூதக்கிறிஸ்தவர்களுக்கு நிரூபிப்பதற்கு, "புறஜாதியாரின் பெந்தெகொஸ்தே நாளில்" ஆவியானவரின் வருகையும் மொழிகளைப் பேசும் அற்புத காட்சி வெளிப்பாடுகளும் அவசியமானவையாக

இருந்தன (10:34, 35; காண்க 10:47 மற்றும் 11:17ல் பேதுருவின் விளக்கம்).

அதுபோலவே, நடபடிகள் 8:14-17ல், ஆவியானவர் ஞானஸ்நானத்தின் போதோ அல்லது அதற்கு முன்னரோ அல்ல ஆனால் அதற்குப் பின்பு சற்றுக்காலம் கழித்து அப்போஸ்தலர்கள் கைகளை வைத்தபோது வந்திறங்கினார். மீண்டும் இங்கு, நடபடிகள் 2:38ல் நிலைநாட்டப்பட்ட வடிவமைப்பில் இருந்து விலகிச் செல்வதைக் கேட்டுக்கொள்ளும் ஒரு தனிச்சிறப்பான சூழ்நிலை இருந்தது. இவ்வாறு ஆவியானவரைப் பெற்றுக்கொண்டவர்கள் சமாரியர்களாக இருந்தனர், இவர்கள் தங்கள் சமகால யூதர்களால் புறக்கணிக்கப் பட்டிருந்த அரை யூதர்களாக இருந்தனர் - இவர்கள் ஏறக்குறையப் புறஜாதியாராக அல்லது அவர்களைக் காட்டிலும் சற்று அதிகமாகக் கருதப்பட்டிருந்தனர். சமாரியர்களும்கூடக் கிறிஸ்துவினிடமாகத் திரும்பினால், அவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப் படக்கூடும் என்று யூதக்கிறிஸ்தவர்கள் நம்பி இணங்கச் செய்வதற்காக, தேவனுடைய (மற்றும் அப்போஸ்தலர்களுடைய) அங்கீகாரத்தின் விசேஷித்த வெளிப்பாடு அவசியமாக இருந்தது. அங்கீகாரத்திற்கான தேவனுடைய அடையாளக் குறியீடானது, அப்போஸ்தலர்களின் கைகள் வைக்கப்படுதல் மற்றும் அதைத் தொடர்ந்து ஆவியானவருடைய வருகை ஆகியவற்றின் மூலமாக வந்தது.

யோவான் 3:5 மற்றும் தீத்து 3:5 ஆகிய வசனங்களில், ஞானஸ்நானம் மற்றும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பின் புதிய ஏற்பாட்டுக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

12

கிருபையினால் இரட்சிக்கப்படுதல்

(எபேசியர் 2:1-10)

ஆதியாகமம் 1 மற்றும் 2 ஆகிய அதிகாரங்கள் பற்றிய நமது கலந்துரையாடலில், தேவனுடைய வியக்கத்தக்க வல்லமையானது அவரின் பண்புகளில் ஒன்றாக உள்ளது என்று நாம் கற்றறிந்தோம். எபேசியர் 3:20, 21ல் பவுல் இதே ஆய்வுக்கருத்தைத் தொட்டார்:

> *நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்ல வராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.*

பவுலின் கூற்றுப்படி, தேவனிடத்தில் நாம் கேட்கக் கூடிய எந்த விஷயத்தையும் அல்லது அவரிடத்தில் கேட்கலாம் என்று எப்போதாவது கனவு காணக்கூடிய எந்த விஷயத்தையும் செய்வதற்குத் தேவன் வல்லவராக இருக்கிறார். முன்னதாகப் பவுல், 1:19-23ல் தேவனுடைய வல்லமையைப் பற்றி விளக்கம் அளித்ததில் "விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம்" என்று குறிப்பிட்டிருந்தார். நம்மிடத்தில் பலவீனங்கள் இருந்தபோதிலும், நாம் அவரது சித்தத்திற்கு இணங்கினால், நம் மூலமாகத் தேவன் கிரியைசெய்ய வல்லவராக இருக்கிறார். தேவனுடைய வல்லமை என்ற ஆய்வுக்கருத்து, எபேசியர் 2:1-10ல், நம்பிக்கையற்ற வகையில் இழந்துபோகப்பட்ட பாவிகளை இரட்சிக்கத் தேவனுடைய வல்லமை பற்றிய கலந்துரையாடலில் எடுத்தாளப்பட்டுள்ளது. (2:1ல் வசனத்தின் தொடக்கத்தில், ஆங்கில வேதாகமத்தில் உள்ள "and" என்ற வார்த்தை, "வல்லமை" பற்றிய கலந்துரையாடல் தொடருகிறது என்பதைக் காண்பிக்கிறது.)

இழந்துபோகப்பட்டுள்ள பாவிகளை மீட்பதற்கு இயேசுவே தேவனுடைய ஒரே வழியாக இருக்கிறார் என்பதைக் காண்பிப்பதில் புதிய ஏற்பாடு மிகத் தெளிவாக உள்ளது. யோவான் 14:6ல் இயேசுவே, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று கூறினார். அப்போஸ்தலர்களும் இதே சத்தியத்தை அறிவித்தனர்: "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (நடபடிகள் 4:12). யோவான், "குமாரனை உடையவன் ஜீவனை

உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" என்று எழுதினார் (1 யோவான் 5:12).

ஆகையால், மனிதகுலம் முழுவதும், பின்வரும் இரண்டு வகைகளாக மாத்திரமே பிரிக்கப்பட்டுள்ளது: நமது பாவங்களுக்கான பூரணமான பலியான கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப் பட்டுள்ளவர்கள் மற்றும் இரட்சிக்கப்பட்டிராமல் மன்னிப்பின்றி இன்னும் இழந்து போகப்பட்ட நிலையில் உள்ளவர்கள்.

"மரித்தவர்களாயிருந்த உங்களை ..."

கிறிஸ்துவை விட்டுப் பிரிந்திருக்கையில் நமது நிலையை விவரிப்பதில் பவுல், நாம் ''இழந்து போகப்பட்டிருந்தோம்'' என்று மாத்திரம் கூறவில்லை; நாம் "மரித்தவர்களாயிருந்தோம்" என்று அவர் குறிப்பிட்டார்: "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை ... அவைகளில் நீங்கள் முற்காலத்திலே ... நடந்துகொண்டீர்கள்" (2:1, 2அ). கிறிஸ்துவற்ற நிலையில் இருக்கிற (அல்லது இருந்த) வர்களின் நிலையை விவரிப்பதற்குப் பவுல், மரணம் என்ற பலத்த உருவகத்தைப் பயன்படுத்தியது ஏன்? முதலாவதாக இது, தேவனுக்குப் பதில் செயல் செய்யாதிருக்கும் நிலையை முக்கியத்துவப்படுத்துகிறது. நமக்கு அன்பாக இருக்கும் ஒருவர் உயிரோடிருந்த காலத்தில், நமது தொடுகைக்கு அல்லது நமது வார்த்தைகளுக்கு பதில்செயல் செய்தது போன்று, அவர் அல்லது அவள் மரணத்திற்குப் பின்பு இனியும் அவ்வாறு பதில்செயல் செய்ய இயலாது என்பது, மரணத்தின் மிகவும் இடர்பாடான விளைவுகளில் ஒன்றாக உள்ளது. கிறிஸ்து இல்லாத நிலையில் நாம் தேவனுக்கும் நமக்காக அவர் கொண்டுள்ள சித்தத்திற்கும் பதில்செயல் செய்யாதவர்களாக இருக்கிறோம் - எனவே உண்மையில் நாம் மரித்தவர்களாக இருக்கிறோம். இரண்டாவதாக, மரித்தவர்கள் முற்றிலும் உதவியற்ற நிலையில் இருக்கின்றனர். மரித்தவர்கள் மரித்தவர்களாகவே இருக்கின்றனர்; அவர்கள் தங்கள் இருத்தலை உயர்த்திக்கொள்ளவோ அல்லது தங்கள் நிலையை மாற்றவோ எதையும் செய்ய இயலாதவர்களாக இருக்கின்றனர். கிறிஸ்து இல்லாத நிலையில், நாம் நமது இழந்துபோகப்பட்ட நிலையை நிவிர்த்தி செய்ய இயலாதவர்களாக இருக்கிறோம். ஆகையால், கிறிஸ்து இல்லாத நிலையில் நாம் "மரித்தவர்களாக" இருக்கிறோம் என்று கூறுவது முற்றிலும் ஏற்புடையதாகவே உள்ளது.

பவுல், ஆவிக்குரிய நிலையில் மரித்தவர்களாக இருத்தல் பற்றிய தமது விவரிப்பைத் தொடர்ந்தார்: ஆவிக்குரிய நிலையில் மரித்தவர்கள் தங்கள் ''அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும்'' மரித்தவர்களாக இருக்கின்றனர். ஒரு காலத்தில் நாமும் இந்தப் பாவங்களில் "நடந்தோம்'' (வழக்கமாக வாழ்ந்தோம்) என்று பவுல் கூறினார். அவ்வாறு செய்ததில் நாம், ''இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும்'' (''இவ்வுலகத்தின் வழிகளிலும்"; NIV) "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும்" வாழ்ந்துகொண்டிருந்தோம் (2:2). இது, பூமிக்கு மேலாக வானமண்டலத்தில் குடியிருக்கும் பொல்லாத ஆவிகளின்மீது ஆளுகை செலுத்துவதாக ஒருகாலத்தில் நம்பப்பட்டுக்கொண்டிருந்த சாத்தான் பற்றிய குறிப்பாக மாத்திரமே இருக்க முடியும். பிற்பாடு பவுல், ''நீங்கள் பிசாசின்

தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்" (6:11), "பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்'' (6:16) என்று அறிவுரை கூறினார். கொரிந்தியர்களுக்கு எழுதிய நிருபத்தில் பவுல், சாத்தானை "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்" என்று குறிப்பிட்டார் (2 கொரிந்தியர் 4:4). நம்மைப் படைத்த தேவனுடைய ஆளுகையை நாம் புறக்கணிக்கும்போது, நமக்கு விருப்பம் இருந்தாலும் இல்லை என்றாலும் நாம், "இப்பிரபஞ்சத்தின் தேவனானவனை" பின்பற்றுகிறோம்.

பவுல், தேவபக்தியற்ற வாழ்வு பற்றிக் கூறுவதற்கு அதிகமானவற்றைக் கொண்டிருந்தார்: "அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்" (2:3). "மாம்ச" இச்சையின்படியே நடத்தல் என்பது, சுயநலமாகச் செயல்படுவதற்கு மனிதமன விருப்பங்களுக்கு இணங்குதலையும் தேவனுடைய வழியில் செல்வதற்கு மாறாக நமது சுயவழியில் செல்வதையும் அர்த்தப்படுத்துகிறது. நமது உடல் மற்றும் மனம் ஆகியவற்றின் விருப்பங்களை நாம் பின்பற்றும்போது, தேவனுடைய சித்தத்தையும் நமது நடக்கையின் அழிவு ஏற்படுத்தும் இயல்பையும் நாம் காணாது புறக்கணிக்கிறோம். இது கிறிஸ்துவற்ற நிலையில் இருந்த நம்மில் "சிலருடைய" வாழ்வின் நடத்தை என்று கூறவில்லை; இது "எல்லாருக்கும்" உண்மையாக இருந்தது. கிறிஸ்து அற்ற நிலையில், நம்மில் ஒவ்வொருவரும் தேவகோபத்திற்கு ஆளாகிறோம். நாம் "கோபாக்கினையின் பிள்ளைகளாக'' அதாவது கோபத்தினால் பண்புபடுத்தப்பட்ட மக்களாக இருப்போம்.

ஆவிக்குரிய மரணம் என்பது மூன்று பண்புகளைக் கொண்டுள்ளது: (நாம் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கும்போது, நாம் பாதுகாப்புள்ள நிலையில் இருப்பதாக நினைப்பதால்) வஞ்சிக்கப்படுதல் (நாம் நமது சொந்த விருப்பங்களைப் பின்பற்றுவதற்காகத் தேவனுடைய சித்தத்தில் இருந்து விலகிச் செல்லுவதால்) கீழ்ப்படியாமை மற்றும் (தேவனுடைய கோபாக்கினையை எதிர்கொள்வதன் முடிவு விளைவினால்) அழிவு. இதுவே இயேசு வருவதற்கு முன்னர் ஒவ்வொருவரும் எதிர்கொண்டிருந்த பயங்கரமான அவலநிலையாக இருந்தது. இது பின்வருவதை நாம் வாசிக்காத வரையிலும் நம்பிக்கையற்ற நிலையாகவே ஒலிக்கிறது ...

"தேவனோ ..."

4ம் வசனம், வேதாகமத்தில் ஒருவேளை மிகமுக்கியமான வார்த்தையைக் கொண்டு தொடங்குகிறது: ''தேவனோ ...'' வேதாகமத்தின் முக்கிய ஆய்வுக்கருத்தாக இருப்பவர் தேவனே, மற்றும் இயேசு, "... தேவனாலே எல்லாம் கூடும்'' என்று கூறினார் (மாற்கு 10:27). தேவன் இல்லையென்றால், நாம் யாவரும் நம்பிக்கையற்ற நிலையில் ஆக்கினைக்குள் தீர்க்கப்பட்டிருப்போம். இவ்விடத்தில் பவுல், இரட்சிப்பு என்பது நாமே கணக்கிட்டுக் கொள்கிற அல்லது நமக்கு நாமே நிறைவேற்றிக் கொள்கிற விஷயம் அல்ல என்பதை வலியுறுத்தினார். அது முற்றிலுமாகத் தேவன் தொடங்கிவைக்கும் செயலாக

உள்ளது.

அவர் தேவனை, "இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர்" என்றும் "நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே" என்றும் விவரித்தார். அவரது இரக்கம் மற்றும் அன்பு ஆகியவற்றினால், அவர் நம்மைக் கிறிஸ்துவுடன் பிழைத்திருக்கச் செய்தார், நம்மைக் கிறிஸ்துவுடன் உயிர்ப்பித்தார், மற்றும் நம்மை உன்னதங்களில் அவரோடு (கிறிஸ்துவோடு) அமரவும் செய்தார். தேவனுடைய "மகாமேன்மையான ஐசுவரியத்தையும்" "கிறிஸ்து இயேசுவுக்குள்" அவர் நம்மிடத்தில் வைத்த தயவையும் காண்பித்தல் என்பதே, குறிப்பிடத்தக்க இந்தச் செயல் யாவற்றின் இலக்காக உள்ளது (வசனம் 7). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் தேவனுடைய நித்திய ஜீவனில் பங்கடையும்படிக்கு, தேவன் மரித்து மீண்டும் உயிர்த்தெழுந்த தமது குமாரனுடன் நம்மை இணைத்துள்ளார் (காண்க ரோமர் 6:1-5).[1] இயேசுவின் மூலமாகவும் அவரது சுவிசேஷத்தின் மூலமாகவுமே நாம் கொண்டுள்ள நம்பிக்கை நம்முடையதாக உள்ளது, நாம் அவருடன் ஒன்றாக்கப்பட்டிருக்கிறோம்.

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு ..."

நாம் யாவரும் குணப்படுத்தப்பட இயலாத பாவிகளாக இருப்பதால், தேவன் நம்மீது தமது அன்பை எவ்வாறு பொழிய முடியும் மற்றும் அவர் நமது பாவம்நிறைந்த தன்மையின் செயல்விளைவுகளை எவ்வாறு அகற்ற முடியும் என்று நாம் இன்னமும் வியப்படையலாம். இந்தக் கேள்விக்குப் பவுல் தெளிவாகப் பதில் அளித்தார்.

இதைத் தேவன் "கிருபையினாலே" செய்தார் என்று பவுல் கூறினார் (2:5, 8). ஒரு எழுத்தாளர், கிருபையைப் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்:

> கிருபை என்பது முற்றிலும் பெருந்தன்மையாக, சுயநலமற்ற, அகத்தூண்டுதலான, இடர்ப்பாட்டைப் பற்றிக் கவலைப்படாத அளவற்ற பெருந்தன்மையாக உள்ளது, இது மற்றவர் அன்பு செய்யப்படுவதற்கும் அவ்வாறான உதவி அளிக்கப்படுவதற்கும் முற்றிலும் தகுதியற்றவராக இருப்பினும், முற்றிலும் அவரின் தேவைகுறித்த அன்புடன் கூடிய அக்கறையின் காரணமாக செயல்படுகிற பெருந்தன்மையாக உள்ளது.[2]

"கிருபை என்பது, நீங்கள் பெறத் தகுதியானது என்பதற்குப் பதிலாக உங்களுக்குத் தேவையானதைப் பெறுதலாக உள்ளது" என்பது ஒரு சிறுபையன் அளித்த எளிய விளக்கமாக இருந்தது.

கிருபை பொழியப்படுதல் மற்றும் பெறப்படுதல் ஆகியவற்றிற்கு, லூக்கா 15ம் அதிகாரத்தில் காணப்படும், இயேசு கூறிய "கெட்ட குமாரன்" உவமை மிகச்சிறந்த உதாரணமாக உள்ளது. விரிவான மற்றும் இருதயத்தை அசைக்கும் இந்த உவமையில் இயேசு, இளைஞன் ஒருவன் தனது தந்தையிடம் அவர் இறக்கும் வரையில் பொறுமையாகக் காத்திருக்க மனமின்றி, தனக்குச் சேரவேண்டிய பாகத்தைப் பிரித்துக் கொடுக்கும்படி துடுக்குத் தனமாக வற்புறுத்தியதைப் பற்றிக் கூறினார். பின்பு அவன் "தூரதேசத்துக்கு" பயணம் சென்று (வசனம் 13), அங்கு பண்பற்ற மற்றும் கட்டுப்பாடற்ற வகையில் வாழ்ந்ததினால் தான் வைத்திருந்த செல்வம் யாவற்றையும் வீணாகச் செலவிட்டான். அவன், தான் பட்டினியின்

விளிம்பில் இருந்ததையும் உயிர்பிழைப்பதற்காகப் பன்றிகளுக்கு உணவிடும் சிறுமையான வேலையைச் செய்ய வேண்டி இருந்ததையும் கண்ட அவன், தனது தந்தையிடம் திரும்பிச் செல்லத் தீர்மானித்தான். அவன், அவரது மகன் என்று அழைக்கப்படத் தகுதியற்று இருப்பதாக அறிக்கை செய்வதும் தன்னை ஒரு கூலிவேலை செய்யும் வேலைக்காரனாக நடத்துமாறு கேட்டுக்கொள்வதுமே அவனது திட்டமாக இருந்தது. குறைந்த பட்சம் இந்த வழியிலாவது அவன் தன்னைப் பட்டினியிலே இருந்து காப்பாற்றிக் கொள்ளலாம். அவன் இல்லம் திரும்பினான், அங்கு தன் தந்தையிடம் கொடுமையாக நடத்தப்படுதலைத் தவிர வேறு எதையும் எதிர் பார்க்க அடிப்படை எதுவும் இல்லை என்பதை முழுமையாக உணர்ந்து அறிந்திருந்தான். அதற்குப் பதிலாக அவன் தந்தை, அவன் புறப்பட்டுச் சென்ற நாள் முதலாக அவன் வருவானா என்று ஆவலுடன் கண்ணோக்கிக் கொண்டிருந்தபடியால், "அவன் தூரத்தில் வரும்போதே" (வசனம் 20) அவனைக் கண்டார்! அவனிடத்தில் ஓடிச்சென்ற அவனது தந்தை, அவனை முத்தமிட்டார். அந்த மகன் தனது தகுதியற்ற நிலைகுறித்துப் பேசவே தேவையில்லாத வகையில், அவனது தந்தை அவன் திரும்பி வந்ததைக் கொண்டாடப் பெரும் விருப்பம் கொண்டிருந்தார். அவர் அந்தக் கெட்ட குமாரனுக்கு, ஒரு செல் வந்தரின் மகனுக்குத் தகுதியான வகையில் உடை உடுத்துவிக்கச் செய்து, குடும்பத்தின் அடையாள மோதிரத்தை அவனது விரலில் அணிவித்து, தமது மகனைக் கனப்படுத்தும் வகையில் ஒரு விருந்து தயாரிக்கப்பட வேண்டும் என்று அறிவித்தார். இந்த இடத்தில் அவர் (இயேசு), பிற்பாடு பவுல், தேவனைவிட்டுத் தூரத்தில் உள்ள எல்லாருடைய நிலையையும் விவரிக்கப் பயன்படுத்திய அதே சொற்றொடரைப் பயன்படுத்தினார் என்பது ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது: "என் குமாரனாகிய இவன் மரித்தான், *திரும்பவும் உயிர்த்தான்" (லுக்கா 15:24அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது; காண்க வசனம் 32). லூக்கா 15ல் "கிருபை" என்ற வார்த்தை பயன்படுத்தப்படாதிருப்பினும், இங்கு "கிருபை" என்ற பவுலின் சொற்றொடருக்குப் பரிபூரணமாக விவரிப்பு உள்ளது: வெறுப்புடன் தள்ளப்படுதல் மற்றும் புறக்கணிக்கப்படுதல் ஆகியவற்றைத் தவிர வேறொன்றையும் பெறத் தகுதியற்றவனான, தவறு செய்திருக்கிற பிள்ளை ஒருவனைச் சந்தோஷமாகத் திரும்ப ஏற்றுக்கொள்ளும் அன்பான ஒரு தந்தை.*

எபேசியர் 2:4-10ல் பவுல், கிருபை பற்றிய அத்தியாவசியமான இரண்டு பண்புகளை விவரித்தார். இந்தப் பண்புகள் இல்லாத நிலையில் கிருபை "கிருபையாக" இராது.

தேவனுடைய கிருபை இலவசமானதாக உள்ளது

முதலாவது, கிருபை இலவசமானதாக உள்ளது. நமது இரட்சிப்பைப் பவுல், "தேவனுடைய ஈவு" (2:8ஆ) என்று அழைத்தார். இதை மேலும் வலியுறுத்துவதற்கு அவர், இது நமது சாதனை அல்ல என்று அழுத்தமாகக் கூறினார்: "ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (2:9). நமது முயற்சிகளினால் இரட்சிப்பு ஈட்டப்படக்கூடும் என்றால் அது கிருபையினால் உண்டானதாக இராது. அப்படியிருந்தால் இயேசுவின் மரணம் அர்த்தம் இல்லாததாக இருந்திருக்கும் (கலாத்தியர் 2:21).

வாழ்வில் பல விஷயங்கள் உண்மையில் "இலவசமாக" இருப்பதில்லை. சில வேளைகளில், ஒரு ஆயுள்காப்பீட்டுப் பாலிசியானது காலத்திற்குப் பிந்தி

தொகை செலுத்துவதை அனுமதிக்க “கிருபையின் காலம்” என்ற ஒன்றைக் குறிப்பிடுகிறது. இது ஒரு குறிப்பிட்ட மாதத்தில் பணம் செலுத்துகை நடைபெறவில்லை என்றாலும், ஒரு குறிப்பிட்ட காலவேளை வரையிலும் அந்தப் பாலிசி காலாவதியாவதில்லை என்று அர்த்தப்படுகிறது. அது கிருபை போன்று ஒலிக்கலாம், ஆனால் அது கிருபை அல்ல. உண்மையில் அது “தண்டணையை நிறுத்தி வைத்தல்” என்பதைப் போன்றதாகவே உள்ளது - ஏனெனில் அது குறிப்பிட்ட காலத்தில் மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது, மற்றும் அந்த “கிருபையின் காலத்தினுடைய” முடிவுக்குள் பணம் செலுத்தப்படாதபோது, பாலிசியானது முற்றிலும் காலாவதியாகி விடுகிறது. இதற்கு நேர்மாறாக, கிறிஸ்துவுக்குள் தேவன் அளிக்கும் இரட்சிப்பு உண்மையிலேயே இலவசமானதாக உள்ளது. இந்த சத்தியத்தை விவரிக்க, பின்வரும் கேள்விகளை உங்களுக்கு நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்: “எனக்காக சிலுவையில் மரிக்கும்படி தேவன் தமது குமாரனை அனுப்பும்படி அவரைத் தூண்டுவதற்கு நான் என்ன செய்தேன்?”; “நான் மீட்கப்பட சிலுவையில் இயேசு மரிப்பதற்குக் காரணமாக எனது பகுதியில் செய்யப்பட்ட செயல் என்ன?”; “தேவனுடைய அன்பையும் இரட்சிப்பின் அளிப்பையும் நான் அறிந்துகொள்ளும்படிக்கு சுவிசேஷ செய்தியை உருவாக்குவதற்கு” “அல்லது சபையை நிலைநாட்டுவதற்கு அல்லது வேதவசனங்களை ஏவுவதற்கு எனது முயற்சிகள் எதாவது உதவியிருக்கின்றனவா? பரலோகத்தின் கதவுகளைத் திறப்பதற்கு நான் செய்திருப்பது என்ன?” கருத்து தெளிவானதாக இருக்க வேண்டும், ஏனெனில் இந்தக் கேள்விகள் யாவற்றிற்கும், “ஒன்றுமில்லை!” என்பதே பதிலாக உள்ளது என்பது தெளிவு. நமது இரட்சிப்பு உண்மையிலேயே “கிருபையினால்” ஆனதாக உள்ளது.

தேவனுடைய கிருபையின் உண்மையை ஏற்றுக்கொள்வதை நாம் கடினமானதாகக் கண்டு, உண்மையில் நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள வேண்டும் என்று இன்னமும் நாம் நினைக்கலாம். நாம், இயேசுவினிடம் வந்து, “நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்” என்று கேட்ட இளைஞனைப் போல் இருக்கிறோம் (மத்தேயு 19:16). அந்த இளைஞன், பரலோகத்திற்குள் தான் உட்செல்வதை உத்தரவாதப்படுத்தும் வகையில் தான் நிகழ்த்தக்கூடிய மாபெரும் அருஞ்செயல் ஏதேனும் இருக்க வேண்டும் என்று நம்பினான் என்பது உறுதி. அவன் கருத்தை முழுவதுமாகத் தவறவிட்டிருந்தான் மற்றும் இயேசு அவனுக்குக் காட்ட வேண்டியிருந்தது. நாம், மத்தேயு 18:23-35ல், தனது எஜமானரிடம் “பதினாயிரம் தாலந்து” (இது சாதாரண உழைப்பாளி ஒருவருக்கு 150,000 ஆண்டுகளுக்கான கூலியாகும்) கடன்பட்டிருந்த ஒரு வேலைக்காரனுடன் ஒப்பிடப்படலாம்; அவ்வளவு கடன்பட்டிருந்தும் அவன், “ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன்” என்று கூறினான் (வசனம் 36). இது எவ்வளவு அபத்தமான கூற்றாக உள்ளது! அப்படிப்பட்ட அளவுள்ள கடனை எவரொருவரும் திருப்பிச் செலுத்த இயலாது! அவனால் செலுத்தித் தீர்க்க இயலாது என்பது தெளிவு, ஆனால் இயேசு “அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்” என்று கூறினார். மீண்டுமாக இயேசு, “கிருபை” என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை, ஆனால் அவர் கூறிய இந்த உவமை அதன் (கிருபையின்) தெளிவான கருத்தைத் தருகிறது.

தேவனுடைய கிருபையின் உண்மைத்தன்மையை ஏற்றுக்கொள்வதை நாம் ஏன் இவ்வளவு கடினமானதாகக் காணுகிறோம்? சாத்தியமான பல காரணங்கள் உள்ளன.

1. நாம் பெறத்தகுதியானவற்றை நாம் எதிர்பார்க்கச் சாய்கிறோம். "அது நியாயமானதல்ல!" என்பது, நாம் சிறுபிள்ளைகளாக இருக்கும்போது நாம் கற்றுக்கொள்கிற முதல் வாக்கியங்களில் ஒன்றாக உள்ளது. நம்முடையதாக இருப்பதற்கு உரிமை நிறைந்தது என்று நாம் நம்பும் விஷயங்களைப் பெற்றுக்கொள்வதை நாம் வலியுறுத்துகிறோம். அது, ஒரு பொம்மை அல்லது முன்னெதிர்நோக்கும் வேலைப்பதவி உயர்வு ஆகியவற்றில் சரிப்பட்டு வரலாம், ஆனால் மன்னிப்பின் தேவை பற்றி நாம் பேசத் தொடங்கும்போது, அது பிரச்சனையாக உள்ளது. நியாயத்தீர்ப்பின் நாளில் நாம் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, நாம் பெறத் தகுதியானது என்பது நாம் விரும்பும் கடைசி விஷயமாக இருக்கும்! நமக்குத் *தேவை* எதுவோ - அவரது கிருபை - அதைப் பெறவே நாம் ஏங்குவோம்.

2. நமது சுய பாவம் நிறைந்த தன்மையின் ஆழத்தை நாம் புரிந்து உணருவதில்லை. பாவம் என்பது நாம் அவ்வப்போது செய்துள்ள ஒரு சில "தவறுகள்" தான் என்று நாம் நினைத்தால், நாம் தேவனுடைய கிருபையின் அவசியத்தைப் புரிந்து கொள்வதில்லை அல்லது உணர்ந்து கொள்வதில்லை என்றாகிறது. பாவம் என்பது, மாபெரும் வைத்தியராகிய தேவனுடைய உதவியை நாடாமல், நமக்கு நாமே சிகிச்சை அளித்துக்கொள்ளக்கூடிய சிறுகாயம் என்று நாம் கண்ணோக்கக் கூடாது. தேவன் நம்மைப் பார்ப்பது போன்று நம்மை நாம் பார்க்க முடியும் என்றால், கிருபையினால் மாத்திரமே இரட்சிப்பு ஏற்பட முடியும் என்பதை நாம் புரிந்துகொள்வோம். பவுலின் கூற்றுப்படி, கிருபை இல்லாத நிலையில், நாம் "... பாவங்களினால் மரித்தவர்களாக" இருக்கிறோம். கிருபை மாத்திரமே நமது ஒரே நம்பிக்கையாக உள்ளது.

3. நமது சொந்தக் குற்றத்திற்கு நாம் கூருணர்வு கொண்டவர்களாக இருக்கிறோம். இது முன்பு உரைக்கப்பட்ட பிரச்சனையின் மறுதலையாக உள்ளது. (தேவனைத் தவிர) மற்ற எல்லாரைக் காட்டிலும் நம்மை நாம் மிக நன்றாக அறிந்திருப்பதால், உண்மையில் - ஒருவேளை இது மற்றவர்கள் கண்டிராத வழிகளிலும் கூட இருக்கலாம் - நாம் எவ்வளவு பாவம் நிறைந்தவர்களாக இருக்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்கலாம். அதை உணர்ந்தறிந்த நிலையில், நம்மைப் பற்றி எல்லாவற்றையும் அறிந்திருக்கிற தேவன் தமது கிருபையை நமக்கு சாத்தியமான வகையில் அளிக்கக் கூடும் என்பதை விசுவாசிப்பது நமக்குக் கடினமாக இருக்கிறது. நாம் அதைப் பெறத் தகுதியானவர்கள் அல்ல; அதனால் தான் அது "கிருபை" என்று அழைக்கப்படுகிறது. நமக்கு மிகவும் அவசியமாக இருப்பதை ஆனால் நமக்கு நாமே பெற்றுக்கொள்ள இயலாதிருப்பதை, இயேசுவின் மூலமாகத் தேவன் நமக்கு அளிக்கிறார்.

4. நாம், தேவனுடைய இயல்பைப் பற்றி சமானமற்ற கருத்தைக் கொண்டிருக்கிறோம். நமது பின்னணிகளைச் சார்ந்துள்ள நிலையில் நாம், தேவனைப் பற்றி வேதாகமம் கூறுகிற விஷயங்களுடன் எப்போதுமே பொருந்திப் போகாத பல்வேறு புரிந்துகொள்ளுதல்களை வளர்த்துக் கொள்கிறோம். சிலர் தேவனை, நம்மிடத்தில் தவறுகளை மாத்திரமே கண்டு நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கக் கூடிய கடினமான நியாயாதிபதி என்ற

வகையில் மாத்திரம் நினைக்கின்றனர். இந்தக் கருத்தைக் காட்டிலும் வேறு எதுவும், சத்தியத்தில் இருந்து தொலைவில் இருக்க இயலாது! வேதாகமம் "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்றும் (1 யோவான் 4:8) அவர் "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட" வேண்டும் என்று விரும்புகிறார் (1 தீமோத்தேயு 2:4) என்றும் கூறுகிறது. மனந்திரும்பாதவர்களையும் அவிசுவாசிகளையும் தேவன் நிச்சயமாகவே நியாயந்தீர்ப்பார் என்றிருக்கையில், அவர் நம்மை இரட்சிக்க விரும்புகிறார். அவ்வாறு இல்லையென்றால் அவர், நமது பாவங்களுக்காக மரிக்கும்படி தமது குமாரனை ஏன் இந்த உலகத்திற்கு அனுப்ப வேண்டும்?

5. மன்னிக்காத நமது மனிதரீதியான உறவுகளை நாம் தேவனுக்கு மாற்றுகிறோம். மன்னிப்பை நடைமுறைப்படுத்தாத மக்கள் சூழ வளர்க்கப்பட்டவர்கள், எவரொருவரும் - குறிப்பாக தேவன் - உண்மையிலேயே மன்னிக்க முடியும் என்பதை நம்புவதில் போராட்டம் கொண்டிருக்கலாம். மற்றவர்களை மன்னிக்காமல் இருப்பவர்கள், தேவன் அவ்வாறு (மன்னிக்காதவராக) இருப்பதில்லை என்று கற்பனை செய்வதைக் கடினமாகக் கண்டறிகின்றனர் ஆனால் அவர் அவ்வாறு (மன்னிக்காதவராக) இருப்பதில்லை. அவர் மன்னிக்க விரும்புகிறார், மற்றும் அவர் மன்னிக்கிறார்; அவர் தமது பிள்ளைகளைத் தமது கிருபையினால் மன்னிப்பார்.

6. நாம் தேவனைச் சேவிப்பதற்குத் தவறான தூண்டுதலைக் கொண்டிருக்கிறோம். நமது பாவங்கள் குறித்து நாம் உணருகிற குற்ற உணர்வு அல்லது நாம் செய்யும்படி தேவன் விரும்புகிறவற்றை நாம் செய்யத் தவறுவதால் அனுபவிக்கும் குற்ற உணர்வு என்பதே நாம் தேவனைச் சேவிக்க நமது முதன்மைத் தூண்டுதலாக இருக்க வேண்டும் என்று நம்மில் சிலர் நம்பி இணங்கும் வகையில் மக்கள் செயல்பட்டிருக்கலாம். குற்றம் உள்ளவராக உணருதல் என்பது தேவனைச் சேவிக்க மற்றும் அவருக்குக் கீழ்ப்படிய மேற்கொள்ளும் முடிவை நோக்கி எடுத்துவைக்கப்படும் ஒரு சிறு அடிவைப்பாகவே உள்ளது. கிருபை என்பதே மிகவும் அதிக வல்லமை நிறைந்ததாக மற்றும் அதிகமாகத் தூண்டக்கூடியதாக உள்ளது - நமது பாவங்களை மன்னிக்கத் தேவன் கொண்டுள்ள மனவிருப்பம் மற்றும் நாம் மன்னிக்கப் படக்கூடும்படி நமக்காக மரிப்பதற்கு இயேசுவின் மனவிருப்பம் ஆகியவற்றிற்கு நமது நன்றியறிதல் உள்ள உணர்வு. குற்ற உணர்வைக் காட்டிலும் தேவனுடைய கிருபையானது, நம்மைக் கர்த்தருக்குச் செயல்விளைவுள்ள உண்மைநிறைந்த ஊழியக்காரர்கள் ஆக்குவதில் மிகவும் அதிகம் செயல்விளைவு கொண்டதாக இருக்கிறது.

7. ஒவ்வொரு விஷயத்தையும் நாம் சரியாகவே செய்ய வேண்டும் - அல்லது வேறில்லை - என்று நாம் நினைக்கிறோம்! நமது வாழ்வில் இருந்து பாவங்கள் எல்லாவற்றையும் நாம் நீக்காதவரையில், தேவனுக்கு நாம் ஒருக்காலும் ஏற்புடையவர்களாக இருக்க இயலாது என்ற கருத்தே "பூரணத்துவ இயல்" என்பதாக உள்ளது. அது நிகழ்வுகளை மிகத் தீவிரமான வகையில் முறைமாற்றி வைத்தலாக உள்ளது! சிலுவையின் மூலமாகத் தேவன், நம்மை நாம் இருக்கும் நிலையிலேயே ஏற்றுக்கொண்டு நமது பாவங்களை எடுத்துப் போடுகிறார். அதுபோன்றே, இரட்சிக்கப்படுவதற்கு நாம், தேவனை விசுவாசித்து அவர் கூறுகிறபடியே மிகச்சரியாகச் *செய்ய வேண்டும் என்பது, "சட்டவியம்" என்ற கருத்தாக உள்ளது. தேவனைப் பிரியப்படுத்துதல் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவரின் இலக்காக இருக்க வேண்டிய அதே வேளையில் நாம் உண்மை*

நிலையை உணர்பவர்களாகவும் இருக்க வேண்டும்: நாம், அந்த அளவுக்குத் தேவனைப் பிரியப்படுத்த இயலாதவர்களாக இருக்கிறோம். நாம் யாவருமே சில வேளையில் பாவம் செய்கிறோம் அல்லது தவறு செய்கிறோம். நாம் "எல்லா விஷயத்தையும் மிகச் சரியாக்குதல்" என்ற தவறான நம்பிக்கையின் மீதல்ல ஆனால் தேவனுடைய கிருபையின் மீதே சார்ந்து இருக்க வேண்டும். (இவ்வாறாக நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முயற்சித்தலின் நம்பிக்கையற்ற தன்மையை யாக்கோபு 2:10ம் வசனம் காண்பிக்கிறது.)

கிருபை இலவசமாகக் கிடைப்பதில்லை என்றால், அது "கிருபையாக" இருப்பதில்லை. நாம் அந்த உண்மையை ஏற்றுக்கொள்வதற்கு நமது சிந்தித்தலை ஒழுங்குமுறைக்கு உட்படுத்த வேண்டி இருக்கலாம்; ஆனால் அதை நாம் செய்த உடன், நான் கர்த்தரிடத்தில் இருந்து ஆச்சரியமான ஆசீர்வாதத்தை அனுபவிக்கிறோம்.

தேவனுடைய கிருபை ஏராளமாக உள்ளது

ஏராளமாக உள்ளது என்பது கிருபையின் அத்தியாவசியமான இரண்டாவது பண்பாக உள்ளது. தேவன் நம்மீது தமது கிருபையை "பெருகப்பண்ணினார்" என்று எபேசியர் 1:7, 8ல் பவுல் எழுதினார். 2:4ல் தேவன் "இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய்" இருக்கிறார் என்று நாம் வாசிக்கிறோம் மற்றும் 6, 7ம் வசனங்கள் அவரது "மகா மேன்மையான ஐசுவரியத்தை"ப் பற்றிப் பேசுகின்றன. கிருபையைப் புரிந்து கொள்வது ஏன் இவ்வளவு முக்கியத்துவமானதாக உள்ளது? ஏனென்றால் இது, நமது பாவங்களின் அளவு மற்றும் இயல்பு எப்படியிருந்தாலும், தேவன் நம்மை மன்னிக்க மனவிருப்பமாக இருக்கிறார், அவரால் மன்னிக்க முடியும் என்று அர்த்தப்படுகிறது. கிருபை என்பது, அவ்வப்போது விஷயங்களைக் கெடுத்துக்கொள்ளுதல் நடக்கக் கூடிய "நல்ல மக்களுக்கு" மாத்திரமானதாக இருப்பதில்லை. அது பாவிகளுக்கானதாக - எல்லாப் பாவிகளுக்குமானதாக - உள்ளது. 1 தீமோத்தேயு 1:15ல் பவுல், "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான (மிகமோசமான) பாவி நான்" என்று கூறினார். இதற்கு முன்னதாக அவர் தாம் முன்பு கிறிஸ்துவைத் தூஷித்து துன்புறுத்தி அவமானப்படுத்தியது எவ்வாறு என்பதை விவரித்திருந்தார், இருப்பினும் அவர் "நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று" (1 தீமோத்தேயு 1:14) என்று கூறினார். ஏன்? தேவன் தமது கிருபையின் பாத்திரமாகப் பவுலைத் தனித்துத் தேர்ந்து கொண்டது ஏன்? அதைப் பவுல் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்:

> *அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும்பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன் (1 தீமோத்தேயு 1:16).*

வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், எந்தக் காலத்திலும் எவரொருவர் "நான் இரட்சிப்பின் நம்பிக்கைக்கு அப்பால் இருக்கிறேன்" என்று கூறக்கூடாதபடிக்குத்

தேவன் பவுலை இரட்சித்தார். தேவனுடைய மன்னிக்கும் வல்லமைக்கு அப்பால் நாம் பாவம் செய்ய இயலாது! கெட்டகுமாரன் தனது தந்தையிடம் திரும்பி வந்தபோது, விளக்கங்கள் எதுவும் அவசியமில்லாது இருந்தது. அவன் ஒரு பாவியாக இருந்தான் என்பது ஏற்கனவே நிலைநாட்டப்பட்ட ஒரு உண்மையாக இருந்தது. அவன் செய்திருந்தவை அல்ல ஆனால் அவன் இல்லத்திற்குத் திரும்பி வந்ததே பொருட்படுத்தப் படக்கூடியதாக இருந்தது.

கிருபை என்பது இலவசமானதாகவும் ஏராளமானதாகவும் உள்ளது. அதனால்தான் கிறிஸ்தவ செய்தியானது "சுவிசேஷம்" என்று அழைக்கப்படுகிறது; அது நற்செய்தியாக உள்ளது!

"விசுவாசத்தைக் கொண்டு"

கிருபை இலவசமானதாகவும் ஏராளமானதாகவும் உள்ளது, ஆனால் அது மலிவானதாக இருப்பதில்லை. சுவிசேஷ செய்தியின் மூலமாக, எல்லாருக்கும் கிருபை அளிக்கப்படுகிறது; ஆனால் அது ஏற்றுக்கொள்ளப் படவேண்டும். நாம் "கிருபையினாலே" மற்றும் "விசுவாசத்தைக்கொண்டு" இரட்சிக்கப்பட்டோம் என்று பவுல் கூறியபோது, தேவன் தமது குமாரன் மூலமாக அளிப்பதை (நாம்) ஏற்றுக்கொள்ளுதலையே அவர் அர்த்தப்படுத்தினார்.

மீண்டுமாக, கெட்ட குமாரனின் உவமை ஒரு நல்ல விவரிப்பாக உள்ளது. அவன் இல்லம் திரும்ப முடிவு செய்வதற்கு முன்னரே அவனது தந்தையால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தான் (அது கிருபை என்பதாக உள்ளது). இருந்தபோதிலும், அவன் இல்லம் திரும்ப மறுத்திருந்த வரையில் அவன் மரித்தவனாகவே இருந்தான்! மிக உண்மையான ஒரு கருத்தமைவில், ஒரு கிறிஸ்தவர், பிதாவினிடத்தில் வந்து அவரது கிருபையைப் பெற்றுக்கொண்டு மற்றும் பதிலுக்கு அவரை அன்புடனும் சந்தோஷ நிறைவுடனும் சேவிக்கும் கெட்டகுமாரனாக இருக்கிறார். செயல்கள் (கிரியைகள்) நமது இரட்சிப்பிற்குக் காரணமாவதில்லை என்று பவுல் வலியுறுத்துகையில், அவைகள் (கிரியைகள்) அதன் (இரட்சிப்பின்) கனிகளாக உள்ளன என்றும் அவர் வலியுறுத்தினார்: "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (2:10). நற்செயல்களில் "நடத்தல்" என்பது, அவைகள் நமது வாழ்வின் வழக்கமான வழியாகுதல் என்று அர்த்தப்படுகிறது.

விசுவாசத்தின் பல அம்சங்கள் கண்ணோக்காமல் விடப்படக் கூடாது. நம்பிக்கை வைத்தல் என்பது அவற்றில் ஒன்றாக உள்ளது. "இயேசுவை விசுவாசித்தல்" என்பது, அவர் தேவனுடைய குமாரனாகவும் நமது மீட்பராகவும் இருக்கிறார் என்ற அவரது அடையாளத்துவத்தை ஏற்றுக்கொள்ளுதலாக உள்ளது, ஆனால் வேதவசனங்கள் கூறுகிறபடி, அவரது இரத்தம் நம்மைச் சுத்திகரித்து நமக்கு ஜீவனைக் கொடுக்கும் வல்லமை உடையது என்று நம்பிக்கை வைத்தலும் உள்ளடங்கி இருக்கிறது. "விசுவாசித்தல்" என்பது நம்மை அவரது கரங்களில் ஒப்புவித்து, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நமக்காக நமக்குள் நிறைவேற்றப்படும் என்று நம்பிக்கை வைத்தலாக உள்ளது. விசுவாசம் கொண்டிருத்தல் என்பது, கிறிஸ்து அளித்துள்ளவை நமக்குத் தேவை என்று ஒப்புக்கொள்ளுதலையும் அர்த்தப்படுத்துகிறது. கிறிஸ்து நமக்காக எதை

வாங்க மரித்தாரோ அது நமக்கு - நம் யாவருக்கும் - தேவை என்று நம்புதலே சுவிசேஷத்தை விசுவாசித்தலாக உள்ளது. நாம் உண்மையிலேயே விசுவாசம் கொண்டிருந்தால், நாம் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோம். கெட்டகுமாரன் பன்றியை அடைக்கும் பட்டியை விட்டு வெளியேறி தனது தந்தையின் வீட்டிற்குத் திரும்ப வேண்டியிருந்தது போலவே, நாம் நமது பாவம் நிறைந்த வழிகளை விட்டுவிட்டு, தேவனுக்குக் கீழ்ப்படிதல் உள்ள பிள்ளைகளாக வாழத் தொடங்க வேண்டும் என்று அழைக்கப்பட்டுள்ளோம். பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள், "சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும்?" என்று கேட்டனர் (நடபடிகள் 2:37). பேதுருவின் பதிலுரை ஒரு கட்டளை மற்றும் வாக்குத்தத்தம் ஆகியவற்றின் வடிவில் இருந்தது: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கெள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (2:38). கிறிஸ்துவுக்குள் ஒரு வாழ்வு கீழ்ப்படிதலுடன் தான் தொடங்குகிறது, மற்றும் கிறிஸ்தவர் தமது மரணம் வரையிலும் கீழ்ப்படிதல் மற்றும் உண்மை நிறைவுடன் வாழத் தொடருகிறார். (காண்க எபிரெயர் 5:7-10; மத்தேயு 7:21-27; வெளிப்படுத்தின விசேஷம் 2:10.)

விசுவாசத்தைப் பற்றிய சில கருத்துக்கள் உண்மையில் அதை உருச்சிதைப்பவையாக உள்ளன. விசுவாசம் என்பது, சிலர் தெளிவற்ற வகையில், "தேவன்மீது விசுவாசம் வையுங்கள்" என்று கூறி அதன்மூலம் "விசுவாசம்" கொண்டிருப்பதாக உரிமை கோரும்போது, தேவனைப் பற்றிக் கொண்டிருக்கும் கருத்தாக மாத்திரம் இருப்பதில்லை. அப்படிப்பட்ட விசுவாசம் கொண்டிருந்த யாக்கோபு நிருபத்தின் வாசகர்கள் சிலரை அவர் கடிந்து கொண்டார்: "தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்" - ஆனால் அதன்பின்பு அவர் "பிசாசுகளும் விசுவாசித்து, நடுக்குகின்றன" என்றும் கூடுதலாகக் கூறினார் (யாக்கோபு 2:19). அப்படிப்பட்ட விசுவாசத்தைக் கொண்டு எந்த ஒரு பிசாசும் எக்காலத்திலும் இரட்சிக்கப்படுவதில்லை. விசுவாசம் என்பது கண்டிப்பாக உள்ளானதாக ("இருதயத்தின் உள்ளாக") மாத்திரம் இருப்பதில்லை. விசுவாசம் "நமது இருதயங்களில்" தொடங்க வேண்டும், ஆனால் நாம் அன்றாடம் செய்கிறவற்றில் அது செயல்விளைவு ஏற்படுத்தாத வரையில் அது முழுமையற்றதாகவே உள்ளது. எபிரெயர் 11ம் அதிகாரத்தில், "விசுவாசத்தினாலே ஆபேல் ... பலியை தேவனுக்குச் செலுத்தினான்"; "விசுவாசத்தினாலே நோவா ... பேழையை உண்டுபண்ணினான்"; "விசுவாசத்தினாலே ஆபிரகாம் ... கீழ்ப்படிந்து"; "விசுவாசத்தினாலே ஆபிரகாம் ... ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்" என்றெல்லாம் கூறப்படுகிறது. விசுவாசம் என்பது ஏதோ ஒரு விஷயத்தை நம்புதலாக மாத்திரம் இருப்பதில்லை; அது நாம் உண்மை என்று எதை நம்புகிறோமோ அதன் அடிப்படையில் செயல்படுதலாக *உள்ளது. மேலும் விசுவாசம் என்பது வேதவசனங்களில் அடங்கியுள்ள சரியான போதனைகளை நம்புதலாக மாத்திரம் இருப்பதில்லை. அது நிச்சயமாகவே அப்படிப்பட்ட நம்பிக்கையை உள்ளடக்கியிருக்கிறது (இதையே 1 மற்றும் 2 தீமோத்தேயு நிருபங்களில் பவுல் "விசுவாசம்" என்று அழைத்தார்), ஆனால் அது நம்பப்படுவது என்ன என்பதற்கும் அப்பால், ஒரு விசுவாசம் நிறைந்த கீழ்ப்படிதல் உள்ள வாழ்வை வாழச் செல்லுதலாக உள்ளது.*

“நீங்கள்?”

‘‘கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்’’ என்று பவுல் எழுதினார் (2:8அ). இந்த மாபெரும் சத்தியமே நம் யாவருக்கும் விசுவாசத்தைச் சாத்தியமுள்ளதாக ஆக்குகிறது. இந்த சத்தியம் மட்டும் இல்லாதிருந்தால் நாம் இரட்சிப்பிற்கான வாய்ப்பைக் கொண்டிருக்க மாட்டோம்.

பவுல், “கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்” என்று கூறியபோது, அவர் யாருக்குப் பேசினார்? அவர் பொதுவில் மனித குலத்திற்கு இதைக் கூறவில்லை என்பதை நாம் நமது சிந்தையில் கொள்ள வேண்டும். இவற்றை அவர், கிறிஸ்துவுக்குள் ஏற்கனவே விசுவாசிகளாக இருந்தவர்களுக்குக் கூறினார். எபேசியருக்கு எழுதிய நிருபமானது, “தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது” (1:1) என்ற முகவுரையுடன் தொடங்குகிறது. 1:15ல் பவுல், ‘‘கர்த்தராகிய இயேசுவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார் மேலுள்ள உங்கள் அன்பையுங்குறித்து நான் கேள்விப்பட்டு ...” என்று கூறினார். 2:1-5ல் அவர், தாம் யாருக்கு எழுதினாரோ அவர்களை, “நீங்கள்’’ என்று குறிப்பிட்டார்: அவர்கள் ஒருகாலத்தில் மரித்தவர்களாக இருந்தனர் ஆனால் கிறிஸ்து இயேசுவின் மூலமாக அவர்கள் உயிர்ப்பிக்கப் பட்டிருந்தனர்.

நற்செய்தியே பூமியில் உள்ள ஒவ்வொருவருக்கும் வலிவார்ந்த வகையில் பவுல் பேசிய விஷயமாக உள்ளது. நமது பாவத்தின் அளவு அல்லது இயல்பு எப்படிப்பட்டதாக இருந்தாலும், கிருபையை விசுவாசத்தினால் பெற்றுக்கொள்ள மனவிருப்பமாக உள்ளவர்களுக்கு அது (கிருபை) கிடைக்கிறது. தேவன் ஒரு விலையுயர்ந்த பரிசை/கொடையை/ஈவை கிரயம் கொண்டு, நாம் ஒவ்வொருவரும் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஏங்குகிறார். அதை நாம் எவ்வாறு மறுக்க முடியும்?

குறிப்புகள்

[1]பவுலின் சிந்தனையின் இந்த வலியுறுத்தத்தை ஆழ்ந்து சிந்திப்பதற்கு, எபேசியர் 1:3-23 வசனப்பகுதியில் “கிறிஸ்துவுக்குள்,” “அவருக்குள்,” “பிரியமானவருக்குள்” அல்லது அவற்றைப் போன்ற சொற்றொடர் ஒவ்வொன்றையும் அடிக்கோடிட்டு வாசித்தல் ஒரு நல்ல வழியாக உள்ளது. [2]C. L. Mitton, *Ephesians,* The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Marshall, Morgan, & Scott, 1973), 92.

விசுவாசம் எதிர்: செயல்கள்: யாக்கோபு பவுலுடன் கருத்து வேறுபடுகிறாரா?

பவுல் தமது நிருபங்களில் (எபேசியர் 2ல் போன்றே) பல இடங்களில், இரட்சிப்பானது செயல்களினால் அல்ல ஆனால் விசுவாசத்தினாலேயே வருகிறது என்று உரைப்பதில் வலிவாக இருந்தார் (உதாரணமாக, ரோமர் 3:28; கலாத்தியர் 2:15-21 ஆகிய வசனங்களைக் காணவும்).

யாக்கோபு 2ம் அதிகாரத்தில் நாம் பின்வரும் வார்த்தைகளைக் காணுகிறோம்: "ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே" (வசனம் 24); "அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" (வசனம் 26). இந்தத் தலைப்பைப் பற்றி யாக்கோபும் பவுலும் முற்றிலும் மாறுபட்ட போதனைகளை முன்வைக்கின்றனர் - அதாவது, இரட்சிப்பு செயல்களின் மூலமாக வருவதாக யாக்கோபு போதிக்கையில், இரட்சிப்பு விசுவாசத்தினால் மாத்திரமே வருகிறது என்று பவுல் கூறினார் - என்று சிலர் முடிவு செய்துள்ளனர்.

உண்மையில் பவுலும் யாக்கோபும் மாறுபட்ட இரு தலைப்புகளைக் கலந்துரையாடினர். ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு (கிறிஸ்துவில் கொண்டுள்ள விசுவாசத்துடன் கூடுதலாக) யூதர்களின் நியாயப்பிரமாணத்தின் செயல்களைக் கைக்கொள்ளுதல் அவசியமானதாக உள்ளதா இல்லையா என்பதைப் பற்றிப் பவுல் எடுத்துரைத்தார். இரட்சிக்கும் விசுவாசத்தின் வகை *பற்றி யாக்கோபு கலந்துரையாடினார். செயலுள்ள விசுவாசம் மட்டுமே (விசுவாசத்தின் செயல்களை உள்ளடக்குகிற ஒன்று) இரட்சிக்க முடியும் என்று அவர் உறுதிப்படுத்தினார்; அவ்வாறு இல்லையென்றால் விசுவாசம் செத்ததாக உள்ளது. கீழ்ப்படிதல் என்பது விசுவாசத்தின் அவசியமான அம்சம் என்ற வகையிலான பவுலின் வலியுறுத்தத்திற்கு நாம் போதிய கவனத்தைத் தருகிறபோது, இரட்சிக்கும் விசுவாசத்தின் இயல்பு பற்றிய யாக்கோபின் கண்ணோக்கு பவுலின் கண்ணோக்கில் இருந்து வேறுபடுவதில்லை என்பது தெளிவாகிறது. ரோமர் 2:6-11ல் பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, *சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல்,* அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் *பொல்லாங்குசெய்கிற* எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் *நன்மைசெய்கிறானோ* அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும். தேவனிடத்தில் பட்சபாதமில்லை. (என்னால் வலியுறுத்தப்படுகிறது.)

பவுலின் காலத்தில் வாழ்ந்த பலர் (இப்போதுள்ள பலரைப் போலவே), கிருபை மற்றும் விசுவாசத்தின் மூலமாக இரட்சிப்பு என்ற அவரது

போதனையைத் தவறாகப் புரிந்துகொண்டு, இரட்சிக்கப்படுவதற்கு மக்கள் எதுவும் செய்யத் தேவையில்லை என்று அவர் உரிமை கோரியதாக நினைத்தனர். கிருபையைப் பற்றிய அவரது போதனையைச் சிலர், நாம் யாக்கோபு விவரித்த "செத்த விசுவாசம்" என்ற வகையிலான விசுவாசத்தினாலேயே இரட்சிக்கப்பட முடியும், மற்றும் நமது பாவங்கள் தேவனை இன்னும் அதிகம் இரக்கமுள்ளவராக இருக்கும்படி தூண்டுகின்றன என்றும் கூட அந்தப் போதனை கருத்துத் தெரிவிப்பதாக தவறாக நடைமுறைப்படுத்தினர். ரோமர் 2:5-8; 6:1, 2 ஆகிய வசனப் பகுதிகளில் பவுல் தெளிவாக்கியபடி, இது அவரது விருப்பமாக இருந்ததே இல்லை.

யாக்கோபு, விசுவாசத்தின் ஒரு பாகம் என்ற வகையில் செயல்களின் அவசியத்தை வலியுறுத்திய போது, ஒருவேளை அவர் பவுலின் போதனையைத் திரித்துக் கூறிய கூற்றுகளுக்குப் பதில் அளித்திருக்கலாம். விஷயம் இவ்வாறு இருந்தாலும் இல்லாதிருந்தாலும், இரு எழுத்தாளர்களுமே, விசுவாசம் என்பது தேவனுக்குச் செயல்முனைப்புடன் பதில் தருதல் என்றும் அது புத்திக்கூர்மையில் உயருதலோ அல்லது உள்ளான நம்பிக்கையோ அல்ல என்றும் நம்பினர் என்பது தெளிவு.

13

நிறைவான எதிர்காலம்

[வெளிப்படுத்தின விசேஷம் 21 & 22]

இந்த அண்டம் மற்றும் காலம் ஆகியவற்றின் படைப்பு பற்றிய ஆதியாகமத்தின் விபரங்களுடன் நமது படிப்பு தொடங்கிற்று. "பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார்" (ஆதியாகமம் 1:14). வேதாகமத்தின்படி, காலம் என்பது ஒரு தொடக்கத்தைக் கொண்டிருந்தது; மற்றும் வேதாகமத்தின்படி, அது ஒரு முடிவையும் கொண்டிருக்கும். சில மதங்களில் காலத்தைப் பற்றிய கண்ணோட்டத்தைப் போலின்றி, வேதாகமரீதியான கண்ணோட்டமானது காலம் என்பது நீள்கோட்டு அளவையைக் கொண்டதாக உள்ளது, அதாவது இது (காலம்) ஒரு தொடக்கத்தையும் ஒரு முடிவையும் கொண்டதாக "அ என்ற புள்ளியில்" இருந்து "ஆ என்ற புள்ளிக்கு" நகருகிறது. காலமும் பொருளும் முறையான காலகட்டத்தில் "மறு உருவாக்கப்" படுகின்றன என்ற கருத்தில் அவை வட்டச் சுழற்சி கொண்டவைகளாக இருப்பதில்லை. அதற்குப் பதிலாக, உலகம் பற்றி வேதாகம எழுத்தாளர்களின் சீர்பொருத்தமான கண்ணோட்டம் ஒரு "காலமுடிவு" உலகக் கண்ணோட்டமாக - காலம் என்பது முடிவாக மாத்திரமே அல்ல, ஆனால் அது மாபெரும் பேரழிவுடன் முடியும் என்பதாக - உள்ளது.

இயேசு திரும்பி வரும்போது அந்த கடைசிக் கணம் வரும். பின்பு பௌதீகரீயான இந்த அண்டம் அழிக்கப்பட்டு, நாம் நித்தியத்தில் இருப்பதன் ஒரு புதிய வளர்ச்சிப்படியைத் தொடங்குவோம். 2 பேதுரு 3:3-10ல், "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்த விதமாயிருக்கிறதே" (வசனம் 4) என்ற சில அவநம்பிக்கையாளர்களின் குற்றச்சாட்டிற்குப் பேதுரு பதில் அளித்தார். வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், முடிவு வரும் என்பதை நினைவூட்டி, அவர் மீண்டும் ஒருமுறை, இதை அழிப்பார் - இம்முறை அக்கினியால் அழிப்பார் - என்று கூறினார். (ஆதியாகமம் 6; 7) பின்பு அவர் தமது வாசகர்களுக்கு, "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்" என்று நினைவூட்டினார் (வசனம் 9). தேவனைப் பொறுத்த மட்டில் காலம் என்பது பொருத்தமற்றதாக உள்ளது; அவர் அதனால் கட்டுப்படுத்தப் பட்டிருப்பது இல்லை. அடுத்ததாகப் பேதுரு பின்வரும் கூற்றை உரைத்தார்: "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (3:10). "காலத்தின் முடிவு" ஒன்று வந்துகொண்டிருக்கிறது.

இதே சத்தியத்தை மத்தேயு 24:36-44ல் இயேசு உறுதிப்படுத்தினார், அவர் தமது வருகையின் நாளையோ அல்லது நேரத்தையோ "எவரொருவரும் அறியார்" என்று வலியுறுத்தினார். "விழிப்புடன் இருந்து" ஆயத்தமாக இருத்தல் என்பது நமது பொறுப்பாக உள்ளது என்று அவர் கூறினார்: "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" (24:44). அவரது வருகையின் காலத்தை முன்னுரைத்தல் சாத்தியமற்றதாக உள்ளது (ஆகையால், நாம் அதை முயற்சி செய்வது தவறாக உள்ளது); ஆனால் அதற்காகத் தயாராக இருத்தல் சாத்தியமானதாக உள்ளது, அதுவே நம் ஒவ்வொருவரின் பொறுப்பாக உள்ளது.

"ஆனால், எல்லாப் பொருள்களும் அழிக்கப்பட இருக்கின்றன என்றால், தேவனுடைய மக்களுக்கு எதிர்காலத்தில் வைக்கப்பட்டுள்ளது என்ன?" என்று சிலர் கேட்கலாம். அந்தக் கேள்விக்குத் திட்டவட்டமான பதிலை நமக்குத் தராமல் வேதாகமம் முடிவடைவதில்லை. வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22ம் அதிகாரங்கள் "நிறைவான எதிர்காலத்தை" - எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்பதை மாத்திரம் இன்றி, காலம் என்பது இனியும் இல்லாது, நித்தியத்தில், என்ன நடக்கும் என்பதையும் - நமக்கு விவரிக்கின்றன. இந்த இரண்டு அதிகாரங்களில் யோவான், அந்த எதிர்காலத்தைப் பற்றி விவரிக்கப் பலவிதமான உருவகங்களைப் பயன்படுத்தினார். அவர் "புதிய வானம் மற்றும் புதிய பூமி," "புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம்," ஒரு "மணவாட்டி" ஆகியவற்றைப் பற்றிப் பேசினார். வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22ம் அதிகாரங்கள், வேதவசனங்களில் கண்டறியப்பட வேண்டிய, பரலோகத்தைப் பற்றிய மிகமுழுமையான விவரிப்பை அளிக்கின்றன. வேதாகமம் இவ்வாறு முடிவடைவதில் வியப்பு எதுவும் இல்லை. விசுவாசிகளாகிய நமக்கு இந்த வேளையில் போராட்டங்கள் எத்தகையவையாக இருந்தாலும், தேவன் நமக்காக வைத்துள்ள மகிமையுள்ள எதிர்காலம் நமக்காகக் காத்திருக்கிறது என்பதை விசுவாசிகளுக்கு மறுஉறுதிப்படுத்துதலே இவ்வசனப்பகுதியின் இலக்காக உள்ளது. இங்கு செல்வதற்கு என்ன விலை அல்லது தியாகம் கேட்கப் பட்டாலும், இந்த விவரிப்பானது நம்மை இங்கு செல்ல விரும்புபவர்கள் ஆக்குகிறது.

"பரலோகம்" என்றால் என்ன?

பரலோகம் என்பது உண்மையிலேயே ஒரு "இடம்" என்பதாக உள்ளதா அல்லது அது இருப்பு பற்றிய மனரீதியான/ஆவிக்குரிய வகையிலான ஒரு நிலையாக உள்ளதா? அது ஒரு இடமாக உள்ளது என்றால், அது எங்குள்ளது? இவைகள் பின்வரும் இரு காரணங்களினால் பதில் அளிக்கச் சுலபமாயிராத கேள்விகளாக உள்ளன: (1) நித்தியத்தில், காலமும் இடமும் இனியும் நிலவாது. ஆகவே பரலோகத்தின் "இடம்" பற்றிப் பேசுதல் எவ்வாறு என்று அறிதல் கடினமாக உள்ளது. (2) பரலோகத்தைப் பற்றிப் பேசும் நமது புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் யாவும் மிக உயர்வான உருவக மொழிநடையிலேயே பேசுகின்றன. நமது புரிந்துகொள்ளும் இயல்புக்கு அப்பால் அல்லது நமது கற்பனைக்கு அப்பால் உள்ள சிலவற்றைப் பற்றி நமக்குத் தேவன் வேறு எவ்வகையில் விவரிக்கக்கூடும்? வேதவசனங்கள் இவ்வளவு உருவக நடையில் இருப்பதால், நாம் நேரடி அர்த்தமாக எடுத்துக் கொள்ள வேண்டியவைகளும் எடுத்துக்கொள்ளக் கூடாதவைகளும் எவை என்று அறிதல் கடினமாக உள்ளது.

இருப்பினும் வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22ம் அதிகாரங்களில் ஒரு சத்தியம் மிகத் தெளிவாக்கப்பட்டுள்ளது: நாம் பிதாவாகிய தேவன் மற்றும் குமாரனாகிய இயேசு ஆகியோரின் பிரசன்னத்தில் என்றென்றைக்கும் இருக்கும்படிக்குப் பரலோகம் செல்ல விரும்புகிறோம். வெளிப்படுத்தின விசேஷம் 21:3ல் யோவான், "இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார் … தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" என்று பரலோகத்தில் இருந்து கூறிய பெருங்குரல் ஒன்றைத் தாம் கேட்டதாக அறிக்கை செய்தார். இதுவே பரலோகத்தை இவ்வளவு மகிமை உள்ளதாக்குகிறது: நம்மைப் படைத்தவரும் நம்மை மீட்டவருமாகிய அவரது பிரசன்னத்தில் நாம் இருத்தல்.

"புதிய எருசலேம்" என்பது பரிசுத்த நகரமாக இருந்தபோதிலும், அங்கு யோவான் தேவாலயம் எதையும் காணவில்லை; ஏனெனில் "சர்வவல் லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம். நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுகுட்டியானவரே அதற்கு விளக்கு" (21:22, 23). பிற்பாடு 22:3-5ல் யோவான், பரிசுத்த நகரத்தில் தேவனுடைய ஊழியக்காரர்கள் அவரை சேவித்து, அவரது முகத்தைத் தரிசித்து, அவரது நாமத்தைத் தங்கள் நெற்றிகளில் (உரிமையாளரின் அடையாளமாக) எழுதப் பெற்றிருப்பார்கள் என்று கூறினார். அவரே அவர்களுக்கு வெளிச்சமாயிருப்பார். "பரலோகம்" என்பது நம்மைப் படைத்த தேவனுடனும் நம்மை இரட்சிப்பதற்காக மரித்த கிறிஸ்துவுடனும் என்றென்றைக்கும் இருத்தலாக உள்ளது.

யோவான் 14:1-3ல் இயேசு, பரலோகத்தை "என் பிதாவின் வீடு" என்று அழைத்தார். இது நமது நித்திய இல்லத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க எவ்வளவு விருப்பமான வழியாக உள்ளது! அந்த வீட்டில் இயேசு நமக்காக அறைகளை ஆயத்தப்படுத்தி இருப்பதாகக் கூறினார். ஒருநாளிலே அவர் நம்மை அழைத்துச் செல்வதற்காகத் திரும்ப வருவார். மத்தேயு 8:11ம் வசனமானது, பரலோகத்தைப் பற்றி விவரிக்க ஒரு விருந்தின் உருவகத்தைப் பயன்படுத்துகிறது. இது காலங்கள் தோறும் வாழ்ந்து மரித்த, விசுவாசத்தில் குறிப்பிடத்தக்க மாபெரும் நபர்களின் தோழமையில் இனிவரும் வாழ்வில் அவர்களுடன் ஒரு உணவுமேஜையில் அமர்ந்திருத்தல் என்ற ஆசீர்வாதமான நிகழ்வு பற்றிய யூதக் கருத்தைப் பிரதிபலிக்கிறது. மேலும் இயேசு கடைசி இராப்போஜனத்தின்போது தமது சீஷர்களிடத்தில் "இதுமுதல் இந்தத் திராட்சப் பழரசத்தை நலமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் இராஜ்யத்தில் நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று" (மத்தேயு 26:29) கூறியபோது இந்தக் கருத்தையே அவரும் பிரதிபலித்தார். இந்தக் கருத்தில் "பரலோகம்" என்பது இயேசுவுடன் பரலோகரீதியான ஒரு மேஜையைச் சுற்றி அமர்ந்து தேவனுடைய உபசரிப்பை மகிழ்வுடன் அனுபவித்தல் என்பதை அர்த்தப்படுத்துகிறது. இவ்விரு உருவகங்களுமே - பிதாவின் வீட்டில் இருத்தல் மற்றும் பரலோகத்திற்குரிய ஒரு மேஜையைச் சுற்றிலும் அமர்ந்திருத்தல் ஆகியவை - தேவனுடைய பிரசன்னத்தில் என்றென்றைக்கும் இருத்தல் பற்றிய அழகுநிறைந்த சொல்வெளிப்பாடுகளாக உள்ளன.

பரலோகம் எதைப் போன்று உள்ளது?

பிரபலமான இன்னொரு கேள்வி, பரலோகத்தின் இயல்பு பற்றிக் கவலைப்படுகிறது. பரலோகம் பற்றிய வேதாகம வசனப் பகுதிகளின் ஒரு ஆய்வுகூட நமது தகவல்களில் நீண்ட இடைவெளிகளைக் கொண்டதாக விட்டு வைக்கின்றன. "பரலோகத்தில் நாம் ஒருவர் மற்றவரை அறிவோமா?"; "இப்போது நாம் காணப்படுகிறபடியே அப்போதும் நாம் காணப்படுவோமா?" இவற்றிற்கான பதில்கள் நமக்கு மறுக்கப் பட்டிருந்தாலும்கூட, இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றி நாம் இயல்பாகவே ஆர்வம் கொண்டுள்ளோம். பரலோகம் எதைப்போன்று இருக்கும் என்று சில திட்டவட்டமான கூற்றுக்களை நாம் ஏற்படுத்தக் கூடும்படிக்கு, வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22ம் அதிகாரங்கள் குறைந்த பட்சம் போதுமான விவரிப்பை நமக்குத் தருகின்றன.

முதலாவது, பரலோகம் என்பது இங்கு நாம் அறிந்துள்ள வாழ்வில் இருந்து வேறுபட்டிருக்கும். பரலோகம் என்பது விஷயங்களின் முற்றிலும் புதிதான முறைமையினால் பண்புப்படுத்தப் பட்டிருக்கும்; பூமிக்குரிய விதிகள் அங்கு நடைமுறைப்படாது; "புதிய வானத்தையும் புதிய பூமியையும்" என்று விவரித்தலைக் கொண்டு, யோவான் தமது தரிசனத்தை எடுத்துரைத்தலைத் தொடங்கினார் (21:1). "புதிய" என்பதற்கு கிரேக்க மொழியில் இரு வார்த்தைகள் உள்ளன. அவற்றில் ஒன்று, *chronos* (இதில் இருந்தே நாம் "chronological" என்ற வார்த்தைகள் பெறுகிறோம்) என்பது "காலத்தைப் பொறுத்த மட்டில் புதியது" என்று அர்த்தப்படுகிறது - இது ஒரே விஷயத்தின் மிகசமீபத்திய பதிப்பு என்பதாக உள்ளது. இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இன்னொரு வார்த்தையான *kainos* என்பது முற்றிலும் புதிய வகையான சிலவற்றைக் குறிக்கிறது - இது ஒரே விஷயத்தின் புதிய பதிப்பை அல்ல ஆனால் புதிய வகையிலான வானத்தையும் பூமியையும் குறிக்கிறது. இது யோவான் கூறிய விஷயங்கள் இந்தப் புதிய முறைமையின் பாகமாக இராது என்ற கூற்றினால் மேலும் வலியுறுத்தப்படுகிறது. "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின" (21:4). இப்போது நாம், நமது வருத்தத்திற்கும் வேதனைக்கும் காரணமான விஷயங்கள் இல்லாது ஒழிந்து போன ஒரு இருப்பு என்று மாத்திரமே அதைக் கற்பனை செய்ய முடியும்!

ஒரு முறை நான், மிகச்சிறு பையனாக இருந்த வேளையில், எனது பாட்டியார் வேதாகமம் வாசித்துக் கொண்டிருந்தபோது, நான் அவர்களின் காலடியில் விளையாடிக் கொண்டிருந்தது நினைவுக்கு வருகிறது. அந்த வேளையில் அவர்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் இருந்து வாசித்துக் கொண்டிருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. திடீரென்று அவர்களின் முகத்தில் கண்ணீர் வழிந்தோடியதை நான் கவனித்தேன். பயந்துபோன நான் அவர்களின் பக்கமாகச் சென்று என்ன நடந்தது என்று கேட்டேன். "ஒன்றுமில்லை, நான் பரலோகத்தைப் பற்றி வாசித்துக் கொண்டிருந்தேன், அங்கு செல்ல இனியும் என்னால் காத்திருக்க இயலாது" என்று கூறினார்கள். அது எதை அர்த்தப்படுத்தியது என்று அப்போது என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை, ஆனால் இப்போது அது எனக்குப் புரிகிறது. எனது பாட்டியார்

மிகவும் சிரமமான வாழ்வை நடத்திக் கொண்டிருந்தார். அவர்கள் இளம் வயதிலேயே விதவையாக ஆனார்கள், அவர்கள் தமது பிள்ளைகளை மாபெரும் மந்த நிலையின் காலத்தின்போது வளர்த்தார்கள், தமக்கும் தமது குடும்பத்திற்கும் அடிப்படைத் தேவைகளை அளிப்பதற்கு அவர்கள் மிகவும் கடினமாக உழைக்க வேண்டி இருந்தது. மனம் மற்றும் உடல் சுகவீனத்தினால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு மகனை அவர்கள் இழந்து போனார்கள். இப்போது அவர்கள் பரலோகத்திற்குச் செல்ல ஏங்கியிருந்ததில் வியப்பு எதுவும் இல்லை! வன்முறையின் பயன், உணவு அல்லது தண்ணீர்க் குறைபாடு, சுகவீனம் பற்றிய அச்சமும், நாம் நேசிக்கிறவர்களுக்கு பிரிவு சொல்லுதல் மற்றும் உடல் அல்லது மனதில் மிகவும் வேதனைப்படுத்தும் வலி ஆகியவை இல்லாத ஒரு இடத்தில் வாழுதல் என்பது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கும்! அது நிச்சயமாகவே பூமியின் மீது வாழும் வாழ்வில் இருந்து வேறுபட்டிருக்கும்!

இரண்டாவது, பரலோகம் என்பது அழகுநிறைந்ததாக இருக்கும். 21:9-11ல் யோவான், பரிசுத்த நகரம் “தேவனுடைய மகிமையைக் கொண்டிருக்கும்” என்று விவரித்தார். அவர், “அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப் போலவும் இருந்தது” (வசனம் 11) என்று கூறினார். பின்பு அவர் அதன் மிகப்பெரிய சுவர் மற்றும் ஒவ்வொன்றும் தனிப்பட்ட மாபெரும் முத்தினாலான அதன் வாயிற்கதவுகள் (21:18-21) ஆகியவற்றை விபரமாக எடுத்துரைத்தார். அதன் மாபெரும் அஸ்திபாரம் விலையுயர்ந்த கற்களினால் அலங்கரிக்கப் பட்டிருந்து என்றும் அதன் தெருக்கள் “தெளிவுள்ள பளிங்குபோலச்” சுத்தத் தங்கமாக இருந்தன என்றும் அவர் கூறினார்.

இது பரலோகத்தைப் பற்றிய நேரடியான விவரிப்பாக இருப்பதில்லை, ஆனால் அது இதை எவ்வகையிலும் குறைந்த அளவு ஆச்சரியத்துக்கு உரியதாக்குவது இல்லை. இயற்கையின் அழகு நிறைந்த காட்சிகளை இந்த பூமியில் நாம் சித்தரிக்க முடியும், ஆனால் அவை யாவையும், பரலோகத்தில் நாம் காணப்போகும் காட்சியுடன் ஒப்பிடத்தக்கவைகளாக இருப்பதில்லை. இருப்பினும் பரலோகத்தின் உண்மையான அழகு என்பது, அதில் உள்ளது *என்ன* என்பதில் அல்ல, ஆனால் அதில் உள்ளவர் *யார்* என்பதிலேயே காணக்கிடக்கிறது. பரலோகத்தில் நாம் “தேவனுடைய மகிமையில்” தோய்ந்து இருப்போம். இது பல நூற்றாண்டுகளாக விசுவாசிகள் ஏங்கிக்கொண்டுள்ள விஷயமாக உள்ளது. சங்கீதக்காரர் பின்வருமாறு எழுதினார்:

> கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன்,
> அதையே நாடுவேன்,
> நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும்,
> அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும்,
> நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம்
> கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன் (சங்கீதம் 27:4)

“தேவன் ஆவியாயிருக்கிறார்” (யோவான் 4:24) என்பதால், “கர்த்தரின் அழகு” எதைப்போன்று இருக்கும் என்பதை நாம் கற்பனைசெய்ய மாத்திரமே முடியும், ஆனால் நாம் “அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம்” (1 யோவான் 3:2) என்பது தேவனுடைய வசனத்தின் வியப்புக்குரிய

வாக்குத்தத்தமாக உள்ளது. அவரது பிரசன்னம் பரலோகத்தை அசாதாரண அழகுபொருந்திய இடமாக்கும்.

மூன்றாவது, பரலோகம் பரந்து விரிந்ததாக இருக்கும். வெளிப்படுத்தின விசேஷம் 21:15-17 வசனப்பகுதி, பொற்கோல் ஒன்றைப் பயன்படுத்தி தூதர் ஒருவரால் அளக்கப்பட்ட நகரின் அளவீட்டை விவரிக்கிறது. இந்த நடவடிக்கை, யோவானை நகரின் அளவீடுகளில் மனம் ஈர்க்கப்படும் விருப்ப நோக்கம் கொண்டது என்பது தெளிவு. முதலாவதாக, நகரம் கனசதுர வடிவைக் கொண்டது என்பதை நாம் அறிகிறோம்: "அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது ... அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது" (21:16). மீண்டுமாக நாம், அடையாளத்துவ வட்டாரத்தில் இருக்கிறோம் என்பது தெளிவு, மற்றும் இந்த வடிவத்திற்குத் திட்டவட்டமான ஒரு நோக்கம் உள்ளது. எருசலேம் தேவாலயத்தில் மகாப்பரிசுத்த ஸ்தலம் - இங்குதான் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது - கனசதுர வடிவில் இருந்தது (1 இராஜாக்கள் 6:20). ஆகவே முழுநிறைவான கனசதுரம் என்பது தேவன் தங்கி இருக்கும் இடத்திற்கு செயல்விளைவான அடையாளமானது, அது இப்போது புதிய எருசலேம் என்பதாக உள்ளது.

என்ன ஒரு கனசதுரம்! அது நீளம், உயரம் மற்றும் அகலம் ஆகியவற்றில் "12,000 ஸ்தாதி"யாக இருந்தது என்று யோவான் விவரித்தார். ஒரு ஸ்தாதி என்பது 600 அடிக்கு மேற்பட்டது என்பதால், இது யோவான் நீளம், அகலம் உயரம் ஆகியவற்றில் 1,400 மைல்களுக்கும் அதிகமான அளவைக் கண்டார் என்று அர்த்தப்படுகிறது! அதன் அளவு உண்மையில் பொருட்படுத்தக் கூடியதாக உள்ளதா? ஆம், பரலோகம் செல்ல விரும்புகிற யாவருக்கும் அங்கு போதிய இடம் உள்ளது என்று இது சுட்டிக்காண்பிப்பதால், இது பொருட்படுத்தக் கூடியதாகவே உள்ளது. இயேசு, "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு" என்று கூறியுள்ளாரே (யோவான் 14:2அ). மக்களின் சிலர் எப்போதுமே அந்த நித்திய நகரத்தை "சுருக்க" முயற்சி செய்கின்றனர், அவர்கள் ஒருசிலர் மாத்திரமே பரலோகத்தில் பிரவேசிப்பார்கள் என்று வலியுறுத்துகின்றனர். லுக்கா 13:23ம் வசனம், அடையாளம் அறியப்படாத மனிதர் ஒருவர் நடைமுறையில் இருந்து என்பதைக்காட்டிலும் அதிகமாக, வினோத ஆர்வத்தினால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு கேள்வியுடன் இயேசுவை அணுகிய வேளையைப் பதிவு செய்துள்ளது: "ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர்தானோ?" அவரது கேள்வியானது, இரட்சிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை பற்றி யூதப்போதகர்கள் மத்தியில் நீண்டகாலமாக விவாதிக்கப்பட்ட வாதத்தைப் பிரதிபலித்தது, அந்த மனிதரின் கேள்விக்கு இயேசு நேரடியாகப் பதில் அளிக்கவில்லை, ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 21ம் அதிகாரம் திட்டவட்டமாக "இல்லை!" என்று பதில் அளிக்கிறது. அதற்கு நேர்மாறாக, பலர் இரட்சிக்கப்படுவார்கள்!

"ஆனால், மத்தேயு 7:13, 14ஐப் பற்றிய விஷயம் என்ன? இயேசு 'இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்' " என்று சிலர் கேட்கலாம். ஒருசிலர் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்று அவர் அர்த்தப்படுத்தவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்; மாறாக, இழந்து போகப்படுபவர்களின்

எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது, இரட்சிக்கப்படுபவர்கள் "சிலராக" இருப்பார்கள். வெளிப்படுத்தின விசேஷம் 7:9, 10ம் வசனங்கள் பின்வருமாறு கூறுகின்றன:

> இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: "இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக" என்று ஆர்ப்பரித்தார்கள்.

சந்தர்ப்பப் பொருளில் இருந்து, எண்ணிக்கையற்ற இந்த மக்கள் கூட்டம், எல்லாக் காலங்களிலும் இரட்சிக்கப்பட்டவர்களை, எல்லா மக்களினம் மற்றும் மொழியில் இருந்து ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டுள்ளவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பது தெளிவு, பரலோகம் என்பது இவர்கள் எல்லாருக்கும் இடம் அளிப்பதற்கு மிகப்பெரியதாக இருக்க வேண்டும்!

"இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர்தானோ?" என்ற கேள்விக்கு இயேசு நேரடியாகப் பதில் அளிக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர், தம்மைக் கேள்வி கேட்டவருக்கு, அதைக் காட்டிலும் மிகவும் முக்கியமான விஷயத்தைச் சுட்டிக்காண்பித்தார்: அவர்கள் சிலராக இருந்தாலும் அல்லது பலராக இருந்தாலும், கேள்வி கேட்ட *அந்த நபர்* அவர்களில் ஒருவராக இருப்பாரா? "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும்" என்று இயேசு கூறினார் (லூக்கா 13:24). முடிவில், எத்தனை பேர் பரலோகத்தில் பிரவேசிப்பார்கள் என்பது பொருட்படுத்தப்படாது. இரட்சிக்கப்பட்டவர்கள் மத்தியில் நாம் ஒவ்வொருவரும் இருப்போமா என்பதே உண்மையில் பொருட்படுத்தக் கூடியதாக உள்ளது. நமக்கு அங்கு ஏராளமான இடம் உள்ளது என்று நாம் உறுதியாக இருக்க முடியும். "இடம் இல்லை" என்ற பெயர்ப்பலகையைக் கொண்டு எவரொருவரும் பரலோகத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட மாட்டார்.

நான்காவது, பரலோகம் பாதுகாப்பானதாக இருக்கும். இந்தப் பாதுகாப்பைப் பற்றிய பல குறிப்புகளை நாம் வெளிப்படுத்தின விசேஷம் 21ல் கண்டறிகிறோம். உதாரணமாக, பரலோகத்தில் உள்ளவர்கள் "அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்" என்பவரைத் தங்கள் தேவனாகக் கொண்டிருப்பார்கள் என்று 6 மற்றும் 7ம் வசனங்கள் வலியுறுத்துகின்றன. அவர் ஜீவ தண்ணீரை விலை எதுவும் வாங்காமல் இலவசமாகக் கொடுப்பார். பாதுகாப்பின் இந்தக் கருத்தை மேலும் வலியுறுத்துவதற்கு, புதிய எருசலேம் "பெரிதும் உயரமுமான சுவரால்" சுற்றிச் சூழப்பட்டிருக்கும் என்று 12ம் வசனமும், இந்தச் சுவரானது "144 முழங்கள்" கனமுள்ளதாக இருக்கும் (காண்க ESV) என்று 17ம் வசனமும் கூறுகின்றன! பழங்கால நகரங்கள் யாவும்

தங்கள் பாதுகாப்பின் முதல் வரிசையாக சுவர்களைக் கொண்டிருந்தன. கைக்குக் கைச் சண்டை என்பது சாதாரணமானதாக இருந்த அந்தக் காலத்தில், சுவர் என்பது வெளியில் இருப்போர் ஊடுருவுதலைச் செயல்விளைவில் தடைசெய்யும் சாதனமாக இருந்தது. அபாயகால கட்டங்களில், நாட்டுப் புறங்களிலும் கிராமங்களிலும் வாழ்ந்தவர்கள் நகருக்குத் தப்பி ஓடுவார்கள்; பின்பு அதன் வாசல்கள் மூடப்படும்.

புதிய எருசலேம் நகரமும் அதன் சுவர்களைக் கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது, ஆனால் அதைப் பற்றிய தனிச்சிறப்பான விஷயம் ஒன்றுள்ளது. அது பன்னிரெண்டு வாசல்களைக் கொண்டு இருந்தாலும், அந்த வாசல்கள் ஒருக்காலும் மூடப்பட்டு இருப்பதில்லை (வசனம் 25). சாதாரணமாக ஒரு நகரத்தின் வாசலானது, போக்கு வரத்தை அனுமதிப்பதற்காகப் பகல் வேளையில் திறந்து வைக்கப் பட்டிருக்கும். இரவு வேளைகளில் படையெடுப்பிற்கு எதிராகப் பாதுகாப்பை அளிப்பதற்காக அந்த வாசல்கள் மூடப்பட்டுக் காவர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருப்பார்கள். இதற்கு நேர்மாறாகப் புதிய எருசலேமில், வாசல்கள் பகலில் ஒருக்காலும் மூடப்படுவதில்லை, மற்றும் அங்கு இரவு வேளை இருப்பதே இல்லை. ஏன்? தேவனுடைய மற்றும் ஆட்டுக்குட்டியானவருடைய பிரசன்னம் அங்கு இருப்பதால் இரவு வேளையே இருப்பதில்லை (வசனங்கள் 23, 24). புதிய எருசலேமின் பாதுகாப்பு முற்றானதாக உள்ளது.

பாதுகாப்பு என்பது பலருக்கு இன்றைய நாட்களில் முதன்மையான கவலையாக உள்ளது, குறிப்பாக பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல்கள் மற்றும் உயிரியல்ரீதியான கவலையாக உள்ளது, குறிப்பாக பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல்கள் மற்றும் உயிரியல்ரீயான அல்லது அணுக்கரு ரீதியான பேரழிவுகளினால், இது (பாதுகாப்பு) குறிப்பாகக் கவலைக்குரிய விஷயமாக உள்ளது. மக்கள் விமான நிலையங்களில் பாதுகாப்பு பற்றி, குற்றங்களுக்கு எதிராகத் தங்களையும் தங்கள் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ளுதல் பற்றி மற்றும் தங்கள் வேலைகளின் பாதுகாப்புப் பற்றி கவலை கொண்டு இருக்கின்றனர். பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் கவனம் நிறைந்த நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் - மற்றும் சிலர் பெரிய தொகைகளை முதலீடு செய்கின்றனர்; இருப்பினும் நாம் முற்றிலுமான பாதுகாப்பு என்ற நிலையை ஒருக்காலும் அடைவதில்லை. நாம் புதிய எருசலேமை அடையும் வரையில் இது (முற்றிலுமான பாதுகாப்பு) நடக்க முடியாது. அங்கு நாம் பெரிதும் உயரமுமான சுவரால் சூழப்பட்டுள்ள ஒரு நகரத்தில் இருப்போம், அதன் வாசல்கள் ஒருக்காலும் மூடப்பட்டு இருப்பதில்லை. சகலப் படைப்புகளின் தேவனாலும் நாம் அங்கிருப்பதை நமக்குச் சாத்தியமாக்க மரித்த ஆட்டுக்குட்டியானவராலும் நாம் பாதுகாக்கப்பட்ட நமக்கு வேண்டியவைகள் அளிக்கப்பட்ட நிலையில் இருப்போம். இதைக்காட்டிலும் அதிகமாக ஒருவர் எதைக் கேட்க முடியும்?

ஐந்தாவது, பரலோகம் முழுமையானதாக இருக்கும் வெளிப்படுத்தின விசேஷம் 22:1-5ல் நகரத்தின் உருவகம் ஒரு தோட்டத்தின் உருவகத்துடன் ஒன்று கலக்கப்பட்டுள்ளது - ஆனால் அது ஏதோ ஒரு தோட்டமாக இருப்பதில்லை. இந்த தோட்டத்தில் "ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி"யும் மக்களினங்களைக் குணமாக்குவதற்காக "ஜீவவிருட்சம்" என்னும் மரமும் உள்ளன. "இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும்

இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்" (வசனங்கள் 3-5). இது நன்கு பழக்கப்பட்டதாக ஒலிக்கிறதா? 1 முதல் 5 வரையிலான வசனங்கள், ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்ட பாவத்தில் "விழுதல்" என்பதன் திருப்புகையை விவரிக்கின்றன. அந்தத் தோட்டத்தில் மனிதன் தேவனுடனான தனது நெருங்கிய உறவை, தனது பாதுகாப்பை மற்றும் ஜீவ விருட்சத்திற்குச் செல்லும் வழியை இழந்தான். சர்ப்பத்தின் மீதும், மனிதன் மீதும் பெண்ணின் மீதும் மற்றும் பூமியின் மீதும் கூட"சாபங்கள்" உச்சரிக்கப்பட்டன. புதிய எருசலேமில் இவையாவையும் திருப்பப்படும். ஆதியாகமம் 3ல் நாம், "இழந்துபோகப்பட்ட பரதீசு" பற்றி வாசிக்கிறோம், மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 22ல் நாம், "மீண்டும் ஆதாயப்படுத்திக்கொள்ளப்பட்ட பரதீசு" பற்றி வாசிக்கிறோம்.

பரலோகத்தில் நாம், தேவனுடன் முழுமையான, முறிபடாத உறவை, நமது பாவங்களுக்கான மன்னிப்பை மற்றும் முற்றிலுமான குணமாக்குதலை மகிழ்வுடன் அனுபவிப்போம். தேவன் எல்லாவற்றையும் அவற்றிற்குரிய இடத்திற்குத் திரும்பக் கொண்டுவருவார் - அதாவது தம்மிடத்திற்குத் திரும்பக் கொண்டுவருவார். அது நம்மையும் உள்ளடக்குகிறது!

யார் அங்கிருப்பார்கள்?

பரலோகத்தைப் பற்றி இப்படி ஒரு விரிவான விவரிப்பைக் கண்டுள்ள நிலையில் நாம், "யாரால் அங்கு போக இயலும்?" என்று கேட்டாக வேண்டும். புதிய எருசலேமில் வாழ்ந்து தேவனுடன் முறிவுபடாத உறவை அதாவது நித்தியத்தின் மாபெரும் ஆசீர்வாதத்தை மகிழ்வுடன் அனுபவித்தல் என்ற மாபெரும் சிலாக்கியம் யாருக்குத் தரப்படும்?

ஒவ்வொருவரும் பரலோகம் செல்ல முடியும் - ஆனால் ஒவ்வொருவரும் செல்ல மாட்டார்கள் - என்பதே பதிலாக உள்ளது. "பரலோகம் என்பது, தயாராக உள்ள மக்களுக்காகத் தயார் செய்யப்பட்ட இடமாக உள்ளது" என்று அடிக்கடி கூறப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், பரலோகம் செல்லுதல் என்பது தற்செயலாகவோ அல்லது தானாகவோ நடைபெறுவதில்லை. அது அங்கு செல்வதன் மீது தங்கள் பார்வைகளைப் பதித்து வைத்து அந்த நித்திய இலக்கை அடையும் தங்கள் வழிகளில் ஏதொன்றும் குறுக்கிட அனுமதிக்காமல் இருப்பவர்களுக்கானதாக உள்ளது. நாம் எவ்வாறு "தயாராக" வேண்டும்? ஆட்டுக்குட்டியானவரான இயேசுவைப் பின்பற்றுவதன் மூலமாக, அவரைப் பின்பற்றுதல் மூலமாக மாத்திரமே நாம் தயாராக முடியும்.

பரலோகம் ஒரு உண்மை நிலையாக இருப்பதைப் போன்றே, நரகமும் ஒரு உண்மை நிலையாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி இரு அதிகாரங்களில் யோவான் இதைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை, ஆனால் (இப்புத்தகத்தின் பிற அதிகாரங்களில்) அவர் இதைப் பலமுறை குறிப்பிட்டார். கிறிஸ்தவம் என்பது "உலகத்தில் உள்ள எல்லாரையும் கொண்டிருக்கும்" மார்க்கம் அல்ல; ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று வேதாகமம் கூறுவதில்லை. இயேசு அளிப்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் யாவரும் நித்தியத்திற்கும் தேவனைவிட்டுப் பிரிக்கப் பட்டிருப்பார்கள் என்பதே வெளிப்படுத்தின விசேஷத்தின் - மற்றும் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியின்

போதனையாக உள்ளது. யோவான் பின்வருமாறு எழுதினார்:

> பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (21:8).

> தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் (21:27).

> ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும் பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள் (22:14, 15).

> இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார் (22:18, 19).

இந்த வசனங்கள், பரலோகத்தில் இரப்போகாத மக்களின் வகை பற்றிய உதாரணங்களைத் தருகின்றன- இவை துன்மார்க்கத்தில் வாழ்வோரை எச்சரிப்பதற்கும் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுவோரை உற்சாகப்படுத்துவதற்குமான வசனங்களாக உள்ளன. இந்த வாழ்க்கையைப் போல் இன்றி, பரலோகம் என்பது தேவபக்தியற்ற மக்களின் இருப்பினால் மாசுபடுத்தப்பட்டிராது.

நம்மில் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய விருப்பத் தேர்வு ஒன்றைக் கொண்டுள்ளோம். நாம் கிறிஸ்துவுக்கென்று நம்மை அர்ப்பணித்து பரலோகத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதா அல்லது நமது பாவங்களுக்காக அவர் பலியானதைப் புறக்கணித்து தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து என்றென்றைக்கும் விலக்கப்பட்டு இருப்பதா என்பதை நாம் முடிவுசெய்தாக வேண்டும்.

“ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்” (22:17). தேவன் நித்திய வாழ்விற்குத் திறவையான அழைப்பிதழை அளிக்கிறார், மற்றும் அதை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதை நாமே தீர்மானிக்க வேண்டும். இந்த

வாழ்வில் அதற்கு நாம் என்ன விலை கொடுக்க வேண்டி இருந்தாலும் சரி, அது அந்த விலைகொடுக்கத் தகுதியானதாகவே இருக்கும். அதன்மீது நாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் கொண்டிருக்கிறோம்.

கடைசிக்காலத்தை நம்மால் முன்னுரைக்க முடியுமா?

வேதாகமத்தின் மாணவர்கள் அடிக்கடி, மத்தேயு 24 மற்றும் அதன் இணைவசனங்களை (மாற்கு 13; லூக்கா 21) வாசித்து, உலகத்தின் முடிவை முன்னுரைக்கக் கூடிய வகையில் இயேசு "அடையாளங்களை" அளித்தார் என்று முடிவு செய்கின்றனர். (வேதாகமத்தின் சில பதிப்புகள்கூட மத்தேயு 24ம் அதிகாரத்தின் தொடக்கத்தில் "உலகத்தின் முடிவின் அடையாளங்கள்" என்ற தலைப்புடன் தொடங்குகின்றன.) இருப்பினும் இயேசுவின் வருகை பற்றி எவரொருவரும் முன்னுரைக்க இயலாது என்ற இயேசு கூறிய கூற்றின் கண்ணோக்கில் (மத்தேயு 24:36), இது ஒரு தவறான குறிப்பு என்பது தெளிவாகிறது. குறைந்த பட்சம் இது இந்த அதிகாரம் முழுவதற்குமான தலைப்பாக இருப்பதில்லை என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

உண்மையில் மத்தேயு 24ம் அதிகாரத்தைக் கவனநிறைவுடன் வாசித்தலானது, முதலில் இயேசு, *தேவாலயம் அழிக்கப்படுதல்* பற்றித் தமது சீஷர்களால் முன்வைக்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளித்தார் என்று காண்பிக்கின்றன. மேலும் அவர்கள், "உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" என்றும் கேட்டனர் (வசனம் 3). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், மாறுபட்ட இரு கேள்விகள் கேட்கப்பட்டுப் பதில் அளிக்கப்பட்டன. இயேசு தமது வருகையை முன்னறிவிக்க முயற்சி செய்பவர்களுக்கு எதிராகத் தமது சீஷர்களை எச்சரித்தார், அப்போது அவர்கள் "யுத்தங்களையும் யுத்தத்தின் செய்திகளையும்" கேள்விப்படுவார்கள், ஆனால் அவைகள் வரவிருக்கும் முடிவின் அடையாளங்களாக இருப்பதில்லை என்று உறுதிப்படுத்தினார். (அது 6ம் வசனம் வாசிக்கப்படும் வழக்கமான வழிக்கு எதிர்மாறானதாக உள்ளது.) "பல இடங்களில்" உண்டாகும் "பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும்" கூட (வசனம் 7) "முடிவின் அடையாளங்களாக இருப்பது இல்லை" (வசனம் 6), ஆனால் அவைகள் "வேதனைகளுக்கு ஆரம்பமாக" மாத்திரம் இருக்கின்றன. 15 முதல் 28 வரையிலான வசனங்களில் இயேசு, எருசலேம் நகரம் அழிவுக்கு மேல் அழிவை அனுபவிக்கவேண்டி இருந்தாலும், இந்த நிகழ்வுகள் அவரது உடனடியான வருகைக்கான அடையாளங்கள் என்ற வகையில் கிறிஸ்தவர்கள் விளக்கக் கூடாது என்று மறுபடியும் வலியுறுத்தினார்.

29ம் வசனத்தில் இருந்து அவர், எருசலேமின் வீழ்ச்சி பற்றிய இந்தக் கலந்துரையாடலில் உலகத்தின் முடிவு பற்றிய சில விளக்கங்களை ஒன்றுகலக்கத் தொடங்கினார். இருப்பினும் அவர், தாமோ அல்லது பரலோகத்தில் உள்ள தூதர்களோ கூட, அந்த மகாப்பெரிய நாளின் வேளையை அறிவதில்லை என்றும் கூடுதலாகக் கூறினார். முடிவு எப்போது வரும் என்பதை முன்னுரைப்பதற்காக வேதவாக்கியங்களை ஆராய்தல் நமது பொறுப்பாக இருப்பதில்லை, ஆனால் அந்த நாள் வரும் வரையில் - என்ன நடந்தாலும் - தேவபக்தியுள்ளவர்களாக வாழ்ந்திருந்து அந்த நாளுக்காகத் தயாராக இருத்தல் என்பதே நமது பொறுப்பாக உள்ளது (24:44-25:46). இதே வலியுறுத்தம் 1 தெசலோனிக்கேயர் 5:1-11லும் காணப்படுகிறது.

இறந்தவர்கள் எங்கே இருக்கின்றனர்?

"நாம் இறக்கும்போது நமக்கு என்ன நடக்கிறது?" என்பது அதிகம் விவாதிக்கப்படும் ஒரு கேள்வியாக உள்ளது. (விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் என்ற வகையில்) நாம் இறக்கும்போது, நேரடியாகப் பரலோகம் செல்வோமோ அல்லது உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருப்பதற்கென்று ஏதோ ஒரு வகையிலான "இடைப்பட்ட இடம்" ஒன்று உள்ளதா? பரலோகம் பற்றிய வேதாகமரீதியான வசனங்களின் உருவக இயல்பானது இதற்கு மிகச்சரியாகப் பதில் அளிப்பதைச் சிரமமாக்குகிறது.

இருப்பினும், உருவக மொழிநடை பயன்படுத்தப்பட்டிராத ஒரு வசனப் பகுதியானது, நாம் நேரடியாகப் பரலோகத்திற்குச் செல்வோம் என்று சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படுகிறது. பிலிப்பியருக்குப் பவுல் எழுதியபோது, அவர் தமது அப்போஸ்தல ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு மாம்சத்தில் தரித்திருத்தல் மற்றும் மரணத்தின் மூலமாக நித்திய வாழ்விற்குள் கடந்து செல்லுதல் என்ற இரு சாத்தியக்கூறுகளுக்கு இடையில் கிழிக்கப் பட்டிருந்தார். "ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்" என்று அவர் கூறினார். பின்பு அவர் "தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்" என்ற தமது விருப்பத்தைக் கூடுதலாகக் கூறினார் (பிலிப்பியர் 1:23). மரணமானது கிறிஸ்தவரை நேரடியாகக் கர்த்தருடைய சமூகத்தில் கொண்டு சென்று நிறுத்துகிறது என்று பவுல் நம்பினார் என்பது உறுதி. "பரலோகம்" என்பது வேறு எதை அர்த்தப்படுத்தினாலும், அது வேறு எதைக் காட்டிலும் அதிக நன்மையாக உள்ளதான, கிறிஸ்துவுடன் இருத்தல் என்பதை திட்டவட்டமாக அர்த்தப்படுத்துகிறது.

பவுலின் கூற்றானது, மனந்திரும்பிய கள்ளன், இயேசு அவரது இராஜ்யத்தில் வரும்போது தன்னை "நினைத்தருளும்படி" கேட்டுக்கொண்டபோது அவனுக்கு அவர் பதிலுடன் நேர்த்தியாகப் பொருந்துகிறது: "… இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிப்பாய்" (லூக்கா 23:42, 43). மீண்டுமாக, நித்தியத்தில் ஆசீர்வதிக்கப்பட்டிருத்தல் என்பது கர்த்தருடைய பிரசன்னத்தில் இருத்தலாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட இடம் என்பதல்ல, ஆனால் எங்கிருந்தாலும் அல்லது என்ன நடந்தாலும், நாம் நம்மைப் படைத்தவர் மற்றும் நமது மீட்பர் ஆகியோருடன் இருத்தல் என்பதே நமது இலக்காக உள்ளது. அவருடன் என்றென்றைக்கும் இருத்தல் என்பதே போதுமானதாக இருக்கும்.